வெளியீடு 22-8-2005 Issued 22-8-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 12, 2005—தொகுதி 82—எண் 1**

**Tuesday, the 12th April, 2005—Volume 82—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

D
V211, 31'P05
P05.82.1
226643

**[Price Rs. 3.00**

340/2005

**12-4-2005**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | vii - xi |
| Governor and Council of Ministers | xiii - xvi |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii - xix |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi - xxxi |

**கவன ஈர்ப்பு—**

| | |
|---|---|
| (அ) திருச்சி-சிதம்பரம் சாலை, தரமானதாக மாற்றியமைத்தல் | 1-6 |
| (ஆ) நாகர்கோவில் தொகுதி, பெரியகாடு மீனவர் கிராமம், தூண்டில் வளைவுகளை நீட்டித்தல் | 6-10 |
| (இ) பாளையங்கோட்டை-அருப்புக்கோட்டை சாலை, வைப்பாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுதல் | 10-13 |
| (ஈ) வால்பாறை பேருந்து நிலையம் அருகில் கூடுதல் கழிப்பிடம் கட்டுதல் | 14-16 |
| (உ) மனைப்பிரிவு அங்கீகார விதிமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் அனுமதியில்லா கட்டடங்களை வரன்முறைப்படுத்துதல் | 16-20 |
| (ஊ) செங்கல்பட்டு குடிநீர் பிரதான குழாய் உடைந்ததால் மாற்று ஏற்பாடு | 21-24 |

பக்கங்கள்


**2. தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — 2-3

**3. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) மதிப்பீட்டுக் குழு — 24

(ஆ) பொது நிறுவனங்கள் குழு — 24

**4. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு—

மதிப்பீட்டுக் குழு
பொதுக் கணக்குக் குழு
பொது நிறுவனங்கள் குழு
விதிகள் குழு — 25-26

(ஆ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு—

அவை உரிமைக் குழு
சட்ட விதிகள் ஆய்வுக் குழு
அரசு உறுதிமொழிக் குழு
அவைக் குழு
மனுக்கள் குழு
நூலகக் குழு
பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு
அலுவல் ஆய்வுக் குழு — 27-30

(இ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல் — 137

**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமை (திருத்த) சட்டமுன்வடிவு, 2005 — 30-31

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 30, 31




பக்கங்கள்


**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**
தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 31-33

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் — 31, 33

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 31

திரு. கு. பிச்சாண்டி — 31

திரு. ஜி.கே. மணி — 32

திரு. ஜி. பழனிசாமி — 32

திரு. கே.சி. கருணாகரன் — 32

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2005 — 136

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 136

**6. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 25 – வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
(ஆ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா
(இ) கோரிக்கை எண் 27 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் — தொடர்ச்சி 33-131

திரு. பி.எஸ். உலகரட்சகன் — 33-38, 40-45

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் — 36-41, 44-45, 47-52, 57-59, 61, 63, 64, 107-121

மாண்புமிகு திரு. அ. மில்லர் — 44, 94-105

பக்கங்கள்

6. **மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 25 – வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
(ஆ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா
(இ) கோரிக்கை எண் 27 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்
} தொடர்ச்சி

செல்வி க. பாலபாரதி 46-51, 56-59
திரு. வே. கிருஷ்ணமூர்த்தி 59-67
மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் 60, 77-92
திரு. ஜெக. வீரபாண்டியன் 67-72
*திருமதி சான்ட்ரா டான் க்ரவல் 73-74, 76-77

(ஈ) கோரிக்கை எண் 47 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன் 131-135

7. **அறிவிப்புகள்**— 131

(அ) கென்யா நாட்டுக் குழு ஒன்று பேரவை நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்கு வரவேற்பு 67

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.) 135

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226643
சென்னை-600 008



பக்கங்கள்

8. **அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2005 138-245

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 137,153,155-156, 184-185, 210-213, 215-217,221-223, 225-227, 229-245
திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் 139-156
திரு. வை. சிவபுண்ணியம் 156-163
திரு. லா. சந்தானம் 163-165
திரு. கே.சி. கருணாகரன் 166-175
திரு. ஜி.கே. மணி 175-183, 186-197, 243
திரு. எம்.ஏ. ஹக்கீம் 197-208
திரு. துரைமுருகன் 139, 187, 208-230, 231

9. **வீட்டுவசதித் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது காலையில் அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு உறுப்பினர் விளக்கம்** 138-139

10. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 245-246

D
V2 11,31 'pos
POS. 82.4

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.



10. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

17. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டுவசதி, வீட்டுவசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

19. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

21. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

22. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Food and Co-operation** | .. | **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| **20. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| **21. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| **22. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |
| **23. Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **24. Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| **25. Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:**<br>Sports and Youth Welfare. |

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. ப. இராஜரெத்தினம்*

*திரு. அ. அன்வர் ராஜா*

*திருமதி சி.எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*முனைவர் செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | துணைச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சீ. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆவா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
50. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
51. கணேசன், திரு. வி. - மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆவா.)
61. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. - சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)



90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்

116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்

118. தமிழரசன், முனைவர் செ.கு. - நன்னிலம் (செ.வ.)

119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்

120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்

121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்

122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி

123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)

124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்

125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்

127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி.. - பேராவூரணி

128. துரைமுருகன், திரு. - காட்பாடி

129. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

130. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு

131. நடராசன், திரு. வது. - இளையான்குடி

132. நடராஜன், திரு. அ. - குத்தாலம்

133. நடராஜன், திரு. எஸ். - நாட்றாம்பள்ளி

134. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்

135. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி

136. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு



137. நளினி மனோகரன், திருமதி. - போளூர்

138. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

139. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு

140. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்

141. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்

142. பச்சைமால், திரு. கே.டி. - குளச்சல்

143. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்

144. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1

145. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

146. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)

147. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை

148. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)

149. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்

150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

151. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

152. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு

153. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை

154. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)

155. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி

156. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்

| | | |
|---|---|---|
| 158. | பாலசுப்ரமணியன், திரு. கே.கே. | .. ஸ்ரீரங்கம் |
| 159. | பாலபாரதி, செல்வி க. | .. திண்டுக்கல் |
| 160. | பாலன், திரு. எஸ்.எம். | .. லால்குடி |
| 161. | பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | .. சேரன்மகாதேவி |
| 162. | பிச்சாண்டி, திரு. கு. | .. திருவண்ணாமலை |
| 163. | புகழேந்தி, திரு. இ. | .. கடலூர் |
| 164. | பூபதி மாரியப்பன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 165. | பூவராகமூர்த்தி, திரு. ஏ. | .. அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 166. | பெருமாள், திரு. என்.கே. | .. விளாத்திகுளம் |
| 167. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | .. பொள்ளாச்சி |
| 168. | பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 169. | பொன்னம்பலம், திரு. டி.பி. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 170. | பொன்னையன், திரு. சி. | .. திருச்செங்கோடு |
| 171. | போளூர் வரதன், திரு. | .. செங்கம் (செ.வ.) |
| 172. | மகாலிங்கம், திரு. எஸ். | .. அவினாசி (செ.வ.) |
| 173. | மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 174. | மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 175. | மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 176. | மணி, திரு. டி. | .. விளவங்கோடு |
| 177. | மணி, திரு. ஜி.கே. | .. பெண்ணாகரம் |
| 178. | மலையப்பசாமி, திரு. அ.இரா. | .. கபிலர்மலை |
| 179. | மல்லிகா சின்னசாமி, திருமதி | .. முசிறி |
| 180. | மாணிக்கராஜ், திரு. எஸ். | .. நாங்குநேரி |



| | | |
|---|---|---|
| 181. | மில்லர், திரு. அ. | .. கூடலூர் |
| 182. | முரளிதரன், திரு. கே.வி. | .. தளி |
| 183. | முருகவேல் ராஜன், திரு. க. | .. வந்தவாசி (செ.வ.) |
| 184. | முருகேசன், திரு. ஆ.கு. | .. ஆத்தூர் |
| 185. | முனுசாமி, திரு. கா.பூ. | .. காவேரிப்பட்டினம் |
| 186. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 187. | மோகன், திரு. ப. | .. சின்னசேலம் |
| 188. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | .. புரசைவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 191. | ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | .. கோபிசெட்டிப்பாளையம் |
| 192. | ராதாகிருஷ்ணன், திரு. எம். | .. திருமயம் |
| 193. | ராதாரவி, திரு. | .. சைதாப்பேட்டை |
| 194. | ராமசாமி, திரு பி.சி. | .. மொடக்குறிச்சி |
| 195. | ராமராஜ், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 196. | ராம்குமார், திரு. எம். | .. பாபநாசம் |
| 197. | ராஜகோபால், திரு. ஆ. | .. சிவகாசி |
| 198. | ராஜம்மாள், திருமதி எஸ். | .. தூத்துக்குடி |
| 199. | ராஜா, திரு. எச். | .. காரைக்குடி |
| 200. | ராஜாங்கம், திரு. வி.ஆர். | .. சோழவந்தான் |
| 201. | ராஜு, திரு. எச்.எம். | .. உதகமண்டலம் |
| 202. | ரெங்கநாதன், திரு. என். | .. பூம்புகார் |
| 203. | ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. பேரூர் |

| | | |
|---|---|---|
| 204. | லட்சுமணன், திரு. வி.கே. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. | லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. அரவக்குறிச்சி |
| 206. | வடிவேல், திரு. ஆர். | .. வாணியம்பாடி |
| 207. | வளர்மதி, திருமதி பா. | .. ஆலந்தூர் |
| 208. | வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. மதுரை மேற்கு |
| 209. | வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. | வாசுதேவன், திரு. பெ. | .. மதுராந்தகம் |
| 211. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 212. | வில்வநாதன், திரு. இரா. | .. சோளிங்கர் |
| 213. | வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. பூங்கா நகர் |
| 214. | விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. புதுக்கோட்டை |
| 215. | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. பனமரத்துப்பட்டி |
| 216. | வீரபாண்டியன், திரு. ஜெக. | .. மயிலாடுதுறை |
| 217. | வெங்கடாசலம், திரு. அ. | .. ஆலங்குடி |
| 218. | வெங்கடாஜலம், திரு. செ. | .. சேலம்-1 |
| 219. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 220. | வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 221. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 222. | வேல் முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |
| 223. | வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. தாம்பரம் |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 225. | ஜீவானந்தம், திரு. இரா. | .. நாகப்பட்டினம் |
| 226. | ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. | ஜெயக்குமார், திரு. கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 229. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 230. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 231. | ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. மதுரை மத்தி |
| 232. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. திருவட்டாறு |
| 233. | (வெற்றிடம்) | .. காஞ்சிபுரம் |
| 234. | (வெற்றிடம்) | .. கும்மிடிப்பூண்டி |
| 235. | சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

- - -

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 30, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 ஏப்ரல் 12, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்."

ஒருவர் செய்யும் வினையைத் தகுதியான காலத்தை அறிந்து, ஏற்றதொரு இடத்தொடும் பொருந்தச் செய்வாரேயானால், அவர் இவ்வுலகத்தையே ஆளக் கருதினாலும் அது கைகூடும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. கவன ஈர்ப்பு

### (அ) திருச்சி – சிதம்பரம் சாலை, தரமானதாக மாற்றியமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ்.எம். பாலன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ்.எம். பாலன் (குறுக்கீடுகள்).

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** நான் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என் ஆய்வில் இருக்கிறது. நாளைக்கு ஒருவேளை வந்தால் எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Revenue Stamp கிடைக்கவில்லை என்பது பற்றி....

### 1. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (அ) திருச்சி – சிதம்பரம் சாலை, தரமானதாக மாற்றியமைத்தல்—தொடர்ச்சி

***திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "லால்குடி தொகுதிக்குட்பட்ட பழுதடைந்துள்ள திருச்சிராப்பள்ளி–சிதம்பரம் சாலையைத் தரமான சாலையாக மாற்றியமைக்க வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் (குறுக்கீடு).

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடு) சரி, நீங்கள் சொல்லிவிடுங்கள். நீங்கள் கேளுங்கள். புகழேந்தி, கேளுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்களும், நானும், 'பரிதி இளம்வழுதியும் ** ஓர் உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்தோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பெயர் எல்லாம் சொல்லக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு பிரச்சினை பற்றி அறிவிப்புக் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாமே என் ஆய்வில் இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** சபை முடிந்த பிறகு ஆய்வு செய்து என்ன பிரயோஜனம்?

### 1. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (அ) திருச்சி – சிதம்பரம் சாலை, தரமானதாக மாற்றியமைத்தல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்:

### அறிக்கை

திருச்சி–சிதம்பரம் சாலை கடந்த 2004 நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் பெய்த பெருமழையின் காரணமாக மிகுந்த பாதிப்பிற்குள்ளாகி போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. இச்சாலை டோல்கேட்டிலிருந்து லால்குடி பூவாளூர், புள்ளம்பாடி, டால்மியாபுரம், அரியலூர், ஜெயங்கொண்டம் வழியாக சிதம்பரம் செல்கிறது. சர்க்கரை ஆலைக்குக் கரும்பும், சிமென்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருளான சுண்ணாம்பும் மிகுந்த அளவில் டிராக்டர் டிரெயிலர் மற்றும் லாரிகள்மூலம் இச்சாலையின் வழியே எடுத்துச் செல்லப்படுவதாலும், அதிகப் பேருந்துப் போக்குவரத்தினாலும் இச்சாலை மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறது. இச்சாலையின் அடிப்பகுதி களிமண் கொண்டதாக உள்ளதால், இச்சாலை அடிக்கடி பழுதடைந்து வருகிறது.

எனவே தற்போது தற்காலிக மராமத்துப் பணிகளான, கிராவல், ஜல்லி கொண்டும் மற்றும் தார் கொண்டும் மிகப் பெரிய அளவிலான குழிகளும், பள்ளங்களும் மூடப்பட்டு வருகின்றன. மேலும் மத்திய சாலைத் திட்டத்தில் ரூ.140 கோடியில் பூவாளூரில் புறவழிச் சாலை கி.மீ. 0/0–1/8 திருச்சிராப்பள்ளி–சிதம்பரம் சாலை, கல்லக்குடி, சமத்துவபுரத்திலிருந்து கி.மீ. 32/0–33/0 மற்றும் 34/0–36/0 வரையும் மேம்பாடு செய்ய ஒப்பந்தம் கோரப்பட்டு, வேலை தொடங்கும் நிலையில் உள்ளது. கி.மீ. 37/0–38/0 மாநிலச் சாலைகள் மேம்பாடு செய்யும் திட்டத்தில் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள சாலை, டோல்கேட்டிலிருந்து கல்லக்குடி வரை கி.மீ. 0/0–14/4 மற்றும் 19/8–32/0, தமிழ்நாடு சாலைப் பகுதித் திட்டத்தில் ரூ.12.50 கோடியில் எடுத்து மேம்பாடு செய்ய மதிப்பீடு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எம். பாலன்.

**திரு. எஸ்.எம். பாலன்:** இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். திருச்சி–சிதம்பரம் சாலையில் டோல்கேட்டிலிருந்து கல்லக்குடி வரை தரமுள்ள சாலையாக மாற்றுவதற்கு ரூபாய் பன்னிரண்டரை கோடியில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் மதிப்பீடு பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று அறிந்தேன். இச்சாலையின் அடிப்பகுதி களிமண் கொண்டதாக உள்ளதால், அடிக்கடி இச்சாலை பழுதடைந்து விடுகிறது. இப்படிப் பழுதடைவதால் இந்தச் சாலையில், சிமென்ட் ஆலையிலிருந்து வரும் கனரக வாகனங்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் எனது தொகுதியில் பல சிரமமான சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. எனவே இந்தச் சாலைப் பணியில் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா? எப்போது இப்பணி துவங்கப்படும்? அதோடு, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் புதிய அறிவிப்பில் என்னுடைய தொகுதியின் நீண்ட நாள் கோரிக்கையான செங்கரையூர்-பூண்டியூர், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதனுடைய நிதி ஒதுக்கீடு எவ்வளவு? அப்பணி எப்போது துவங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற இந்தச் சாலை, திருச்சி நெடுஞ்சாலை வட்டத்தின்கீழ், திருச்சி நெடுஞ்சாலைக்





கோட்டத்தில் 0/0 முதல் 38/0 கிலோ மீட்டர் ஆகிய பகுதி பராமரிக்கப்பட்டு வருகிறது. இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீவிர முயற்சி எடுத்ததன் காரணமாக, தமிழகத்திலே இருக்கின்ற மிக முக்கியமான சாலைகளை உலகத் தரம் வாய்ந்த சாலைகளாக மாற்றுவதற்கு உலக வங்கியினிடம் பெற்றிருக்கின்ற 2,100 கோடி ரூபாய் மதிப்பில் இரண்டாம் ஆண்டு பராமரிப்பு நிதியாக இவ்வருடத்தில் மேற்குறிப்பிட்ட அந்தச் சாலை 0/0 முதல் 14/4, 19/8 முதல் 32/0 வரை, ஆக 26.6 கிலோ மீட்டர் உலக வங்கியினுடைய நிதியினைப் பெற்று இவ்வருடத்தில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்ற பராமரிப்பின்கீழ் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தச் சாலை இந்நிதி ஆண்டிலேயே எடுக்கப்பட இருக்கின்றது என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதோடு, கிலோ மீட்டர் 14/4 முதல் 19/8 வரை உள்ள பகுதி போக்குவரத்துக்குத் தற்போது உகந்த நிலையில் இருக்கின்றது. அதனுடைய மொத்த நீளம் 5.4 கிலோ மீட்டர். மேலும் மத்திய சாலை நிதித் திட்டம், 2004–2005–ன்கீழ் கிலோ மீட்டர் 32/0 முதல் 33/0 வரையும், 34/0 முதல் 36/0 வரையும் உள்ள பகுதிகள்—3 கிலோ மீட்டர்கள்—இந்த மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் இந்த வருடத்திலே எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன என்பதனை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–05

அதோடு, இந்த வருடம் Comprehensive Road Policy–யின்கீழ் 2005–2006–ல் 2.450 கிலோ மீட்டர், அதாவது 33/0 முதல் 34/0 வரையிலும், 36/0 முதல் 37/450 வரையிலும் உள்ள பகுதிகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்பதனையும், புதுப் பணிகள் திட்டம், 2004–2005–ன்கீழ் 37/450 முதல் 38/0 ஆகிய பகுதிகள் வலுப்படுத்துதல் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன என்பதனையும் நான் தற்சமயம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் செங்கரையூர்–பூண்டியூர் பாலத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகவும், கடந்த காலங்களில் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு அரசுகளிடம் தங்களுடைய கோரிக்கையினைக் கூறி வந்தபோதிலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தப் பாலத்திற்கு 34 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி, தற்போது அரசின் பரிசீலனைக்கு அந்தத் திட்ட மதிப்பீடு வந்து

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 ஏப்ரல் 12

சேர்ந்திருக்கின்றது. வருகின்ற நிதியாண்டிலேயே அந்தப் பாலப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எம். பாலன்.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை பெரிய கோயிலை மாமன்னர் இராஜராஜ சோழன் கட்டினான். கல்லணையை கரிகால் சோழன் கட்டினான். அந்த வரிசையிலே, லால்குடி மக்கள் எளிதில் தஞ்சை செல்ல, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே மாண்புமிகு அம்மா அவர்கள் பாலம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதோடு, திருச்சி–சிதம்பரம் சாலையைத் தரம் உயர்த்த அனுமதி கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக, கடையேழு வள்ளலின் மறுபிறவியாக விளங்கும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாக, பொற்பாதங்களில் வணங்கி, நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## (ஆ) நாகர்கோவில் தொகுதி, பெரியகாடு மீனவர் கிராமம், தூண்டில் வளைவுகளை நீட்டித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆஸ்டின் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியகாடு மீனவர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள தூண்டில் வளைவு முழுமை பெறாததால் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்:



2005 ஏப்ரல் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

### அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுகா, பெரியகாடு கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி 1–11–2003 அன்று தொடங்கப்பட்டது. இப்பணி இரண்டு தூண்டில் வளைவுகளாக G1G2 145 மீட்டர் நீளத்திற்கும், G3G4 79.55 மீட்டர் நீளத்திற்கும் ரூ. 2.15 கோடி செலவில் அமைக்கப்பட்டு, பணி 28–7–2004 அன்று செய்து முடிக்கப்பட்டு விட்டது. இப்பணியால் இரண்டு தூண்டில் வளைவுகளுக்கும் இடையில் ஏராளமான மணல் சேர்ந்து, நமது குறிக்கோளான கடலரிப்பைத் தடுக்கும் பணி செவ்வனே நிறைவேறியுள்ளது.

தற்போது சட்டமன்ற உறுப்பினர், பங்குத் தந்தை மற்றும் ஊர் மக்கள் ஆகியோர், மீன் பிடித் தொழில் செய்வதற்கு வசதியாக G1G2 தூண்டில் வளைவினை மேலும் 150 மீட்டர் நீளத்திற்கு நீட்டிக்கக் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே, G1G2 தூண்டில் வளைவினை மேலும் 150 மீட்டர் நீளத்திற்கு நீட்டித்துக் கட்டுவதற்கு ரூ.400 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. அரசின் பரிசீலனைக்கு வந்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையிலே, பெரியகாடு மீனவர் கிராமத்திலே அமைக்கப்பட்டுள்ள G1G2 தூண்டில் வளைவினை மேலும் 150 மீட்டர் நீளத்திற்கு நீட்டித்துக் கட்டுவதற்காக ரூ. 400 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது என்றும், அரசின் பரிசீலனைக்கு வந்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கின்றார்கள். தூண்டில் வளைவு அமைக்கப்பட வேண்டுமென்ற குமரி மாவட்ட மீனவர்களுடைய நீண்ட நாள் கனவுகளை நனவாக்கும் வகையிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள், 2001–லே ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, குமரி மாவட்டத்திலே 7 மீனவர் கிராமங்களிலே தூண்டில் வளைவு அமைக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டு, HUDCO மூலமாக அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு மேற்படி பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. அந்த 7 மீனவர் கிராமங்களில்தான் பெரியகாடு மீனவர் கிராமமும் வருகின்றது. பெரியகாடு மீனவர் கிராமத்திலே கிட்டத்தட்ட 2.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே, பணி 8 மாத காலத்திற்கு முன்பாக முடிக்கப்பட்டுவிட்டது. இந்த 7 மீனவர் கிராமங்களிலே, 6 மீனவர் கிராமங்களில் அமைக்கப்பட்ட தூண்டில் வளைவுப் பணிகள்

வெற்றிகரமாக முடிவடைந்து, மீனவர்கள் அதைச் சிறப்பாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். ஆனால் பெரியகாடு மீனவர் கிராமத்தைப் பொறுத்தவரையிலே, கடற்கரையோரத்திலேயிருந்து கிட்டத்தட்ட 300 மீட்டர் நீள அளவிற்கு, அங்கே கடலினுடைய நீரோட்டம் என்பது 6 மாத காலத்திற்கு மிக அதிகமாக இருக்கும். எனவே அந்த 300 மீட்டர் நீளத்திற்குக் கல் போடப்பட்டால்தான் முழுமையாக அந்த நீரோட்டத்தைத் தடுத்து, மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்ல முடியும். நாம் ஏற்கெனவே அமைத்த தூண்டில் வளைவு என்பது கிட்டத்தட்ட 145 மீட்டர் நீளத்திற்குத்தான் கல் போடப்பட்டிருக்கின்றது. எனவே மீதமுள்ள 155 மீட்டர் பகுதியிலே நீரோட்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், மீனவர்கள் கட்டுமரத்தைக் கொண்டு கடலுக்குள் செல்கின்றபோது அந்தக் கட்டுமரம் நீரோட்டத்தினுடைய தாக்கத்தாலே கவிழ்க்கப்பட்டு, ஏற்கெனவே போடப்பட்டிருக்கின்ற கற்குவியலிலே மோதி, அது உடையக்கூடிய நிலை ஏற்பட்டு, மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே இது தொடர்பாக நமது I.I.T. ஆய்வுக் குழுவினரும் அதைப் பார்வையிட்டு, 7 தூண்டில் வளைவுகளையும் பார்வையிட்டு, 6 தூண்டில் வளைவுகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

முற்பகல் 10–10

**திரு. ஆஸ்டின்:** சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியும், பெரியகாடு தூண்டில் வளைவு அமைப்பதற்கு, இன்னும் 155 மீட்டர் அதை நீட்டிப்பதற்கு பொதுப் பணித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிக்கை கொடுத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே நாகர்கோவில் பொதுப் பணித் துறையினர் அதற்காக 4 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பியிருக்கின்றார்கள். ஏற்கெனவே HUDCO வழங்கிய நிதி ஒதுக்கீட்டிலே அனைத்துத் தூண்டில் வளைவுகளும், ஆரம்பச் சுவர்களும் அமைக்கப்பட்டது போக, இன்னும் கிட்டத்தட்ட 4.58 கோடி ரூபாய் savings நிதி இருக்கின்றது. எனவே savings நிதியிலே இந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்று சொன்னால், விரைவாக அந்தப் பணியை முடிக்க முடியும். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைவாக அந்தப் பணியை முடிக்க வேண்டுமென்ற அடிப்படையிலும், மீனவர்கள் கடலுக்குள் உடனடியாக மீன் பிடிக்கச் செல்லவேண்டுமென்பதையும் கருத்திற்கொண்டு, இருக்கக்கூடிய savings நிதியிலே இப்பணியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை



மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கடல் அரிப்பினால் பல்வேறு இடங்களில் மீனவர் கிராமங்களும், அவர்களுடைய உடைமைகளும் பாதிக்கப்படுவதாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தவுடனேயே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக, அந்தப் பகுதிகளில் உடனடியாக கற்தடுப்புச் சுவர்களும், தூண்டில் வளைவுகளும் நிறுவப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அந்த அடிப்படையில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, கிட்டத்தட்ட 68.78 கோடி ரூபாய் செலவில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் சென்னை முதலிய பகுதிகளில், கடல் அரிப்பு அதிகமாக இருந்த பகுதிகளில் கற்குவியல் சுவர்களும், தூண்டில் வளைவுகளும் போடப்பட்டதன் காரணமாக, கடந்த காலத்தில் டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி பேரலையால் அந்தப் பகுதிகளில் பாதிப்பு பெருமளவு குறைந்து காணப்பட்டது என்பதை நாம் அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது தங்களுடைய நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில் விடுபட்டுப் போன, அதாவது பொழிக்கரை முதல் மேலமணக்குடித் துறை வரை எட்டு தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை இங்கே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணியும் 200 மீட்டர் அளவில் அமைக்கவும், மற்றும் ஆயிரம் மீட்டர் நீளத்திற்குக் கற்தடுப்புச் சுவர்கள் புதுப்பிக்கவும், கீழ்மணக்குடித் துறையில் மூன்று தூண்டில் வளைவுகள் 200 மீட்டர் நீளத்திற்கும், மற்றும் 500 மீட்டர் நீளத்திற்குக் கற்தடுப்புச் சுவர்கள் புதுப்பிக்கவும், மற்றும் இரண்டு கான்கிரீட் தடுப்புச் சுவர்கள் 300 மீட்டர் நீளத்திற்கு அமைக்கவும், தற்போது முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக அமைக்கக்கூடிய தூண்டில் வளைவுப் பணிகளிலே, மேற்படி பொழிக்கரையிலிருந்து கீழ்மணக்குடி பகுதி வரையுள்ள கடற்கரைப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஏற்கெனவே முதல் கேள்வியிலே கேட்டது, பெரியகாடு தூண்டில் வளைவுப் பணிக்காக ஏற்கெனவே HUDCO நிதியின்மூலமாக ஒதுக்கப்பட்ட நிதியிலே 4.58 கோடி ரூபாய் savings ஆக இருந்து கொண்டு இருக்கிறது. எனவே HUDCO ஏற்கெனவே ஒதுக்கிய அந்த நிதியில்தான் இந்தப் பணி முழுமை பெறாமல் இருக்கிறது. எனவே அந்தப் பணியை வேகமாகச் செய்ய வேண்டும் என்று சொன்னால், அந்த savings நிதியை எடுத்து அந்தப் பணியைச் செய்வோம் என்று சொன்னால், விரைவாக அந்தப் பணி முடிக்கப்படும். எனவே அந்த அடிப்படையிலே பெரியகாடு தூண்டில் வளைவு முடிப்பதற்கான மதிப்பீடு என்பது, 4 கோடி ரூபாய்க்குத்தான் பொதுப் பணித் துறை அரசுக்கு அனுப்பியிருக்கிறது. ஏற்கெனவே 4.58 கோடி ரூபாய் savings நிதி இருக்கிற காரணத்தால், அந்த savings நிதியிலே இந்தப் பணியை உடனடியாக மேற்கொள்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதிகளில், விடுபட்டுப் போன பகுதிகளில், சேமிப்பு நிதி இருந்தால் அந்தப் பணியை எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு சேமிப்பு நிதி இல்லையென்றால், வருகின்ற காலங்களில் எடுக்கின்ற கற்தடுப்புச் சுவர் மற்றும் தூண்டில் வளைவு அமைக்கின்ற பணிகளில் அப்பணி முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (இ) பாளையங்கோட்டை–அருப்புக்கோட்டை சாலை, வைப்பாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. என்.கே. பெருமாள் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. என்.கே. பெருமாள்.





**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாளையங்கோட்டை–அருப்புக்கோட்டை சாலையில் வைப்பாற்றின் குறுக்கே ஒரு புதிய பாலம் கட்ட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்:

### அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட பாலமானது "பருவக்குடி–கோவில்பட்டி–எட்டையபுரம்–விளாத்திகுளம்–வேம்பார் சாலை கி.மீ 73/4–8–ல் வைப்பாற்றின் குறுக்கே அமைந்துள்ளது. தற்போது இவ்விடத்தில் 3.00 மீட்டர் அகலமும், 1.50 மீட்டர் உயரமும் கொண்டதாக 22 கண்கள் கொண்ட தாம்போகி உள்ளது. மழைக் காலங்களில் இத்தாம்போகியின் மேல் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து மிகவும் மோசமாகத் தடைப்படுகிறது. ஒவ்வொரு முறை போக்குவரத்து தடைப்படும்பொழுதும், விளாத்திகுளம் வட்டாரத்தினைச் சார்ந்த பொது மக்கள் எட்டையபுரம், கோவில்பட்டி, தூத்துக்குடி போன்ற முக்கிய ஊர்களுக்குச் செல்ல சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் அதிகமாகப் பயணம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், வெள்ளம் செல்லும் காலத்தில் சில சமயங்களில் உயிர்ச் சேதங்களும் ஏற்படுகின்றன.

2. மேலும், விளாத்திகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் பெரும்பாலும் விவசாயத் தொழில் நடைபெறுவதால், மழைக் காலங்களில் தடையின்றி நேரடியாக அருகில் உள்ள முக்கிய ஊர்களுக்குச் செல்ல, இவ்விடத்தில் 380 மீட்டர் நீளத்திற்கு ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும். இவ்விடத்தில் பாலம் அமைத்திட, கடந்த பல ஆண்டுகளாக விளாத்திகுளம் வட்டாரப் பொது மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் கோரி வருகின்றனர். நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு திட்டங்களில் இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் அமைத்திடப் பிரேரணைகள் பெறப்பட்டாலும், அதிகமான நிதி ஒதுக்கீடு தேவை காரணமாக அரசின் யாதொரு அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும் இப்பாலப் பணி இடம் பெறவில்லை.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 ஏப்ரல் 12

3. தற்போது, NABARD வங்கியின் உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள, பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல், பாலமில்லாக் கடவுகளில் புதிய பாலம் கட்டுதல் திட்டத்தின்கீழ் மேற்குறிப்பிட்டுள்ள பாலம் கட்டுவதற்கு ரூ.900 இலட்சம் மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்படவுள்ளது. நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டவுடன், இப்பணியை எடுத்துச் செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உலக அரசியல் மாமேதை, பாரதி கண்ட புதுமைப் பெண், நவீன விஞ்ஞான உத்திகளைக் கையாண்டு விந்தைமிகு செயல்களைச் செவ்வனே செய்து வரும் தங்கத் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்கி சமர்ப்பிக்கிறேன், தாயே!

*முற்பகல் 10–15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் நகரில் மிக அருகிலுள்ள சுமார் 350 மீட்டர் நீளமும், வெறும் 3 மீட்டர் அகலமும், 1.5 மீட்டர் உயரமும் உடைய மிகக் குறுகலான, தாழ்வான வைப்பாற்றுப் பாலம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டு, போக்குவரத்திற்குப் பெரிதும் இடையூறாக உள்ள இந்தப் பாலத்தைத் திரும்பக் கட்டித் தர வேண்டும். விருதுநகர் மாவட்டத்தில், மழை பெய்தாலும்கூட, அங்குள்ள காட்டாற்றின்மூலம் ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்கினால் உற்பத்தியாகும் தண்ணீரானது, மிகத் தாழ்வான, அந்த ஒரு வழிப் பாதை வழியாக வந்து, பாலத்திலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரமுள்ள கடலில் சென்று கலக்கிறது. மேலும் வெள்ளப் பெருக்கின்போது, பாலத்தின் உயரத்திற்கு மேலாகச் சுமார் 6 அடி தண்ணீர், 15 முதல் 20 தினங்கள் வரை செல்கிறது. இதனால் போக்குவரத்து தடைப்படுவது மட்டுமின்றி, உயிர்ச் சேதங்களும் ஏற்படுகின்றன. கடந்த 2–11–2004 அன்றுகூட, ஒரு கூலித் தொழிலாளி இறந்துள்ளார். மேலும், இந்த நாட்களில், கால்நடையாகப் பயணம் மேற்கொண்டு, திருச்செந்தூர் முருகனைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கும் இது இடையூறாக உள்ளது. தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்தி வருகின்ற உன்னதத் தாய், உடனடியாகப்



2005 ஏப்ரல் 12] [திரு. என்.கே. பெருமாள்]

பகுதி–2 திட்டத்தில் அல்லது NABARD திட்டத்தில் இணைத்து, 900 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இவ்வாண்டே இப்பணியைத் தொடங்கி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் இந்தப் பாலம் கட்டப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக, அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய இவ்விடத்தில் பாலம் அமைத்திடக் கோரி, அந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவம் கருதி, கடந்த பல ஆண்டுகளாக, விளாத்திகுளம் வட்டாரப் பொது மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் கோரி வருகின்றனர். நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு திட்டங்களில், இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் அமைத்திடப் பிரேரணைகள் பெறப்பட்டாலும், அதிகமான நிதி ஒதுக்கீடு தேவை காரணமாக, இதற்கு முன்னாலிருந்த அரசின் யாதொரு அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும், இப்பாலப் பணி இடம்பெறவில்லை. ஆனால் தற்போது, மாண்புமிகு அம்மாவின் அரசால், NABARD வங்கியின் உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள, பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல் மற்றும் பாலமில்லாக் கடவுகளில் புதிய பாலம் கட்டுதல் திட்டத்தின்கீழ், மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்டுவதற்கு, 900 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்படவுள்ளது. நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டவுடன், இப்பணியை எடுத்துச் செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதி மக்களுடைய நூறாண்டு காலக் கனவை நனவாக்குகின்றவண்ணமாக, தமிழகத்தை எல்லா வகைகளிலும் முதன்மையாக ஆக்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டே அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்மூலமாகக் கட்டித் தரவேண்டுமென்று பணிவான வணக்கத்துடன் கேட்டுக்கொண்டு, நன்றியோடு விடைபெறுகிறேன்.

[2005 ஏப்ரல் 12

## (ஈ) வால்பாறை பேருந்து நிலையம் அருகில் கூடுதல் கழிப்பிடம் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை பேருந்து நிலையத்தில் கழிப்பிடம் கட்ட, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தும், கட்டடம் கட்ட நகராட்சி நடவடிக்கை மேற்கொள்ளாதது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

தற்போது, வால்பாறை நகராட்சியால் 13 பொதுக் கழிப்பிடங்களும், ஒரு மகளிர் சுகாதார வளாகமும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், 2004–2005 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு, காந்தி சிலை அருகில் பொதுக் கழிப்பிடம் கட்ட பணி துவங்கும்போது, சுற்றிலும் உள்ள பொது மக்கள் கடுமையான ஆட்சேபனை தெரிவித்ததன்பேரில், பணி நிறுத்தப்பட்டு, தற்போது ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறுநீர்க் கழிப்பிடம் ஆடவர் மற்றும் மகளிர்க்கென அமைக்கப்பட, சட்டமன்ற உறுப்பினரின் ஒப்புதலுடன் செயல் அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள ரூ.2.00 இலட்சத்திற்குப் பிறிதோர் இடத்தில் கழிப்பிடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் இசைவுடன் செயல் அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். வால்பாறையில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் பேருந்து நிற்கும் இடத்திற்கு



வந்து செல்கின்ற பேருந்து இடமாகும் அது. வயது வந்த பெரியவர்களும், தாய்மார்களும், குறிப்பாக மகளிரும் கழிப்பிடம் இல்லாமல் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வால்பாறை, காந்தி சிலை அருகில், பேருந்து நிற்கும் இடத்தில் கழிப்பிடம் கட்ட நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி சிலை பேருந்து நிலையம் அருகில், ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பீட்டிலே, ஒரு சிறுநீர்க் கழிப்பிடம் பொது நிதியிலிருந்து கட்டப்பட ஆரம்பித்தபோது, பொது மக்களின் புகாரின்பேரில், 4 மாத காலம் பணி நிறுத்தப்பட்டது. காந்தி சிலை பேருந்து நிறுத்தம் அருகிலேயே, வேறொரு இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 3 இலட்சத்திலிருந்து, 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே, நவீன பொதுக் கழிப்பிடம் ஒன்று, சட்டமன்ற உறுப்பினர் ஒப்புதலுடன் கட்டப்பட்டு, தற்போது முடியும் தருவாயில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

*முற்பகல் 10–20*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை, காந்தி சிலை அருகில் நாள்தோறும் சுமார் 5 ஆயிரம் பேர் வந்து செல்கின்றனர். அங்கு பொது மக்களுடைய நன்மைக்காகத்தான் கழிப்பிடம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைத்திருக்கிறேன். அங்கே பொது மக்கள் இடையூறு செய்கிறார்கள் என்பதில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் உண்மை என்னவென்று சொன்னால், வால்பாறையில் இப்பொழுது மருத்துவமனை, கழிப்பிடங்கள், வகுப்பறைகள் கட்டுவதற்கெல்லாம் கல் கிடைப்பதில்லை. அங்கே ரொட்டிக் கடையிலே ஒரு கல் குவாரி இருக்கிறது. அங்கே கல் எடுக்க அனுமதி இல்லை. ஆகவே வால்பாறை கீழ்ப் பகுதியிலிருந்து கல் எடுத்து வந்துதான் வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு ஒரு லோடுக்கு 2,500 ரூபாய் வரை அதிகமாகச் செலவாகிறபடியால் வால்பாறையிலே கழிப்பிடம் கட்டுவதற்குக் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே வால்பாறை நகராட்சியின் சார்பாக, சிறுவர் பூங்கா, ரொட்டிக் கடை, முருகாளி, சோலையார் Dam, முடீஸ் போன்ற பகுதிகளில் (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். பகுதிகளில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்கே கட்ட வேண்டும் என்று சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** பகுதிகளில் கழிப்பிடம் கட்டுவதற்கு நான் நிதி ஒதுக்குவதாக வாக்குறுதி கொடுத்து, அதுவும் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே கல் இல்லாததுதான் அதற்குக் காரணம். ஆகவே வால்பாறையில் அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்கு, மருத்துவமனை, வகுப்பறைகள், கழிப்பிடங்கள் போன்ற கட்டடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்பு கொண்டு, அரசுப் பணிகளுக்கு மட்டும் கல் எடுப்பதற்கு அனுமதி வழங்குவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி சிலை பேருந்து நிலையம் அருகிலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன பொதுக் கழிப்பிடம் ஒன்று சட்டமன்ற உறுப்பினர் ஒப்புதலுடன் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் மீதமிருக்கின்ற ரூபாய் 80 ஆயிரத்தோடு நகராட்சி பொது நிதியிலிருந்து ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரத்தையும் சேர்த்து, 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே ரொட்டிக் கடை பகுதியிலே மேலும் இன்னொரு கழிப்பிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் பணி மேற்கொள்ளப்பட இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய ஆலோசனையை—அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவைப்படுகின்ற கற்களை அந்தப் பகுதியிலே கொண்டு வருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

## (உ) மனைப் பிரிவு அங்கீகார விதிமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் அனுமதியில்லாக் கட்டடங்களை வரன்முறைப்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் Lay-out அங்கீகாரம் வழங்கும் விதிமுறைகளை எளிமைப்படுத்துவது மற்றும் அனுமதியின்றிக் கட்டப்பட்ட வீடுகளுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

மனைப் பிரிவு அங்கீகாரம் வழங்கும் விதிமுறைகளை எளிமைப்படுத்தி அரசு ஆணை (நிலை) எண் 134, ந.நி. (ம) கு.வ. துறை, நாள் 20–9–2002–ம் மற்றும் அதற்கான திருத்தம் அரசு கடித எண் 39699/எம்ஏ1/2002/4, நாள் 25–11–2002–ல் அரசால் வழிமுறைகள் வழங்கப்பட்டு உள்ளன. மாநகராட்சிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்கான சட்டத் திருத்தமும், விதிகளும் அரசாணை எண் 89, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 4–6–2002–ன்மூலம் அளிக்கப்பட்டது. இது தமிழகத்தில் உள்ள சென்னை மாநகராட்சி நீங்கலாக ஏனைய 5 மாநகராட்சிகளுக்கும் பொருந்தும். மேலும் இந்த அரசாணையின்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, தடையாணை பெறப்பட்டு உள்ளது. மற்ற நகராட்சிகளில் உள்ள, அனுமதியின்றிக் கட்டப்பட்ட கட்டடங்களை வரன்முறைப்படுத்த உத்தேசம் ஏதும் தற்பொழுது இல்லை. மேலும் தற்பொழுது அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்த முடிவு எடுக்கப்பட்டு, கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே நிறைய விவரங்கள் இருக்கும் என்று பார்த்தேன். ஆனால் விவரங்கள் மிகச் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அதிலே தமிழகத்தில் இருக்கக்கூடிய, இன்று கட்டப்பட்டிருக்கிற வீடுகளை எல்லாம் வரன்முறைப்படுத்துவதற்கான ஒரு சரியான திட்டம் அரசிடம் திட்டப்பட்டு செயல் முறைக்குக் கொண்டு வராதது குறித்து நான் உண்மையிலேயே வேதனைப்படுகின்றேன். கடந்த 4 ஆண்டுகளாக,

தொடர்ந்து இந்த அவையிலே நாங்கள் வலியுறுத்தி வந்து கொண்டே இருக்கிறோம். மேலும் வீடுகள் கட்டப்பட்டுவிட்டதால் அதற்கு development charge என்ற ஒன்றை வசூலித்துக் கொண்டு, எப்படியாவது நீங்கள் அதை வரன்முறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்ட கேள்விக்கு, அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையிலே, ஏற்கெனவே இதற்கான முடிவு எடுக்கப்பட்டு, கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று கூறுகிறார்கள். ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால், எதற்காகக் கருத்துரு இன்னும் அரசின் பரிசீலனையில் இருக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் கொஞ்சம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளை முதலிலே வரன்முறைப்படுத்தி, அவர்களுக்கு வீட்டு வரி ரசீது எல்லாம் போடுவதற்கான ஏற்பாடு செய்வார்கள் என்று சொன்னால், உள்ளாட்சிகள் இன்று சம்பளமே கொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன. *(மணியடிக்கப்பட்டது)* இதோ முடித்துவிட்டேன். நீங்கள் Bell அடிப்பதற்கு முன்பே முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முறைப்படுத்த முடிவு எடுக்க முடியுமா என்று கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே நீங்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா என்று கேட்டுக்கொண்டு, அதேபோல Lay–Out–ஐப் பொறுத்து.. *(மணியடிக்கப்பெற்றது.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே அதற்குப் பதில் சொல்லட்டும். அடுத்த கேள்வியைப் பிறகு கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, combined–ஆக இருக்கிறது.

**திரு. கே.சி. கருணாகரன்:** இதேபோன்ற ஒரு கவன ஈர்ப்பை நானும் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வரவில்லை. *(குறுக்கீடு)* மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 4 ஆண்டு காலமாகப் போராடிக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் இதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி, அரசாணை எண் 69–ஐ, 4–6–2002 அன்று வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அரசாணையை



வெளியிட்ட பிறகு, அங்கீகரிக்கப்படாத மனைப் பட்டாவைச் சேர்ந்தவர்களும், மற்றும் அங்கே விதிமுறைகளை மீறி கட்டடங்களைக் கட்டியவர்களும் சேர்ந்து நீதிமன்றத்திற்குச் சென்று விட்டார்கள். அதற்குப் பிறகு, 31–7–2002 அன்று அரசாணை எண் 104–ன்படி, மேலும் அதைத் தளர்வு செய்து, அவர்களுக்கு வசதி செய்வதற்காக அன்றையதினம் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதையும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. காரணம், அவர்களுக்கு அதிலும் கூடுதலாக அங்கே கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, அதையும் யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளையும், மற்றும் விதிமுறைக்கு புறம்பாகக் கட்டப்பட்ட கட்டடங்களையும் குறித்து ஓர் ஆய்வை நடத்தி, அதன் அடிப்படையிலே இன்றையதினம் அதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று போர்க்கால நடவடிக்கை எடுக்கின்ற வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் அதற்குண்டான வழிவகையினைச் செய்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே அளித்திருக்கிற விளக்கத்தில் போதுமான கருத்துகள் இல்லையென்றுதான் நான் கூற விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், கடந்த ஆட்சியிலே G.O. No.50 of 2000 என்று போட்டிருக்கிற G.O.–விலே, இன்னும் அங்கீகரிக்கப்படாத Lay–Out–ல் இருக்கக்கூடிய வீட்டு மனைகளை விற்கவே கூடாது என்று ஒரு தடையாணை இருக்கின்றது. சில பேர் விற்றுவிட்டிருக்கிறார்கள்; பாதி இன்னும் விற்காமலேயே இருக்கிறது. அதை விற்பது தொடர்பான ஆணை இன்னும் அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. ஏனென்றால், ஏற்கெனவே பணத்தைப் போட்டு அவர்கள் வாங்கியாகிவிட்டது. வாங்கிவிட்ட அந்த Lay–Out–இனுடைய பாதி பிளாட்டுகளை விற்கமுடியாமல் திணறிக்கொண்டிருக்கிறார்கள். சில நேர்வுகளில் பதிவு செய்த பத்திரங்களை இன்னும் அப்படியே பிடித்து வைத்திருக்கிறார்கள், Registrar Office–லே. ஆகவே, நீங்கள் Lay–out-ஐ அங்கீகரிப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டும். அதேபோல, மாநகராட்சிகளில், சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண்டாலும் சரி, மற்ற

[திரு. சி. ஞானசேகரன்] [2005 ஏப்ரல் 12

மாநகராட்சிகளை எடுத்துக்கொண்டாலும் சரி, கட்டி முடித்து விட்டார்கள் கட்டடத்தை. கட்டி முடித்துவிட்ட ஒரு கட்டடத்தை வரன்முறை செய்வதற்கு நீங்கள் குறைந்த கட்டணத்தை ஏதாவது வைக்கலாம். ஆந்திராவிலே குறைத்துக் கட்டணம் முதலிலே போட்டு, அவர்கள் சிலவற்றையெல்லாம் வரன்முறைப்படுத்தினார்கள். அதே முறையிலே—நீங்கள் அதிகமான கட்டணத்தைப் போட்டதனால்தான், இப்பொழுதெல்லாம் Court–க்கு போயிருக்கிறார்கள். அந்தச் சூழலை நீங்கள் தவிர்த்து, கட்டணத்தைக் குறைப்பதற்கு (மணியடிக்கப்பெற்றது) நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோல, C.M.D.A.–விலே (மணியடிக்கப்பெற்றது) எடுத்துக்கொண்டீர்களேயானால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இது மாதிரி கிளைக் கதைகளாகப் போட்டுக்கொண்டு போனீர்களேயானால், அவர் எப்படி பதில் சொல்வார்? Court–லே தடையாணை வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறார் அவர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் தெரிவிக்கின்ற கருத்தும், மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் முன்பே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும்தான், இன்றையதினம் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளிலே மொத்தம் 2,569 அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் 1,28,379 மனைகள் உள்ளன. ஆகவே இவற்றிற்கு உடனடியாக ஒரு தீர்வு கண்டால், ஏதேனும் ஒரு பகுதியில் ஒரு சில பிரச்சினைகள் இருக்கும் என்பதை ஆய்வு செய்ததால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்மட்ட அலுவலர் குழு ஒன்றை ஏற்படுத்தி, அதன்மூலம் தீர ஒரு முடிவு எடுத்து, தீர்க்கப்படாத பிரச்சினைகளை எல்லாம் கண்டிப்பாகத் தீர்த்து வைக்கின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இவர்களுடைய கோரிக்கையும், இந்தக் குழு அறிக்கையும் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்ற காரணத்தினால், கூடிய விரைவிலே இதற்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்பதைத் தெரிவித்து, அமர்கின்றேன்.



2005 ஏப்ரல் 12]

## (ஊ) செங்கல்பட்டு குடிநீர் பிரதான குழாய் உடைந்ததால் மாற்று ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே. ஆறுமுகம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆறுமுகம்.

**•திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு நீரேற்று நிலையத்தின் பிரதான குழாய் உடைந்ததால் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

செங்கல்பட்டு நகராட்சி குடிநீர் வழங்கல் பணிக்காக பாலாற்றுப் படுகையில் அமைந்துள்ள ஒழலூர், பழவேலி, திம்மாவரம் ஆகிய மூன்று தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து தினந்தோறும் முறையே 4.20 இலட்சம், 26.50 இலட்சம், 4.30 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போது திம்மாவரம் நீரேற்று நிலையத்திலிருந்து வரும் குடிநீர் பிரதான குழாய், சென்னை–திருச்சி புறவழிச் சாலையில், காஞ்சிபுரம் சாலை சந்திப்பில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தின் சறுக்குப் பகுதியில் (Ramp) 28–2–2005–ல் உடைப்பு ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட கசிவினால், அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் பாதிப்பு ஏற்பட்டது. எனவே, அவசர அவசியம் கருதி, குடிநீர், நீர் உந்துப் பணி நிறுத்தப்பட்டு, மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில், 180 மீட்டர் நீளத்திற்கு 200 எம்.எம். விட்டமுள்ள சி.ஐ. நீர் உந்துக் குழாய், தேசிய நெடுஞ்சாலையில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்திற்கு அடியில் செல்வதால், அதனை உடனடியாகப் பழுதுபார்க்க முடியாது எனக் கண்டறியப்பட்டதால், செங்கல்பட்டு நகரில் குடிநீர் வழங்கல் பணி பாதிக்காத வகையில், பழவேலி நீரேற்று நிலையத்திலிருந்து வரும் குடிநீர் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி குடிநீர் லாரிகள் மூலமும் குடிநீர்

வழங்கப்பட்டு வருகிறது. எனவே, திம்மாவரம் நீரேற்று நிலையத்தில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக நகராட்சிப் பகுதியில் குடிநீர் வழங்கல் பணியில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. மேலும் பாதிக்கப்பட்ட குழாய்கள் 35 ஆண்டுகள் பழமை வாய்ந்ததால், தற்போது புதிதாக திம்மாவரம் நீர் உந்துக் குழாய்களை 180 மீட்டர் நீளத்திற்கு மாற்று வழியில் கொண்டு செல்ல ரூ.5.25 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 16-3-2005-ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, விரைவில் முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதிலே 16-3-2005 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாகவும், இது மிக விரைவில் முடிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரதான குழாய் உடைந்து ஏறக்குறைய இரண்டரை மாதங்கள் தாண்டிவிட்டன. பல முறை அதிகாரிகளிடம் சொல்லியும், அதற்காக டெண்டர் வைத்துத்தான் பணி செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதுபோன்ற அவசரத் தேவைக்கான பணிகளுக்குக்கூட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பிறகுதான் பணியைத் தொடங்கவேண்டும் என்று சொன்னால், அந்தப் பகுதியிலே ஏறக்குறைய பத்து வட்டங்களிலே தண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டு, அங்கு மக்களே போராடுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இன்னும்கூட முடியாத நிலையில் இருக்கிறது. இன்னும் ஒரு வார காலமாவது ஆகும் என்று சொல்கிறார்கள். இன்னும் எத்தனை நாட்களிலே முடியும்? இதுபோன்ற பிரச்சினைகள் எதிர்காலங்களிலே வருகிறபோது, போர்க்கால நடவடிக்கையாக, ஒப்பந்தப்புள்ளி கோராமலே உடனடியாகப் பணியைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா? செங்கல்பட்டுக்கு மட்டுமல்ல, அனைத்துப் பகுதிகளுக்கும் இதுபோன்று ஆணையிடுவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பிரதான குழாயானது 35 ஆண்டுகளுக்கு முன்பாக அங்கே நிறுவப்பட்டது. பழமை வாய்ந்தது. அங்கே அந்தக் குழாய் உடைப்பின்



காரணமாக அந்த செங்கல்பட்டு நகரத்திற்கு வழங்கப்பட்டிருந்த தண்ணீருடைய அளவைக் குறைக்காமலேயே, மாற்று வழியின்மூலமாக அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் இன்றையதினம் நல்ல நிலையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அந்தக் குழாய் வழியாகத் தண்ணீர் செல்லாத பகுதிகளுக்கு லாரிகள் வழியாகத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. முன்பு 55 லிட்டர் வீதம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது 49 லிட்டர் வீதம் கொடுக்கப்படுகிறது. இப்படித் தண்ணீர் கொடுக்கின்ற வாய்ப்பு இல்லையென்றால் அதைப் போர்க்கால அடிப்படையிலே, அங்கே டெண்டர் விடாமலேயே அந்தப் பகுதியில் குழாய் மாற்றுவதற்குண்டான ஆவன செய்து இருக்கலாம். தண்ணீரை அங்கே முறையாகக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால்தான், அந்தப் பகுதியிலே அந்தக் குழாய் மாற்றத்திற்காக டெண்டர் விடப்பட்டு, இன்றையதினம் அந்தப் பணியானது வேகமாக நடைபெற இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்,

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரதான குழாய் உடைந்ததைப்போல் இன்னும் பல பகுதிகளிலே இதுபோன்ற நிலைமை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஏனென்று சொன்னால், பாலாற்றிலே வருகிற அந்த வழியிலே நிறைய மணல் எல்லாம் அள்ளுகிறார்கள். திருட்டுத்தனமாக மணல் அள்ளுகிறார்கள். அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தினால்தான், எதிர்வரும் காலங்களிலே இதுபோன்று குழாய்கள் உடையாமல் இருக்க வாய்ப்பு இருக்கும். ஏற்கெனவே ஒழலூரிலே இருக்கின்ற கிணறுகள் எல்லாம் வற்றிவிட்டன. இப்போது இருப்பது பழவேலி, அதையடுத்து திம்மாவரம் மட்டுமே. இந்த நிலைமையை ஒட்டுமொத்தமாகக் கண்காணித்தால் மட்டுமே, ஒட்டுமொத்தக் குடிதண்ணீரை செங்கல்பட்டு நகருக்கு வழங்க முடியும் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்வாரா, அதற்கான தகுந்த வழிமுறையை ஏற்படுத்துவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்று,—அந்த மணல் எடுக்கின்ற பகுதிகளில் எல்லாம் இன்றையதினம் அரசு நிர்ணயித்த இடம் போக மீதி இடத்தில் மணல் எடுக்கின்றார்கள் என்றால்—உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து, அந்தப் பகுதி மக்களுக்கு என்றென்றும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்த வழியிலாவது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே குடிநீர் கொடுத்துக் கொண்டிருப்பார் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, 2003–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் கூட்டுறவு குறித்த 32–வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து ஒன்பதாவது முதல் நூற்று எண்பத்து ஐந்தாவது வரையிலான 7 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

### மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, விதிகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானங்கள். பேரவைக் குழுக்களின் பணிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானங்கள் முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003–2004 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்று, 2004–2005 ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பெற்ற

1. மதிப்பீட்டுக் குழு

2. பொதுக் கணக்குக் குழு

3. பொது நிறுவனங்கள் குழு

4. விதிகள் குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், மேற்படி குழுக்களின் பதவிக் காலத்தை வரையறுக்கும் பேரவை விதிகள், முறையே 195 (2), 203 (3), 211 (3), 256 (2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய பணியாற்ற வேண்டும்."

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் . . .

[திரு. துரைமுருகன்] [2005 ஏப்ரல் 12

***திரு. துரைமுருகன்:** Point of Order. Sir, ஒரு பெரிய major request–ஐ அவர் வைத்திருக்கிறார். இருக்கிற குழுக்களை நீட்டிக்கலாம். நீட்டிக்கலாமா, வேண்டாமா என்பது இரண்டாவது பிரச்சினை. ஆனால், இப்படிப்பட்ட ஒரு முடிவை எடுக்கிறபோது, B.A.C.–யிலே அதுகுறித்து அவைத் தலைவரோடு உட்கார்ந்து, எதிர்க்கட்சித் தலைவரோடு உட்கார்ந்து, இவர்களையே வைக்கலாம் என்று இருக்கிறோம், நீங்கள் என்ன சொல்கிறீர்கள், உறுப்பினர்கள், அதே உறுப்பினர்கள் இருப்பார்கள், உறுப்பினர்கள் மாறமாட்டார்கள் என்று ஏதாவது சொல்லி, எங்களிடம் கேட்டிருக்க வேண்டும். திடீரென்று எழுந்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதைப் படித்து, நீங்களும் உடனே, ஏற்போர் 'ஆம்' என்க, மறுப்போர் 'இல்லை' என்க என்று சொல்லி முடித்துவிட்டீர்கள் என்றால், இது ஜனநாயகமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர், அமைச்சர் காரணம் சொல்லியிருக்கிறார். எடுத்துக்கொண்ட பணிகள் முடியாத காரணத்தால் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** Fundamentally it is wrong, தவறு Sir இது. இது முறையே அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**திரு. துரைமுருகன்:** நான் ஒருவராக நின்று எதிர்க்கிறேன்.



2005 ஏப்ரல் 12]

## (ஆ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

### அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு, அலுவல் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், அடுத்தது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003–2004 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்று, 2004–2005 ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பெற்ற

1. அவை உரிமைக் குழு
2. சட்ட விதிகள் ஆய்வுக் குழு
3. அரசு உறுதிமொழிக் குழு
4. அவைக் குழு
5. மனுக்கள் குழு
6. நூலகக் குழு
7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக் கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், மேற்படி குழுக்களின் பதவிக் காலத்தை வரையறுக்கும் பேரவை விதிகள், முறையே 227 (2), 239 (2), 248 (2), 253 (2), 261 (3), 264 (2), 268 (4) ஆகியவற்றைத் தளர்த்தி அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து

[திரு. சி. பொன்னையன்] [2005 ஏப்ரல் 12

*2006 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும். மேலும், பேரவை விதி 231 (2)–ஐத் தளர்த்தி, அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றி வரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப்பெறும் வரை பணியாற்ற வேண்டும்".*

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழுவினுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதைப் பொறுத்தவரையில், முடிவு எடுக்கலாம், தவறு இல்லை. ஆனால், அலுவல் நிர்ணயக் குழுவிலேயாவது குறைந்தபட்சம், எதிர்க் கட்சித் தலைவர்களையும் வைத்துக்கொண்டு, இதைப் பற்றிப் பேசியிருக்க வேண்டும். பேசாமலேயே, இன்று வரை யாருக்கும் தெரிவிக்கப்படாமலேயே, இன்று திடீரென்று குழுக்களின் பதவிக் காலம் 3–வது ஆண்டாக நீட்டிக்கப்படுகிறது என்று சொல்வது, எந்த வகையில் சரியாக இருக்கும் என்பது புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எங்களைக் கலந்தாலோசித்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழுவில் பேச வேண்டிய விஷயம் இல்லை இது. அரசினர் தீர்மானம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கலந்தாலோசிக்க வேண்டும். கலந்தாலோசிக்காமல் செய்தால் அது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழுவில் பேச வேண்டியதில்லை. சரி. துரைமுருகன் அவர்களுடைய கருத்தை நீங்களும் வழிமொழிகிறீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. அதனாலே எங்களைப் புறக்கணித்ததைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.



2005 ஏப்ரல் 12]

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுக் காலத்திற்கு ஒரே குழுவை, இன்னும் சொல்லப் போனால். .

*(தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவ்வளவுதான் வெளிநடப்புச் செய்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துரைமுருகன், ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசினர் தீர்மானம். பேரவை விதிகளின் அடிப்படையில் அரசினர் தீர்மானத்தை அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதிக்கத் தேவையில்லை. இது விதிகளினுடைய முறை. விதிக்குட்பட்டு அவை செயல்படுகிறது. விதியை மீறி நீங்கள் வெளிநடப்புச் செய்கிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

*(குறுக்கீடுகள்)* மணி, உட்காருங்கள் *(குறுக்கீடு)* உட்காருங்கள், மணி. நீங்கள் அமைதியான ஆள். உட்காருங்கள் நீங்கள். அவர் *(குறுக்கீடு)* விளக்கம் சொல்லிவிட்டார் இல்லையா?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குழுக்களினுடைய காலத்தை நீட்டித்து இருக்கிறார்கள். இது மூன்றாண்டுக் காலமாக இருக்கிறது. ஆண்டுக்கொரு முறை குழுக்களை மாற்றியமைப்பது வழக்கம். அது மரபாக இருந்துகொண்டு இருக்கிறது. ஏதோ அவசியத்

[திரு. ஜி.கே. மணி] [2005 ஏப்ரல் 12

தேவையின் அடிப்படையிலே நீட்டிப்பதில் தவறு இல்லை. ஆனால் மூன்றாண்டுக் காலம் தொடர்ந்து நீட்டிப்பது ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசியத் தேவைதான். எடுத்துக்கொண்ட பணி முடியவில்லை. ஆகவே நீட்டிப்பு என்று அமைச்சர் அவர்கள் காரணம் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுக் காலம். ஆண்டுக்காண்டு மாற்றுவதுதான் வழக்கம். அப்போது மூன்று ஆண்டுக் காலம் நீட்டிக்கத் தேவையில்லை. ஆண்டுக்கொரு முறை அதை மாற்றுகிறார்கள். வேகமாக அந்தப் பணிகளை முடித்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் மணி. இது விவாதத்திற்குரியது அல்ல. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) (குறுக்கீடு) மணி, உட்காருங்கள். (குறுக்கீடு) துரைமுருகன் கையைப் பிடித்து இழுக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். பழனிசாமி எல்லாம் வெளியே போய்விட்டார். (குறுக்கீடுகள்) அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையைக் கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2005 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கின்றேன்.

### (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கிறோம்.

[2005 ஏப்ரல் 12

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத்தினுடைய தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை ஓராண்டு நீட்டிக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. உடனடியாகத் தேர்தல் நடத்தப்படவேண்டும். அலுவலர்கள் பதவிக் காலம் நீட்டிக்கப்படக் கூடாது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது, அவ்வளவுதான் கருத்தெல்லாம்,

**திரு. ஜி. பழனிசாமி:** என்பதை வலியுறுத்தி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

*முற்பகல் 10–40*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** தனி அலுவலர் பதவிக் காலத்தை நீட்டிக்கச் செய்கிற இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2005 ஏப்ரல் 12]

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 25–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா**

**(இ) கோரிக்கை எண் 27–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம்**

} தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *11–4–2005* ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும் வாக்கெடுப்பும். திரு. உலகரட்சகன். நீங்கள் எப்போதுமே விதிகளுக்குக் கட்டுப்படக்கூடியவர். 10 மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

***திரு. பி.எஸ். உலகரட்சகன்:** வள்ளுவரின் சொல்லுக்கு ஏற்ப, திருவள்ளுவரின் சொல்லுக்கு ஏற்ப, 4 ஆண்டுக் காலமாக எங்களின் பேராதரவோடு பேரவையை நடத்திக் கொண்டிருக்கும் பேரவையின் பெருந்தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது உரையாற்றுவதற்காகப் பணித்தமைக்கு, தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, என் இனமானக் காவலர், தமிழ்க்குடிதாங்கி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், அவரது துணைவியார் திருமதி சரஸ்வதி அம்மா அவர்களுக்கும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் சின்னய்யா அவர்களுக்கும், எங்களுடைய தலைவர், சட்டமன்றத்தின் தலைவரும், பெண்ணாகரத்தின் சட்டமன்ற உறுப்பினருமாகிய அன்புச் சகோதரர் கொ.க. மணி அவர்களுக்கும், துணைத் தலைவர் ஐ. கணேசன் அவர்களுக்கும் நன்றி மலர்களை மாலையாகத் தொடுத்துக் காணிக்கையாக்கி, இந்த மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத்தில் பேசுவதற்கு முன்னால் எனது தொகுதியில் உள்ள ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் அமைச்சரின் பார்வைக்கு வைத்துவிட்டு எனது பேச்சைத் தொடங்குகின்றேன். பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பிரம்மதேசம் என்னும் ஊரில் ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டப்பட வேண்டும் என்பதுதான் அந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. அந்தப் பாலம் முக்கால் கிலோ மீட்டர் இருக்கும். இதனால் என்னுடைய தொகுதிக்கு மட்டும் பெருமை அல்ல, பக்கத்தில் இருக்கும் ஆற்காடு, ஆரணி, காட்பாடி, வேலூர், சோளிங்கர் ஆகிய அந்தத் தொகுதிகளுக்கெல்லாம் இந்தப் பாலம் மிகவும் முக்கியமானதாக இருக்கும். காரணம், இது நீண்ட நாட்களாகக் கிடப்பிலே இருக்கிறது. ஆய்வு செய்யப்பட்டு, பணம்கூட சென்ற முறை ஒதுக்கப்பட்டிருப்பதாக மக்கள் சொல்கிறார்கள். அமைச்சரிடம் பல முறை கோரிக்கையாகக் கொடுத்திருக்கிறோம். இந்த முறை நான் இந்த மன்றத்திலே பேசுவது கடைசியாக இருக்கும் என்று நினைக்கின்றேன். ஆகையினால், அந்த மக்களுக்கு 33 கிலோ மீட்டர் குறைவு ஏற்படும். ஒரு ஊருக்குச் செல்ல வேண்டுமானால் 33 கிலோ மீட்டர் அவர்கள் சுற்றிச் சுற்றிச் செல்கிறார்கள். அதிலும் முக்கியமாக திருப்பதிக்குச் செல்லும், வெளியிலிருந்து வரும் வாகனங்கள் எல்லாம் அந்த ஊருக்கு, அல்லது ஆந்திராவுக்குச் செல்ல வேண்டுமானால், 33 கிலோ மீட்டர் குறைவாகச் செல்லலாம். திருப்பதிக்குச் செல்பவர்களால் உங்களுக்கு ஒரு வாழ்த்துகூட கிடைக்கும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் பார்வைக்கு வைத்திருக்கிறேன், தங்களின் மூலமாக இந்தக் கோரிக்கையை அவசியம் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின்மூலம் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் தாக்கல் செய்யப்பட்ட, அனைத்து வரன்முறைப்படுத்தும் Regularisation Scheme–லே சமர்ப்பிக்கப்பட்ட பிளான்களுக்கெல்லாம் இப்போது உத்தரவுகள் வந்துகொண்டிருக்கின்றன. அதிலே 6 இலட்சம் ரூபாய் ஒருவர் கட்ட வேண்டும் என்று சொன்னால், 2,40,000 ரூபாய் வட்டி செலுத்த வேண்டும் என்று இருக்கிறது. தவிர, மீண்டும் தாங்கள் கட்டும் நாள் வரை, நாள் ஒன்றுக்கு 432 ரூபாய் வீதம் வட்டி செலுத்த வேண்டும் என்றும் இருக்கிறது. இந்த வட்டியை அரசு ரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 10–45

அதோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டான் என்று சொல்வார்கள் ஒரு காலத்திலே. இப்போது அரசு ஆணை பிறப்பித்தாலும்கூட அதிகாரம் வைத்திருக்கிற அதிகாரிகள் அதைச் செய்வதற்கு மறுக்கிறார்கள். இரண்டு ஆண்டுக் காலமாக கட்டடத் தொழிலிலே இருப்பவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டார்கள். காரணம், புதிதாக வீடுகள் கட்டுபவர்களுக்கு மின்சாரம் கிடைக்கவும், குடிநீர் கிடைக்கவும், கழிவு நீர் இணைப்புக் கிடைக்கவும், ஒரு Completion Certificate கேட்கிறார்கள். இதனால் இரண்டு ஆண்டுக் காலம் இந்தத் தொழிலே நசிந்து போகும்வண்ணம் இருந்தது. இருப்பினும், 6 மாதங்களுக்கு முன்பாக மின்சாரம் கொடுக்கிறார்கள். ஆனால், கழிவு நீருக்கும், குடிநீருக்கும் இணைப்புக் கேட்டால், கொடுப்பதற்கு Completion Certificate நிச்சயமாக வேண்டும் என்று இன்னமும் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த Completion Certificate விதியை ரத்துச் செய்து, பழையபடி, முதலில் எப்படி இருந்ததோ, அதே மாதிரி அவர்களுக்குக் கிடைக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பத்திரப் பதிவுத் துறையிலே 60:40 என்று ஒரு சமாதானத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்காக சுவர் விளம்பரம், பத்திரிகை விளம்பரம் எல்லாம் செய்யப்பட்டன. ஆனால், இந்த 60:40 Samadhan Scheme–லே Registrar Office–லே இருக்கிற documents–க்கு மட்டும்தான் கொடுப்போம்; மேல் முறையீட்டுப் பத்திரங்களுக்கெல்லாம் இது ஒத்து வராது என்று சொல்கிறார்கள். அந்த வகையிலே பார்ப்பீர்களானால், அதிக வருமானம் அரசுக்கு வராது. பத்திரப் பதிவுத் துறை அதிகாரிகளிடம் இருக்கும் பத்திரங்களுக்கும் இந்த 60:40 பொருந்தும் என்று சொல்வீர்களேயானால், கோடிக் கணக்கிலே உங்களுக்கு வருமானம் வருவதற்கு ஒரு வழி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகக் கடன் பெற்று, கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாகக் கடன் பெற்றவர்கள் நாமக்கல், திருச்சி, ஈரோடு, பெரம்பலூர் ஆகிய

மாவட்டங்களில், பொதுவாக எல்லா மாவட்டங்களிலேயுமே கடன் பெற்றவர்கள் திருப்பிச் செலுத்துவதற்கு முடியாதவண்ணம் இருக்கிறார்கள். காரணம், அவர்களுக்கு வருவாய் இல்லை. இதனை திருப்பிச் செலுத்துகின்ற எண்ணம் அவர்களுக்கு வராமல் போவதற்கு இன்னொரு காரணம் என்னவென்று சொன்னால், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எல்லாம் 7 முதல் 8 per cent வட்டி வாங்குகின்றன. இதில், கூட்டுறவு வங்கியின்மூலமாகக் கடன் பெற்றவர்களெல்லாம், 36 per cent வட்டி செலுத்துகிறார்கள். உதாரணமாக, 3 இலட்சம் ரூபாய் ஒருவர் கடன் வாங்கினால், 6 ஆண்டு காலத்திற்குள் 10 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். 3 இலட்சம் ரூபாய்க்கு 10 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னால், ஒரு சாதாரண நபர் எவ்வாறு கட்ட முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு அவர்களுக்கு அந்த வட்டியை எல்லாம், வட்டிக்கு வட்டி போடுவதையெல்லாம் ரத்துச் செய்து, அவர்கள் செலுத்த வேண்டிய தொகையிலே 20 per cent கழிவு செய்து தெரிவிப்பீர்களேயானால், நாங்களெல்லாம் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதனால் அதிகாரிகள், கட்டத் தவறியவர்கள்மீது...

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாக வாங்குகின்ற பணத்திற்கான வட்டிகளெல்லாம் 30 சதவீத அளவிற்கு வருகின்றது என்று இங்கே சொன்னார்கள். அது இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 11½ சதவீதமாக மாற்றப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல. வாங்கியவர்களே அந்தக் கடனைச் சரியாகக் கட்டினால், அந்த 11½ சதவீதம்தான் கட்டப்படுகின்றது. ஏன் என்று சொன்னால், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்தினுடைய நிதிகளெல்லாம், ஒரு நிதி நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்குகின்ற நிதி. ஆகவே, அவர்களும் வட்டி கொடுக்க வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, இந்த நிலையை எல்லாம் போக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நடைமுறையில் பல்வேறு அறிவிப்புகளை வழங்குவதற்கான ஆணைகளையும் எனக்கு வழங்கியிருக்கின்றார்கள். ஆகவே, இந்த மானியத்தின்மீதான பதிலில் அவற்றை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்பதனையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடனைக் கட்டாதவர்களுக்கெல்லாம், அந்த வீடுகளெல்லாம் seal வைக்கப்படுகின்றன. இதனால் கிட்டத்தட்ட 100–க்கும் மேலானோர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். கவரி மான் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்தவர்கள் எல்லாம் இன்னும் தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கடன் பெற்றவர்கள் இதுபோன்று தற்கொலை செய்தார்கள் என்பது நடைமுறையில் இல்லை. அப்படி ஒரு தகவலும் இல்லை. இப்படி ஒரு தவறான தகவலை இங்கே உறுப்பினர் அவர்கள் தருகின்றார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினராக இங்கே அமர்ந்திருக்கும் கபிலர்மலை தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு கரூர் புறநகர்த் திட்டம், காந்தி நகர் கிராமத்திலே ஒரு இல்லம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு ஒதுக்கப்படும்போது கட்ட வேண்டிய தொகை 2 இலட்சம் ரூபாய். அவர் 2 இலட்சம் ரூபாயைக் கட்டிய பிறகும் மீண்டும் இரண்டு இலட்சம் ரூபாயைக் கட்டினால்தான் உங்களுக்குப் பத்திரம் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள் என்று அவர் வருத்தப்படுகிறார்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பேசுகின்றபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் பேசினார்கள். அதற்கு இதே பதிலைத்தான் சொன்னேன். இன்றைக்கு நிலங்களைக் கையகப்படுத்துகின்றபோது,—அதை அரசாங்கம் கையகப்படுத்துகின்றது—அந்த நிலத்தின் உரிமையாளர், உடனடியாக வழக்கு மன்றத்திற்குச் சென்று விடுகிறார். அதன் காரணமாக வழக்கு மன்றத்திலே இருக்கின்றபோது, தோராய மதிப்பீடு என்ற அடிப்படையிலே அந்த வீடுகள் எல்லாம் ஒதுக்கப்படுகின்றன. வழக்கு மன்றத்திலே தீர்ப்பாணை வருகின்றபோது, அதனுடைய முழு விலைகளையும் சொல்கின்றபோது, அது அதிகமாகத் தெரிகின்றது.

ஆகவே, இது நடைமுறையிலே ஏற்பட்டிருக்கின்ற தவறு என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உலகரட்சகன் (குறுக்கீடுகள்) உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனின் அவசியத் தேவைகளில் உறைவிடம் மிக முக்கியப் பங்கு வகிப்பதாகச் சொல்லும் அரசு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் குடியிருப்புகள் அதிக அளவில் விற்கப்படாமல் நிலுவையில் உள்ளதால், தற்போது புதிய வீட்டு வசதித் திட்டம் எதையும் மேற்கொள்ள வேண்டாம் என முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிடுவது முரண்பாடான செய்திகளாக உள்ளன. அதிக அளவு குடியிருப்புகள் விற்கப்படாமல் இருப்பது எத்தனை குடியிருப்புகள்? விற்கப்படாமல் இருக்கும் இக்குடியிருப்புகளின் ரூபாய் மதிப்பீடு எவ்வளவு என நான் அமைச்சருடைய பதிலுரையிலே அறிய விரும்புகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வசமுள்ள காலி நிலங்களில், தனியார் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சித் திட்டத்தின்மூலம்— joint venture—வீடுகள் கட்டும் திட்டங்களைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக 2, 3 ஆண்டுகளாகத் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் அரசிடம் உள்ளதா, எந்த நிலையில் உள்ளது என...

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, பல்வேறு வகைகளிலே, தேவையில்லாத இடங்களை வாங்கி, தேவையில்லாத இடங்களிலே விலையேற்றத்தை ஏற்படுத்தி வாங்கிய காரணத்தினாலும், பழுதுபட்ட கட்டடங்கள் கட்டப்பட்டிருந்ததாலும், பல்வேறு வகைகளிலே ஏறக்குறைய 918 கோடி ரூபாய்க்கு அவை விற்பனையாகாமல் தேங்குகின்ற நிலையெல்லாம் ஏற்பட்டது. அதன் காரணமாகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பல்வேறு வகைகளிலே விற்பனை உத்தியின் காரணமாக இன்றைக்கு விற்பனையாகி இருக்கின்றன. ஆகவே, வரும் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, இதுபோன்று பல்வேறு தனியார் துறையுடன் இணைந்து வீடுகளைக் கட்டுவதற்கான திட்டங்களை ஆய்வு செய்யலாம் என்ற நடவடிக்கையை வருகின்ற காலங்களில் எடுப்பதற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தயாராக இருக்கின்றது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)



**திரு. கு. பிச்சாண்டி:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அவர்களுடைய 1991–96 ஆட்சியிலேதான், தேவையில்லாத இடங்களிலே வீடுகளைக் கட்டியவைதான் விற்கப்படாமல் இன்று வரை இருக்கின்றன என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வீட்டு வசதி வாரியத்தினுடைய அமைச்சராக இருக்கின்றபோது, சேலம் பகுதியில் இருக்கின்ற ஏற்காடு பகுதியிலே 73 வீடுகளை, தேவையில்லாத இடங்களில் கட்டி, இன்று வரைக்கும்கூட ஒரு வீடுகூட விற்க முடியாத நிலையில் இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உலகரட்சகன் பேசட்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டீர்கள், அவர் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) உலகரட்சகன், பேசுங்கள். மற்றவற்றை பதிலுரையில் சொன்ன பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்) பதிலுரையில் சொன்ன பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டீர்கள், அதற்குரிய பதிலைச் சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகு, பதிலுரை சொன்ன பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்று 1991–96 ஆம் ஆண்டிலே 1,000 கோடி ரூபாய் கடன் வாங்கி, தேவையில்லாத ஏரிப் பகுதிகளில் எல்லாம் கட்டப்பட்டு, பல சிற்றூர்களிலே கட்டப்பட்டு, அவை விற்கப்படாமல் இருந்தன அந்த ஆட்சிக் காலத்திலே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அமைச்சராக இருந்தபோது அவர்களுடைய தொகுதியில் ஒரு திருமண மண்டபம் கட்டப்பட்டு, அதுஇன்றும் வாடகைக்குச் செல்லாத சூழ்நிலையில் உள்ளது. தேவையில்லாத இடத்தில், தேவையில்லாமல் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு, பணத்தை வீணாக்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உலகரட்சகன் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பேசுங்கள். வேறு பக்கத்தில் போகிறது. அவர் பேசி முடிக்கட்டும். இன்றைக்கு விவாதம் இன்னும் மானியக் கோரிக்கைகள் நிறைய இருக்கின்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் பிச்சாண்டி. உலகரட்சகன் பேசட்டும். (குறுக்கீடுகள்) உலகரட்சகன், நீங்கள் பேசுங்கள்.

முற்பகல் 10–55

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பத்திரிகையில் வந்த செய்தியைப் பற்றித்தான் நான் இப்போது உரையாற்றிக்கொண்டிருக்கிறேன். அது உண்மையா, தவறா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சென்னை, பெசன்ட் நகர் பகுதிக்குட்பட்ட இந்திரா நகர், 4-வது நிழல் மரச் சாலையில் சுமார் 52 கிரவுண்ட், ஒரு பள்ளிக்கூடத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம், 2003–ல் தனியாரிடமிருந்து கைப்பற்றப்பட்டு, கிரவுண்ட் ரூ.40 இலட்சம், ரூ.50 இலட்சம் விலையில் சுமார் 20 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்தக் காலி மனை எந்தப் பயனும் இல்லாமல் வீணே கிடப்பது, அதை இப்பொழுது 7 இலட்சம் ரூபாய் முதல் 12 இலட்சம் ரூபாய் வரை, I.A.S. அதிகாரிகளுக்கும், I.P.S. அதிகாரிகளுக்கும், only V.I.P. என்று அந்தப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இது உண்மைதானா? அல்லது பத்திரிகை ஒரு தவறான செய்தியைச் சொல்லி இருந்தால் அந்தப் பத்திரிகையின்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களிலே வீட்டு வசதித் துறையிலே இருக்கின்ற பல்வேறு திட்டங்களிலே, நடப்பாண்டு என்ற விலையிலே பல்வேறு முறைகேடுகள் நடந்தன. குறிப்பாகச் சொல்லப் போனால், பெசன்ட் நகரிலே 17 ஒதுக்கீடுகள் அவர்களுக்கு விருப்பப்பட்டவர்களுக்கு எல்லாம் கொடுக்கப்பட்டன. இதுபோன்ற நிகழ்வுகள் நடக்கக்கூடாது என்பதற்காக, தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இனி எந்தத் திட்டத்திலே, எந்த நிலங்களை விற்பதாக இருந்தாலும், ஒன்று guideline value–விற்கு விற்கவேண்டும். இல்லையென்றால், market value–விற்கு விற்கவேண்டும். அதில் எது அதிகமாக இருக்கிறதோ, அந்த விலைக்குத்தான் விற்கவேண்டும் என்ற வகையிலே நடவடிக்கை எடுத்தார்கள். இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக்கின்ற இந்திரா நகரினுடைய ஒரு இடம், ஒரு தனியார் ஆக்கிரமித்து வைத்திருந்த



இடம். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அது ஆக்கிரமிக்கப்பட்ட இடமாக இருந்தது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றபோது, court–லேயிருந்து அவர்களுக்கான––அதை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக இன்றைக்கு அந்த நிலம் மீட்கப்பட்டிருக்கின்றது. எந்த வகையிலும் நடப்பு ஆண்டினுடைய விலை என்ற நிலை இந்த ஆட்சியிலே இல்லை என்பதை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதியாகச் சொல்லியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, பத்திரிகையிலே சொல்லியிருக்கின்ற ரூ.7 இலட்சம், ரூ.12 இலட்சம் என்ற மதிப்பிற்கு எல்லாம் இல்லை. Guideline value அல்லது market value, இதில் எது அதிகமோ, அதுதான் விலை என்ற நிலையை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அந்த வகையிலேதான் நடக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உலகரட்சகன், இரண்டு மணித்துளிகளில் முடித்து விடுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உலகரட்சகன், இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் பதிலுரையாற்றிய பிறகு கேளுங்கள். (குறுக்கீடு)

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை. (குறுக்கீடு)

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு பார்த்தாலும் விளம்பரங்கள், பெண்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடட்டும். அவர் முடிக்கட்டும். உட்காருங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** ஆபாசமாகவும் . . .

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிக்கட்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அவர் பேசி முடிக்கட்டும். மானியக் கோரிக்கைகள் நிறைய இருக்கின்றன. பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். அவர் பதிலுரை சொல்லும்போது சொல்லுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** ஆபாசமாகவும், அருவருப்பாகவும், இளைஞர்கள் மத்தியில் . . .

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். ஒவ்வொன்றுக்கும் விளக்கம் சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி? விவாதம் வேறு திசையை நோக்கிப் போகிறது. உலகரட்சகன், நீங்கள் பேசி முடியுங்கள். இரண்டு மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு பார்த்தாலும் விளம்பரங்கள், பெண்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் ஆபாசமாகவும், அருவருப்பாகவும் இளைஞர்கள் மத்தியில் வக்கிர எண்ணத்தைத் தூண்டுவதாகவும் உள்ளன. இப்படிப்பட்ட இழிநிலையை உடனடியாகத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். தொழில் நிறுவனங்கள் முதலான எல்லா விளம்பரப் பலகைகளும், பெயர்ப் பலகைகள் எங்கு பார்த்தாலும் ஆங்கிலத்திலேயே உள்ளன. தமிழில் இருப்பதில்லை. தமிழ்நாட்டில் இந்த நிலை ஏற்படலாமா? ஏற்படாதவண்ணம் இதற்கான அரசாணை போடப்பட்டிருந்தும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழ் என்றால் மக்கள் அனைவரையும் குறிக்கும். தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறவர்கள் தமிழ்ப் பகைவர்கள், தமிழ் விரோதிகள், தமிழின விரோதிகள் என பேரறிஞர் அண்ணா அவர்கள் தலை பொன்மொழியிலே சொல்லப்பட்டவற்றை நான் இங்கு சொல்கின்றேன். பேரவைத் தலைவர் அவர்களே, உங்களையும் பார்த்துச் சொல்லியிருக்கிறேன். பேரறிஞர் அண்ணாவினுடைய பொன்மொழிகளையும் சொல்லியிருக்கின்றேன். எனக்கு மேலும் 5



நிமிடங்கள் தாங்கள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்ன கருத்தில் எனக்கு இப்போது உடன்பாடு. அதனால் (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** பத்திரிகையாளர்களுக்கு அரசு தவணை முறையில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதாக 2, 3 ஆண்டுகளாகச் சொல்லப்படுகின்றது. பத்திரிகையாளர்களுக்கு இந்த ஆண்டு கட்டித் தரும் எண்ணம் அரசிடம் உள்ளதா? அவர்கள் தவணை முறையில்தான் கேட்கிறார்கள். மேலும், அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஓய்வூதியம் 3,000 ரூபாயாக இருப்பதாகவும், அதை 5,000 ரூபாயாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்றும் கருதுகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளில் மத வழிபாட்டுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களை இலவசமாகவோ, அல்லது கொள்முதல் விலையிலேயோ மற்றவர்கள், அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தருமபுரி தொகுதி, எடப்பட்டியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உலகரட்சகன், ஒரு மணித்துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** புதிய வீடுகள் பாதுகாப்பு இல்லாததால் சேதப்படும் நிலை உள்ளது. அந்த வீடுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள்.

*முற்பகல் 11–00*

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே சுற்றுலாப் பயணிகள் வந்து போவதற்குரிய ஒரு சுற்றுலாத் தலமாக இல்லை. திருவண்ணாமலைக்கு வருபவர்கள் எல்லாம் அருணாசலேஸ்வரர் கோயிலுக்குச் சென்றுவிட்டு, நேராக காஞ்சிபுரம் வந்துவிடுகிறார்கள். திருவண்ணாமலை மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். அதிலே ஒரு சுற்றுலா மையம் அமைக்கத் தாங்கள், தனியார்கள் அமைப்பதைப்போல, ஒரு நாள் முழுவதும்

பொழுதுபோக்குவதற்காக அங்கே ஒரு சுற்றுலா மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா? இதுகாறும் இல்லையென்றால், இந்த ஆண்டு அங்கே ஒரு சுற்றுலா மையம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மிகவும் பிரசித்தி பெற்ற ஓர் இடம். அங்கு பல்வேறு நிலைகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதிகளை ஒதுக்கீடு செய்து பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக, 2001–2002 முதல் 2002–2003 முடிய 71 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாயும், 2003–2004 ஆம் ஆண்டில் 81 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாயும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்காக ஒதுக்கியிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருவண்ணாமலைக்கு வருகிற பக்தர்கள் தங்கி இளைப்பாறுவதற்காக, 'யாத்ரி நிவாஸ்' ஒன்று 84 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்குக் கட்டப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உலகரட்சகன், பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே இயங்கிக் கொண்டிருக்கும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்—நான் சொல்லவில்லை இந்தக் கருத்தை. பத்திரிகைகளில் வந்ததைத்தான் சொல்கிறேன்— குறட்டை விட்டுத் தூங்குகிறது என்றும், அந்த அலுவலகம் தேவையில்லை என்றும், அந்த அலுவலகத்தில் ஒரு plan submit செய்தால், sanction செய்வதற்கு ஒரு வருடம் ஆகிறது என்றும், இதனால் அதை உள்ளாட்சித் துறைக்கு மாற்றிவிடலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு ஓர் எண்ணம் அரசுக்கு ...

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகரக் குழுமம் சரியாக வீடு கட்டுகின்ற திட்டங்களையெல்லாம்--ஏறக்குறைய 95 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களின் மூலம்தான், Corporation, Municipality,



இதுபோன்ற இடங்களில்தான் plan வழங்கப்படுகின்றது. அதுவும் உடனடியாக வழங்கப்படுகின்றது. அதுபோல, ஒரு plan–ஐக் கொடுக்கின்றபோது, அவர்கள் சரியான முறையிலே கொடுத்தார்கள் என்று சொன்னால், ஒரு மாத காலத்திற்குள் அந்த plan–கள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல. இந்த வருடம்தான் அதிகமான கட்டடங்கள் கட்டுவதற்கான plan–கள் வழங்கப் பட்டிருக்கின்றன. அதனால் கட்டடம் கட்டுபவர்களுடைய, அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்விலும் இன்றைக்கு ஒளி விளக்கை ஏற்றி வைத்திருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உலகரட்சகன், பேச்சை முடியுங்கள். கடைசி வாக்கியத்தோடு பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லியதின்பேரில் கடைசி வாக்கியமாக நிறைவு செய்கின்றேன். எல்லா மாநிலங்களிலும் இருப்பதைப்போல, நமது மாநிலத்திலும் plan–கள் submit செய்தவுடன், அவர்கள் கட்ட வேண்டிய தொகையை வசூல் செய்துவிட்டு, பிறகு தாங்கள் ஆய்வு செய்து, கட்ட வேண்டிய தொகை என்னவென்று சொன்னாலும், plan submit செய்தவர்கள் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகையால் மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட நம் மாநிலத்தில் fees குறைவாக, 5 ரூபாய், 10 ரூபாய் குறைவாக இருந்தாலும், நாள் கணக்காகின்றபடியால், உதாரணமாக 2 கோடி ரூபாய் முதலீடு செய்து ஒரு இடத்தை வாங்கி, அடுக்கு மாடி வீடுகள் கட்டுவதற்கு ஒரு வருடம் காலதாமதமானால் 24 இலட்சம் ரூபாய் அவருக்கு வட்டியாகிவிடுகிறது. ஆகையினால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, plan C.M.D.A.–விலே இருப்பதையெல்லாம், நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பேசியபோதுகூடச் சொன்னேன், 15 தினங்களிலிருந்து 30 தினங்களுக்குள்ளாக அந்த வரைபடங்கள் எல்லாம், sanction ஆகி திரும்பக் கிடைக்குமானால், அத்தனை பேரும் பயனடைவார்கள். உண்மையிலேயே தொழில் நசுங்காது. இந்தத் தொழிலால் பாதிக்கப்பட்டவர்கள்—நன்றாக இருந்த தொழில், சமீப காலத்திலே பாதிக்கப்பட்டு, இப்போது சற்று தழைத்தோங்கி வருகிறது. இந்த நேரத்திலே அரசும் இந்த plan வழங்குவதில் C.M.D.A.–வில் உள்ள குறைபாடுகளை அகற்றி, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி.

**•செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் இதர கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*முற்பகல் 11–05*

நத்தைக்கு வீடு முதுகிலே இருக்கிறது ஒரு கூடாக; எலிகளுக்கு வீடு வரப்புகளிலே இருக்கிறது வளையாக; குருவிகளுக்கு வீடு மரத்திலே இருக்கிறது கூடாக; ஆனால் இந்தச் சமூகத்தில் இருக்கக்கூடிய சாதாரண மனிதர்களுக்கோ கனவுதான் வீடாக இருக்கிறது. உதாரணமாக, தமிழகத்தில் ஜனநாயகத்தினுடைய தூண்களாக இருக்கக்கூடிய பத்திரிகையாளர்கள், ஒரு மாவட்டத்திற்குக் குறைந்தபட்சம் 20 பேர் இருந்தால் அதுவே அதிகம் என்று சொல்லலாம். தலைநகரில் 250 பேர் இருக்கிறார்கள். இவர்களுக்கு இலவசமாக மனை கொடுப்பது அல்லது குறைந்த விலையில் மனை கொடுப்பது என்ற திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, பல கோடி ரூபாய் என்பது நிச்சயமாக செலவு ஆகாது. ஓர் அரசு கொள்கை ரீதியாக மனது வைத்தால் நிச்சயமாக பத்திரிகையாளர்களுக்கு ஒரு வீட்டுக்கான, ஒரு கனவு வீட்டை நிறைவேற்றுவதற்கு உதவிகரமாக இருக்கும். திண்டுக்கல்லிலேகூட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும் பத்திரிகையாளர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பல ஆண்டு காலமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். பரிவோடு கவனிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களும் உடனடியாகக் கவனித்து நிறைவேற்றுவது பேருதவியாக இருக்குமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இந்த வீடு என்ற கனவை நிறைவேற்றுவதற்காகத்தான் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறைந்த வருவாய்ப் பிரிவு, நலிந்த வருவாய்ப் பிரிவு, மத்திய தர வருவாய்ப் பிரிவுக்கான வீடுகளை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த 20 ஆண்டுக் காலமாக ஓர் அரசு தங்களை ஏமாற்றாது என்ற நம்பிக்கையோடு பல இலட்சம் ரூபாய்களை அரசிடம் கொடுத்து விட்டு பத்திரம் கிடைக்காமல் இருக்கிறார்கள் என்றால், இதைவிட



தமிழகத்தினுடைய சோகம் வேறு எதுவாகவும் இருக்காது என்பதைத் தாழ்மையோடு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 20 ஆண்டுக் காலம். கேட்டால் நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது என்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. திண்டுக்கல்—உதாரணமாக நான் கூறுகிறேன். 1989–லேயே வழக்குகள் முடிவுற்று, நீதிமன்றம் சதுர அடி 2 ரூபாய்க்கு, தீர்ப்புக் கொடுத்து விட்டார்கள். ஆனால் 21 ஆம் நூற்றாண்டில், இப்போது 2005 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்திற்குமாக வட்டி மேல் வட்டியாகப் போட்டு, அதற்குப் பெயர் கூட்டு வட்டி என்று சொல்கிறார்கள். வட்டி முறையே இருக்கக்கூடாது என்று தடுப்புச் சட்டம் கொண்டு வந்தது இந்த அரசாங்கம். ஆனால் Housing Board, இப்போது வீட்டு வசதி வாரியம் கந்து வட்டி வாரியமாக மாறி விட்டதோ என்று கவலைப்படக்கூடிய அளவுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலை இந்தச் சபைக்கு அளிக்கின்றார்கள். இன்றைக்கு நீதிமன்றத்திலே நிலுவையில் இல்லாத நிலங்கள், அவற்றைக் கொடுப்பதாக இருந்தால், அதற்கான வட்டி எல்லாம் போடுவதில்லை. ஏனென்று சொன்னால், நீதிமன்றத்தில் இல்லாத இடங்களுக்கு உடனடியாகப் பணம் கட்டினார்கள் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக விற்பனைப் பத்திரம் வழங்க வேண்டுமென்று இந்தத் துறைக்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆகவே இந்தத் துறையின்மூலமாக அது வழங்கப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**செல்வி க. பாலபாரதி:** இந்த ஆணையை நிறைவேற்றாத அதிகாரிகள்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், திண்டுக்கல் இராணி மங்கம்மாள் காலனியில் 1989 ஆம் ஆண்டிலே வழக்கு முடிவுற்று, பத்திரங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கொடுக்கிறோம், கொடுக்கிறோம் என்று அந்த வாரியத்தினுடைய அதிகாரிகள் மீண்டும், மீண்டும் சொல்கிறார்களே தவிர, அவர்கள் கொடுப்பதற்கான வழியே இல்லை. ஆகவே நான் ஆதாரபூர்வமாக நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையினுடைய அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுப்பாரா என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க நான் கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே இந்தப் பிரச்சினை என்பது...

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் குடியிருப்புகளில் 725 குடியிருப்புகளுக்கு சுத்தக் கிரயப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,256 குடியிருப்புகளில் 353 குடியிருப்புகளுக்கான நிலத்தின் மீது வழக்குகள் இருக்கின்றன. ஆகவே மீதமுள்ள நிலங்களுக்கெல்லாம் முழுப் பணமாக அவர்கள் செலுத்தி விட்டார்கள் என்று சொன்னால், உடனடியாக விற்பனைப் பத்திரம் வழங்குவதற்கு ஆணைகள் வழங்கப்படும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரிலேயேகூட பல முறை பல மாவட்ட எம்.எல்.ஏ-க்கள் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். அவருக்கும் தெரியாத ஏதோ ஒன்று அங்கே நடந்து கொண்டிருக்கிறது. Housing Board**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இதை எங்களுடைய கவனத்திற்கு ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Housing Board** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ** என்று சொல்லக்கூடாது.

முற்பகல் 11–10

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு சட்டமன்றத்தினுடைய உறுப்பினர் அவர்கள் பல்வேறு தடவை இந்த நிகழ்வுகளை எங்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே வாரியத்தின்மூலம் 4 அதிகாரிகளைக் கொண்ட குழுவை அமைத்து, உடனடியாகத் தீவிர விசாரணை செய்து, அதிலே தவறு ஏற்பட்டிருக்குமானால், உடனடியாக விற்பனைப் பத்திரத்தை வழங்க வேண்டும் என்று ஆணை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வார்த்தையை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால், எங்களால் பிழைத்துக் கொண்டிருக்கக்கூடிய வாரியம் என்று வேண்டுமானால் போட்டுக்கொள்ளுங்கள். மேலும்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



இந்த நிர்வாகத்தில் நடக்கக்கூடிய குளறுபடிகளுக்கு, உதாரணமாக திண்டுக்கல்லில் புகழ் பெற்ற அங்கு விலாஸ் முத்தையா பிள்ளையினுடைய நிலத்தை ஆர்ஜிதம் செய்கிறபோது, உயர் நீதிமன்றமே தடுத்து, வீடு கட்டக் கூடாது என்று சொன்னது. அதையும் மீறி வீடு கட்ட, நீதிமன்றம் இடிக்கச் சொல்லி உத்தரவிட்டு, இத்தனையும் நடந்த பிற்பாடு, வீடு விற்பனை செய்யப்படுகிறது. இப்போது அதனுடைய மொத்தத் தொகையைச் சேர்த்து அந்தப் பயனாளிகளின்மீது சுமத்தப்படுகிறது. இது எந்த வகையிலே நியாயமாக இருக்க முடியும்? HUDCO நிறுவனம் 4 சதவீதத்திற்குத்தான் Housing Board–க்கு வட்டிக்குக் கொடுக்கிறது. ஆனால், Housing Board 20 சதமானம் வட்டி போட்டால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே மட்டும்தான் இப்படி ஒரு வட்டி போடுகிற அரசாங்கமாக இருக்குமோ என்கிற சந்தேகம்கூட எனக்கு வருகிறது.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்றபடி 20 சதவீதம் வட்டி எல்லாம் போடுவது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவல்களை அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார். 11½ சதவீதம் வட்டிதான் போடப்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது வீடு கட்டுவதற்கான கூட்டுறவுச் சங்கத்திலேதான், அந்த வீட்டு வசதி வாரியம் வீடு கட்டிக் கொடுக்கக்கூடியவர்களுக்கு, பயனாளிகளுக்கு 20 சதமானம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் வேண்டுமானால் ரசீதைக் காட்டுகிறேன். உண்மைக்கு மாறாக நான் எதுவுமே சொல்லவில்லை. நடந்துகொண்டிருக்கக்கூடிய விஷயத்தைச் சொல்கிறேன். ஆகவே, ஒரு சிறப்பு நீதிமன்றத்தைத் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைப்பதற்கு உத்தரவு இடுங்கள். இந்தப் பிரச்சினை என்ன, 21 ஆம் நூற்றாண்டு வரைக்கும் தொடர வேண்டுமா? 20 ஆம் நூற்றாண்டு எப்போது? 1979–வது வருஷம், 1984–வது வருஷம் முடிந்தது, இப்போது அடுத்த நூற்றாண்டு வரைக்கும் பத்திரமே கிடைக்கவில்லை என்றால்...! தனியாரிடம் வீடு வாங்கினால்கூட உருப்படியாகக் கொடுத்து விடுகிறார்கள். அரசாங்கம் கை நீட்டிக் காசு வாங்கியதா, இல்லையா! அவர்கள் எத்தனை நம்பிக்கை வைத்திருப்பார்கள்? இப்போது இவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறார்கள். அதிலே ஓய்வு பெற்றவர்கள், உழைப்பாளிகள்,

தங்களுடைய வியர்வையை, இரத்தத்தைச் சிந்தி அவர்கள் காசைக் கொடுத்திருக்கிறார்கள். தயவுசெய்து இதிலே என்ன நடந்திருக்கிறது என்று ஒரு விசாரணைக் குழுவைப் போட்டு, முழுமையாக, கணக்கு, வழக்கு முழுவதையுமே பார்த்தீர்கள் என்றால் . . .

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீட்டு வசதி வாரியம் ஏதோ ஏமாற்றுகின்ற வேலை செய்கின்றது என்பது போன்ற ஒரு கருத்தோடு இங்கே சொல்கின்றார்கள். இன்று அந்த இடங்களை வாங்குகின்றபோது அவர்களுக்கு, இது தோராய மதிப்பு, இது வழக்கு மன்றத்திலே இருக்கின்றது, வழக்கு மன்றத்திலே என்ன தீர்வு வருகின்றதோ, அதன்படிதான் உங்களுக்குத் தீர்வு செய்யப்படும் என்ற கருத்தை, அதை வாங்குகின்றவர்களுக்குச் சொல்லித்தான் அந்த வீடுகள் விற்கப்படுகின்றன என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோராயம் என்றால் எத்தனை ஆண்டுகளுக்குத் தோராயம்? இது என்ன நீண்டு கொண்டே காலவரையறை இல்லாமல் தோராயம் என்று போகுமா? என்னவோ புரியவில்லை.

அதேமாதிரி விலை நிர்ணயித்தபோது நீதிமன்றத் தீர்ப்புப்படி அந்த விலைக்கே தாருங்கள். பத்திரம் வழங்குவதற்குச் சிறப்பு நீதிமன்றத்தை தயவுசெய்து அமையுங்கள். பி. கோவிந்தராஜனுக்கு 2-11-2004-லே ஒரு notice Housing Board–லேயிருந்து வருகிறது, 8 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டும் என்று. 9-11-2004–லே அவருக்கு மீண்டும் ஒரு notice அனுப்புகிறார்கள். 4 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் கட்டுங்கள் என்று. 5 நாட்களிலே இரண்டு notice–கள் வருகின்றன, வேறு, வேறுவிதமாக. அப்படியென்றால் இது என்ன நிர்வாகம்? எந்தக் கண்காணிப்புமே இல்லாமல் அந்தத் துறை போய்க் கொண்டிருக்கிறது என்பதைக் கவலையோடு நான் சொல்கிறேன். அது உங்களுடைய அரசாங்கத்திற்கு, அந்த மக்கள் மேலே நம்பிக்கை இல்லாத ஒரு தன்மையை ஏற்படுத்தும் என்று நான் சொல்கிறேன். அடுத்து, கடலூர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள்.



**செல்வி க. பாலபாரதி:** 6 கோடி ரூபாய் வரைக்கும், வீடு கட்டக்கூடிய கூட்டுறவுச் சங்கத்திலே **மிகப் பெரிய ஊழல் நடந்திருக்கிறது. போலி முத்திரைத்தாள், போலியான பயனாளிகள், எல்லாமே போலியாக நடத்தி, உண்மையான பணத்தை, மக்கள் பணத்தை எடுத்துவிட்டார்கள். இதுசம்பந்தமாக அரசாங்கத்திடம் சொல்லியாயிற்று. ஆதாரபூர்வமாகக் கொடுத்திருக்கிறோம். இதுவரைக்கும் நடவடிக்கை . . .

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் பொது ஊழியர்கள் வீடு கட்டும் சங்கம் என்பதில் 1-11-1996 முதல் 2-5-2001 வரை, இடைப்பட்ட காலத்தில் பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன என்று புகார்கள் வரப்பெற்றன. பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாகவும், பல்வேறு புகார்கள் வந்ததன் பேரில் அதிலே கூட்டுறவுச் சங்க சட்ட விதிகள் 81–ன்படி விசாரணை நடத்துவதற்காகக் கட்டளை இடப்பட்டிருக்கின்றது. அந்த வகையிலே இந்த பொது ஊழியர்கள் வீடு கட்டும் சங்கத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள கடன் அனைத்தும் 100 சதவீதம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, ஆய்வு முன்னேற்றத்தில் உள்ளது. ஆய்வு அறிக்கை மற்றும் விசாரணை அறிக்கைகளைப் பெற்று, முறைகேடுகளுக்குக் காரணமானவர்கள்மீது சட்டபூர்வமான நடவடிக்கைகள் தொடர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முறைகேடுகளைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பாரபட்சமற்ற நடவடிக்கையை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–15

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூரிலே நடந்திருக்கக்கூடியது ஒரு படுமோசமான மோசடி. 6 கோடி ரூபாய், அரசுக்கு எதிரான ஒரு போலி அரசாங்கத்தையே நடத்தி, போலி முத்திரைத்தாள்கள், . . .

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது கடலூரில் மட்டுமல்ல; கடந்த கால ஆட்சியில் பல்வேறு இடங்களிலே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே முறைகேடுகள் நடந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் பதில் சொல்கின்ற நேரத்திலே, எடுத்துச் சொல்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி, பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** ஆகவே, கடலூரிலும் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது, அது கோயம்புத்தூரிலும் நடந்திருக்கிறது, மதுரையிலும் நடந்திருக்கிறது, காரைக்குடியிலும் நடந்திருக்கிறது, அது சேலத்திலும் நடந்திருக்கிறது, அத்தனை பகுதிகளிலும் நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய வீழ்ச்சிக்கு முக்கியக் காரணம் எந்தக் கட்சி என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி, முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கருணாகரன், உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** ஒரு நிமிடம். நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியுடன் சேர்ந்த ஒரு நிகழ்வு என்பதனாலே, இங்கே நான் இதைப் பதிவு செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து, 19-5-1999 ஆம் தேதியில், 10 வருடத் தவணையில், 14 சதவிகித வட்டியில், ரூ.2.5 கோடியைக் கடனாகப் பெற்று, நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. இதேபோன்று, 7-7-1999 ஆம் தேதியில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, இணையத்திற்கு ரூ.70 கோடி கடனாக அனுமதித்ததில், ரூ.50 கோடி கடனாக, 15 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் விதத்தில், 14 சதவிகித வட்டி விகிதத்தில் கடன் பெறப்பட்டது. இந்த மாநிலக் கூட்டுறவு வங்கியினுடைய தலைவராக இருந்தவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி ஆவார்கள். கோயம்புத்தூர் நகர வளர்ச்சி கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், 8-6-1998 முதல் 27-3-2002 வரை நிர்வாகக் குழுக் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில், இச்சங்கத்தின் நிர்வாகக் குழுவில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. சி.டி. தண்டபாணி ஒரு நிர்வாகக் குழு உறுப்பினர். அவரது மகன் T. மோகன், மற்றொரு மகன் T. ரவி மற்றும் அவரது மருமகன் பாண்டியன் என்கிற P. இராஜா ஆகியோர் நிர்வாகக் குழுவில் இயக்குநர்களாக அங்கம் வகித்த காலத்தில், கோவை மாநகராட்சி எல்லையில், சிங்காநல்லூர் கிராமம், ஒண்டிப்புதூரில் அடுக்கு மாடிக் குடியிருப்பு வீடுகள் கட்ட HUDCO மூலமாக ரூ.16 கோடியே 32 இலட்சம் கடன் பெற்று, 240 அடுக்கு



மாடி வீடுகள் கட்டியும், 180 வீடுகளைக் கட்டி முடிக்காமலும் விட்டுச் சென்றனர். கட்டப்பட்ட வீடுகளில் இதுவரை 63 வீடுகள் மட்டுமே விற்கப்பட்டன. (குறுக்கீடுகள்) 177 வீடுகள் விற்கப்படாமலும், (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள், நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம், நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) please, ஒரு நிமிடம். அதன் பிறகு பேசுங்கள். I am not yielding. ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** திரு. சிவபுண்ணியம், இருங்கள், நான் சொல்லி முடிக்கும் வரையிலும் இருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் (குறுக்கீடு) சம்பந்தம் இருக்கிறது. (குறுக்கீடு) சம்பந்தம் இருக்கிறது, சொல்கிறேன். (குறுக்கீடு) இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** திரு. சிவபுண்ணியம், இருங்கள். (குறுக்கீடு) நீங்கள் இருங்கள். 177 வீடுகள் (குறுக்கீடு) சம்பந்தம் இருக்கிறது. 177 வீடுகள் விற்கப்படாமலும், 180 வீடுகள் கட்டி முடிக்கப்படாமலும், சங்க நிதியைப் பெருமளவில் சீரழித்துள்ளனர். இதனால் சங்கம் ரூ.26 கோடியே 3 இலட்சத்திற்குக் கடனாளியாக உள்ளது. இவ்வகையில் சங்கம் 15 கோடி ரூபாய் நஷ்டம் அடைந்துள்ளது. அடுக்கு மாடி வீடுகள், சதுர அடி 790 ரூபாய்க்கு கூவிக் கூவி அழைத்தும் விலை போகாமல், இத்திட்டத்தில் ஊழல் புரிந்தமைக்காக திரு. சி.டி. தண்டபாணி, திரு. மோகன், திரு. T. ரவி ஆகிய முன்னாள் இயக்குநர்கள், திரு. பாண்டியன் என்கின்ற பி. இராஜா, சங்க முன்னாள் துணைத் தலைவர் ஆகியோர்மீது வணிகக் குற்றப் புலனாய்வில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெறப்பட்ட காலத்தில், அவர் மாநிலக் கூட்டுறவு வங்கியினுடைய தலைவராகச் சென்னையிலே இருக்கிறார். இந்த வங்கி--அப்போது கடன் கோவைக்கு, கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு, மாநிலக் கூட்டுறவு வங்கியானது கடன் வழங்குகிறது. அதே சமயத்தில், கோவையிலே, C.T.D. சங்கம்; அந்தக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தினுடைய பெயரே C.T.D. சங்கம் என்று சொல்வார்கள். C.T. தண்டபாணி அவர்களுடைய குடும்ப

உறுப்பினர்கள் மட்டுமே, அதனுடைய நிர்வாகக் குழுவிலே அங்கத்தினர்களாக இருந்தார்கள். அப்போது 25 கோடி ரூபாயை வீட்டு வசதி இணையத்திலிருந்து கடனாகப் பெற்று, மிகப் பெரிய முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பதனைக் குறிப்பிடுவதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டு, இந்த விளக்கத்தைச் சொல்லி, அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, செல்வி க. பாலபாரதி, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. சந்தோஷமாக எடுங்கள். நாங்கள் தமிழ்நாடு முழுவதும் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருணாகரன், உட்காருங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. ஒரு நிமிடம் இருங்கள். தமிழ்நாடு முழுவதும் (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய (மணியடிக்கப்பெற்றது) இதுபோன்ற அனைத்து ஊழல் நடவடிக்கைகள்மீதும் நீங்கள் நடவடிக்கை எடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** அதிலே எந்தத் தடையும் எங்களுக்கு இல்லை. தி.மு.க.-வாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** திரு. கருணாகரன் அவர்களே இந்தச் சங்கத்தின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி, பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. கருணாகரன், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) நடவடிக்கை எடுங்கள் ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நடவடிக்கை எடுப்பார்கள், இப்போது எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) எழுதிக் கொடுத்துவிடுங்கள்.



**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, எழுதிக் கொடுக்கிற பிரச்சினையில்லை. அவர் விளக்கம் சொன்னார். கடலூரில் (குறுக்கீடு) இல்லை, இல்லை. தப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி, பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 25 கோடி ரூபாய் கபளீகரம் செய்யப்பட்டிருக்கிற ஒரு நிகழ்வைப் பற்றி, இந்த அவையிலே, கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின்மீது நடைபெறுகிற மானியத்தில் சொல்வதிலே என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) நான் சொல்ல வருகிறேன், கேளுங்கள். பேரவையின் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன் அவர்கள் ... (குறுக்கீடு)

முற்பகல் 11–20

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உறுப்பினர் சொல்வது கடலூர் ...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** கடலூருக்கும், கோயம்புத்தூருக்கும் சம்பந்தம் இல்லை. ஆனால் ... (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** நீங்கள் தவறு நடந்ததன்மீது நடவடிக்கை எடுங்கள் ...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ...

**திரு. ஜி. பழனிசாமி:** இதுவரையிலே, நான்கு வருடங்களாக என்ன பண்ணிக்கொண்டிருந்தீர்கள்?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இதற்கான நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான்கு வருடங்களாக என்ன பண்ணிக் கொண்டிருந்தீர்கள் என்று கேட்கிறேன். நான்கு வருடங்களாக நடவடிக்கை ஏதாவது உண்டா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருணாகரன், (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி, தயவுசெய்து உட்காருங்கள், மந்திரி பேசுகிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** ஏற்கெனவே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். நடவடிக்கை வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள், உட்காருங்கள், திரு. சிவபுண்ணியம் (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். சபாநாயகர், துணை சபாநாயகர் எழுந்து நின்றால், அமரவேண்டும் என்று விதி இருக்கிறது, உட்காருங்கள். உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கருணாகரன், அமருங்கள். செல்வி பாலபாரதி மட்டும் பேசினால் பேசுங்கள். (குறுக்கீடுகள்) என்ன சிவபுண்ணியம்? (குறுக்கீடுகள்) செல்வி பாலபாரதி மட்டும் பேசினால் பேசுங்கள்; இல்லையெனில் அடுத்த உறுப்பினரை அழைக்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கை . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, முடியுங்கள். இல்லையென்றால், வேறு ஆளைக் கூப்பிடுவேன். (குறுக்கீடுகள்) திரு. கிருஷ்ணமூர்த்தி, நீங்கள் பேசுகிறீர்களா?

**செல்வி க. பாலபாரதி:** கொஞ்சம் இருங்கள். கடலூரில் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் நடந்திருக்கக்கூடிய ஆறு கோடி ரூபாய் மோசடியை உடனடியாக அரசாங்கம் விசாரணை செய்து, யார் தவறு செய்தார்களோ, குற்றம் செய்தார்களோ, அவர்கள்மீது சட்ட ரீதியான நடவடிக்கைக்கு வழக்குத் தொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோன்று, (குறுக்கீடுகள்) ** ஆகவே, அதைக் கண்டுபிடித்து உடனடியாக நடவடிக்கை எடுங்கள்.

இரண்டாவது, என்னுடைய கோரிக்கை, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பி.எஸ். மூர்த்தி நகர், குடிசை மாற்று வாரிய அடுக்கு . . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி, இருங்கள். மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடலூர் பொது ஊழியர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலே பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்று ஒருவரது பெயரை மட்டும் குறிப்பிட்டு குற்றச்சாட்டுச் சொல்கின்றார். ஆனால் அங்கே விசாரணை நடைபெறுகின்றது. யார் தவறு செய்திருந்தாலும் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தவறு செய்கின்றவர்கள் எவராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கக்கூடிய அரசு. அந்த வகையிலே நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இவர்கள் பெயரைப் பதிவு செய்யவேண்டும் என்பதற்காகவே பெயரைச் சொல்கின்ற நிலை இருக்கின்றது என்று சொன்னால், என்ன காரணம் என்று எங்களுக்குப் புரியவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** அமைச்சர் மட்டும் பெயரைச் சொல்கிறார்; நாங்கள் மட்டும் எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள், இதிலே தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மேலே நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டார்கள். ஆக, அதற்குப் பிறகு ஒரு பெயரைப் பதிவு செய்வது என்பது சரியல்ல. (குறுக்கீடுகள்) பதிவு செய்யப்பட்ட அந்தப் பெயர் நீக்கப்படுகிறது. அந்தப் பெயர் நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். பாலபாரதி, உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடு)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** 1998-ல் அடுக்கு மாடிக் குடியிருப்பு இடிந்து விழுந்ததில் 8 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள், மூர்த்தி நகரில்.

அதனால் அப்பகுதியில் பழுதடைந்த நிலையிலிருந்த மேலும் இரண்டு அடுக்கு மாடிக் குடியிருப்புகள், அரசாங்கத்தால் இடிக்கப்பட்டு, அங்குள்ளவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. ஆனால், அம்மக்கள் எட்டு ஆண்டு காலமாக சாலையோரங்களில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு அடுக்கு மாடிக் குடியிருப்புகள், உடனடியாக பி.எஸ். மூர்த்தி நகரில் உள்ளவர்களுக்கு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடு) போதும், போதும், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** அடுத்ததாக, இருபது ஆண்டுக் காலத்திற்கும் மேலாக, மதுரை, எல்லிஸ் நகரில் இருக்கக்கூடிய மக்களுக்கு வித்தியாசத் தொகைக்கான வட்டியை, அதாவது ஒதுக்கீடு பெற்ற தேதியிலிருந்து, விலை நிர்ணயம் செய்யப்பட்ட டிசம்பர் 2004 வரை உள்ள காலத்திற்கானது. ரத்துச் செய்யப்படுவதற்கும், விடுபட்ட முதலாக்கம் என்ற பெயரில் வட்டிக்கு வட்டி கேட்கும் முறையையும் ரத்துச் செய்யவேண்டும் என்ற கோரிக்கையையும், மேலும், அரசு ஊழியர்களுக்கு அரசாணை எண் 174–ஐ அமல்படுத்தி வட்டி கணக்கிட உத்தரவிட வேண்டுமென்ற கோரிக்கையையும், உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான், நிலத்தின் விலை சரியாகத் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டது. எனவே வழக்கு நிலுவையில் உள்ளது என்ற காரணம் சொல்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்காணும் கோரிக்கையைக் கருணையுடன் பரிசீலித்து, தேவையான ஒதுக்கீடுதாரர்களினுடைய பிரதிநிதிகளை, மதுரை, திண்டுக்கல், விருதுநகர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடு) பாலபாரதி முடியுங்கள். வாக்கியத்தை முடியுங்கள்.

*முற்பகல் 11–25*

**செல்வி க. பாலபாரதி:** அவர்களை அழைத்து, ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைத்து, Sale Deed–ஐ அனைவருக்கும் கொடுப்பதற்கு உத்தரவிடுவதற்கும், இரண்டாவது, அவர்களுடைய பொது நலச் சங்கத்தினுடைய தலைவர்களை அழைத்துப் பேசுவதற்கும், அனைத்து வட்டிகளையும் . . .

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எல்லிஸ் நகர்ப் பகுதியிலே இருக்கின்ற



நிலத்திற்கு ஏறக்குறைய 6,32,630 ரூபாய் என்று முதலில் சொல்லப்பட்டு இருந்தது. பின்பு அவர்கள் இந்த வழக்கை மக்கள் மன்றத்திலே மாற்றி விசாரிக்கும்படி உத்தரவிட்டு, அதை மக்கள் மன்றத்திலே விசாரித்து, ஏற்கெனவே அதனுடைய பிரதிநிதிகளையெல்லாம் அழைத்து என்னென்ன வகையிலே செய்ய முடியுமோ, அந்த வகையிலே எல்லாம் செய்யப்பட்டு, ரூ.3,49,100/- என்று அந்த இடத்திற்கான மதிப்பீடு வழங்கப்பட்டது. அதன் பயனாக இன்றைக்கு அந்தப் பகுதியிலே 67 ஒதுக்கீடுதாரர்கள் கிரயம் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். பாலபாரதி, வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** தயவுசெய்து இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். இதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக உண்ணாவிரதப் போராட்டம், Post Card இயக்கம், தந்தி இயக்கம் நடத்தி இருக்கிறோம். தேவைப்படுகிறபோது மிகப் பெரிய மறியல் போராட்டத்திற்கும் செல்ல வேண்டியிருக்கும் என்பதனைத் தெரிவித்து, தங்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, செய்தி மற்றும் விளம்பரத் துறை, சுற்றுலாத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்களைப் பொறுத்த வரை, அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு அரசு மருத்துவமனையிலே N.G.O.–க்களுக்கு இலவச மருத்துவம் அளிப்பதுபோல் இலவச சிகிச்சை அளிக்க அரசு ஆணை போடப்பட்டும், இதுவரை நடவடிக்கை இல்லை. அனைத்துப் பத்திரிகையாளர்கள் சார்பிலும் தொடர்ந்து இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்படுகிறது. ஆனால் இது காலதாமதமாகக் கிடக்கிறது. அதேபோன்று இவர்களுடைய கோரிக்கை, All India Journalists Association சார்பாகக் கொடுத்த மனுக்கள் அனைத்தும், இறந்தவர்களுக்கு வழங்கப்படும் இரண்டு இலட்சம் ரூபாயும், ஓய்வூதியம் 3,000 ரூபாயும் என்பதும் வழங்கப்பட வேண்டுமென்று, தொடர்ந்து கோரிக்கைகள் வைத்தவண்ணம் உள்ளார்கள். அது கிடைக்காமலேயே இருக்கிறது. அதேபோன்று வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கொட்டிவாக்கத்தில்...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு இலட்சம் ரூபாய், நேற்றையதினம் பேசும்போதே சொன்னேன். மூன்று நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; மேலும் 4 பேர்களுக்கு அரசு ஆணை வெளியிடுகிற தருவாயிலே இருக்கிறது; மேலும் இருக்கின்ற ஆறு பேர்கள் பற்றிப் பரிசீலனையில் உள்ளது என்று. அதேபோல 2000 ரூபாயாக இருந்த ஓய்வூதியத்தை 3,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அமர்கின்றேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டிவாக்கத்தில் 108 பத்திரிகையாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. அதேபோன்று அங்கே 500 வீடுகள் தேவைப்படுகின்றன. ஏறத்தாழ பத்திரிகையாளர்கள் நிறைய பேர்கள் இருக்கிற காரணத்தால் 500 வீடுகள் அவர்களுக்கு கொட்டிவாக்கத்தில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, வட்டார மையங்களிலே பணிபுரிகிற பத்திரிகையாளர்களுக்கும் இந்த விதிகள், இந்த உதவிகள் அனைத்தும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். All India Journalists Association–க்கு அலுவலகம் அமைக்க இடம் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் காத்திருக்கிறார்கள். தொடர்ந்து அதற்கு மனு செய்யப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வாடகை என்பது— இன்றைக்குப் பெரும்பாலான மக்களுக்கு வீடு இல்லை. அதேபோன்று, அரசு அலுவலர்கள் இடம் மாற்றம் செய்யப்படுகிறபோதும், அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கக்கூடிய அந்த வாடகை வீடுகளுக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட வீடுகளுக்கு, தனியார் வாடகைகளைக் காட்டிலும் மிக அதிகமான முறையிலே வாடகை இருக்கிறது. அதைக் குறைக்கின்ற நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று, அரசால் கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகள் அனைத்தும் மோசமான நிலையிலே உள்ளன. கட்டுமானம் சரியில்லை. பல கட்டடங்கள் இடிந்து கிடக்கின்றன. அரசுக் கட்டடங்கள், பல இடங்களில் முட்புதர்களும் ...



முற்பகல் 11–30

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் கட்டப்பட்டிருக்கின்ற அரசு ஊழியர்களுடைய குடியிருப்பு வீடுகளைச் சரிசெய்வதற்கான, தமிழகம் முழுவதும் இருக்கின்ற அரசு வீடுகளைச் சரிசெய்வதற்கான, திட்ட மதிப்பீடுகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே, வெகு சீக்கிரத்தில் அந்த வீடுகளையெல்லாம் சரிசெய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது மிக வரவேற்கவேண்டிய ஒன்றுதான். ஆனாலும், அதே நேரத்தில், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட வீடுகளைக் கட்டுகிறபோது, பரிசீலனை செய்து, எந்த இடத்தில் வீடுகளைக் கட்டுவது சரியாக இருக்கும் என்பதையெல்லாம் கவனத்தில் கொண்டு, செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, தஞ்சாவூரிலே வீட்டு வசதி வாரியத்தின் அலுவலகம், புதிய வீட்டு வசதி வாரியப் பகுதியில், குடியிருப்புப் பகுதியில் உள்ளது. தலைமைப் பொறியாளர் அலுவலகம் உட்பட, 30–க்கும் மேற்பட்ட அலுவலர்கள் அங்கே பணிபுரிகிறார்கள். புதிய வீட்டு வசதி வாரியத்தில் உள்ள ஆயிரம் குடியிருப்புகள், தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள 600 வீடுகள், 800 அரசு ஊழியர் குடியிருப்புகள் போன்றவைகளெல்லாம் பராமரிக்கப்படுகின்றன. தஞ்சையைச் சுற்றியுள்ள பட்டுக்கோட்டை, கும்பகோணம், மன்னார்குடி, திருவாரூர், நாகப்பட்டினம், மாயவரம், அரியலூர் மற்றும் பல பகுதிகளிலுள்ள வீட்டு வசதி வாரியப் பிரிவுகள் ஆகியவற்றிற்கு தஞ்சைதான் தலைமை அலுவலகமாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது சிக்கன நடவடிக்கை என்பதன் பெயரால், அதனை மாற்றுவதாகக் கேள்விப்படுகிறேன்; திருச்சிக்கு மாற்றுவதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி மாற்றுவதன்மூலம், இந்தப் பகுதியில் இருப்பவர்கள் மிகவும் சிரமப்படுவார்கள். எனவே, மீண்டும் தஞ்சையிலேயே அந்த அலுவலகம் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளைச் சரிவரப் பராமரிப்பது என்பதேயில்லை. குடிநீர்க் குழாய்கள்

சரிவர இயங்குவதில்லை. மின்சார ஒயர்கள் பழுதடைந்திருக்கின்றன. குறிப்பாக, நான் அரூர் தொகுதியில், ஊத்தங்கரையில் P.W.D. Quarters–ல் குடியிருந்து வருகிறேன். அங்கு மின்சார ஒயர்களெல்லாம் பழுதடைந்திருக்கின்றன. குடிநீர்க் குழாய்களில் தண்ணீர் வருவதே கிடையாது. நீண்ட காலத்திற்குப் பிறகு இப்பொழுதுதான் வெள்ளை அடிக்கிற பணியைத் தொடங்கினார்கள். அதுவும்கூட, வெளியிலே மட்டும் வெள்ளை பூசிவிட்டு, முழுமையாக வெள்ளை அடிக்காமல் விடுபட்டிருக்கிறது. அதனை உடனடியாகக் கண்டறிந்து, முழுமையாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வீட்டு வசதி வாரியத்தினால் கட்டப்பட்டுள்ள பல குடியிருப்புகளில் இப்படிப்பட்ட குறைகள் இருப்பதைக் கண்டறிந்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு இந்த வீட்டு வசதி வாரியத்தினுடைய வீடுகள் கட்டுகிற பணி என்பது, பெரிய, பெரிய நகரங்களில் மாநகராட்சி, நகராட்சி போன்ற பகுதிகளில் மட்டும் இருக்கிறது. இவற்றை வட்டார மையங்களிலும் கட்டி, அவற்றின்மூலம் அந்தப் பகுதி மக்களுக்குப் பயன் கிடைக்கின்ற வகையிலே அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசு வீடுகள் விலைக்கு விற்கப்படாமல், ஏராளமான குடியிருப்புகள் இன்றைக்கு நிலுவையிலே கிடக்கின்றன. குறிப்பாக அரசு, T.V. வழங்குவதாகவும், Fridge வழங்குவதாகவும் அறிவித்தும்கூட, இன்றைக்கு அந்த வீடுகளெல்லாம் விற்கப்படாமல் இருக்கின்றன. இதற்கு என்ன காரணம்? அரசாங்கத்தினுடைய கட்டடம் என்றாலே மக்கள் மத்தியில் ஒரு தவறான எண்ணம் இருக்கிறது. தவறானது அல்ல, உண்மையான எண்ணம்தான். அது சரியாக இல்லை. அந்த building முழுவதும் பழுதடைந்திருக்கிறது. அது சரியான முறையில் கட்டப்படவில்லை. Structure சரியில்லை. அடிப்படைத் தேவைகளெல்லாம் அங்கே இல்லாமல் இருக்கின்றன. எனவேதான், அந்த வீடுகளெல்லாம் பழுதடைந்து போயிருக்கிற சூழ்நிலையில்தான் விற்கப்படாமல் இருக்கின்றன. அதனால், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட குறைகளைப் போக்குகின்ற வகையிலே, நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதோடு, அரசாங்கம் இனிமேல் நாங்கள் வீடு கட்ட மாட்டோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதிலே வாங்கப்பட்டிருக்கிற நிலங்கள் இருக்கின்றனவே, அந்த நிலங்கள் திருப்பிக் கொடுக்கப்படவேயில்லை. அப்படியே இருக்கின்றன. எதற்காக அந்த நிலத்தை வைத்திருக்க வேண்டும்? Waste அது. அரசாங்கத்திற்கும் நஷ்டம். அதற்குரிய பணம்,



அதற்குரிய வட்டி, அனைத்தும் waste–ஆக இருக்கிறது. இதை அரசாங்கம் கவனத்திலே கொள்ள வேண்டும். அந்த இடத்தைக் கொடுத்தவர்களுக்கு, திருப்பி அந்த இடத்தைக் கொடுக்கிற ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, வேலூர் மாவட்டம், அரக்கோணம் தாலுகாவில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் 1980–85–ல் 485 வீடுகள் கட்டப்பட்டன. 19 ஆண்டுகள் கடந்தும், விற்பனைப் பத்திரம் கொடுக்கப்படவில்லை. இதுகுறித்து ஏற்கெனவே பேசியிருக்கிறார்கள். நிறைய பதில் சொல்லியிருக்கிறீர்கள். இருந்தாலும், அந்தப் பத்திரங்களைக் கொடுக்காமல் இருப்பதற்கு என்னதான் காரணம்? இதற்குரிய நடவடிக்கையை வேகப்படுத்த வேண்டும் என்பதிலே அரசு கவனம் செலுத்துகிற மாதிரி தெரியவில்லை. மக்கள் பெரிய அளவிலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதே மாதிரி, ஒரு பக்கம், எடுத்த வீடுகளுக்கு 19 வருடங்கள் ஆகியும்கூட பத்திரம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இன்னொரு பக்கம், ஓசூரில், நிலம் எடுத்து, அந்த வீட்டைக் கட்டி, தனியாருக்கு விற்றாகிவிட்டது. விற்பனை செய்த அந்தப் பணத்தையும் சர்க்கார் எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நிலச் சொந்தக்காரர்களுக்கு இதுவரை அந்தப் பணம் கொடுக்கப்படவேயில்லை. நில உடைமையாளர்களுக்கு அந்தப் பணம் போய்ச் சேரவேயில்லை. இது ஒரு . . .

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூரில் அந்த மாதிரி கொடுக்கப்படாத நிலைகளையெல்லாம் ஓசூரினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே, அந்தப் பணங்களையெல்லாம் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி, இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்ட, வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டத்தில், 1988 ஆம் வருடம் சுமார் 365 ஏக்கர்

நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஆனால், அந்த மக்கள் மத்தியில் பெரிய பிரச்சினையை உண்டாக்கிவிட்டது. இதை எடுக்கக் கூடாது என்று பிரச்சினை வந்து, உடனே அந்த நிலத்தை மீண்டும் திருப்பி அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். ஆனால், அதே பகுதியில், அம்பேத்கர் நகர் பகுதியைச் சார்ந்த மக்களுடைய நிலம் 17.12 ஏக்கர் நிலம் கையகப்படுத்தியது, இதுவரைக்கும் திருப்பிக் கொடுக்கப்படவேயில்லை. மற்ற எல்லோருக்கும் கொடுத்தாகிவிட்டது.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிலைகளையெல்லாம் சீரமைப்பதற்கான பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கின்றார்கள். இன்றைக்குப் பல்வேறு பகுதிகளிலே தேவையில்லாத இடங்களையெல்லாம் வாங்கி, பல்வேறு வகைகளிலே பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்குத் தீர்வு காணுகின்ற வகையிலே, எந்தெந்த வகையிலே வீட்டு வசதி வாரியத்திற்கான நிலங்கள் தேவைப்படுகின்றனவோ, அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு, தேவையில்லாத இடங்களைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்கின்ற வகையிலே, இன்றைக்கு ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே, அந்த ஆய்வுகள் நிறைவுபெறுகின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற நிலங்களும் இருக்குமானால் அவற்றைத் திருப்பிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை வீட்டு வசதி வாரியம் எடுக்கும் என்ற நிலையை நான் இங்கே எடுத்துச் சொல்கின்றேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, இன்றைக்கு தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களுடைய மண்டலப் பகுதியாக வேலூர் மாவட்டத்திலே வீட்டு வசதி வாரியத்தினுடைய அலுவலகம் இருக்கிறது. இந்த அலுவலகத்திற்கு வந்து செல்ல வேண்டுமென்றால், ஏறத்தாழ 300 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய பகுதிகளில் உள்ளவர்கள் எல்லாம் 300 கிலோ மீட்டர் தூரம் வந்து, அவர்களுடைய பணிகளைச் செய்வதற்கு மிகப் பெரிய சிரமமாக இருக்கிறது. தனிப்பட்ட நபர்களானாலும் சரி, அரசு அலுவலர்களானாலும் சரி, வந்து அந்தப் பணியைக் கவனிப்பதற்குச் சிரமமாக இருக்கிற காரணத்தினால், அருகிலுள்ள சேலத்திற்கோ அல்லது தருமபுரிக்கோ அந்த அலுவலகத்தை மாற்றிக் கொடுக்க



வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அமைச்சரவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இன்றைக்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட அரசுக் குடியிருப்புகளுக்குப் பதிலாக வேறு இடத்தில்— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட பட்டினப்பாக்கம் அரசுக் குடியிருப்புகளுக்குப் பதிலாக, வேறு இடத்தில்—குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பாதிப்புகளினால் நிறைய வீடுகள் சேதம் அடைந்திருக்கின்றன. கதவுகள், ஜன்னல்கள் எல்லாம் இடிந்த நிலையில், அங்கு நிறைய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதை இப்போது பல பேர் வந்து கடத்திக் கொண்டு போகிறார்கள். கதவுகள், ஜன்னல்கள் எல்லாவற்றையும் திருடிக் கொண்டு போகிறார்கள். சர்க்கார் இதன்மீது கவனம் செலுத்தி, அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

அதேமாதிரி, இன்றைக்கு திருவான்மியூர், திருவள்ளுவர் நகர் பகுதிகளிலே தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீட்டுமனைகள் ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. சொல்லப்பட்ட விலையைக் காட்டிலும் இன்றைக்குத் திடீரென்று பல மடங்கு விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகு, இதுகுறித்துப் பரிசீலிக்க வேண்டுமென்று, நீதிமன்றம் வழிகாட்டுதல்களைச் சொல்லியிருக்கிறது. ஆனாலும் அவை பரிசீலிக்கப்படவில்லை. எனவே, இந்த அரசு இதன்மீது கவனம் செலுத்தி, விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நில உரிமையாளர்களுக்குக் கொடுத்த ஈட்டுத் தொகை ரூ.2,425 மட்டும்தான். ஆனால், மனை மற்றும் ஈட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை--ஒட்டுமொத்தமாக 4 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்கு, அந்தச் சொந்தக்காரர்களுக்கு அது கிடைக்கவில்லை. அது அவர்களுக்குக் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** ஒரேயொரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி ஊத்தங்கரையிலுள்ள வீடுகள் தவிர, ஊத்தங்கரையிலுள்ள குடியிருப்பு மனைகள் அனைத்துமே பட்டா இல்லாமல் இருக்கின்றன. அவர்களுக்குத் தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதனைத் தளர்த்தி அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி ஊத்தங்கரையிலுள்ள மிட்டப்பள்ளியிலுள்ள 10–வது வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்கள், பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் என்பதால், அங்கு ஒரு ஆதி திராவிட நல விடுதியைப் புதியதாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரூர் ஒன்றியம், கோபிநாதபட்டி கூட்டு ரோடு பகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இதேபோன்று ஒரு விடுதியைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் அரூரை அடுத்து, வறட்டாற்றில் வள்ளிமதுரை dam கட்டப்பட்டு இருக்கிறது. அங்கு நிறைய நீர் இருக்கிறது. அதனை பழங்குடியின மக்கள் பயன்படுத்துகின்ற வகையில், ஓடையேரிக்குத் தண்ணீர் விடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** முடித்து விடுகிறேன். ஒரேயொரு நிமிடம். *(மணியடிக்கப்பெற்றது)* எனது தொகுதியில், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** எனது தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் அதிகமாக இருக்கிற காரணத்தினால், 3,000 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், சிங்காரப்பேட்டையை அடுத்துள்ள புலியனூர் கிராமத்தில், ஆரம்பப் பள்ளிக்கு ஒரு பாதுகாப்புச் சுவரும், பெரியதொள்ளப்பாடி உயர்நிலைப்



பள்ளிக்கு ஒரு பாதுகாப்புச் சுவரும் கட்டிக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரைக்கும், அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன். *(குறுக்கீடு)* முடித்துவிடுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், கொஞ்சம் இருங்கள்.

## 7. அறிவிப்புகள்

### (அ) கென்யா நாட்டுக் குழு ஒன்று பேரவை நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்கு வரவேற்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கென்யா நாட்டின் அரசுசாரா அமைப்பைச் சேர்ந்த குழு ஒன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து அறிந்துகொள்வதற்காகத் தமிழகம் வந்துள்ளனர். அக்குழுவினர் தற்போது பேரவையிலுள்ள பார்வையாளர்கள் மாடங்களிலிருந்து நமது அவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், உறுப்பினர்கள் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் அவர்களை வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*முற்பகல் 11–40*

I am pleased to inform that an NGO team from Kenya has come to Tamil Nadu to acquaint themselves about the programmes implemented by the Honourable Chief Minister of Tamil Nadu. They are now watching the proceedings of the Assembly from the VIP galleries. On behalf of the Honourable Chief Minister, Members of the Legislative Assembly and people of Tamil Nadu, I extend my hearty welcome to them. *(மேசையைத் தட்டும் ஒலி)* திரு. ஜெக. வீரபாண்டியன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 25–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா**

**(இ) கோரிக்கை எண் 27–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம்**

} தொடர்ச்சி

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, சுற்றுலா மானியக் கோரிக்கைகளிலே என்னைப் பேசப் பணித்ததற்கு முதற்கண் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு, கட்டட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு உள்ளிட்ட பல சலுகைகளை அளித்தும், அதனினும் மேலாக, கிராமந்தோறும் உள்ள தொகுப்பு வீடுகளை, பாழடைந்த தொகுப்பு வீடுகளை மீண்டும் புதுப்பிக்க, புனரமைக்க, நிதி உதவியைத் தந்திருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சரை பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நெஞ்சாரப் பாராட்டி, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வீட்டு வசதி தொடர்பான மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது, அத்தனை கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், வழக்குகள் வாரியத்திலே அதிகமாகத் தேங்கி இருப்பதாலும், வட்டி விகிதம், கூட்டு வட்டி விகிதத்திலே, கணக்கீட்டிலே குழப்பம் இருப்பதாகவும், இங்கே பல கருத்துகளைப் பதிய வைத்திருக்கிறார்கள். அமைச்சர் பதிலுரையிலே சொல்கிறபோதுகூட வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது, வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது என்ற பதிலைத்தான் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தேங்கி இருக்கிற வழக்குகளை விரைந்து முடிக்கவும், பயனாளிகளுக்கு உரிய அளவிலே பத்திரப் பதிவுகள் கிடைக்கவும் நமது அரசு தனி நீதிமன்றமோ, அல்லது விரைவு நீதிமன்றமோ அமைத்து, வழக்குகளை ஃபைசல் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

இந்தத் துறையிலே தொடக்கத்திலே அதிக வட்டி விகிதம், 20 சதவிகிதத்திற்கு மேலாக—கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக 20 சதவிகித



வட்டி விகிதம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. தற்போது நமது தமிழக அரசு 11.5 சதவிகிதம் வட்டியில் வீட்டு வசதி வாரியத்திலே கொடுக்கப்படுகிற வீடுகளுக்கெல்லாம் கடனாக வழங்கி இருக்கிறது. ஆனால் முதலிலே கடன் பெற்றவர்கள் தொடர்ந்து 16 சதவிகித வட்டியினைக் கொடுத்து வருகிறார்கள். தற்போது விதித்திருக்கிற இந்த குறைந்தபட்ச வட்டி விகிதத்தை அவர்களுக்கும் வழங்கினால், நிச்சயமாக விரைவாக அந்தக் கடனை அடைப்பார்கள். முன்பு அபராத வட்டிக்குச் சலுகை கொடுக்கப்பட்டிருந்தது. அந்தச் சலுகையை மீண்டும் தொடர்ந்து வழங்குமாறு நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது நகர, நகரியங்கள்மீது கிராமப்புற மக்களுக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. பிழைப்பைத் தேடியும், ஓரளவுக்குப் படித்தவர்கள் தகுந்த வேலைவாய்ப்புகளைத் தேடியும், கல்வி வசதிக்காகவும் மற்றும் பல்வேறு காரணங்களுக்காகவும் கிராமப்புற மக்கள் நகரத்தை நாடி வருகிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள், விவசாயத்திலே ஏற்படும் தொடர் நஷ்டம், விவசாய விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்காமை, வறுமை போன்ற காரணங்களாலும், கிராமத்தில் மிக முக்கியத் தொழிலான விவசாயத்திலும் இயந்திரங்களின் ஆதிக்கம் அதிகமாக வரத் தொடங்கிவிட்டதன் காரணத்தினாலும், வேலையின்றி அவர்கள் நகரத்தை நாடி வருகிறார்கள். Tractor—களினுடைய விளைவு, உழவு மாடுகளையும், கலப்பைகளையும் சந்தைக்கு அனுப்பிவிட்டனர். இப்பொழுது நாற்று நடவும், கதிர் அறுக்கவும் இயந்திரங்கள் வந்துவிட்டதால், ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் நகரத்தை நாடவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

குளம் வெட்டுதல், வாய்க்கால் வெட்டுதல் வரை, இப்பொழுது அதேபோல வாய்க்கால்களைத் தூர் எடுப்பது வரை கடினமான வேலைகளைச் செய்வதற்கு, விரைவாக முடிக்கவும் dozer, poclain போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்துகின்ற காரணத்தினால், விவசாயத் தொழிலாளர்களுக்குக் கடினமான வேலைகளைச் செய்வதற்கு உடல் வலிமை இல்லாத காரணத்தால், சுலபமாகச் சம்பாதிக்கலாம் என்பதற்காக நகரத்தை நாடி வந்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நகர நாகரிகமும், நகர மோகமும் தவிர்க்க முடியவில்லை. நமது கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட, 1993 முதல் 2001 ஆம் ஆண்டு வரை இந்த மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 18 விழுக்காடாக இருந்தது, தற்போது 43.86 ஆக உயர்ந்ததாகச் சொல்கிறது. இப்படிப்பட்ட நகரமயமாதல்

அன்று சென்னை போன்ற பெருநகரங்களை ஒருவிதமாகவும், மயிலாடுதுறை போன்ற தாலுகா நகரங்களை வேறுவிதமாகவும் பாதிக்கிறது. சென்னை போன்ற நகரங்களில் எல்லாம் பல்வேறு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிற காரணத்தால், பல்வேறு வளர்ச்சிக் குழுமங்கள் எல்லாம் அப்படிப்பட்ட பணிகளை ஆய்வு செய்கிற காரணத்தால், நான் என்னுடைய மயிலாடுதுறை தொகுதியிலே மட்டுமுள்ள பிரச்சினைகளைச் சொல்லி, குறுகிய நேரத்திலே எனக்கு வாய்ப்பு உள்ள வரை நான் பேச விரும்புகிறேன்.

*முற்பகல் 11–45*

மயிலாடுதுறை நகரில் 36 வார்டுகள் இருக்கின்றன. 2001 ஆம் ஆண்டு census–படி 84,505 மக்கள் வசித்துக் கொண்டிருந்தார்கள். தற்போது ஒரு இலட்சம் மக்களுக்கு மேல் வசிக்கிறார்கள். இங்கே மூன்றில் ஒரு பகுதி மக்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ், குடிசைப் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இதிலே, அருந்ததியர் காலனி, வேடர் காலனி என்று பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தனித்தனியாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே, ஆரோக்கியநகர்புரம் என்ற ஒரு slum பகுதி இருக்கிறது. அங்கே பெரும்பாலும் காலணி தைக்கும் தொழிலாளர்கள், அதாவது, செருப்புத் தைக்கும் தொழிலாளர்கள், அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான், நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் மொத்தமாக வாழ்கிறார்கள். இவர்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறைமூலமாக நிலம் கையகப்படுத்தப்பட்டு, பட்டா வழங்கியிருக்கிறோம். ஆனால், பொருளாதார வசதியின்மை காரணமாக அவர்களால் தனியாகக் குடியிருந்து, வீடு கட்டிக்கொள்ள வாய்ப்பு இல்லை. அரசு அடுக்கு மாடிக் குடியிருப்பைக் கட்டி அவர்களுக்குத் தவணை முறையிலே வழங்கினால், நிச்சயமாகப் பயன்பெறுவார்கள். கடனையும் திருப்பிச் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகையால், அப்படிப்பட்ட முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அதேபோல, நகர்ப்புற மேம்பாடு என்று சொல்கிறபோது, எங்கள் பகுதியிலே பெரும்பாலான குடிசைப் பகுதி மக்களுக்கு பட்டா இல்லை என்பதுதான் பெரும் குறைபாடு. Slum Clearance Board–லிருந்து ஒவ்வொரு முறையும் வந்து பார்க்கிறார்கள். எம்.ஜி.ஆர். காலனி, அண்ணா காலனி, இந்திரா காலனி போன்ற காலனிகளுக்கு வந்து பார்த்து அளந்து சென்றார்கள். ஆனால், இதுவரை அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. மயிலாடுதுறை பகுதியிலே, சுற்றுப்புறத்திலே நான்கு கல்லூரிகள் இருக்கின்றன, 12–க்கும் மேற்பட்ட



உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன, இருக்கின்றன. ஆனால், பெண்கள் தங்கிப் பணியாற்றுவதற்கு வசதி கிடையாது. தனிப்பட்ட கட்டடம் கிடையாது. ஆகையால், Working Women's Hostel–ஐக் கட்ட வேண்டும். இதற்கு நகராட்சியிடம் இடம் இருக்கிறது. அரசு ஓரளவுக்கு நிதி கொடுத்தால் நிச்சயமாக அப்படிப்பட்ட Working Women's Hostel–ஐக் கட்ட முடியும்.

அடுத்து, பாரம்பரியமிக்க நகர வளர்ச்சித் திட்டங்கள் குறித்து கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மயிலாடுதுறை நகரம் ஒரு பாரம்பரியமிக்க நகரம். ஏறத்தாழ 108 திவ்யத் திருத்தலங்களிலே 20–க்கும் மேற்பட்ட திவ்யத் திருத்தலங்கள் எங்கள் பகுதியிலேதான் இருக்கின்றன. வைணவத் திருத்தலங்கள் 108–லே, நாங்கூரிலே 12–ம், மயிலாடுதுறையிலே திருஇந்தளூர் பரிமள அரங்கநாதர் கோயிலும் இருக்கிற காரணத்தால் ஏராளமான வைணவ மக்களும், அதேபோல தருமபுரம் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம் என்று பல்வேறு புகழ்மிக்க சிவ திருத்தலங்கள் இருக்கின்றன. நவக்கிரக திருத்தலங்களுக்கும் மயிலாடுதுறைதான் மையமாக இருக்கிறது. ஆகையால், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த அந்தப் பகுதியிலே சுற்றுலா மையத்தை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இந்தப் பாரம்பரியமிக்க நகர வளர்ச்சித் திட்டத்தின்மூலமாகக் கொடுக்கப்படுகின்ற நிதியை மயிலாடுதுறை தொகுதிக்கும் நீட்டித்துத் தரும்படிப் பணிவோடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, போக்குவரத்து மேலாண்மைத் திட்டத்தின்கீழ்— போக்குவரத்து நெரிசல் என்பது தவிர்க்க முடியாததாக இருக்கிறது— 1963–லே பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே ஒரு பேருந்து நிலையம் கட்டினார்கள். இன்று வரை அங்கே புதிய பேருந்து நிலையம் அமைக்க வாய்ப்பு வசதி இல்லாமல் இருக்கிறது. பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து தற்போது ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** ஆனால், பரிமள அரங்கநாதர் கோயில் உள்ள இடத்தை விலை பேசி நாங்கள் முடித்திருக்கிறோம். நிதி ஆதாரமும், TUFIDCO கடனாகத் தரத் தயாராக இருக்கின்றது. ஆனால், file movement–லே காலதாமதம் ஆவதால், அந்தப் பேருந்து நிலையக் கட்டுமானம் என்பது ஒத்திப் போய்க் கொண்டே இருக்கிறது.

தமிழக அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து நெரிசல் என்பது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. திருவாவடுதுறையிலிருந்து வரக்கூடியவர்கள், கேணிக்கரை பகுதி வழியாக பட்டமங்கலம் ஆலயத்தின் வழியாக நேராகக் குடந்தைக்குச் செல்கிற வகையில் ஒரு bye-pass சாலையை அமைத்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்து மேலாண்மைத் திட்டத்தின்கீழ் அதைச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மயிலாடுதுறை நீதிமன்றம் ஒரு புகழ்மிக்க நீதிமன்றம். நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் அதுதான் நீதிமன்றமாக இருக்கிறது. ஆனால், அங்கே சைக்கிள் ஸ்டாண்டும் கிடையாது, சுகாதார வளாகமும் கிடையாது, கழிவறையும் கிடையாது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் நிதி கொடுத்தபோதுகூட, அந்த நிதியின்கீழ் இதற்குச் செலவிட அனுமதி இல்லாத காரணத்தால் கட்டப்படாமல் இருக்கிறது. ஆகையால், நான் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, உடனடியாக அங்கே ஒரு சைக்கிள் ஸ்டாண்டையும், கழிவறையையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சுற்றுலா முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு தயவுசெய்து விரைவில் சுற்றுலா மையம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கோரிக்கை. அதேபோல, பாதாளச் சாக்கடைப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், நகரம் முழுவதும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏழரைக் கோடி ரூபாய் less செய்துதான் அந்த ஒப்பந்தக்காரர்கள் வேலையை ஏற்றதாகச் சொல்கிறார்கள். ஆகையால், இந்த savings-ஐக் கூட நகரத்திற்குக் கொடுத்து, சாலை மேம்பாட்டிற்காக ஒதுக்கும்படி நான் கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்குப் பேசப் பணித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைக் கூறி, விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சான்ட்ரா டான் க்ரவல்.



முற்பகல் 11-50

***TMT. SANDRA DAWN GREWAL:** Hon. Speaker Sir, before commencing my speech, with all humility and gratitude, I pay my respects to my Honourable leader, the Chief Minister of Tamil Nadu (Thumping of desks) who has given me an opportunity to be a member of this august House.

At the outset, I would like to thank Honourable Speaker Sir, for giving me this opportunity to speak on the Demand relating to Housing and Urban Development. As rightly pointed out in the Policy Note, housing plays a vital role in the development of the society and the country at large, since it is one of the basic needs of the people. The population of the State, especially in a big city like Chennai, is growing at a very fast rate and the responsibility of the Government is ever increasing with the urban population of Tamil Nadu having crossed 43%. Our Supreme leader, with her clarity of thought, unwavering courage and diligent commitment to service, has taken the State of Tamil Nadu to an all time high in dignity, prosperity and peace.

The working of the Tamil Nadu Housing Board needs special mention. Under the able leadership of our benevolent leader, plots, houses and flats to a value of Rs.517.45 crores have been sold due to the special initiatives taken by the Honourable Chief Minister.

Another important undertaking working for the upliftment of the downtrodden and the weaker sections of society is the Tamil Nadu Slum Clearance Board. In this connection, I request that a certain number of houses may also be earmarked for poor people belonging to the Anglo-Indian community.

It is heartening to note that taking into consideration the risk and loss of life and property due to floods in the case of families living along coastal areas and river margins, the Slum Clearance Board along with the PWD has embarked upon a special programme to resettle these people by building 3,000 tenements at Okkium Thuraipakkam at a cost of Rs.26.23 crores. Tenements are also to be constructed in places like Semmencheri at a cost of Rs. 67 crores.

Thanks to the vision and foresight of our Honourable Chief Minister, we have scientifically reaped the benefits of rain water harvesting in this rain-starved city. The water table has considerably increased due to this innovative method.

Regarding development of the Chennai metropolis, I am glad to note that the CMDA is to embark on a plan to spend about Rs.233.73 crores during the years 2004 to 2007 to improve infrastructure facilities with the help of several Government Departments and agencies.

In order to ease the congestion in this busy city, the Government has decided to extend the MRTS from Velachery to St. Thomas Mount. This deserves appreciation from all quarters. As a further...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, MRTS பற்றி இப்போது மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நேரத்தில் ஒரு முக்கியமான தகவலை இந்த அவைக்குத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தியாவின் முக்கியப் பெருநகரங்களில் சென்னையும் ஒன்றாகத் திகழ்கிறது. அதுமட்டுமல்லாமல், தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய மாநகரமாகவும் சென்னை மாநகரம் விளங்குகிறது. சென்னைப் பெருநகரத்தின் மொத்தப் பரப்பளவு 1,177 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் மைய நகரப் பகுதி 172 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2001 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சென்னைப் பெருநகரப் பகுதியின் மக்கள் தொகை 70.4 இலட்சம் ஆகும். இதில் சென்னை நகரில் வசிக்கும் மக்கள் எண்ணிக்கை மட்டும் 43.4 இலட்சம் ஆகும். சென்னை மாநகரப் பகுதியில் 1984 ஆம் ஆண்டில் 1.4 இலட்சமாக இருந்த மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 2004 ஆம் ஆண்டில் 16 இலட்சமாகப் பெருகியுள்ளது. அதாவது, வாகனங்களின் எண்ணிக்கை 10 மடங்கிற்கும் மேலாக உயர்ந்துள்ளது. இரு சக்கர வாகனங்களின் வளர்ச்சி வியத்தகு அளவில் பல மடங்காக உயர்ந்து, போக்குவரத்து நெரிசல் ஏற்படக் காரணமாக உள்ளது. சென்னையில் ஒவ்வொரு நாளும் 600 புதிய மோட்டார் வாகனங்கள் என்ற எண்ணிக்கையில் சென்னை மாநகரில் வாகனங்கள் பெருகுகின்றன. ஆனால், அந்த அளவிற்கேற்ப சாலைப் பரப்பு அதிகமாகவில்லை. மாநகரின் மொத்தப் பரப்பளவில் சாலைகள் பரப்பு, Bangkok–ல் 11 விழுக்காடாகவும், லண்டன், பாரிஸ், நியூயார்க் ஆகிய வளர்ச்சியடைந்த நகரங்களில் 20 முதல் 25 விழுக்காடாகவும் உள்ளன. ஆனால் சென்னை மாநகரில் இது 3 முதல் 4 விழுக்காடாகத்தான் உள்ளது. இதனால் போக்குவரத்து மேலாண்மைக்கும், பொது மக்களின் பாதுகாப்பான இயக்கத்திற்கும் கடும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்தினைச் சமாளிக்க கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் முதல் கட்டமாக



11.16 கிலோ மீட்டர் 8.5 கிலோ மீட்டர், இரண்டாம் கட்டமாக தூரத்திற்குமான பறக்கும் இரயில் எனப்படும் திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்—MRTS; உள்வட்டச் சாலை அமைத்தல் ஆகியவை அடங்கும்.

முற்பகல் 11–55

மேலும் சென்னைப் பெருநகரின் போக்குவரத்தை மேம்படுத்தி, நெரிசலைச் சீர்செய்யவும், தொடர்ந்து பெருகி வரும் மாநகரப் போக்குவரத்துத் தேவையைச் சமாளிக்கவும், முனைப்பான முதலீடுகள் செய்யப்பட வேண்டியது மிக அவசியமாகும். எனவே தற்போதுள்ள திரள் போக்குவரத்துத் தொடர் அமைவு வசதிகளை, Mass Transit Network–ஐ மேலும் வலுப்படுத்துவதும், விரிவுபடுத்துவதும் நம்முடைய முக்கிய நோக்காக உள்ளது. தற்போதுள்ள போக்குவரத்துத் தேவையை ஈடுகட்டுவது மட்டுமின்றி, சென்னை மாநகரத்தின் நீண்ட காலத் தேவையைக் கருத்திற்கொண்டு, ஒரு புதிய திரள் பயணியர் இயக்கத்தினைச் செயலாக்க நான் முனைப்பாக உள்ளேன். சென்னை மாநகரத்தில் மெட்ரோ இரயில் இயக்கத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விளக்க டெல்லி மெட்ரோ இரயில் கழகத்தை, Delhi Metro Rail Corporation–ஐ நான் கேட்டுக்கொண்டேன். டெல்லி மெட்ரோ இரயில் கழகம் 21–8–2003 அன்று நிகழ்த்திய விளக்கத்திற்குப் பின் புதுடெல்லியில் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வரும் மெட்ரோ இரயில் திட்டத்தைப் போன்ற ஒரு திட்டத்தை சென்னையில் செயல்படுத்த ஒரு விரிவான சாத்தியக்கூறு ஆய்வறிக்கையை டெல்லி மெட்ரோ இரயில் கழகம்மூலம் தயாரித்துப் பெற்றிட நான் ஆணையிட்டேன். இதற்கு 54 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. டெல்லி மெட்ரோ இரயில் கழகம் அதன் விரிவான சாத்தியக்கூறு ஆய்வறிக்கையில் மெட்ரோ இரயிலை சென்னையில் அமைக்க இயலும் என்றும், அதற்கென 3 வழித்தடங்களைத் தெரிவு செய்தும் பரிந்துரைத்துள்ளது. அந்த 3 பிரதான Corridors எனப்படும் வழிகள் பின்வருமாறு அமையும்:

பிரதான வழி–1: திருவொற்றியூரிலிருந்து அண்ணா சாலை வழியாக சென்னை விமான நிலையம் வரை, தூரம் 31.54 கி.மீ. பிரதான வழி–2: சென்னைக் கடற்கரையிலிருந்து பெரியார் ஈ.வெ.ரா. சாலை வழியாக கோயம்பேடு வரை, தூரம் 13.54 கி.மீ. பிரதான வழி–3: 21.68 கி.மீ. தூரத்திலான கூடுதல் தொடர் அமைவு. திருவான்மியூர், L.B. சாலை, இராமகிருஷ்ணா மடம் சாலை, Luz Church சாலை, Eldams சாலை, தியாகராயா சாலை, உள்வட்டச் சாலை, அம்பத்தூர்

தொழிற்பேட்டை ஆகிய இடங்களை இணைக்கும் வகையில்
இரண்டாம் கட்டமாக 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு தொடங்குதல்.

பிரதான வழிச் சாலை–1 மற்றும் பிரதான வழிச் சாலை–2–ல்
மெட்ரோ இரயில் அமைப்பை 5,086.85 கோடி ரூபாய் செலவில் 2005
முதல் 2010 வரையுள்ள ஆண்டுகளில் முதற்கட்டமாக மேற்கொள்ளலாம்
என்று டெல்லி மெட்ரோ இரயில் கழகம் பரிந்துரைத்துள்ளது. பிரதான
வழிச் சாலை-1-ல் சுமார் 8.4 கி.மீ. நீளத்திற்கு மெட்ரோ இரயில்
அமைப்பு, தரைக்கு அடியில் சுரங்கப் பாதையாக அமையும். மீதமுள்ள
தூரத்திற்கு இது சாலையின் மத்தியில் தரைமட்டத்திற்கு மேலே, மேல்
அடுக்கில் அமைக்கப்படும். பிரதான வழிச் சாலை–1 மற்றும் 2–ல்
அமைக்கப்படும் மெட்ரோ இரயில்மூலமாக ஒரு நாளைக்கு சுமார்
10.56 இலட்சம் பயணிகள் பயணம் செய்ய இயலும். இதனால் பொது
போக்குவரத்து வசதிகள், அதாவது இரயில் மற்றும் பேருந்துகள் மூலம்
பயணம் செய்வோர் எண்ணிக்கை விகிதம் தற்போதைய 43
விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக உயரும். இதன் பயனாகப்
பயணிகளுக்கு நேரமும், செலவும் மிச்சப்படுவதோடு, பயண வசதிகளும்
வெகுவாக அதிகரிக்கும். இந்த விரிவான சாத்தியக்கூறுகளின்
அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கையினை, Detailed Project Report
தயாரித்திட நான் அறிவுறுத்தியுள்ளேன். இது டெல்லி மெட்ரோ
இரயில் கழகத்தால் ஆறு மாத காலத்திற்குள் தயாரிக்கப்படும். இதற்கான
செலவு 3.30 கோடி ரூபாயாக இருக்கும். விரிவான திட்ட அறிக்கை
தயாரிக்கப்பட்டபின், இந்தப் பணியினை மேற்கொள்ளப்
பொருத்தமான நிறுவனத்தை நிர்ணயிக்கவும், இந்தப் பணியைச்
செயல்படுத்தத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டவும் தக்க
ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சான்ட்ரா டான் க்ரவல்.

**TMT. SANDRA DAWN GREWAL:** நன்றி. The success of the New
Veeranam Project is the result of the sole dedication of the Honourable Chief
Minister to better the quality of life for the residents of Chennai. Acute water
shortage had for many years troubled the residents. However, the Government's
efforts to provide this lasting solution will always be remembered.

Our visionary leader, the Honourable Chief Minister has ensured that this
Government has been not only sensitive, but also pro–active to urban



development. Tamil Nadu has emerged as the preferred destination for industrial
development, particularly, in the I.T. Sector, mainly due to the better
Government policies, urban infrastructure, locally available human resources
and a co–operative Government.

A surge in I.T. hardware such as Nokia and every major software firm setting
up shop in Chennai has been witnessed. The I.T. corridor which our Chief
Minister spearheaded is an indication of the vision of a true modern leader.
(Thumping of desks)

Urban infrastructure development should keep abreast with the rapid progress
of the industrial as well as labour sector. Velachery is fast developing due to
increase in population, numerous high–rise apartments and commercial
complexes. Velachery is a strategically important area that needs development,
as it is a vital link between the I.T. Corridor and the rest of the city. The Velachery
Bye–pass Road connecting Taramani, Guindy and Tambaram is in urgent need
of repairs and most importantly, road lights. Laying of concrete road in front of
the Velachery Metro Water Distribution Pumping Station on this stretch of the
bye–pass is, therefore, urgently required. I understand that Metro Water
authorities have notified that all lakes in and around Chennai City will be taken
over to make them into drinking water sources. At this juncture, may I request
for the restoration of the Velachery lake which is a unique water body in the
heart of Chennai. The restoration of this lake will beautify and change the
landscape of this area and the lake could even become a tourist attraction, with
revenue–generating initiatives in order that its maintenance will be self–sustained.

The Honourable Chief Minister through her vision and commitment has
taken the State of Tamil Nadu to great heights and nobody can ever dispute that
she is the only leader, who will, with her wisdom, continue to take this State to
even greater heights, in the years ahead. (Thumping of desks) நன்றி, வணக்கம்.
(மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை. மாண்புமிகு செய்தி &
விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே,

அன்பு வழிக்கும், அறநெறிக்கும்,
குறளே ஆதாரம்,

அகில உலகத்தின் ஆனந்த வாழ்வுக்கும்
பொருளே ஆதாரம்
தொல்லை தரும் தீயவர்களுக்கு
இருளே ஆதாரம்,
கோடானு கோடித் தொண்டர்களுக்கும், பாமர மக்களுக்கும்,
அம்மா, உங்கள் அருளே ஆதாரம் (மேசையைத் தட்டும் ஒலி)
தந்தை பெரியாரின் துணிவையும்,
பேரறிஞர் அண்ணாவின் அறிவையும்,
புரட்சித் தலைவரின் கனிவையும்—மொத்தமாகப் பெற்று
அந்த முப்பெரும் தலைவர்களின்,
ஒப்பற்ற ஓரே உருவமாகத் திகழ்ந்து,
நம்மையெல்லாம் வழி நடத்திக் கொண்டிருப்பவர்,
நமது ஒப்பற்ற தலைவி அம்மா அவர்கள்.
இன்று அய்யா! என்று அன்போடு அழைக்க,
தந்தை பெரியார் இல்லை, ஆனால் தந்தை பெரியாரின்
வழித்தோன்றலாக வசனம் பேசுவோர்,
இன்று யார் யாரையோ,
ஐயா—என்று அழைத்து, அகமகிழ்ந்து
நாட்டை ஏமாற்ற நினைக்கின்றார்கள்.
அண்ணா! என்று பாசத்தோடு அழைக்க
பேரறிஞர் அண்ணா இல்லை.
தலைவா! என்று நேசத்தோடு அழைக்க,
புரட்சித் தலைவர் இல்லை.
ஆனால் அம்மா! என்று அன்போடு அழைக்க,
நமக்கு இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர்
புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி)
நேசிக்கும் தாயாக, பூஜிக்கும் தெய்வமாக இருக்கின்றார்கள்.

பிற்பகல் 12–05

தொலைநோக்குப் பார்வையுடன்,
புதிய, புதிய திட்டங்களையும்,
மின்னல் வேக செயலாக்கங்களையும்,



வரலாற்றுச் சாதனைகளையும்,
இமயம்போல் குவித்திருக்கின்ற,
இதய தெய்வம் எங்கள் அம்மா அவர்களின்
ஆட்சிக் காலம், பொற்காலம் என்று
புகழப்பட்டவைகளை எல்லாம் விஞ்சி,
பொற்காலத்திற்கெல்லாம் புதிய பொற்காலமாகத்
திகழ்கிறது என்பதை யாராலும்
மறக்கவும் முடியாது—வரலாற்றில் மறைக்கவும் முடியாது.
அம்மா உங்களது ஆட்சியதோ,
விவேகத்தின் வெளிப்பாடு!
சாதனைகளைப் படைப்பதிலோ,
உலகிற்கே நீங்கள் உதாரணத் தலைமை,
இயற்கைப் பேரிடர்களைச் சமாளிப்பதிலோ
இலங்கை தேசமே உங்களுடைய சாதுர்யதனத்திற்கு
சல்யூட் அடித்து வாழ்த்தியது.
இத்தனைச் சிறப்பும், புகழும் பெற்று,
சேய்களாக, தொண்டர்களாம் எங்களைக் காக்கும் அம்மா!
உங்கள் பாதாரவிந்தங்களை
இந்த நல்ல தருணத்தில் பணிந்து,

எனது உரையைத் தொடங்குகிறேன்.

ஜனநாயக முறையை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம் அரசியல் அமைப்பில் எண்ணிலடங்கா புதிய, புதிய திட்டங்களை நிறைவேற்றி வருகின்றபோது, அந்தத் திட்டங்கள் குறித்து விளக்கங்களை, உரிய விழிப்புணர்வுகளை அனைத்துப் பகுதிகளிலும் வாழும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எடுத்தியம்ப வேண்டியது என்பதும் ஒரு முக்கிய ஜனநாயகக் கடமையாகும். அந்த அடிப்படையில் செய்தி வெளியீட்டுப் பிரிவு, விளம்பரப் பிரிவு, மேற்கோள் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, நினைவகப் பிரிவு, திரைப்படப் பிரிவு, தமிழரசு, திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், மாவட்ட செய்தி—மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ஆகிய பிரிவுகளைக் கொண்டுள்ள இத்துறையானது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் நாள்தோறும் நவீனமயமாகிறது.

வழிகாட்டும் பல அரிய, பெரிய திட்டங்களை வடிவமைத்து, இந்தியத் திருநாட்டின் மாநிலங்கள் அனைத்திலும் முன்னிலை வகிக்கின்ற முதல் மாநிலமாகத் திகழச் செய்யும் வகையில் நம் தமிழகத்தை, தன்னுடைய கூர்ந்த மதிநுட்பத்தால் திட்டமிட்டு செயலாக்கம் பெறச் செய்வதில்–அது இன்றைய நிகழ்வாக மட்டுமல்லாமல், தொலைதூரக் கண்ணோட்டத்தோடு, எதிர்வரும் சந்ததியினரின் நல்வாழ்வினையும் கணக்கில் கொண்டு செயல் வடிவம் தருவதில் ஒப்பாரும், மிக்காரும் இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு, தனக்கு நிகர் தானே என்று சாதனைகளைச் சரித்திரங்களாக்கி பொற்காலம் படைத்து வரும் புனிதத் தலைவியாக விளங்கி வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரிய வழிகாட்டுதலிலே இந்தத் துறையும் பரிணாமம் பெற்று, ஓர் உச்சக்கட்ட வளர்ச்சியை எய்தி இருக்கிறது என்றால், அது மிகையாகாது. அந்த வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய ஆணையில் நவீன digital camera–க்கள் வழியாக தரமான வண்ணப் புகைப்படங்களைக் கணினி தொழில்நுட்பத்தில் துல்லியமான முறையில் சில மணித்துளிகளுக்குள்ளாகவே செய்தி நிறுவனங்களுக்கு மின்னஞ்சல் வழியாக விரைந்து வழங்கிடும் அடிப்படையில் செய்தி வெளியீட்டுப் பிரிவு தரப்படுத்தி, மேம்படுத்தப்பட்டு வருகிறது.

செய்திகளை வழங்குவதில், ஆதரவுச் செய்திகள், எதிர்மறைச் செய்திகள் என்று தரம் பிரித்துப் பாராமல், போற்றுவார் போற்றினாலும், தூற்றுவார் தூற்றினாலும் அதைப் பற்றி எல்லாம் கணக்கில் கொள்ளாமல், யார், எவர் என்று பிரித்துப் பாராமல், தகுதி உடைய அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் எண்ணிலடங்காச் சலுகைகளை வழங்கிட ஆணையிட்டது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

பணியிலிருந்து ஓய்வு பெற்று வறுமையில் வாடும் மூத்த பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் 2 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டதும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓய்வூதியம் பெற்று வரும் பத்திரிகையாளர் இறக்க நேரிட்டால் அவரது துணைவியாருக்கு மாதம் 500 ரூபாய் என்றிருந்த



பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதிய நிதியை 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டதும் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாகப் பணியாற்றி பணியிலிருந்தபோதே மரணமடையும் செய்தியாளர் குடும்பம் வறுமையில் வாடிவிடக் கூடாது என்ற மனிதாபிமான அடிப்படையிலே குடும்ப நல உதவி நிதியாக ரூபாய் 50 ஆயிரம் என்று வழங்கி வந்ததை, ரூபாய் 2 இலட்சமாக உயர்த்தி வழங்கியதும் எங்கள் தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் தற்போது 3 குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர் குடும்ப நல நிதி உதவியாக 6 இலட்சம் ரூபாய் வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இதுபோன்ற 4 குடும்பங்களுக்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் வழங்கிடுவதற்குரிய ஆணை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் 6 விண்ணப்பங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

சென்னையிலே அங்கீகார அட்டை பெற்றுள்ள 554 பத்திரிகையாளர்களில், நாளிதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சிகளில் பணியாற்றும் 318 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களிலுள்ள 714 பத்திரிகையாளர்களுக்கும் சேர்த்து, ஆக மொத்தம் 1,032 பத்திரிகையாளர்களுக்கு ஒரு ஆண்டுக்கு ஒரு கோடியே 9 ஆயிரத்து 904 ரூபாய் அரசு செலவிலே இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகரில் அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர் மற்றும் புகைப்படக்காரர்கள் 136 பேர்களுக்கு 1994 ஆம் ஆண்டிலே பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின்மூலம் திருவான்மியூரில் சொந்த வீடுகள் கட்டிக்கொள்ள ஏதுவாக, 51 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் அரசு மானியமாக வழங்கியது மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

இது தவிர, தமிழகம் முழுவதுமுள்ள அங்கீகாரம் மற்றும் அடையாள அட்டை பெற்ற 213 பத்திரிகையாளர்களுக்கு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளில் முன்னுரிமை அடிப்படையிலே வாடகை வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதையும் இங்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். மாவட்டங்களிலுள்ள 249 பேருக்கு சலுகை விலையிலும், 17 செய்தியாளர்களுக்கு சந்தை விலையிலும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு செய்தியாளர்களின் நலனைப் பேணுவதிலே, நாட்டிற்கே நல்வழி காட்டும் வகையில் தாய்மைப் பரிவுடன் பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில்தான், அதுவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் செயலாக்கம் பெறுகின்றன என்பதை செய்தியாளர் நண்பர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதைப்போல, தமிழ்த் திரைப்படத் துறை வளர்ச்சிக்கென பல்வேறு சலுகைகள், தமிழ்த் திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் வகையிலே, சிறந்த தமிழ்ப் படங்கள், சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கி வருகின்றன. 2000, 2001, 2002 ஆம் ஆண்டுகளுக்கான திரைப்படத் துறையினருக்கான விருதுகள் 3–12–2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய திருக்கரங்களால் வழங்கப்பட்டு, திரைப்படத் துறையினர் போற்றப்பட்டார்கள். மேலும், ஆண் மற்றும் பெண் dubbing கலைஞர்களுக்கும் விருதுகள் வழங்கப்படவேண்டும் என்ற அம்மாவினுடைய ஆணைக்கிணங்க, முதல் முறையாக 2000 ஆம் ஆண்டிற்கான விருதுபெறும் கலைஞர்களில், ஆண் மற்றும் பெண் dubbing கலைஞர்களையும் சேர்த்து விருதுகள் வழங்கப்பட்டன. அதேபோன்று, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை ஆகியோருக்கும் விருதுகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் 2001 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். 2003–2004 ஆம் ஆண்டிற்குரிய திரைப்பட விருதுகள் வெகு விரைவில் வழங்கப்பட உள்ளன என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



கடந்த 23–9–2004 அன்று திரைப்படத் தொழில் தொடர்புடைய பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் மாண்புமிகு அம்மா அவர்களை நேரில் சந்தித்து, திரைப்படத் துறை வளர்ச்சியினை மேம்படுத்தக் கோரி, பல்வேறு கோரிக்கைகளை அளித்தனர். அதன் அடிப்படையிலே, திருட்டு V.C.D. மற்றும் Cable T.V. போன்றவற்றால் நசிந்துபோயிருந்த திரைப்படத் தொழிலுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கும்வண்ணம், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டதன் பேரிலே, போர்க்கால நடவடிக்கையாக அக்கோரிக்கைகள் அனைத்தும் கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, நான்கே நாட்களில், 27–9–2004 அன்றே பல்வேறுவிதமான சலுகைகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து, அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. அதன்படி தரமான தமிழ்த் திரைப்படங்களுக்குத் தலா ரூபாய் 5,00,000 வீதம் வழங்கப்பட்ட மானியத்தை 2003 ஆம் ஆண்டு முதல் ரூபாய் 7,00,000–ஆக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையிலே அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்களுக்குச் சொந்தமான இடங்களிலே நடத்தப்படும் படப்பிடிப்புகளுக்கான கட்டணம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. திரையீட்டாளர்களின் கோரிக்கையை ஏற்று, மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிப் பகுதிகளிலே புதிய திரைப்படங்களுக்கு, மொத்த வசூல் தொகையில் 25 சதவிகிதம், பழைய திரைப்படங்களுக்கு 20 சதவிகிதம் என்று செலுத்தி வந்த கேளிக்கை வரி 15 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளில் நடைமுறையில் உள்ள கூட்டு வரியை அறவே நீக்கிவிட்டு, மொத்த வசூலில் 10 சதவிகிதம் வீதம் வரி செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. Film News Anandan அவர்களுக்கு, திரைப்படம் பற்றிய அவருடைய அரிய சேகரிப்புகளை அரசு பெற்றுக்கொண்டு, அவருக்கு ரூபாய் 10 இலட்சமும், சாதனை படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு என்ற நூலினை அவர் எழுதுவதற்கென ரூபாய் 5 இலட்சத்து 50 ஆயிரமும் வழங்கப்பட்டது. அதன்படி, அவரால் எழுதப்பட்ட அந்த நூல் 23–10–2004 அன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்டது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு புலனாய்வுத் துறை குற்றப் பிரிவின்கீழ் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இப்பிரிவு இயங்கி வருகிறது. திருட்டு V.C.D.-யை ஒழிப்பதற்காக ஏற்கெனவே 6 இடங்களில், அதாவது சென்னை, சேலம், கோவை, திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வரும் பிரிவுகளோடு கூடுதலாக, சென்னை–2, பரங்கிமலை, வேலூர், திண்டுக்கல், கடலூர் மற்றும் விருதுநகர் ஆகிய ஆறு இடங்களில் காவல் துறையில் புதிதாகத் திருட்டு V.C.D. ஒழிப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1995 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை சுமார் 9 ஆண்டுக் காலங்களிலே, இப்பிரிவு கைப்பற்றிய, குற்றத்திற்காக உட்படுத்தப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூபாய் 25,32,91,924 ஆகும். திரைப்படத் துறை வளர்ச்சிக்குப் பல்வேறு சலுகைகளை அளித்ததோடு, திரைப்படத் தொழிலிலே பெரும் பாதிப்பை ஏற்படுத்திய வீடியோ திருட்டை முற்றிலுமாக ஒழித்திடும் வகையில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

தமிழ்த் திரைப்படத் துறையை ஊக்குவிக்க, மாநில அரசின் சார்பில் நிதியுதவிகள், பதக்கங்கள், பட்டயங்கள் என்று வழங்கப்பட்டாலும்கூட, இந்தத் தமிழ்ப் படங்களைத் தணிக்கை செய்யும் அதிகாரம் மட்டும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. இவ்வாறு பல புதிய சலுகைகளைத் திரைப்படத் துறையினருக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததையடுத்து, திரையுலகப் பிரமுகர்கள் அனைவரும் திரண்டெழுந்து மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மனமார நன்றி பாராட்டியபோது, அதைக்கூட பொறுத்துக்கொள்ள முடியாமல் காக்காய் கூட்டம் நன்றி தெரிவித்து பக்கம், பக்கமாக விளம்பரம் வெளியிடுகிறது என்று ஓலமிட்டுப் பொருமியவர், தனது கலைப் பணியின் சேவைக்காகத் திரையுலகினர் நடத்திய பாராட்டு விழாவில், இதே திரைப்படத் துறையினரைப் பார்த்து, வேற்றுமை தோன்றாதா, தோன்றிய வேற்றுமை சிரஞ்சீவித் தன்மையுடன் இருக்காதா என்று எதிர்பார்த்தவர்களுக்குப் பதில் அளிக்கும் வகையிலே உங்களை ஒரே மேடையில் பார்ப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன், இந்தக் காட்சி தொடர வேண்டுமென்று விரும்புகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்கள். தமக்குப் பாராட்டு விழா நடந்தபோது, இந்தக் கலைத் துறையினரை அகமகிழ்ந்து பாராட்டுவதும்,



அதுவே மாண்புமிகு அம்மா அவர்களை இவர்கள் பாராட்டிவிட்டால் ஏதோ இவரது பாட்டன் காலத்துப் பட்டம் பறிபோய் விட்டதைப்போலக் கூக்குரலிடுவதும் (மேசையைத் தட்டும் ஒலி) இவரது அரசியல் பச்சோந்தித்தனத்தின் வெளிப்பாடேயாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பொருட்காட்சிகளைப் பொறுத்தவரையில் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஐந்து ஆண்டுகளில் 16 அரசு பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு ரூபாய் 3 கோடியே 4 இலட்சத்து 75 ஆயிரம் அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் மட்டுமே 8 அரசு பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, ரூபாய் 3 கோடியே 42 இலட்சத்து 2 ஆயிரம் அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த தி.மு.க. ஆட்சியில் 2000 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடந்த அரசு பொருட்காட்சி நஷ்டத்தில் நடத்தப்பட்டது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, அதே திருநெல்வேலியில் நடத்தப்பட்ட அரசு பொருட்காட்சி இலாபத்தை ஈட்டியுள்ளது என்பதையும் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையிலே, புதுடெல்லியிலே 2004 அக்டோபர் மாதம் நடைபெற்ற மலர்ப் பேரணி விழாவிலே இத்துறையின் பொருட்காட்சிப் பிரிவு பங்கேற்று முதல் பரிசைப் பெற்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின் பேரில் இவ்விழாவில் தமிழகம் கடந்த நான்கு ஆண்டுக் காலமாக தொடர்ந்து டெல்லியிலே முதல் பரிசைப் பெற்று வருகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாட்டுக்கு உழைத்த தியாகசீலர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும் போற்றிப் பேணுவதிலே எவருக்கும் சளைத்தவரல்ல என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ்ப் பெருங்குடி மக்களின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்து மறைந்த புரட்சித் தலைவர், பாரத ரத்னா, டாக்டர்

எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவைப் போற்றிடும் வகையிலே எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில் அருங்காட்சியகம் ஒன்று ரூபாய் 38.50 இலட்சம் செலவிலே கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களுக்கு திருநெல்வேலியிலே 75 இலட்சம் ரூபாய் செலவிலே மணி மண்டபம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளி அருகில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு மணி மண்டபம் கட்ட விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு விழா நினைவாக, அவர் பிறந்த ஊரான விருதுநகரிலே நினைவுத் தூண் மற்றும் மணி மண்டபம் கட்டுவதற்காக ரூபாய் 14 இலட்சம் நிதி ஒதுக்கீட்டிலே கட்டுமானப் பணி விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கடந்த ஆட்சியில், தருமபுரி மாவட்டத்தில் அதியமான் கோட்டம் நிறுவப்படும் என்றார்கள். ஆனால், எதுவுமே செய்யாமல் கிடப்பில் போட்டிருந்த அந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைப்படி அதியமான் கோட்டையிலே அதியமான் கோட்டம் மற்றும் திருமண மண்டபம் அமைத்திடும் வகையிலே, 0.81.0 எக்டேர் நிலம் ரூபாய் 1,28,253 செலவிலே கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலத்தில் ரூபாய் 112 இலட்சம் மதிப்பீட்டிலே கட்டுமானப் பணி தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலையில் தீரன் சின்னமலைக்கு மணி மண்டபம் அமைக்க ரூபாய் 19 இலட்சத்து 67 ஆயிரம் செலவிலே அரசால் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இந்த இடத்தில் மணி மண்டபம் அமைக்க ரூபாய் 30 இலட்சமும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 20 இலட்சத்தில் திருமண மண்டபமும், ஆக, ரூபாய் 69 இலட்சத்து 67 ஆயிரம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*பிற்பகல் 12–20*

செஞ்சிக் கோட்டை அரசன் தேசிங்கு ராஜனுக்கு, அவர் உயிர்நீத்த இடமான விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்திலுள்ள கடலி



கிராமத்தில் நினைவகம் கட்டி, சிலை நிறுவும் பணிகளுக்காக ரூபாய் 36.80 இலட்சத்திற்கு மதிப்பீடு பொதுப் பணித் துறையினரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. நினைவகம் கட்டுவதற்கான இடம் கையகப்படுத்தப்பட்ட பின்னர், நினைவகம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழாவினையொட்டி, திருப்பூர் குமரன் நினைவகத்தில், அவரது மார்பளவு வெண்கலச் சிலை நிறுவப்பட்டு, அவரது பிறந்த நாள் நூற்றாண்டு விழா அரசின் சார்பில் ரூ. 2 இலட்சம் செலவிலே சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சட்டமன்றப் பேரவையில் 9–3–2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், ரெட்டை மலை சீனிவாசன் அவர்களுக்கு, தமிழ்நாட்டில் தகுந்த இடத்தில் நினைவுச் சின்னம், நினைவு மண்டபம் அரசின் சார்பில் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறையின் சார்பில், இதற்கான ஆயத்தப் பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சட்டமன்றப் பேரவையில் 10–3–2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களால், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் கடைசிக் காலத்தில் வாழ்ந்த மதுரை திருநகர் இல்லம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவில்லமாக அரசின் சார்பில் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், செய்தி–மக்கள் தொடர்புத் துறையின்கீழ் உள்ள பல்வேறு பிரிவுகள் அனைத்தையுமே நவீனமயமாக்கிடும் வகையில், தமிழ்நாடு திரைப்படப் பிரிவில் வீடியோ செய்தி மலர்களை அதிக அளவிலே பிரதிகள் எடுப்பதற்குரிய multi–copier system ரூ.5 இலட்சம் செலவிலே வாங்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலே முன்னோடி நிறுவனமாக விளங்கும் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் மாணவர்களின் மனித வளத்தினை, நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, உலகத் தரத்துக்கு ஒப்ப உருவாக்கிடும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி ரூ.61.45 இலட்சம் ஒதுக்கீட்டிலே நவீன உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

புனேயில் உள்ள இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி
நிறுவனத்திற்கு, ஆண்டுக்கு சுமார் ரூ.12 கோடியை மத்திய அரசும்,
கொல்கத்தாவில் உள்ள சத்திய ஜித்ரே திரைப்படம் மற்றும்
தொலைக்காட்சி நிறுவனத்திற்கு 5 கோடி ரூபாயினை மும்பையில்
உள்ள தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகமும், கொல்கத்தாவில் ரூப்கலா
திரைப்படக் கல்லூரிக்கு இத்தாலி நாட்டு அரசிடமிருந்து ரூ.5 கோடியும்
நிதி உதவியாக அளிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. ஆனால், தமிழ்நாடு
திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்
மட்டுமே தமிழக அரசின் நிதி உதவி மட்டும் பெற்று, சென்னையிலே
இயங்கி வரும் ஒரே நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தில் பயிலும் மாணவ,
மாணவியர்கள், கல்விக் கட்டணமாக, ஆண்டு ஒன்றுக்கு ரூ.12 ஆயிரம்
வீதம், 3 ஆண்டுகளுக்கு ரூ.36 ஆயிரம் மட்டும் செலுத்துகிறார்கள்.
ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா
அவர்களால், தமிழக அரசு ஒவ்வொரு மாணவ, மாணவிக்கும் ரூ.3
இலட்சம் அவர்களது பட்டயப் படிப்பிற்குச் செலவு செய்கிறது.
அதிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த
மாணவ, மாணவியர்களுக்கு, கல்விக் கட்டணமின்றி இலவசமாக
இந்நிறுவனத்தின்மூலம் கல்வி கற்பிக்கப்படுகிறது. இவ்வாறு இருந்தும்,
இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசிடம் நிதி உதவி கேட்டு
வலியுறுத்திய பின்னரும், கடந்த ஒரு வருட காலமாக மத்திய அரசு
பாராமுகமாக இருந்து வருகிறது என்பதை இந்த அவைக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசின் செயல்பாடுகள், வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள்
போன்றவற்றை மாதந்தோறும் வெளியிட்டு வரும் தமிழரசு இதழுக்கு,
கடந்த கால தி.மு.க. ஆட்சியில் மொத்தம் 48 ஆயிரமாக இருந்த தமிழ்
இதழின் சந்தாக்கள் மாண்புமிகு அம்மாவினுடைய சீரிய
அறிவுரைக்கிணங்க தற்போது 73,325 ஆக உயர்ந்து உள்ளது. (மேசையைத்
தட்டும் ஒலி) இதிலே முன்பு 1,131 ஆக இருந்த ஆயுள் சந்தாக்கள்,
தற்போது 41,749 ஆக உயர்த்தப்பட்டு இதன்மூலம் 4,17,49,000 ரூபாய்
அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது என்பதும் இந்த நேரத்தில்
குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாட்டில் உள்ள 30 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு
அலுவலகங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி
இதய தெய்வம் அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையில்
நவீனமயமாக்கிடும் வகையிலே ரூ.54 இலட்சம் ஒதுக்கீட்டிலே நவீன
digital camera–க்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. செய்திப் பரிமாற்றத்தை



விரைவுபடுத்திட optical fibre மூலம் நவீன video streaming திட்டத்தை
உருவாக்கிட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின்
ஆணைப்படி ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வல்லுநர்
குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப விரைவில் நிறுவப்படும் என்பதையும்,
இது இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் அமையும் என்பதையும்
பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியிலே செய்தி–விளம்பரத்
துறையின் வரவு-செலவுத் திட்ட மதிப்பிற்காக ரூ. 88 கோடியே 76
இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், 2001–2002 முதல்
2005–2006 வரை ரூ.139,20,00,000 நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இது
கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைவிட ரூ.50 கோடியே
44 இலட்சம் அதிகம் என்பதை இந்த அவையில் பெருமையுடன்
தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று இத்துறையின் திட்டச் செலவினங்களுக்காக கடந்த
5 ஆண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கப்பட்ட தொகை
ரூ.2,49,32,000. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களது பொற்கால
ஆட்சியில் 2001–2002 முதல் 2005–2006 வரை ரூ.3,95,36,000 நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது முந்தைய தி.மு.க.
ஆட்சி ஒதுக்கீடு செய்ததைவிட ஒரு கோடியே 46 இலட்சத்து
நான்காயிரம் அதிகம் என்பதைப் பெருமையுடன்
தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

ஊரகப் பகுதிகளில் எழுச்சி, நகர்ப்புறங்களில் வளர்ச்சி, குடிநீர்த்
திட்டங்களை நிறைவேற்றுவதில் பெரும் புரட்சி, அதைப்போன்று,
செய்தி–விளம்பரத் துறையில் முனைப்பான முயற்சி என்று புகழ்
பூத்த தமிழகத்தின் தலைமை காத்து புதுமை படைத்திடும்
புதுயுகமே! இலட்சியப் பாதையில் மாற்றார் உருவாக்கிடும்
தடைக்கற்களையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு, தமிழகத்தை வளர்ச்சிப்
பாதையில் வழிநடத்திச் செல்லும் எங்கள் தங்கத் தலைவியே! ஆட்சிக்கு
எதிராக சூழ்ச்சி வலை பின்னிடும் சூது மதியினருக்கு வீழ்ச்சியே
நிச்சயம் என்று வெற்றி முரசு கொட்டும் வீரத்தின் சின்னமே!
(மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் சக்தியே மகேசன் சக்தியாகப் பெற்று,
தகதகவெனப் பேரொளியாய்த் திகழ்ந்து நிற்கும் இதய தெய்வம் அம்மா

அவர்களே! எதிர்காலத்தில் வரவிருக்கும் தேர்தல்களில் மக்களால் வழங்கப்படும் தீர்ப்பு கட்சிகளின் எண்ணிக்கையால் கனவுக் கோட்டை கட்டிக் களிப்படைந்து நிற்கும் கூட்டத்திற்கோ தோல்வி என்ற பெயரால் ஊதப்படும் சங்கொலி, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, உங்களுக்கோ வெற்றி என்ற புகழால் வழங்கப்படும் வாழ்த்தொலி. தமிழகத்திற்கு உங்கள் ஆட்சியால் வந்து விட்டது நல்லொளி, தமிழகத்து மக்களோ காண்கின்றார்கள் புத்தொளி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பு ஆண்டில் செய்தி மற்றும் விளம்பரத் துறைமூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஒப்புதலுடன் செயல்படுத்தப்படவுள்ள பணிகள் பற்றிய அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே குறிப்பிட ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அறிவிப்புகள்:

1. 30 மாவட்டங்களில் உள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் கணினிகள் வாங்க மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2. 30 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

3. தலைமையிட வரவு-செலவு மற்றும் கணக்குப் பிரிவிற்கு 90 ஆயிரம் ரூபாய் செலவில் நகல் எடுக்கும் கருவி வாங்கி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

4. தலைமையகத்திலுள்ள மேற்கோள் பிரிவில் 12 இலட்சம் ரூபாய் செலவில் மின்னணு ஆவணக் காப்பக முறை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

5. தலைமையிடப் புகைப்படப் பிரிவிற்காக ஒரு ஃபிலிம் நெகடிவ் ஸ்கேனர் கருவி 70 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

6. தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு ஒரு non-linear வீடியோ எடிட்டிங் கருவி 11 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



7. தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முன்காண் திரையரங்கில் டால்பி டிஜிட்டல் சிஸ்டம் மற்றும் டி.ட்டி.எஸ். சிஸ்டம் 22 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

8. தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்திற்கு 3 இலட்சம் ரூபாய் செலவில் 5 பென்டியம் கணினிக் கருவிகள் வாங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

9. மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 42 இலட்சம் ரூபாய் செலவில் 6 வீடியோ வாகனங்கள் வாங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

10. விழுப்புரம் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகப் பயனுக்கென 4 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் வாகனம் ஒன்று வாங்கி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

11. தமிழரசு அச்சகத்தின் நிருவாகப் பிரிவு இயங்கும் இரண்டாவது தளம் 6 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

12. தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு 28 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் டிஜிட்டல் வீடியோ இ.என்.ஜி. படப்பிடிப்பு சாதனம் வாங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

13. தலைமையிடப் புகைப்படப் பிரிவிற்கென ஒரு டிஜிட்டல் ஸ்டில் புகைப்படக் கருவி (10 எம்.பி.) 2 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்துள்ளார்கள். வெட்டுத் தீர்மானக் கோரிக்கைகளை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே வெட்டுத்

தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், என்ன?

*பிற்பகல் 12–30*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசும்போது, நம்முடைய தமிழ்ப் பண்பாட்டின்படி, பெரியவர்களைப் பார்க்கும்போது, ஐயா என்று அழைப்பது மரபு. அந்த மரபுகூட தெரியாமல், தமிழ் உணர்வு இல்லாவிட்டாலும் பரவாயில்லை, பெரியவர்களை மதிக்க வேண்டும் என்ற பண்பாடு தெரியாதவர் இந்த அவையிலே இருப்பதைக் கண்டு வெட்கப்பட்டு, வேதனைப்படுகிறேன். இதை அத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

அடுத்தது, நேற்று என்னுடைய எடப்பாடி நகரிலே நடந்த ஒரு கொடுமையான நிகழ்ச்சியினை இந்த அவையிலே எடுத்துச் சொன்னவுடனே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அதை ஆராய்ந்து, உண்மை என்று தெரிந்து, அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதி 50,000 ரூபாய் ஒதுக்குவதற்கு ஆணையிட்டார்கள் என்பதனைத் தெரிந்தவுடன், அந்தக் குடும்பத்தின் சார்பாக முதலமைச்சர் அவர்களை உளமாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, ஞானசேகரன்? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தியடிகள் 1919, அதேபோல 1920 ஆம் ஆண்டு Presidency கல்லூரிக்கு முன்னால் வந்து, மேடை போட்டுப் பேசிய இடம், 'திலகர் திடல்' என்று அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறோம். அமைச்சர் அவர்கள் அதை அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை நல்ல வழியிலே வழிநடத்தி, எதிர்கால இந்தியாவிலே தமிழகம் ஒரு சிறந்த மாநிலமாக விளங்கும் என்கிற



வகையிலே, ஆறரைக் கோடி தமிழ் மக்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தாழ்த்தப்பட்ட மக்களின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று, தாத்தா ரெட்டைமலை சீனிவாசனார் அவர்களுக்கு நினைவு இல்லம் அறிவித்ததை, இன்றைக்குத் தமிழகம் எங்கும் வாழ்ந்துகொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் மனமாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, சுதந்திரப் போராட்டத் தியாகி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய இல்லத்தை, அவர்கள் வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாக அறிவித்ததையும் இன்றைக்கு நாட்டு மக்கள் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த அடிப்படையிலே, சங்கரன்கோவிலுக்கு அருகிலே மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் வாழ்ந்த இல்லம், நினைவில்லமாக மாற்றப்படுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் முயற்சி எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் முன்பு கல்வி அமைச்சராக இருந்தபோது அந்த இடத்தைக்கூட நேரிலே வந்து ஆய்வு செய்திருக்கிறார். அந்தப் பணி அப்படியே இருக்கிறது. தேவநேயப் பாவாணர் அவர்களுடைய பிறந்த இல்லத்தை நினைவில்லமாக மாற்ற வேண்டுமென்று அம்மா அவர்கள் ஆணையிடுவார்களா என அறிய விரும்புகின்றேன்.

அதோடு, சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கனாருக்குப் போக்குவரத்துக் கழகம் கண்டு மாபெரும் பெருமையைத் தேடித் தந்தவர் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எனவே அவர்களுடைய பிறந்த ஊரான கவர்னகிரியிலே அவருக்கு ஒரு நினைவிடத்தை அமைத்துத் தர, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, (குறுக்கீடு) திருமதி யசோதா, கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் வைத்த இரண்டு கோரிக்கைகளும் ஏற்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர் கோரியவாறு, தேவநேயப் பாவாணர் அவர்களுக்கும், வீரன் சுந்தரலிங்கம் அவர்களுக்கும் நினைவு மண்டபங்கள் எழுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன். (குறுக்கீடு) திருமதி யசோதா, திரு. முருகவேல் ராஜன் அவர்கள் நன்றி சொல்லிவிடட்டும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை ஏற்று, நிறைவேற்றித் தருவதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, தமிழகத்தின் நிரந்தரத் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) கோடானு கோடி ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாகவும், கோடானு கோடி தமிழ் நெஞ்சங்கள் சார்பாகவும் என் நெஞ்சார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் நான் தெரியப்படுத்திக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுடைய தனிப் பெருந்தலைவராக இருந்த ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு இன்றைக்கு சிலை அமைப்பதற்கு முடிவு எடுத்திருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களை நெஞ்சாரப் பாராட்டுகின்றேன்.

அதே நேரத்தில், சுதந்திரப் போராட்ட வீரரும், புரட்சித் தலைவர் அவர்களுக்கு மிக நெருக்கமானவருமாக இருந்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களுக்கும் ஒரு சிலையினை வட சென்னைப் பகுதியிலே அமைப்பதற்கு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று உங்கள்மூலமாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, Guillotine நேரம். இன்றைக்கு. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) பதிலுரை, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லாம் முடிந்ததற்குப் பிறகு கேளுங்கள். (குறுக்கீடுகள்) 1–30 மணிக்கு guillotine நேரம். எல்லாம் முடிந்ததற்குப் பிறகு கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையை முடித்ததற்குப் பிறகு கேளுங்கள். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு."

மன உறுதி கொண்ட வீரம், கொடைத் தன்மை, அறிவாற்றல், ஊக்க எண்ணம், இந்த 4 குணங்களும் ஒன்றாக அமையப்பெற்றவை மக்களை ஆட்சி செய்பவரின் இயல்பாகும். இது நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பொருத்தமான குறளாகும்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்."

ஒரு சொல்லை, செய்வோம் எனச் சொல்லுதல் எவருக்கும் எளியதாகும். ஆனால், சொன்னபடி செய்து முடிப்பது கடினம். ஆனால், சொன்னதை உடனடியாகச் செய்து முடிக்கும் ஒரே தலைவர் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா ஒருவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகத் தலைவர்கள் வரிசையிலே இடம் பெற்று, தங்கத் தாரகை விருது பெற்று, உலக நாடுகளின் பாராட்டுதலைப் பெற்ற தாயே! பசித்தோர் முகம் பார் என்றார் பட்டினத்தார். கரவாது இடுவாய் என்றார் அருணகிரி நாதர். சோறும் இடு, தண்ணீரும் வார் என்றார் ஔவையார். விடா முயற்சியினால்தான் நீலக் கடலில் நல்முத்துக்கள் எடுக்க முடிகிறது. அம்மாவின் ஓய்வறியா உழைப்பினால்தான் தமிழகத்தில் நல்லாட்சியைத் தர முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 'அன்பர் தங்க நிழல் பரப்பிய மற்கோடையெல்லாம் தணிக்கின்ற தருவே! பூந்தடமே! ஞானச் செங்குமுதம் மலர வருமதியே' என்னும் வள்ளலாரின் திருவாக்கிற்கேற்பவும்,

"பருவ மழை பொய்யாது பெய்ய வேண்டும்;
பயிர்களெல்லாம் செழித்தோங்கி வளர வேண்டும்;
தருமநெறி தவறாது தழைக்க வேண்டும்;
சாதி மதச் சண்டையெலாம் ஒழிய வேண்டும்;"

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களது கவிதை வரிகளுக்கேற்ப், தமிழகத்தை வழிநடத்திச் செல்லும் தாயே!

"மயிலாட வான்கோழி தடை செய்வதோ,
மாங்குயில் பாட கோட்டான்கள் குறை சொல்வதோ,
முயல் கூட்டம் சிங்கத்தின் எதிர் நிற்பதோ—அதன்
முறையற்ற செயலை நாம் வரவேற்பதோ?"

என்ற புரட்சித் தலைவர் பாடல்தான் நினைவிற்கு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்,
அள்ளிக் கொடுக்கும் வள்ளல் குணம்,
அளப்பரிய அறிவாற்றலின் அடையாளச் சின்னம்,
ஒளிமயமான எதிர்காலத்தைப் படைக்கப் புறப்பட்ட தாயே!

அரசியல் வாழ்வில் தாங்கள் பெற்ற அனுபவங்களைப் படிப்பினையாகக் கொண்டு, வீரத்துடனும், விவேகத்துடனும், தமிழ்நாட்டை இந்தியத் திருநாட்டிலேயே முதன்மை மாநிலமாக்கிட அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி)

ஆணித்தேர் புரவியும், ஆட்பெரும் படையும் வேண்டாம், பொன்னும் மணியும் மின்னும் வைர வைடூரியமும் வேண்டாம் என்று, கடும் உழைப்பையும், துணிவையும் துணையாகக் கொண்டு எதிர் நீச்சல் போட்டு எங்களையெல்லாம் வழிநடத்திச் செல்லும் தாயே!

இரண்டு கோடி கழகத் தொண்டர்களின் வசந்த காலமே!
ஆறு கோடித் தமிழர்களின் நிகழ்காலமே!
நூறு கோடி இந்தியர்களின் எதிர்காலமே!
இந்துக்களுக்கு வேதம் இருக்கிறது,
கிறிஸ்தவர்களுக்கு வேதம் இருக்கிறது,
இஸ்லாமியர்களுக்கு வேதம் இருக்கிறது,
எங்களுக்கு வேதம் அம்மா நீங்கள்தான்! (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு, கேரள மாநிலம், கர்நாடக மாநிலம், மூன்று ஊர்கள் கூடும் ஊரான கூடலூர் என்ற தமிழ்நாட்டின் கடைக்கோடியில் இருந்த கடைக்கோடித் தொண்டனான எனக்கு முகவரி தந்து, என்னை வாழ வைத்து, சுற்றுலாத் துறை அமைச்சர் என்ற பதவி தந்து, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே என்னைப் பேச வைத்த தாயே!

எனது உடலில் இறுதி மூச்சு உள்ள வரை அம்மா, அம்மா, அம்மா என்றும் விசுவாசமாகவும் இருப்பேன் என அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என் உரையைத் துவங்குகின்றேன்.

இந்தியாவிலேயே முதன்முறையாக இரயில் பயணம்மூலம் சுற்றுலாப் பயணங்கள் 2002–2003-ல் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய



தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்பட்டது. இப்பயணத்தில் பங்கு பெறுவோர்க்கு உறுதி செய்யப்பட்ட இரயில் பயணச் சீட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்தில் இட வசதி, தமிழ்நாடு ஓட்டல்களில் தங்குமிட வசதி ஆகியவை அளிக்கப்படுகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலமாகக் கட்டணம் செலுத்தி, கணினி வழியில் பதிவு செய்துகொள்ளும் முறையை 2–7–2004 அன்று தொடங்கி வைத்தார்கள். இக்கழகம் தொகை செலுத்தி, கணினி வழியில் பதிவு செய்துகொள்ளும் முறையைத் தொடங்கியதில் இந்தியாவிலேயே முதல் மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்ற தனித்துவத்தைப் பெற்றுள்ளது. இதன்மூலம், தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் இட வசதிக்கும், மற்றும் திட்டமிட்ட சுற்றுலாவுக்கும், உலகத்தில் எங்கிருந்தேனும் சுற்றுலாப் பயணிகள் வீட்டிலேயே இருந்து கொண்டு, கடன் வசதி அட்டைகளைப் பயன்படுத்தி கணினிமூலம் பதிவு செய்துகொள்ள இயலும்.

பிற்பகல் 12–40

இதன் வாயிலாக, ஓட்டல்களில் இட வசதி மற்றும் சுற்றுலாக்களில் இடம்பெறுவதை உறுதி செய்துகொள்ளவும் முடியும். தமிழ்நாடு சுற்றுலா இணையதளத்தை அணுகி சுற்றுலாப் பயணிகள் சுற்றுலா குறித்த விவரங்களைப் பெறமுடியும். அதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா இடங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்ட சுற்றுலாக்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள், அவற்றின் கட்டணங்கள், அக்கழகம் அளிக்கும் வசதிகள், தமிழ்நாட்டின் விழாக்கள் முதலியன போன்ற விவரமான தகவல்கள் கிடைக்கும். தற்போது சுமார் 250 சுற்றுலாப் பயணிகள் அன்றாடம் இந்த இணையதளத்திற்கு வருகை தருகின்றனர்.

தமிழகத்திலேயே முதன்முறையாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவியேற்றபின்தான் தமிழக சுற்றுலாத் தலங்களைப் பற்றி மென் தட்டுக்கள் தயாரித்து வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2001 ஆம் ஆண்டில் ரூபாய் 223 இலட்சம் நட்டத்தில் இயங்கி வந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆலோசனை மற்றும் நல்வழிகாட்டுதலினாலும், இன்று அந்த

நட்டத்தையும் ஈடுகட்டி, 352 இலட்சம் ரூபாய் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பொருட்காட்சியில் இதுவரை கண்டிராத அளவிற்கு இந்த ஆண்டு ரூபாய் 84 இலட்சம் இலாபத்தை ஈட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்படி சுற்றுலாத் துறையால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்குப் பரிசுகளும், பாராட்டுக்களும் உலக சுற்றுலாத் துறை நிறுவனங்களிடமிருந்து முதன்முறையாகக் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. கடந்த ஓராண்டுக் காலத்தில் தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை தேசிய மற்றும் உலக அளவில் பல பெருமைக்குரிய பாராட்டுக்களையும், பரிசுகளையும் முதன்முறையாகப் பெற்றுள்ளது.

மார்ச் 2004-ல் புதுடெல்லியில் நடைபெற்ற சாத்தே (SATTE-South Asia Travel and Tourism Exchange) மற்றும் சுற்றுலாப் பரிமாற்றம் நிகழ்ச்சியில் தமிழக அரசு சுற்றுலாத் துறைக்கு ட்டி3 அமேடியஸ் விருது வழங்கப்பட்டது. ஆண்டின் மிகச் சிறந்த சுற்றுலா நிகழ்வாக 64-வது SCAL உலக மாநாட்டை சென்னையில் நடத்தியதற்காக இந்த விருது வழங்கப்பட்டது.

சிறந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியதற்காக கலிலியோ எக்ஸ்பிரஸ் பயணம் மற்றும் சுற்றுலா விருது நவம்பர் 2004-ல் சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்டது. சுற்றுலா வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்பத்தை அதிக அளவு பயன்படுத்தியதற்காகவும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்கள், சுற்றுலாப் பயணத் திட்டங்களில் இருக்கைகள் கணினிமூலம் முன்பதிவு செய்து உடனுக்குடன் அதற்கான தொகையைச் செலுத்தும் முறையை அறிமுகப்படுத்தியதற்காகவும் இவ்விருதினை சுற்றுலாத் துறை பெற்றுள்ளது. இதில் பசிஃபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் கூட்டமைப்பு, இந்தச் சுற்றுலாவில் ஒரு பிரபலமான அமைப்பாகும். இந்த அமைப்பு செட்டிநாடு பாரம்பரியச் சுற்றுலாவை பிரபலப்படுத்தியதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறைக்கு பாட்வா சர்வதேச விருது அளித்துள்ளது. மார்ச் 2005-ல் பெர்லினில் நடைபெற்ற உலக சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை இவ்விருதினைப் பெற்றது.



கடந்த ஆட்சியில், 5 ஆண்டுகளில்--ஏறக்குறைய தமிழக வரலாற்றிலேயே சுற்றுலாத் துறை மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்பேரில்தான் இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் மூன்று அரிய, பெரிய விருதுகளைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, கடந்த ஆட்சியில், 5 ஆண்டுகளில்—வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை--சுற்றுலாத் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை வெறும் 17 கோடியே 65 இலட்சம் ரூபாய்தான். ஆனால் அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2001 முதல் இந்த ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 139.67 கோடி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு ஒப்பீட்டை இங்கு காட்ட விரும்புகின்றேன். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1996 முதல் 2001 வரை 5 ஆண்டு காலத்தில், ஒரு சில மாவட்டங்களை மட்டும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். சுற்றுலாத் துறை மூலமாக வழங்கிய தொகை கடலூர் மாவட்டத்திற்கு ரூ.55.55 இலட்சம். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூபாய் 259.50 இலட்சம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, திருவண்ணாமலையில் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதி வெறும் ரூபாய் 8 இலட்சம். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூபாய் 227 இலட்சத்து 72 ஆயிரம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்திற்கு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 23 இலட்சத்து 50 ஆயிரம். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்தில் 337 இலட்சம் ரூபாய் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, நீலகிரி மாவட்டத்திற்குக் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 308 இலட்சம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 2,025.25 இலட்சம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, தேனி மாவட்டத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதி வெறும் 4 இலட்சம் ரூபாய், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 527 இலட்சம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதுபோல புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, நல்ல ஆலோசனை வழங்கி

வருவதால்தான் இந்தத் துறை மேன்மேலும் வளர்ந்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–45

சுற்றுலாத் துறைக்கு இந்த ஆண்டிற்கு மட்டும் ரூ.32.42 கோடி நிதியுதவி அளித்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எனவே உறங்கிக் கொண்டிருந்த சுற்றுலாத் துறை இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலினால் எழுந்து நடமாடத் தொடங்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காகச் செலவிடப்படும் தொகை இரு மடங்காகி—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகைக்கு இணையாக மாவட்ட நிருவாகம் தங்கள் பங்கினை அளித்துள்ளது. எனவே, சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காகச் செலவிடப்படும் தொகை இரு மடங்காக—இரு மடங்காகியுள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, சுற்றுலாத் துறை எடுத்து வரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள்மூலம், தமிழ்நாட்டிற்கு வருகை புரிகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2001 ஆம் ஆண்டு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தை வகித்தது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்பேரில், 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலினால், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தமிழகம் மூன்றாவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்தை அடைந்திருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, தமிழ்நாட்டிலுள்ள உலகப் பாரம்பரிய நினைவுச் சின்னமான மாமல்லபுரத்தை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8–1–2003 அன்று



காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அடிக்கல் நாட்டினார்கள். மாமல்லபுரம் மேம்பாட்டிற்காக 2003–2004 ஆம் ஆண்டில், முதற்கட்டமாக 5 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அரசு இத்திட்டத்திற்காக நில மாற்றம் மற்றும் நிலம் கையகப்படுத்துவதற்கு ரூ.1.56 கோடி வழங்கியுள்ளது. கடற்கரைக் கோயில் பகுதி மேம்பாட்டுப் பணி முடிக்கப்பட்டு விட்டது. ஐந்து ரதப் பகுதிப் பணி மேம்பாடு முடிவடையும் தருவாயில் உள்ளது. இப்பணி முடிவுற்றவுடன், சாலை ஓரத்தில் உள்ள சிறப்பக்கூடங்கள், ஐந்து ரதப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்திற்கு மாற்றப்படும். 2004–2005–ல் இரண்டாம் கட்டப் பணிகளுக்கென ரூ.432 இலட்சம் அரசு நிதியொதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேல்நிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளி மற்றும் பாலர் பள்ளிக்குப் புதிய கட்டடங்கள், புதிய பேருந்து நிலையம் ஒன்றும் கட்டப்படும். அர்ச்சுனன் தபசுக்கு எதிரே உள்ள இடம் மேம்படுத்தப்படுவதோடு, சாலைகளும் மேம்படுத்தப்படும். இப்பணி முடிவுபெற்றால் இன்னும் அதிக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நிலையில் மாமல்லபுரம் ஆகவிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தமிழ்நாட்டில் உள்ள முக்கிய மலைவாசஸ்தலங்களில் ஏற்காடும் ஒன்றாகும். ஏற்காடு மேம்பாட்டிற்காக ரூபாய் 4 கோடியே 48 இலட்சம் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ஒரு கோடி ரூபாய் ஏற்காடு ஏரியைத் தூர் வாருவதற்காக மட்டும் செலவிடப்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வேலூர் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலைவாசஸ்தலத்தையும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்படி ரூ.40 இலட்சத்தில் யாத்ரி நிவாஸ் ஒன்று கட்டப்பட உள்ளது. மேலும் பூங்கா, நிலச் சீரமைப்பு, ஏரிப் பகுதி மேம்பாட்டிற்காகவும் ரூ.20 இலட்சம், 2005–2006–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்.

தருமபுரி மாவட்டத்தில் தீர்த்தமலை மிக முக்கியமான புண்ணிய ஸ்தலமாகக் கருதப்படுகிறது. எனவே, தீர்த்தமலை மேம்பாட்டிற்காக ரூ.50 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டப் பணிகளுக்காக ரூ.40 இலட்சம்

D
V21',S1 P6
P05 . 82 . 1
226643

ஆட்சித் தலைவருக்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சுமார் 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை உள்ளது. இக்கடற்கரையின் நீளம் இந்தியாவில் உள்ள கடற்கரை நீளத்தில் ஏழில் ஒரு பங்காகும். தமிழ்நாட்டின் கடற்கரையை அழகுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதன்படி, 2004–2005 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், திருமுல்லைவாயில் கடற்கரைப் பகுதி ரூ.8.45 இலட்சம் செலவிலும், மற்றும் திருநெல்வேலி மாவட்டம், காயல்பட்டினம் கடற்கரைப் பகுதி ரூ.30 இலட்சம் செலவிலும் அழகுபடுத்தப்பட்டது. நாகப்பட்டினம் கடற்கரை ரூ. 18 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.

சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு குறித்து 2003–2004 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலும், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002–2007) ஆகியவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி சுற்றுச்சூழல் சுற்றுலா, சுற்றுச் சாலைத் திட்டத்தின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டு 294.45 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கோடியக்கரை, திருவாரூர் மாவட்டத்திலுள்ள முத்துப்பேட்டை, கடலூர் மாவட்டத்திலுள்ள பிச்சாவரம், பரங்கிப்பேட்டை, எம்.ஜி.ஆர். திட்டு போன்ற இடங்களை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–50

தமிழ்நாட்டில் வருகை புரியும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கோடு தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை, அயல்நாடுகளில் நடைபெறும் சுற்றுலா தொடர்பான மாநாடுகளில் கலந்துகொண்டு, தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாச் செல்வங்களை உலக அளவில் எடுத்துக் கூறி வருகிறது. இதன்படி, 2004–2005 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற தெற்காசிய நுழைவாயில் பயணச் சந்தையிலும், லண்டன் உலக பயணச் சந்தையிலும், பக்ரைனில் நடைபெற்ற அனைத்துலக மருத்துவச் சுற்றுலாப் பொருட்காட்சியிலும் மற்றும் பெர்லினில் நடைபெற்ற அனைத்துலக சுற்றுலாச் சந்தையிலும், தமிழக அரசு சுற்றுலாத் துறை கலந்துகொண்டது. இதேபோன்று, வரும் ஆண்டிலும் சுற்றுலா தொடர்பான மாநாடு, சந்தைகளிலும் சுற்றுலாத் துறை கலந்து கொண்டு



தமிழகச் சுற்றுலாவின் சிறப்புக்களை எடுத்துக் கூறுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

26–12–2004 அன்று தமிழகத்தைத் தாக்கிய ஆழிப் பேரலை சுனாமி, கடலோர சுற்றுலாத் தலங்களை விட்டுவைக்கவில்லை. இதனால் தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்தது. சுனாமி ஏற்பட்டவுடன் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த இடங்களுக்கு உடன் சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியது மட்டுமல்லாமல், நிவாரணங்களை உடனுக்குடன் அளித்து, ஒவ்வொரு இடத்திற்கும் அமைச்சர்கள் மற்றும் அரசுச் செயலாளர்களுக்குப் பொறுப்பு அளித்து அங்கேயே தங்கி நிவாரணப் பணிகளை முடுக்கிவிட உத்தரவிட்டார்கள். அப்பணி முன்னேற்றத்தினை தினந்தோறும் கண்காணித்து, தேவையான ஆணைகளைப் பிறப்பித்து, பணியை விரைந்து முடிக்க ஆவன செய்யப்பட்டது. சுற்றுலாத் துறை மூலம் உடனடியாக, சுனாமி தாக்குதலால் பாதிக்கப்பட்ட இந்தியாவின் பிற பகுதிகள்/ வெளிநாடுகளில் வசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் உற்றார், உறவினர்களுக்குத் தகவல் அளிக்க ஓர் அலுவலர் நியமிக்கப்பட்டார். சுனாமியால் சுற்றுலா முகவர்களுக்கும், மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கும் சுனாமிக்குப் பின் தமிழ்நாட்டிலுள்ள நிலவரம் குறித்து சரியான தகவல்கள் வலைத்தளம் மூலம் தெரிவிக்கப்பட்டன. இந்தத் தகவல்கள், நிலைமைக்கேற்ப அவ்வப்போது தகுந்தவாறு திருத்தப்பட்டன. இந்தத் தகவல்கள் இந்திய சுற்றுலாத் துறையின் வலைத்தளம் மூலமும் தெரிவிக்கப்பட்டது.

சந்தனக் கடத்தல் வீரப்பனால் தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அந்தக் காட்டுப் பகுதிகளில் முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டிருந்த போதிலும், இத்தனை கொடுமைகளுக்குச் சொந்தக்காரனான கொலைகார வீரப்பன் சில அரசியல் தலைவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு ஆதரவாக வாக்களியுங்கள் என்று அக்கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவராகப் பேட்டியளித்து, 'தைரியமாக அட்டகாசங்களைச் செய்தான். 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்டிப் படைத்த அவன் கூட்டத்தை அடியோடு ஒழித்து சாதனை படைத்து, சுற்றுலாத் துறைக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த அம்மா ஓர் அட்சய பாத்திரம், ஐந்தெழுத்து மந்திரம், உச்சரிக்கும் நாவிலெல்லாம் உயிர் மணக்கும் சந்தனம், அரசியலில் துருவ நட்சத்திரம், வரலாற்றின் புதிய தடங்களில் வாழும் இலக்கியம். பெண்மைக்கு ஏற்றம் தந்த பெருஞ்சுடர்,

ஏழைகளின் நித்தியக் காவலர். காவிரி தந்த கலைத் தாய். இந்தியாவின் மார்கரெட் தாட்சர். இந்நாட்டு ஜான்சி ராணி, திராவிடத்தின் ஒளிவிளக்கு, புரட்சிக் கவிஞரின் கனவினை நனவாக்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வீரப்பனைக் கொன்றதால் நாடு தலை நிமிர்ந்தது. சுற்றுலாத் துறை ஒளி வெள்ளம் கொண்டது. வாடிய வன விலங்குகள் புத்துயிர் பெற்று மகிழ்ச்சி கொண்டாடிக் கொண்டிருக்கின்றன. இங்கு, கடந்த வாரம் மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் பேட்டியில்கூட சொல்லியிருக்கின்றார், தமிழக சுற்றுலாத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மத்திய அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு இந்த 2005–2006 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளை வெளியிடுகிறேன்:

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் முதன்முறையாக தனியார் நிறுவனங்களுடன் இணைந்து சென்னையில் ரூ.20 இலட்சம் செலவில் பன்னாட்டு பயணச் சந்தை நடத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சென்னை, கொடைக்கானல், தஞ்சாவூர், சிதம்பரம், மதுரை போன்ற சுற்றுலா அலுவலகங்களுக்கும் மற்றும் சுற்றுலா ஆணையரகத்திற்கும் புதிய கணினிகள் ரூ. 5 இலட்சம் செலவில் வாங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.30 இலட்சம் செலவில் முதற்கட்டமாக திருவிடந்தை, திருமழிசை, திருநின்றவூர், கோயம்பேடு, மேலூர், திருமுல்லைவாயில், வல்லக்கோட்டை மற்றும் திருவொற்றியூர் ஆகிய புனிதத் தலங்களை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியை சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ரூ.150 இலட்சம் செலவில் மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கோட்டையை ரூ.20 இலட்சம் செலவில் மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஏலகிரி மலையை சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ரூ. 20 இலட்சம் செலவில் மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



அகமதாபாத், புவனேஸ்வர், சண்டிகர், கௌஹாத்தி மற்றும் வாரணாசி ஆகிய சுற்றுலாத் தகவல் மையங்களில் ரூ.1 இலட்சம் செலவில் நிகரி வசதி ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையில் மாண்புமிகு உறுப்பினர்களின் வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் முடிந்த வரை பதிலளித்துள்ளேன். இதில் திருப்தி அடைந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், சொல்லுங்கள். (குறுக்கீடு) என்ன, பழனிசாமி? சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே இரண்டு இடங்கள். பிச்சாவரம் ஒன்று. இல்லையென்றால் Lagoon ஒன்று. அதைச் சுற்றுலா மையமாக ஆக்கவேண்டும் என்பதை, தொடர்ந்து முக்கியமாக நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கிறோம். முக்கியமான ஒரு அழகு சிறந்த இடம் அது. அது திருவாரூர் மாவட்டத்திலே இருக்கிறது. அதிலே உள்ள mangrove காடுகள் அழகு, பல ஏரிகள் அதிலே போய்க்கொண்டிருக்கின்றன. அது எல்லாம், உலகத்திலே இருக்கிற ஜனாதிபதிகளை எல்லாம் மிகவும் கவர்ந்த இடம். பாரதப் பிரதமர்கள் எல்லாம் பார்த்த இடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சுருக்கமாகச் சொல்லுங்கள். இன்னொரு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். Guillotine time 1–30 மணிக்கு. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** Lagoon. அந்த இடத்தைச் சுற்றுலா மையம் ஆக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிவிப்பிலே, சுதந்திரப் போராட்ட வீரர் கட்டபொம்மன் அவர்களுடைய கோட்டையைச் சீர்செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றவுடனே எனக்கு ஒரு நினைவு வந்தது. அந்த வீரபாண்டிய கட்டபொம்மனுக்குத் தலைமைத் தளபதியாக இருந்து, அந்தப் போராட்டத்திலே சிறந்த பங்கினை ஆற்றிய நமது பாதரவெள்ளை அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்கின்ற கோரிக்கை அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் அனைவருக்கும் இருக்கிறது. இப்போது சுந்தரலிங்கனாருக்குக்கூட ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள்; அதற்காகப் பாராட்டுகிறேன். ஏற்கெனவே சுந்தரலிங்கனாருக்கு ஒரு நினைவுக் கிராமம்கூட இருக்கிறது. ஆனால், பாதரவெள்ளைக்கு—கடந்த காலங்களில் எல்லாம் நான் பல முறை இதே அவையிலே பேசியிருக்கிறேன். கட்டபொம்மன் என்று சொன்னால், பாதரவெள்ளை நினைவு இல்லாமல் இருக்கவே முடியாது, பிரித்துப் பார்க்க முடியாது என்கின்ற அளவிற்கு வீரர் பாதரவெள்ளை அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதற்கு அரசு முன்வருமா? முதல்வர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் கோரியவாறே நினைவுச் சின்னம் கட்டப்படும்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்பைச் செய்த முதலமைச்சர் அவர்களுக்குக் கோடானு கோடி தென் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் அத்தனை பேரும் பாராட்டுதலையும், நன்றியினையும் காணிக்கையாக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 1–30 மணிக்கு Guillotine time. முடியட்டும். அமைச்சர்களுடைய பதில் எல்லாம் முடியட்டும். (குறுக்கீடு) அமைச்சர்கள் பதில் எல்லாம் முடியட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈடில்லாப் பேராற்றல், இணையில்லா நிகராற்றல், கொள்கைப் பிடிப்போடு, இலட்சிய நோக்கோடு பீடுநடை போடும், ஏடுகள் பாராட்டும், செந்தமிழ் நாட்டின் மாட்சிமை தங்கிய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாட்சிமை தங்கிய அம்மா அவர்களுடைய கரம் அசைகின்றது என்று சொன்னால், ஏழைகளுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு என்று அர்த்தம்.

மாட்சிமை தங்கிய அம்மா அவர்களுடைய பார்வை படுகிறது என்று சொன்னால், பட்டுப்போன செடிகளும் படர்ந்து வளரும் என்று அர்த்தம்.

மாட்சிமை தங்கிய அம்மா அவர்களுடைய ஆசி கிடைக்கிறது என்று சொன்னால், அவர்களுடைய ஆயுட்காலம் கூடுகின்றது என்று அர்த்தம்.

மாட்சிமை தங்கிய அம்மா அவர்களுடைய வாழ்த்து கிடைக்கின்றது என்று சொன்னால், அவர்களுடைய வாழ்க்கையிலே முகவரி கொடுக்கும் என்று அர்த்தம்.

மாட்சிமை தங்கிய அம்மா அவர்களுடைய பேனா தலை சாய்கின்றது என்று சொன்னால், தமிழகம் தலை நிமிர்கின்றது என்று அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாட்சிமை தங்கிய அம்மா அவர்களுடைய கரம் குவிகின்றது என்று சொன்னால், கருணை பொழிகின்றது என்று அர்த்தம்.

மாட்சிமை தங்கிய அம்மா அவர்கள் சுட்டு விரல் காட்டினால், எதிர்வரும் பகை ஓடி, ஒளிந்துவிடும் என்று அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் நின்றால் இமயம், நிமிர்ந்தால் வானம், எழுந்தால் புயல், பொழிந்தால் மழை என்ற பெருமைக்குரிய தமிழ் மாநிலத்தினுடைய மாதரசி, தமிழ் மக்களுடைய பேரரசி, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

பொற்பாதங்களை வணங்கி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையினுடைய மானியக் கோரிக்கையின்மீது எனது பதிலுரையை வழங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் அவசியத் தேவைகளில் உறைவிடம் என்பது பல்லாண்டுக் காலமாக முக்கியப் பங்கு வகிக்கின்றது. ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற குறிக்கோளைத் தமிழக அரசு கொள்கையாகக் கடைப்பிடித்து வருகின்றது. இப்பணியினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செவ்வனே செய்து வருகின்றது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எவ்வித நெறிமுறையுமின்றி, மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் திட்டங்களைச் செயல்படுத்தியதனால் வீட்டு வசதி வாரியம் செயல்படாமல் முடங்கிப் போனது. மக்கள் விரும்பாத இடங்களிலே, கடந்த ஆட்சியாளர்கள் ஆதாயம் இருந்தால், அந்த இடங்களைத் தேர்வு செய்து, நிலச் சொந்தக்காரர்களுக்கு அதிக விலை கொடுத்து, தரமற்ற அடுக்கு மாடிக் குடியிருப்புகள், (குறுக்கீடு) வீடுகள், மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கியதால், விற்பனை சரிந்தது. (குறுக்கீடு)

*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, உட்காருங்கள். அமைச்சரின் பதிலுரை முடியட்டும், அதன் பிறகு கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** ஆலையிலே சிக்கிய சோலைக் கரும்பைப்போல, மோசமான நிதிநிலைமைக்கு வாரியம் தள்ளப்பட்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை முடியட்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) பதிலுரை முடியட்டும், திரு. பிச்சாண்டி, உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று, வாரியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதிலுரை முடியட்டும்.



**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** அடுக்கு மாடிக் குடியிருப்புகள், வீடுகள், மனைகள் விற்கப்படாத காரணத்தினால், வாரியத்திற்கு உரிய வருவாய் கிடைக்கவில்லை. அதனால் பல்வேறு நிதி நிறுவனங்களுக்குக் கடன் தவணைத் தொகையைக்கூட திருப்பிச் செலுத்தவேண்டுமென்று சொன்னால், அதைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையெல்லாம் அன்றைக்கு உருவாக்கப்பட்டது. அதன் காரணமாக, நிதி நிறுவனங்களிலே கடன் சுமை பல்வேறு வகைகளிலே தேக்க நிலை ஏற்பட்டது.

அதுபோல, சாவி சரியானதைத் திறக்கும் என்பார்கள். கள்ளச் சாவி எதை வேண்டுமானாலும் திறக்கும் என்பார்கள். அதற்கு இவர்களே உதாரணம். அதற்கு இரண்டு ஆதாரபூர்வமான உண்மைகளை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த, தி.மு.க. ஆட்சிக் காலத்தில், சேலம், ஏற்காடு, எஸ்.எம்.டி. திட்டப் பகுதியில், மக்கள் நடமாட்டமே இல்லாத, ஒருவர்கூட வீடு வாங்க முன்வராத இடத்தில், 7 ஏக்கர் நிலப்பரப்பில், 67 உயர் வருவாய்ப் பிரிவுக் குடியிருப்புகள் ரூபாய் 5 கோடியே 10 இலட்சம் செலவில் கட்டப்பட்டன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, அமைச்சர் பேசி முடிக்கட்டும், நான் உங்களைக் கூப்பிடுகிறேன். பதிலுரை முடியட்டும். (குறுக்கீடு) ஏற்கெனவே நீங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** ஆனால், இந்தத் திட்டப் பகுதியிலே இதுநாள் வரையில், எந்த முயற்சி எடுத்தும், ஒரு வீடுகூட விற்கப்படாமல் உள்ளது என்பதை அவைக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, உட்காருங்கள், நான் பின்னர் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். நான் கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** விதை ஒன்று போட்டால், சுரை ஒன்றா முளைக்கும் என்பார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** அதுபோல, கடந்த ஆட்சியாளர்கள் வீட்டுமனைகளுக்குச் சந்தை விலை அதிகமாக இருந்தும், நடப்பாண்டு விலை என்ற முறையிலே, குறைந்த விலையிலே

நிர்ணயம் செய்ததனால், வாரியத்திற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சென்னை, பெசன்ட் நகர் பகுதியிலே, 17 மனைகள் குறைந்த விலையிலே விலை நிர்ணயம் செய்து, கடந்த ஆட்சியாளர்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. இதுபோன்று மாநிலம் முழுவதும் பல்வேறு திட்டங்களிலே முறைகேடு நடந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001–ல் ஆட்சிக்கு வருகின்றார்கள். ஆட்சிக்கு வருகின்ற நேரத்தில் பல்வேறு துறைகளை ஆய்வு செய்தார்கள். பல்வேறு துறைகளை ஆய்வு செய்கின்றபோது, இந்த வீட்டு வசதி வாரியத்தினுடைய நிலைகளையும் ஆய்வு செய்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மோசமான நிலையிலிருந்த வீட்டு வசதி வாரியத்தை மேம்பாடு செய்வதற்காக, முதற்கட்டமாக, விற்கப்படாமல் தேங்கியிருந்த வீடுகள், அடையச் மனைகள் விற்கின்ற வரை, புதிய திட்டங்களை மேற்கொள்ள வேண்டாம், தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் என்ற உத்தரவை வீட்டு வசதி வாரியத்திற்கு வழங்கினார்கள்.

மேலும், விற்கப்படாமல் இருந்த மனைகளுக்கு வழிகாட்டுதல் விலை அல்லது சந்தை விலை, இதில் எது அதிகமோ, அந்த விலையைத்தான் நிர்ணயம் செய்யவேண்டுமென்ற உத்தரவை வாரியத்திற்கு வழங்கியது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. இரண்டாவது கட்டமாக, விற்பனையாகாமல் இருந்த வீடுகள், மனைகள், அடுக்கு மாடிக் குடியிருப்புகளை அடையாளம் கண்டு, அதை விற்பதற்காக உயர்மட்டக் குழு ஒன்றினை அமைத்தார்கள். அதன் காரணமாக, 83 திட்டங்களிலே ஆய்வு செய்யப்பட்டு, விலை குறைப்புச் செய்யப்பட்டு, அந்த நடவடிக்கையை எடுத்ததன் காரணமாக, பல்வேறு விற்பனை உத்திகள் அதிகமாயின. அதன் காரணமாக, நிதி நிர்வாகங்கள் சிறப்பாகச் செயல்படுகின்ற நிலைகளை எல்லாம் பெற்றது.

அதற்கு, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த ஆட்சிக் காலத்திலே, கோவை திருப்பூர் முதலிபாளையத்தில், மேம்படுத்தப்பட்ட மொத்த மனைகள் 8,339. ஆனால் 2001 ஆம் ஆண்டு வரை 500 மனைகள்தான் விற்கப்பட்டு இருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, அங்கே விற்கப்பட்டது 7,440 மனைகள்; அங்கே உடனடியாக விற்கின்ற நிலை ஏற்பட்டது.



(மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் மீதி 399 மனைகள்தான் இருக்கின்றன. அதற்கும் போட்டி இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, அடுக்கு மாடிக் குடியிருப்பிலே, சென்னை, ஜெ.ஜெ. நகர் கோட்டத்தில் 750 அடுக்கு மாடி வீடுகள் விற்கப்படாத நிலை. எதைச் சொன்னாலும், விற்க முடியாத நிலையில் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, 740 குடியிருப்புகளை உடனடியாக விற்பனை செய்கின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதி 10 வீடுகள்தான் உள்ளன என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, 547 கோடியே 73 இலட்சத்திற்கு இந்த நான்கு வருடங்களிலே விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஆட்சியாளர்கள் செய்த தவறுகளைச் சரி செய்வதற்காக, முத்தான திட்டங்களையும், சத்தான சலுகைகளையும் அறிவித்தார்கள். தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய திட்டப் பகுதியிலே ஒதுக்கீடு பெற்ற மனைகளுக்குக் கிரயப் பத்திரம் பெறவேண்டுமென்று சொன்னால், குறைந்தது 350 சதுர அடி அளவிலாவது குடியிருப்பு கட்ட வேண்டுமென்ற நிபந்தனையை நீக்கி, அக்டோபர் 2003-ல் ஆணையிட்டார்கள். இதனால் வாரியத்திற்கு அதிக அளவில் வருவாய் கிடைத்தது. மேலும், விற்கப்படாது இருந்த வீட்டுமனைகளும் விரைவாக விற்பனை செய்யப்பட்டன.

பிற்பகல் 1-05

இதன் காரணமாக, 2001–2005 ஆகிய நான்கு ஆண்டுகளில் மகத்தான சாதனையாக 29,500 கிரயப் பத்திரங்கள் வாரியத்தால் வழங்கப்பட்டன. ஆனால், கடந்த ஐந்து ஆண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 20,000 கிரயப் பத்திரங்கள்தான் வழங்கப்பட்டன என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வீட்டு வசதி வாரிய வீடுகள், அடுக்கு மாடிக் குடியிருப்புகள், மனையின் விலைக்கு மட்டுமே முத்திரை வரி செலுத்தினால் போதும் என்ற சலுகையினால், வாரிய ஒதுக்கீடுதாரர்கள்

உடனடியாக முழுப் பணத்தைச் செலுத்தி, கிரயப் பத்திரத்தைப் பெற்று, முத்திரைக் கட்டணச் செலவில் அதிகப் பயன் அடைந்தார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, இன்றைக்குப் பல்வேறு வகைகளிலே அனைத்துத் திட்டப் பகுதிகளிலும் தொடர் பராமரிப்பிற்காக உள்ளாட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்குமாறு பல்வேறு கோரிக்கைகள் வந்தன. அந்தக் கோரிக்கைகளின் காரணமாக 124 திட்டங்களிலே, 93 திட்டங்கள் இன்றைக்கு உள்ளாட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், 31 திட்டங்களை ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை வாரியம் எடுத்து வருகின்றது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், கடன் நிலுவை ரூ.918 கோடியே 82 இலட்சம் என இருந்ததை, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 31–3–2005–ல் ரூ.360 கோடியே 58 இலட்சமாகக் குறைத்திருக்கின்ற நிலையை இன்றைக்கு வாரியத்திலே உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளால் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. நான்கு ஆண்டுகளிலே குடியிருப்புகள், மனைகள், அடுக்கு மாடிக் குடியிருப்புகள் சிறப்பான அளவிற்கு விற்பனை ஆகியுள்ளதாலும், நிதிநிலை இன்றைக்குச் சீராக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலும், மீண்டும் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் சிறந்த திட்டப் பகுதிகளிலே புதிய குடியிருப்புகளை கூட்டு முயற்சித் திட்டத்தின்மூலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணை வழங்கி, இன்றைக்கு வீட்டு வசதி வாரியம் அந்த நடவடிக்கையை எடுக்கின்றது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழ்மை நிலையிலே வறுமைக் கோட்டின்கீழே, சென்னையிலே உள்ள சாலை ஓரங்களில், இரயில் பாதை ஓரங்களில், கால்வாய் ஓரங்களில் வாழ வழியற்ற நிலையில் இருக்கின்ற மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன்கூடிய குடியிருப்புகளை ஏற்படுத்தி, உண்மையான பயனீட்டாளர்களுக்குச் சென்றடைய வேண்டும் என்ற விதத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா



அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தற்போது செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலமாக 27,962 தனி வீடுகள், அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூ.221 கோடியே 93 இலட்சம் செலவில் கட்டப்பட்டன. ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஐந்து ஆண்டு காலங்களிலே 12,773 குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டன. ரூ.106 கோடியே 75 இலட்சம் செலவில்தான் கட்டியிருக்கின்றார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரில் சென்னை, மதுரை மற்றும் கோவை போன்ற பெருநகரங்களில் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் ரூ.49 கோடி செலவில் 5,172 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன.

அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, வாம்பே திட்டத்தின்கீழ் இன்றைக்கு ரூ.49 கோடி செலவில் 12,250 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

அதேபோல, இராயபுரம் பகுதியிலே அமைந்திருக்கின்ற கவுஸ் மொகைதீன் பேட்டையில் ரூ.6 கோடியே 90 இலட்சம் செலவில் 552 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் கட்டப்படுகின்றன.

அதேபோல, சென்னை, எண்ணூர், தாழங்குப்பம் பகுதியில் ரூ.6 கோடியே 70 இலட்சம் செலவில் 468 வீடுகள் இன்றைக்குக் கட்டப்படுகின்றன.

அதுபோல, செம்மஞ்சேரியிலே ரூ.67 கோடியே 13 இலட்சம் செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்பேரிலே, இன்றைக்கு 5,164 வீடுகள் கட்டப்படுகின்றன. அதுபோல, செம்மஞ்சேரியிலே மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, ரூ.19 கோடியே 52 இலட்சம் செலவில் 1,512 வீடுகள் இன்றைக்குக் கட்டப்படுகின்றன. அதுபோல, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டு, ரூ.24 கோடியே 60 இலட்சம் செலவில் சென்னை ஒக்கியம்-துரைப்பாக்கம் பகுதியில் 1,892 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் இன்றைக்குக் கட்டப்படுகின்றன.

அதுபோல, சென்னை ஆர்.கே. நகர் தொகுதியில் 108 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூபாய் ஒரு கோடியே 40 இலட்சம் செலவில் இன்றைக்குக் கட்டப்படுகின்றன.

அதுமட்டுமல்ல. இன்றைக்குப் பல்வேறு பகுதிகளிலே இருக்கின்ற குடிசை மாற்று வாரியத்தினுடைய வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.19 கோடி ஒதுக்கி இந்த மூன்று மாத காலத்தில் அவையெல்லாம் சரிசெய்யப்படவேண்டும் என்ற ஆணையையும் வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

அதுபோல, இன்றைக்குப் பல்வேறு துறைகள் சம்பந்தமான நிலங்கள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பெயருக்கு நில மாற்றம் செய்யப்படாமல் நிலுவையில் இருந்தன. இவற்றையெல்லாம் அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டப் பகுதிகளிலே குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பெயரிலே மாற்றப்பட வேண்டுமென்ற வகையிலே 316 திட்டப் பகுதிகளிலே தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பெயருக்கு நில மாற்றம் செய்யப்பட்டது. இதனால் 62,198 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 104 திட்டப் பகுதிகளில்தான் மாற்றம் செய்யப்பட்டு, வெறும் 23,264 குடும்பங்கள்தான் இதிலே பயனடைந்துள்ளார்கள்.

இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வீடுகளைக் கட்டுவது மட்டுமல்ல, அது முறையாக, தெளிவாக, அதில் பயனடைந்தவர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று ஆணை வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் கட்டப்பட்டு முடிக்கப்பட்டுள்ள குடியிருப்புகளை உண்மையான பயனீட்டாளர்களுக்கு முறையான ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்ட குடியிருப்புகள் முறையான ஒதுக்கீடு செய்யப்படாமல், தங்களுக்கு வேண்டியவர்களுக்கே முறைகேடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு உதாரணத்திற்குச்



சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஆயிரம் விளக்கு பகுதியிலே உள்ள சத்தியமூர்த்தி நகர் மற்றும் இராயபுரத்தில் உள்ள சிங்காரவேலன் நகரில் அவர்களாகவே குடிசையில் இருந்து கொண்டு, அதிலே ஒதுக்கீட்டைப் பெற்றார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர் ஊரமைப்பு இயக்ககம். தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–ன்படி திட்டப் பகுதிகளுக்கு முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல், சரித்திர, கலாச்சார மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துதல் இத்துறையின் முக்கியப் பணிகளாகும். ஆகவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, 2005–2006 ஆம் ஆண்டில் பத்து நகரங்களுக்கு—மேலும் பத்து நகரங்களுக்கு—முழுமைத் திட்டம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதுபோல தமிழகத்தில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட நகரங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. இந்நகரங்களில் சாலைக் கட்டமைப்பு, திறந்தவெளி ஒதுக்கீடு, இணைப்புச் சாலை ஆகியவை உள்ளடங்கிய திட்டங்கள் வகுக்கப்பட்டால்தான் எதிர்காலத்தில் சீரான வளர்ச்சியைக் காண இயலும் என்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையின்படி, 2004–2005 ஆம் ஆண்டில் நகரங்களுக்கென 50 விரிவு அபிவிருத்தித் திட்டங்களும், 2005–2006 ஆம் ஆண்டில் 100 விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் இத்துறையால் தொடங்கப்பட உள்ளன என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, 2005–2006 ஆம் ஆண்டில் 9 பாரம்பரிய நகரங்களின் வளர்ச்சிக்கு நகர் ஊரமைப்பு நிதியின்கீழ் தலா ரூ.50 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம். சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினுடைய போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும், உள்கட்டுமான வசதிகளை வலுப்படுத்தவும், ஏற்கெனவே உருவாக்கிய நகர அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் பல திட்டங்களை உருவாக்கியுள்ளது. மேலும் சென்னையிலே கட்டப்பட்டு வரும் பல அடுக்கு மாடிக் குடியிருப்புகள் மற்றும் தொழில்நுட்பக் கட்டடங்களுக்கு வரைபட ஒப்புதல் அனுமதி போன்ற இன்றியமையாத பணிகளை சென்னைப் பெருநகர வளர்ச்சிக்

குழுமம் செய்து வருகிறது. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் . ஆசியாவிலேயே மிகப் பெரிய பேருந்து நிலையத்தை சென்னை கோயம்பேட்டிலே திறந்து வைத்து, இந்த நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தார்கள். மேலும் இந்தியாவிலேயே மிகப் பெரிய தனியார் பேருந்து முனையத்தை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்து இந்த நாட்டுக்கு அர்ப்பணித்தார்கள்.

அதுபோல, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னைப் பெருநகரினுடைய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் ரூ.18,000 கோடி செலவில் பத்தாண்டு காலத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்திடத் திட்டமிட்டார்கள். இந்தத் திட்டத்தில்—சம்பந்தப்பட்ட துறைகளான நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துக் காவல் துறை, சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம், பொதுப் பணித் துறை, மின்சார வாரியம், நகராட்சி நிர்வாகம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் முதலியவற்றுடன் கலந்தாலோசிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்பேரில், பின்வரும் முக்கிய நோக்கங்களோடு தயாரிக்கப்பட்ட திட்டமாகும்.

*பிற்பகல் 1–15*

உள்கட்டமைப்புத் தேவைகளை பிரிவுவாரியாகக் கண்டறிந்து, அதற்கான திட்டங்களைத் தீட்டுவது, இத்திட்டங்களைச் செயலாக்குவதற்குத் தேவையான நிதிகளைக் கண்டறிவது, இத்திட்டத்திற்கு நிதியாதாரங்களைக் கண்டறிவது, இத்திட்டங்களை வரிசைப்படுத்தி, ஆண்டுத் திட்டம், இடைக்காலத் திட்டம் என்று நீண்ட காலத் திட்டங்களை வகுப்பது, இப்படியாக, சென்னை மாநகரினுடைய வளர்ச்சிக்காக, பல்வேறு திட்டங்களை, பத்தாண்டு காலத் திட்டங்களை இன்றைக்கு உருவாக்கினார்கள். முதற்கட்டமாக, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2003–2004–ல் 1,322 கோடி ரூபாயை சென்னை மாநகரினுடைய உள்கட்டமைப்புக்காக, அனைத்துத் துறைகளின்மூலம் செலவு செய்கின்ற நிலையைச் செய்தார்கள். அதுபோல, 2004–2005 ஆம் ஆண்டில் 1,673 கோடி ரூபாய் அதிலே செலவிடப்பட்டது. அதுபோல, 2005–2006 ஆம் ஆண்டில், 2,054.09 கோடி ரூபாயை முதலீடு செய்ய வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்படியாக, இன்றைக்குச்



சென்னை மாநகரினுடைய வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிற முதலமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகருக்கு, பல்வேறு கட்சிகள், நாங்கள்தான் செய்தோம், நாங்கள்தான் செய்தோம் என்று சொல்வார்கள். ஆனால், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்--நீண்ட கால, நெடிய திட்டங்களாக, இந்த மக்கள் பயன்படுத்துகின்ற திட்டங்களாகப் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தந்திருக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் பல்வேறு திட்டங்கள் சென்னையிலே நடைபெற்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாகச் சொல்லப் போனால், திரள் துரித இரயில் திட்டம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே முதலிலே தொடங்கப்பட்ட வரலாறுகள், இன்றைக்குச் சென்னை மாநகருக்கு, அது பெருந்திட்டமாக இருக்கிறது.

அதுபோல, இன்றைக்கு சென்னை–கோயம்பேடு மொத்த காய், கனி மற்றும் விற்பனை அங்காடி, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த திட்டமாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதுபோல, ஆசியாவிலேயே மிகப் பெரிய புறநகர்ப் பேருந்து நிலையம் தந்தது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, சென்னை–கோயம்பேடு, ஆம்னி பஸ் தனியார் பேருந்து நிலையம் அளித்தது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, இன்றைக்குச் சென்னை மாநகரினுடைய குடிநீருக்கும் அச்சாரமிட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், தெலுங்கு–கங்கைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தது எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, புதிய வீராணம் திட்டம்மூலம் சென்னைக்குத் தண்ணீர் தருவதும் எங்களுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்துவதும் எங்கள் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. சென்னை

நகருக்குக் கடல் நீரைக் குடிநீராக்கித் தருவேன் என்ற நிலையை இன்றைக்கு எடுத்திருப்பதும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. இன்றைக்குச் சென்னை மாநகரினுடைய போக்குவரத்தைச் சரிசெய்வதற்காக Metro Rail திட்டத்தை ஆய்வு செய்கின்ற நிலையை எடுத்திருப்பதும் எங்களுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதிச் சங்கம்—வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வீட்டு வசதி இணையம் என்கின்ற தலைமைச் சங்கமும், 1,057 பிரதம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும், தாலுகா அளவில் 196 கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும், ஆக மொத்தம், 1,253 வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த வகையிலே, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலே முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. 81–வது விதியின்படி பல்வேறு ஆய்வுகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே பல பேர் தேர்தலிலே நிற்கமுடியாத நிலைகளெல்லாம் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்குப் பல்வேறு நிலைகளைப் பெற்றிருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இந்தக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், பல்வேறு முறைகேடுகளைச் சந்தித்து, தவழுகின்ற நிலையை உருவாக்கிய நிலையைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், அதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம்தான் காரணம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திலே ஒரு அறிவிப்பை வழங்குவதற்காக எனக்கு உத்தரவு வழங்கியுள்ளார்கள். அந்த அறிவிப்பை இங்கே அறிவிக்கின்றேன்:

தமிழகத்திலே நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவிய வறட்சியான சூழ்நிலையில், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் கடன் பெற்ற உறுப்பினர்கள், அதற்கான கடன் தவணையைச் செலுத்த இயலாத நிலையில், அவ்வுறுப்பினர்கள் தங்களின் கடன் சுமையைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கை, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,



அவர்களுடைய கோரிக்கையினைக் கருணையுடன் பரிசீலித்து, கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் கடன் பெற்றுள்ள குறைந்த, நடுத்தர மற்றும் இதர வருவாய் உள்ள உறுப்பினர்கள் 31–3–2005–ல் செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டியை 30–6–2006–க்குள் செலுத்தினால், நிலுவையிலுள்ள அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற உத்தரவை இன்றைக்கு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

அதுமட்டுமல்ல. வீட்டு வசதிச் சங்கங்கள் வசூலித்து வந்த அதிகபட்சத் தொகையான 17 சதவிகித வட்டி என்பதை மாற்றி, 11 சதவிகிதமாகக் குறைப்பதற்கும் ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு 114 கோடி ரூபாய் அளவிற்கு இதில் 1,84,000 பயனீட்டாளர்கள் பயனடைகின்றார்கள் என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழையெளிய மக்கள், கிராமிய வட்ட கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாக வாங்கிய கடனுக்கு இன்னும் பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். 31–3–2005–ல் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள தவணை தவறிய அசலை மட்டும் 30–6–2006–க்குள் செலுத்தினால், நிலுவையாக உள்ள வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்கின்ற அந்த உத்தரவை இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வட்டி, அபராத வட்டி, சேவைக் கட்டணம் என்ற வகையிலே தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற ஆணையைத் தந்திருக்கின்றார்கள். இதில் 68 கோடி ரூபாய் அளவிற்கு, 2,54,000 பயனீட்டாளர்கள் பயனடைகின்ற வகையிலே தள்ளுபடி செய்திட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் வரலாற்றில், இதுபோன்ற மிகப் பெரிய சலுகையினை இதுவரை வழங்கியது கிடையாது. தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகப் பெரிய சலுகைகளை வழங்கியதற்கு, இச்சலுகையினால் பயன்பெறும் 4,38,000 குடும்பங்களின் சார்பாகவும், வீட்டு வசதித் துறையின் சார்பாகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று சட்டமன்ற ஜனநாயகத்தைக் காவு கேட்கும் குடும்ப அரசியல் கூடாரத்தை தன் கூர்மதியால் வென்று காட்டிடும் வெற்றித் தலைவியே! 1980–லே நாடாளுமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்று எக்காளமிட்டவர்கள், பொதுக் கூட்டத்திலே அமைச்சர்களாகப் போகின்றவர்கள் என்று பட்டியலிட்டவர்கள், குருட்டுக் கோழி, தவிட்டிற்கு ஏங்கியது போல, சட்டமன்றத் தேர்தலிலே மண்ணைக் கவ்வினார்கள். அந்த வரலாற்றை மீண்டும்—திரும்ப அந்த மகத்தான வெற்றியைக் கைப்பற்ற வியூகம் அமைக்கும் சாதனைத் தலைவியே! எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விடும் தலைவர்களுக்கு மத்தியில் தமிழகத்தை எட்டாத உயரத்திற்கு இட்டுச் செல்ல 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் உழைக்கும் ஒப்பற்றத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) பயமே ஓடக் கற்றுக் கொடுக்கும், ஆனால் தைரியம் எண்ணற்ற எதிரிகளை வென்று விடும் என்கின்ற தாரக மந்திரத்தின் அஞ்சாத சிங்கமே! (மேசையைத் தட்டும் ஒலி) கடும் நெருக்கடிகளையும், சவாலையும் சந்தித்து, வெற்றி என்கின்ற இலக்கை எட்டிப் பிடிக்கும் இமாலய சிகரமாகிய மாண்புமிகு அம்மா அவர்கள் எனக்கு இந்த அரிய வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஏழையெளிய மக்களினுடைய தாயாகவும், தூய தொண்டனுக்குத் தலைவியாகவும், திக்கற்றவனுக்குத் தெய்வமாகவும், ஏற்றமிகு திட்டம் தீட்டுவதில் அன்னையாகவும், எங்களுக்கு மாதா, பிதா, குரு, தெய்வமாய் விளங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த மாமன்றத்திலே வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது பதிலுரையை வழங்குவதற்கான வாய்ப்பினை வழங்கியமைக்கு தங்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல நல்ல அரிய கருத்துகளை கூறியிருக்கின்றார்கள். அவர்களுடைய கருத்துகளையெல்லாம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு கவனித்து, தக்க நடவடிக்கைகளை எடுப்பார்கள். என்னுடைய பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்திகரமாக இருக்குமெனக் கருதுகின்றேன். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள்



தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. கு. பிச்சாண்டி:** தலைவர் அவர்களே,...

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். ஒன்றரை மணிக்கு Guillotine time. மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். உட்காருங்கள்.]

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 25–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகம்

**திரு. சி. சண்முகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.



**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.115,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

மறுப்போர் 'இல்லை' என்க. (ஆம்)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். (இல்லை)

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



பிற்பகல் 1–25

## (ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28– செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.14,38,46,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (இ) கோரிக்கை எண் 27—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை— செய்தி மற்றும் விளம்பரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 27— செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.



**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 32,07,21,000,–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஈ) கோரிக்கை எண் 47- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை@

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47– இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.33,96,84,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2554, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதியின் முக்கிய நகரமான வேலூரில் விளையாட்டு அரங்கம் அமைத்து, இளைஞர்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்க விளையாட்டுப் பயிற்சியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,96,84,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

@ கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கங்கள் 247 முதல் 295 வரை இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3687, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட அளவிலான விளையாட்டு அரங்குக்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு அதிகார மன்றத்திற்கு மானியங்கள் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,96,84,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4195, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இளைஞர்களிடையே விளையாட்டை ஊக்கப்படுத்தும் வகையில் வட்டங்கள்தோறும் விளையாட்டுப் பயிற்சி மையங்களை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,96,84,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4914, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் ஒரு விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,96,84,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5436, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள இளைஞர் நற்பணி மன்றங்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,96,84,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5977, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் நகரில் உள்ள மக்களின் தேவைக்காக விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை எண் 47–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,96,84,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6263, திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,96,84,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது guillotine நேரம். பேரவை விதி 185 (3)-ன்படி மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கென ஒதுக்கப்பட்ட கடைசி நாளான இன்று பிற்பகல் 1-30 மணிக்கு மீதமுள்ள அனைத்து மானியக் கோரிக்கைகளும் வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும். அதன்படி மீதமுள்ள மானியக் கோரிக்கையை வாக்கெடுப்பிற்கு விடுகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.



**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.33,96,84,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## 7. அறிவிப்புகள்–தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2005 (ஆ. இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



## 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (இ) விதிகள் 30, 130 மற்றும் 132–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2005) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு இன்று மாலை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 5–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 5–00

பிற்பகல் 5–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

[2005 ஏப்ரல் 12

## 8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்) 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2005), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இப்பொழுது பேசுகிறவர்கள் யார்? (குறுக்கீடுகள்) இடையிலே குறுக்கே புகுந்து கேட்டீர்களேயானால் எப்படி? காலையிலேயே கேட்டிருக்கலாம். இப்பொழுது இதில் பேசி முடியட்டும். (குறுக்கீடு) யார் பேசுபவர்கள் என்று இன்னும் list ஒன்றும் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) யார்? கணேசன், நீங்கள் பேசுகிறீர்களா? பாட்டாளி மக்கள் கட்சி, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே! (குறுக்கீடு) இப்போது ஆரம்பித்து விடுவோம். பிறகு கேட்டுக்கொள்ளலாம். (குறுக்கீடு) கேளுங்கள், கேளுங்கள்.

## 9. வீட்டு வசதித் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது காலையில் அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு உறுப்பினர் விளக்கம்

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1991–1996, அண்ணா தி.மு.க. ஆட்சியிலேதான் 1,000 கோடி ரூபாய் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன்பெற்று, தேவையில்லாத ஏரிக் கரைகளிளெல்லாம் வீடுகள் கட்டி, விற்கப்படாமல் இருக்கின்றன. வேண்டுமானால், வெள்ளை அறிக்கை வைக்கட்டும். வீடுகள் கட்டி விற்கப்படாமல் இருக்கின்ற அந்த ஆட்சியினுடைய நிலையை வெள்ளை அறிக்கையாக வைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். திராவிட





முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்ட அந்த வீடுகளெல்லாம் ரூ.78.5 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2005—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதிலே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே யார் பேசுகிறார்கள்? (சிரிப்பு) யாருமே கையைத் தூக்க மாட்டேன் என்கிறார்களே? Bill-லே பேசுவது, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே. (குறுக்கீடு) Appropriation Bill–லே. அங்கேயிருந்துதான் யார் என்பதே தெரியவில்லை.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் அந்த Appropriation Bill–ஐ அப்படிப் பண்ணிவிட்டீர்களே! இப்பொழுதுதான் Bill–ஐக் கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார், கணேசன் பேசுகிறீர்களா? பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக. (குறுக்கீடுகள்) எஸ்.ஆர்.பி. பேசுகிறீர்களா? சரி.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மானியங்களுக்கான கோரிக்கைகள் இந்த மாமன்றத்தால் ஏற்கப்பட்டு, அதற்கான நிதியைப் பெறுவதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கும் நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றும் நிலைக்கு வந்திருக்கிறோம். அமைச்சரவை கூடி எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் மானியக் கோரிக்கைகளை அவைமுன் வைப்பதற்கும், நிதி ஒதுக்க மசோதாவைத் தாக்கல் செய்வதற்கும் ஆளுநர் அனுமதி அளித்திருக்கிறார். எந்த ஒரு திட்டத்தையும் தனிப்பட்ட அமைச்சர் ஒருவர் அறிவித்தால் அது அரசமைப்புச் சட்ட விதிகளுக்குப் புறம்பானதாக அமைந்துவிடும். அந்நிலையில் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் விளக்கம் கேட்டு, நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஆளுநருக்கே வழங்கப்பட்டிருக்கிறது. நிதி அமைச்சர் தாக்கல் செய்த Budget–ல் புதிய வரிகள் எதுவும் இல்லையென்று தெரிவிக்கப்பட்டது. அதேபோன்று, இறுதிப் பற்றாக்குறை ரூ.260.41 கோடியாக மட்டுமே இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. பல்வேறு மானியங்களுக்கும் கோரியபடியே தொகைகளை வழங்குவதற்கும் இந்த மன்றம் தனது

இசைவைத் தெரிவித்திருக்கிறது. இறுதியாக நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்ற இருக்கும் இந்த நிலையிலாவது, அரசாங்கம் சில விளக்கங்களை அளிக்க வேண்டும்.

இதுவரை சட்டமன்றத்தில் பல்வேறு துறைகள் தொடர்புடைய அறிவிப்புகளும் முதலமைச்சரால் 110–வது விதியின்கீழ் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பொதுப் பிரச்சினையின்மீது அமைச்சர் ஒருவர் அறிக்கை அளிக்கலாம் என்பதற்காகவே அந்த விதிமுறை உருவாக்கப்பட்டது. அதேபோன்று அமைச்சரல்லாத உறுப்பினர் ஒருவர் அத்தகைய விளக்கத்தை அளிப்பதற்கு விதி 109–ல் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தன்னிலை விளக்கம் அளிக்கப்படவேண்டிய, தவிர்க்கமுடியாத நிலையில்கூட அந்த விதியைப் பயன்படுத்தும் வாய்ப்பு என்னைப்போன்ற உறுப்பினருக்குக் கிட்டாமலேயே போய் இருக்கிறது. இருப்பினும், முதலமைச்சர் 110–வது விதியைப் பயன்படுத்தி, தொடர்ந்து பல விளக்க அறிக்கைகளையும், அறிவிப்புகளையும் இந்த அவையில் வெளியிட்டிருக்கின்றார்கள். அத்தகைய அறிவிப்புகளில் பல, அரசின் நிதி ஒதுக்கத்தைச் சார்ந்தவையாக இருக்கின்றன. பெரும்பாலான அறிவிப்புகளை முதலமைச்சரே தனிப்பட்ட முறையில், தன் விருப்பப்படி வெளியிடப்படுவதாக தெரிவித்திருக்கிறார். அந்த அறிவிப்புகளில் அடங்கியுள்ள திட்டங்களுக்கு எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதும், அந்த நிதி எவ்வாறு திரட்டப்படும் என்பதும் தெரிவிக்கப்படவில்லை. அவற்றையெல்லாம் தற்போது சமர்ப்பித்துள்ள மானியக் கோரிக்கைகளுடன் சேர்த்துக் கணக்கிட்டால், எவ்வளவு செலவு ஏற்படும் என்பதையும், இறுதிப் பற்றாக்குறை எந்த அளவிற்கு உயரும் என்பதையும் தெரிவிக்க வேண்டும். அத்துடன் புதிய வரி விதிப்புகள் விதிக்கப்படாமல் எவ்வாறு இந்தச் செலவினை ஈடுகட்டப் போகிறீர்கள் என்பதையும் விளக்க வேண்டும். ஏனெனில், எந்த விளக்கத்தையும் கேட்டுப் பெறுவதற்கோ, விவாதம் நடப்பதற்கோ வாய்ப்பளிக்கப்படாத வகையில் முதலமைச்சர் அவர்களால் இந்த அறிவிப்புகள் 110–வது விதியின்கீழ் வெளியிடப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 5–0.5*

பல ஊராட்சி மன்றங்கள் மின்சாரக் கட்டணத்தைக்கூட செலுத்த முடியாத நிலையில் நிதி நெருக்கடியில் சிக்கியிருக்கின்றன. மாநில அரசு வழங்க வேண்டிய மானியத்தைக்கூட வழங்குவதில்லை என்று புகார் எழுந்திருக்கிறது. ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டிய மானியத்தை அரசாங்கமே நேரடியாக மின் வாரியத்திற்குச் செலுத்தியிருக்கிறது.



அதாவது, 2004–2005–ல் 398.25 கோடி ரூபாயோடு 198.29 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்று முதலமைச்சரே கூறியிருக்கிறார். சில ஊராட்சிகள் மின் கட்டண பாக்கியைச் செலுத்த முடியாத நிலையில், தனிப்பட்ட முறையில் தலைவர்களே அதற்குப் பொறுப்பேற்க வேண்டுமென்று சுற்றறிக்கையும் அனுப்பப்பட்டுள்ளது. எப்படியேனும் கட்டணத்தை வசூலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவ்வாறு அனுப்பப்பட்டது என்று மின் துறை அமைச்சரும் இங்கே கூறியிருக்கிறார். இவ்வாறு நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள உள்ளாட்சி அமைப்புகள் தங்களுடைய ஊழியர்களுக்கு அதிகமான ஊதியம் வழங்க வேண்டுமென்று முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். அப்படியானால் அந்த உயர்த்தப்பட்ட ஊதியத்திற்கான தொகையை அரசாங்கமே ஒரு சிறப்பு நிதி உதவியாக வழங்குவதற்கு முடிவு செய்திருக்கிறதா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளின் நிலை கருதி அவர்களுக்கு இலவசமாகவே மின்சாரம் வழங்குவது என்று முந்தைய அரசால் முடிவு செய்யப்பட்டது. தற்போது மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அமைக்கப்பட்டதால இலவச மின்சாரம் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. எனினும் மின்சாரத்தை இலவசம் என்று அறிவிக்காமல், அதற்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய கட்டணம் முழுவதையும் மின் வாரியத்திற்கு அரசாங்கமே நேரடியாகச் செலுத்துவதன்மூலம் அந்தச் சிக்கலைத் தவிர்த்திருக்கிறது. அதேபோன்று மின் கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலையில் இருக்கும் உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டிய கட்டணத்தை அரசாங்கமே நேரடியாக வாரியத்திற்குச் செலுத்தியிருக்கிறது. அதற்குப் பதிலாக மின் கட்டணத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே ஒரு குடிசைக்கு ஒரு மின் விளக்கு என்ற திட்டத்தை எம்.ஜி.ஆர். அறிவித்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு பல வீடுகளும் இலவச மின்சாரச் சலுகையைப் பெற்று வருகின்றன. இந்நிலையில் ஊராட்சிகள் பயன்படுத்தும் மின்சாரத்துக்கு மட்டும் கட்டணம் வசூலிப்பது நியாயத்திற்குப் புறம்பானதாகவே கருதப்படும். எனவே உள்ளாட்சிகளுக்கு இலவச மின்சாரமே வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

அரசுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியர்களை நியமிக்கும்போது அவர்களுக்கு முழுமையான ஊதியத்தை வழங்குவதில்லை. தொகுப்பு ஊதியம் என்ற பெயரில், வேறு எந்தப் பலன்களும் இல்லாமல் மிகவும் குறைவான ஊதியம்தான் அவர்களுக்கு வழங்கப்படும் என்றும், 5 ஆண்டுகளுக்கு இந்த நிலையே நீடிக்கும்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 ஏப்ரல் 12

என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில்கூட தற்காலிகப் பணியாளர்கள் என்ற அடிப்படையில், மிகவும் குறைவான கூலிக்குத்தான் பணியாளர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் என்பதும், சம வேலைக்கு சம ஊதியம் என்பதும் அவர்களைப் பொறுத்த வரையில் கானல் நீராகத்தான் காட்சியளிக்கிறது.

ஹூண்டாய் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் இங்கே தொழிலைத் தொடங்குவதற்கு மக்களின் வரிப் பணத்தில் ஏராளமாகவும், தாராளமாகவும் செலவிடப்படுகிறது. தொழிற்சாலைக்குத் தேவையான நிலம், தண்ணீர், மின்சாரம், சாலை வசதிகள், குடியிருப்பு வசதிகள் உள்ளிட்ட எல்லா வகையான உள் கட்டமைப்பு வசதிகளையும் மக்களின் வரிப் பணத்தில் இந்த அரசாங்கமே செய்து கொடுக்கிறது. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர் தொடர்பான சட்டங்களிலிருந்து அத்தகைய பன்னாட்டு நிறுவனங்களுக்கு விலக்கும் அளிக்கப்படுகிறது. வரிச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. வேலைவாய்ப்புகளைப் பொறுத்த வரையில், மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்கள்தான் நியமிக்கப்படுகிறார்கள். அதிலும் பெரும்பாலான ஊழியர்கள் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்குச் சொந்தமான நாடுகளிலிருந்தே அழைத்து வரப்படுகிறார்கள். ஊதியம் வழங்குவதில்கூட, ஒரே வேலைக்கு இரண்டு வகையாக நிர்ணயம் செய்து வழங்கப்படுகிறது. அமெரிக்கா மற்றும் அரபு நாடுகளில் நம்முடைய இளைஞர்கள் நடத்தப்படுவதுபோலவே, இங்குள்ள நிறுவனங்களிலும் நடத்தப்படுகிறார்கள். அன்னிய நாட்டிலிருந்து வந்திருக்கிற ஊழியர்களுக்குத் தனியாக உணவகம், பேருந்து மற்றும் குடியிருப்பு போன்ற வசதிகள் செய்து தரப்படுவதாகவும், நம்முடைய ஊழியர்கள் எல்லா வகையிலும் ஒதுக்கி வைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இது நம்முடைய அரசமைப்புச் சட்ட விதிமுறைகளுக்கு எதிரானது. பெரும்பாலான வேலைகள் ஒப்பந்தம் மற்றும் உள் ஒப்பந்தங்கள்மூலம் செய்யப்படுவதால், அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு அன்னிய நிறுவனங்கள் எந்த வகையிலும் பொறுப்பேற்றுக்கொள்வதில்லை. இந்நிலையில் தற்போது பெரும் முதலீட்டில் அமையவிருக்கும் NOKIA போன்ற நிறுவனங்களில் நம்முடைய சட்டங்கள் அமல்படுத்தப்படுவதையும், சொந்த நாட்டிலேயே நம்முடைய மக்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகவும் அன்னியர்களாகவும் நடத்தப்படுவதை மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் உத்தரவாதம் அளிக்குமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். NOKIA நிறுவனத்திற்கு தமிழக அரசு வழங்கியிருக்கும்



2005 ஏப்ரல் 12] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

சிறப்புச் சலுகைகள் யாவை என்பதையும், மத்திய அரசு வழங்க வேண்டும் என்று கோரி தமிழக அரசு பரிந்துரை செய்திருக்கும் கடிதத்தில் கேட்கப்பட்டிருக்கும் சலுகைகள் யாவை என்பதையும் அவையின்முன் வைக்குமாறு நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-10

தென்னாப்பிரிக்காவில் நிலைத்துவிட்ட இன ஒதுக்கக் கொள்கையை முறியடித்து, அன்னியர் சுரண்டலிலிருந்தும், ஆதிக்கத்திலிருந்தும் கறுப்பு இன மக்களை விடுதலை செய்வதற்காக அளவு கடந்த விலையை அந்த மக்கள் கொடுத்திருக்கிறார்கள். நெல்சன் மண்டேலாவைப் போன்றோ, மகாத்மா காந்தியடிகளைப்போன்றோ மகத்தான தியாகங்களைப் புரிந்து, மக்களுக்கு விடுதலை தேடித் தரும் மகான்கள் எளிதாகத் தோன்றிவிட மாட்டார்கள். கடைத் தேங்காயை எடுத்து, வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் வேலையை மக்கள் நலன் நாடும் எந்த அரசும் செய்ய முடியாது. இங்கே அன்னிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக, பன்னாட்டு நிறுவனங்களுக்கு அதிகமான ஊக்குவிப்புகளை வழங்கி வருகிறது. அதே நேரத்தில், உள்நாட்டிலுள்ள தொழில்களையும் பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன; தமிழகம் முழுவதும் மூடப்பட்டிருக்கின்றன; சென்னையிலே மூடப்பட்டிருக்கின்றன; கோவையிலே மூடப்பட்டிருக்கின்றன; கோவையிலே பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன; பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன; நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கின்றன; ஜவுளி ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன; எஞ்சினியரிங் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பிழந்து, தெருவிலே அலைந்து கொண்டிருக்கிறார்கள். பலரும் கூலி வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை நம்மால் இப்போது மாற்ற முடியுமா என்றால், முன்பு மாற்றியிருக்கலாம், ஒரு சில சலுகைகளைக் கொடுத்து. இன்று அந்த நிலை தாண்டிவிட்டது.

அதனால் நான் சொல்வது என்னவென்றால், இருக்கின்ற தொழில் கொள்கை—எங்களுடைய மாவட்டத்தில் நல்ல முறையிலே தொழில் நடந்துகொண்டிருக்கின்றது என்று சொன்னால், திருப்பூரிலே இருக்கிற பனியன் தொழில். அந்தத் தொழிலின்மூலமாக 5,000 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி ஈட்டப்படுகிறது. உள்நாட்டு வர்த்தகத்தில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு உள்நாட்டு வர்த்தகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றையதினம் நன்றாக நடந்து கொண்டிருக்கிற

தொழில்களுள் அந்தத் தொழில் ஒரு முக்கியமான தொழிலாகக் கருதப்படுகிறது. அந்தத் தொழிலைப் பொறுத்தவரையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே மத்தியிலே போட்ட ஒரு சட்டத்தின் காரணமாக, C-Form பிரச்சினை வந்து, ஒரு பெரிய பிரச்சினையாக அந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. அதை உடனடியாக நீங்கள் திரும்பப் பெற வேண்டும்; எங்களுக்கு அந்தத் தொகையைத் திரும்பக் கொடுக்க வேண்டுமென்று பல்வேறு கட்டங்களிலே அவர்கள் இங்கே மனு கொடுத்திருக்கிறார்கள். இன்றையதினம் அதை ஏற்றுக்கொண்டு, சென்ற ஆண்டு பட்ஜெட் பேச்சின்போது, 11-2-2004 அன்று தமிழ்நாடு அரசாங்கம் 9 சதவீதம் விதிக்கப்பட்ட வரியை, அதைத் திரும்பக் கொடுக்கிறோம், திருப்பிக் கொடுத்துவிடுகிறோம் என்று சென்ற ஆண்டு பட்ஜெட் உரையிலேயே சொல்லப்பட்டது என்றாலும், அதற்கான ஆணை 4-4-2005 ஆம் தேதியிலிருந்துதான் போட்டிருக்கிறார்கள். அந்தத் தேதியிலிருந்துதான் அது அமலுக்கு வரும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதை, அந்த 13-5-2002 ஆம் தேதியிலிருந்தே அமலுக்கு வரும்படி அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அப்போதுதான் அது பயனுள்ளதாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல விவசாயத்தைப் பொறுத்த வரையில், கரும்புக்கு விலை ஆயிரம் ரூபாய்—டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்—என்று அறிவித்தார்கள். அது இன்று வரை கிடைக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், சில பகுதிகளிலே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு, அங்கேதான் கரும்பு தர வேண்டுமென்று விவசாயிகளைக் கட்டாயப்படுத்துகிறார்கள். Registered என்றால் பரவாயில்லை. ஏற்கெனவே அங்கேதான் பதிவு செய்து, கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கே கொடுப்போம் என்று அவர்கள் பதிவு செய்திருந்தால், அவர்களுக்குக் கொடுப்பதிலே தவறு இல்லை. ஏற்கெனவே ஆனால், அப்படி register ஆகாத, பதிவு செய்யாத விவசாயிகளைக்கூட, அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கே கரும்பைக் கொடுக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள் என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும். பாசன வசதிக்கு ஊர்ஜிதம் அளிப்பீர்களேயானால், வேளாண்மை நிச்சயமாக மேலும் உயரும். எங்களுடைய பகுதியைப்





பொறுத்தவரையில்—நான் ஏற்கெனவே இதைப் பேசியிருக்கிறேன்—நொய்யல், அது ஒரு ஜீவனுள்ள நதியாக இருந்து, இன்றைக்கு அது ஜீவனில்லாத நதியாக இருக்கிறது. மீண்டும் அதை ஜீவனுள்ள நதியாக மாற்றியமைக்க வேண்டும். அங்கே தூர் வாரி, தடுப்பணைகள் கட்டுவீர்களேயானால், நிச்சயமாக அது ஜீவனுள்ள நதியாக மாறும். அந்தப் பகுதியிலே தடுப்பணைகள் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, அந்தப் பகுதியிலே வைதேகி நீர்வீழ்ச்சி என்று ஒரு நீர்வீழ்ச்சி இருக்கிறது. அந்த நீர்வீழ்ச்சியைச் சுற்றுலாத் தலமாக மாற்றியமைக்க வேண்டும். ஏற்கெனவே, கோவைக் குற்றாலம் ஒரு சுற்றுலாத் தலமாக இருக்கிறது. அங்கே நிறைய சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல, இந்த வைதேகி அருவியையும் மாற்றியமைக்க முடியும். அங்கே அதற்கு அருகேவரை இன்றையதினம் சாலை வசதி இருக்கிறது. நல்ல சாலை வசதி இருக்கிறது. இன்னும் கொஞ்சம் தூரம் சாலை வசதி செய்து தர வேண்டும். சாலை வசதி செய்து கொடுத்தால், அந்த நீர்வீழ்ச்சியைச் சுற்றுலாத் தலமாக மாற்றியமைத்தால், நிச்சயமாக ஏராளமான சுற்றுலாப் பயணிகளை அது கவரும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, இந்த ஆண்டு சாலைகளுக்கு ஏராளமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும்கூட, இன்றையதினம் இன்னும் பல சாலைகள் மோசமான நிலையிலே இருக்கின்றன. மோசமான நிலையிலே இருக்கிற சாலைகளைப் போட்டுத் தர வேண்டும். எங்கள் பகுதியிலே இருக்கிற சாலைகளையும் போட்டுத்தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதைப் பொறுத்தவரையில், பாரபட்சமின்றி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். 2 இலட்சம் பட்டாக்கள், அதற்கு மேலும் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். மிகுந்த மகிழ்ச்சி. ஆனால், அவற்றைப் பாரபட்சம் இல்லாமல் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், காலையிலேதான் அமைச்சர் இங்கே பதிலளித்தார். இன்றையதினம் பல்வேறு பகுதிகளிலே, வீட்டு வசதி வாரியங்களிலே பிரச்சினைகள்

இருக்கின்றன. கோவையிலே எடுத்துக்கொண்டால், சிங்காநல்லூர், கணபதி, காந்திபுரம் போன்ற பகுதிகளிலே பிரச்சினை இருக்கின்றது. குறிப்பாக, கணபதி பகுதியிலே, கணபதி மாநகர் என்று இருக்கிறது. அங்கே 1,500 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த 1,500 வீடுகளிலும் குடிபோய் இருக்கிறார்கள். கடந்த 11 ஆண்டு காலமாக அங்கே குடியிருந்து வருகிறார்கள். 11 ஆண்டு காலமாகக் குடியிருந்து வருகிற அவர்களுக்கு, 5 ஆண்டு காலத்தில் கிரயப் பத்திரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இன்று வரை அவர்களுக்குக் கிரயப் பத்திரம் கொடுக்கவில்லை. ஏனென்று கேட்டால், அதற்கு முன்பு சால்ஜாப்பு சொன்னார்கள். இப்போது சொல்கிறார்கள், நிலவுடைமையாளர்கள் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது உண்மையாக இருந்தால், யாருக்குமே கொடுத்திருக்க முடியாது. அது காரணம் அல்ல. உண்மையாக இருந்தால், அங்கே ஒருவருக்குக் கொடுத்திருக்கிறார்கள், மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லை. என்ன காரணம் என்று கேட்டால், அவர்கள் மிக அதிகமாக விலை கேட்கிறார்கள். அங்கே வசிப்பவர்கள்தான் சொல்கிறார்கள். எவ்வளவு அதிகமான விலை அவர்கள் கேட்டிருக்கிறார்களோ, அந்த விலையைப் போட்டு எங்களுக்குக் கொடுங்கள், நாங்கள் வாங்கிக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். என்றாலும், அவர்களுக்கு இன்றையதினம் வரை கிரயப் பத்திரம் கொடுக்கப்படவில்லை. ஆனால், ஒரே ஒருவருக்கு மட்டும் கிரயப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. 1,500 பேரிலே ஒரே ஒருவருக்கு கிரயப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கும் கிரயப் பத்திரம் வழங்க வேண்டும். பெயர் வேண்டுமானால் நான் சொல்கிறேன், சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

*பிற்பகல் 5–15*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஜி. கண்மணி, ஏ–16, கணபதி, அவருக்கு அந்தக் கிரயப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கிரயப் பத்திரம், அந்த ஆணை அத்தனையும் இதில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் அதைக் கொடுத்து விடலாம் அல்லது சபாநாயகர் அவர்களிடம் நான் கொடுத்து விடுகின்றேன். கிரயப் பத்திரம் அனைவருக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மணியகாரம்பாளையத்திலே, தொழிலாளர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் என்று ஏற்பட்டு, முன்பே பல காலமாக இயங்கி



வருகிறது. 1980 ஆம் ஆண்டு வாக்கில் அவர்கள் நிலம் வாங்கினார்கள். அந்த நிலத்தை வீட்டு வசதி வாரியம் ஆர்ஜிதம் செய்தது. அதை எதிர்த்து வழக்குப் போட்டார்கள். பிறகு அவர்கள் கொடுத்து விட்டார்கள். கொடுத்து விட்டாலும்கூட, அதற்குரிய தொகையைச் செலுத்த வேண்டும். மேம்பாட்டுக்காகத் தொகை செலுத்த வேண்டுமென்று கேட்டார்கள். மேம்பாடே செய்யாமல், மேம்பாட்டுக்காகத் தொகை கேட்பது நியாயமல்ல என்று சொன்னார்கள். அந்த நேரத்திலே, 1 இலட்சம் ரூபாய் கடைசியாகக் கட்டினால் கொடுத்து விடுவோம் என்று சொன்னார்கள். அந்த 1 இலட்சம் ரூபாய் கட்டப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகின்றன. இன்று வரை அவர்களுக்குத் தடையின்மைச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. எனவே, அவர்களுக்கு வீட்டு வசதி வாரியம் தடையின்மைச் சான்றிதழ் வழங்குவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி பகுதியில், நாயக்கன்பாளையம் கிராமத்தில் ஒரு பென்சில் தொழிற்சாலை வந்திருக்கிறது. உமா பென்சில் தொழிற்சாலை என்ற ஒரு பென்சில் தொழிற்சாலை வந்திருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலை வந்ததற்குப் பின்னாலே, மழை பெய்வது இல்லை. உடல்நலத்திற்குக் கேடு விளைவிக்கின்றது. அங்கே வருகின்ற புகை கடுமையான புகையாக இருக்கின்றது என்று சொல்லி, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் பல வகைகளிலே அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள், உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இப்படிப் பலவிதமான போராட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், அதை முழுவதுமாக—சுற்றுப்புறச் சூழல்—மாசு கட்டுப்பாடு வாரியம் மூலமாக நீங்கள் அதை முழுவதுமாக பரிசோதித்து அது சரி தானா, சரி இல்லை என்றால் அவர்களுக்குச் சொல்லலாம். தைரியமாக இருங்கள், நிச்சயமாக மழை பெய்யாததற்குக் காரணம் இதுவல்ல, வேறு காரணம் என்று. ஏனென்றால், சுற்று வட்டாரத்தில் 10 கிலோ மீட்டருக்கு அடுத்த பகுதியிலே மழை பெய்கிறது. ஆனால், அங்கே மழை பெய்யவில்லை என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. அதைப் போக்க வேண்டும், அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஊர்ப்புற நூலகர்களுக்கு 7 ஆண்டுக் காலமாக சம்பளம் 1,500 ரூபாய் தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

அவர்களுக்கு இதுவரை அதை உயர்த்திக் கொடுக்கவேயில்லை. இப்போது புதியதாக எடுக்கப்படும் நூலகர்களுக்கும் இதே ஊதியம்தான் என்று சொல்கிறார்கள். உயர் நீதிமன்றத்தில் அந்த ஊதியத்தை உயர்த்திக் கொடுக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அதை அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மலைப் பகுதியிலே, குறிப்பாக நீலகிரியிலேயும், வேறு பகுதியிலேயும், 21 அடிக்கு மேலே கட்டடம் கட்டக்கூடாது என்ற ஆணை நீண்ட காலமாக இருக்கிறது. சட்டமாகவே அதை நாம் இயற்றி இருக்கிறோம். அந்தச் சட்டத்தை இயற்றியதனுடைய பலன் என்னவென்று சொன்னால், கீழேயிருந்து 21 அடிக்கு மேலே கட்டடம் கட்டினால், அங்கே தொழிற்சாலையே நடத்த முடியாது. குறிப்பாகத் தேயிலைத் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளை நடத்த முடியாது. சிம்னியின் உயரம் எல்லாம் அந்த அளவிற்குப் போய் விடுகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டடங்களுக்குக்கூட அதை வலியுறுத்தி வருகிறார்கள். ஒன்று, அந்த விதியைத் தளர்த்தலாம். சட்டத்தையே தளர்த்தலாம், விதிகளைத் தளர்த்தலாம், தளர்த்த முடியும் என்று நான் நம்புகிறேன். ஒரு வேளை தளர்த்த முடியாவிட்டாலும்கூட, ஏற்கெனவே கட்டிய கட்டடங்களுக்கு விதிவிலக்கு அளிக்கலாம். சென்னையிலே, மற்ற ஊர்களிலே, குறைந்த அளவு அதற்கான அபராதம் போட்டு, அதை வரன்முறைப்படுத்தியதைப்போல, இதையும் வரன்முறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, கூடலூர் பகுதியிலே—நீலகிரி, கூடலூர் பகுதியிலே, நீண்ட காலமாக இருக்கின்ற பிரச்சினை, செக்ஷன் 17, நீலம்பூர் ஜென்மி நிலங்கள், நீலம்பூர் கோவிலகத்திற்குச் சொந்தமான நிலங்கள் அரசுடைமையாக்கப்பட்டு, தமிழக அரசாங்கம் எடுத்துக்கொண்டது, நீண்ட காலமாக, 1969 ஆம் ஆண்டு எடுத்துக்கொண்டது. அங்கே பலரும் குடியிருக்கிறார்கள். பலரும் அங்கே வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அங்கே வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலம் நீலம்பூர் ஜென்மிக்குச் சொந்தமான நிலமாக இருந்தது. அந்த நிலத்தை அரசு எடுத்துக்கொண்டதற்குப் பின்னால், அதிலே இருந்த குத்தகைதாரர்கள் எல்லாம் 30 ஆண்டுகளாக, 40 ஆண்டுகளாக, 50 ஆண்டுகளாக அவர்களுக்குப் பணம் செலுத்தி வந்திருக்கிறார்கள். ரசீதுகூட பார்த்தீர்கள் என்றால், எல்லாம் மலையாளத்தில் இருக்கும், தமிழிலே அல்ல, நீலம்பூர் என்று கேரளாவிலே, மலையாளத்தில் இருக்கும். அவர்களை எல்லாம் நீண்ட





காலமாக வெளியேற்றுகின்ற பணி அவ்வப்போது நடைபெற்று நின்று விடுகின்றது. இப்போது மீண்டும் வெளியேற்ற முனைந்து கொண்டிருக்கிறார்கள். அங்கேயிருக்கிற அந்த வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்தி நியாயமாக அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் பட்டா வழங்க வேண்டுமென்று எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலேயிருந்து, நாங்கள் போராடி, எம்.ஜி.ஆர் அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால், இன்று வரை இன்னும் பட்டா அளிக்காமல் பலர் இருக்கிறார்கள். அந்த வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்தி, அனைவருக்கும் பட்டா வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்களும், நிதி உதவிகளும் ஒழுங்காக வந்து சேராததால், உள்ளாட்சி நிர்வாகங்களைச் செம்மையாக நடத்த முடியாத அளவிற்கு நிதி நெருக்கடி நிலவி வருகிறது. துப்புரவு, சாலைப் பராமரிப்பு, குடிதண்ணீர் வழங்குதல் போன்ற அத்தியாவசியப் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கே ஒழுங்காக ஊதியம் கொடுக்க முடியாத நிலையில் பல உள்ளாட்சி அமைப்புகள் மின் கட்டணம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் அங்கு பணியாற்றுகிறவர்களுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று உத்தரவு மட்டும் போட்டு விட்டால், ஊழியர்களுக்கு உயர்வு வந்துவிடாது. உயர்த்தப்பட்ட ஊதியத்தை உயர்த்தி வழங்கும் சக்தியை இந்த அரசுதான் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கவேண்டும். ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்த ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கி, அரசே இப்பொழுது நேரடியாக ஊதியம் வழங்கி வருகிறது. அதேபோன்று, இந்த ஊழியர்களுக்கும் அரசாங்கமே நேரடியாக ஊதியம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 5–20*

அதேபோன்று, விவசாயத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தி அறிவித்தால் மட்டும், அவர்களுக்கு அந்த ஊதியம் தானாகக் கிடைத்து விடாது. உயர்த்தப்பட்ட அந்த ஊதியத்தை வழங்குவதற்கான உத்தரவாதத்தை இந்த அரசுதான் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே பல்வேறு தொழில்களுக்கு குறைந்தபட்சம் ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தாலும், நடைமுறையில் பல இடங்களில் அத்தகைய ஊதியம் வழங்கப்படாத நிலைதான் நிலவி வருகிறது. பல தொழிற்சாலைகள் சட்ட விரோதமாகக் கதவடைப்புச்

செய்திருக்கின்றன. ஊதியம் வழங்கல், பணி நிரந்தரம் போன்றவை சம்பந்தமாக இயற்றப்பட்ட சட்டங்களை பெரிய, பெரிய தொழில் நிறுவனங்களே மதிப்பதில்லை. அத்தகைய நிறுவனங்களுக்கு எதிராக அரசு உறுதியான நடவடிக்கைகள் எதையும் எடுக்க முடியவில்லை. காரணம், அரசாங்கமே அந்தச் சட்டங்களை அமல்படுத்துவதில் அக்கறை காட்டுவதில்லை.

ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்குப் பணி நீட்டிப்பு வழங்குவதில் இந்த அரசு என்ன கொள்கையைப் பின்பற்றுகிறது என்பது தெரியவேண்டும். யாருக்கும் பணி நீட்டிப்பு இல்லை என்று ஒரு சட்டத்தில் கூறப்பட்டது. ஆயினும், விருப்பு, வெறுப்பு அடிப்படையில் ஒரு சிலருக்கு வரம்பு மீறி, பணி நீட்டிப்பு வழங்கப்படுகிறது. அதனால், பதவி உயர்வினை எதிர்பார்த்து பல ஆண்டுகளாகக் காத்திருக்கும் ஊழியர்கள் பலரும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் மத்தியில் விரக்தியும், வேதனையும் ஏற்படுகிறது. ஓய்வு பெற்றுச் சென்றவர்களைக்கூட திரும்பவும் அழைத்து வந்து உயர்ந்த பதவிகளை இந்த அரசு வழங்கியிருக்கிறது. இதேபோன்று, பல்வேறு வாரியங்களுக்கும் தலைவர்களை நியமிப்பது, அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு உறுப்பினர்களை நியமிப்பதில் இந்த அரசு கடைப்பிடிக்கும் கோட்பாடு என்ன என்பதை மக்களுக்கு விளக்க வேண்டும். மக்களவைத் தேர்தலில் தோற்றுப் போன வேட்பாளர்கள் வாரியத் தலைவர்களாக நியமிக்கப்படுகிறார்கள். மக்கள் அளித்த தீர்ப்புக்கு இந்த அரசு அளிக்கும் மரியாதை இதுதான். இந்த அரசு பதவியில் நீடிப்பதே ஜனநாயக மரபுக்கு எதிரானதாக அமைந்திருக்கிறது. இந்நிலையில்....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களின்போது தோற்றுப் போன பல வேட்பாளர்களுக்குக் காங்கிரஸ் கட்சி மத்திய அமைச்சர் பதவி கொடுத்திருக்கிறதே, அப்படியானால் அவர்களும் மக்கள் தீர்ப்பை மதிக்கவில்லை என்றுதானே அர்த்தம்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆக, இங்கு பெரும் பணிகளில் குறிப்பிடுகின்ற யாராக இருந்தாலும், நீண்ட நெடுங்காலமாக பொது வாழ்க்கையிலிருந்து, மத்தியிலே அமைச்சர்களாக (சிரிப்பு) மத்தியிலே அமைச்சர்களாக ...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. எஸ்.ஆர்.பி., இன்னும் எவ்வளவு நேரமாகும்? (குறுக்கீடு) சரி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது, வெளிநாட்டு நிறுவனங்கள் அன்னிய முதலீட்டைக் கொண்டு வந்து இங்கே தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் துவங்க முன்வரும்போது, அவர்களுக்கு அளவிற்கு அதிகமான சலுகைகளை இந்த அரசு வழங்குகிறது என்பதை ஒரு குற்றச்சாட்டைப்போல் சொன்னார். மத்திய அரசு அன்னிய முதலீட்டிற்கென சில வழிமுறைகளை வகுத்திருக்கிறது. அந்த வழிமுறைகளுக்கு உட்பட்டுத்தான்—நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் சலுகைகளைத் தமிழக அரசு வழங்கி வருகிறது.

அதுமட்டுமல்லாமல், அன்னிய முதலீட்டை ஈர்க்கவேண்டும், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் மாநிலங்களில் வந்து தொழிற்சாலைகளைத் துவங்கவேண்டும் என்று மாநிலங்களுக்கிடையே கடுமையான போட்டி நிலவுகிறது. தமிழ்நாட்டிற்குப் போட்டி எங்கிருந்து வருகிறது? அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா அதைத் தவிர மகாராஷ்டிரா, ஹரியானா, இங்கெல்லாம் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சிகள்தான் நடைபெறுகின்றன. யாராவது ஒரு வெளிநாட்டுத் தொழில் நிறுவனம் தமிழ்நாட்டிற்கு வரவேண்டுமென்று விருப்பம் தெரிவித்தால், ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா, ஹரியானா, இந்த மாநில அரசுகள் எல்லாம் தமிழ்நாட்டில் எந்தச் சலுகைகள் கொடுப்பார்களோ, அதைவிட அதிகமாக உங்களுக்குத் தருகிறோம் என்று சொல்லி, கூவிக் கூவி அழைக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, இந்த அரசைப் பொறுத்தவரை, ஒரு அன்னிய நாட்டு நிறுவனத்திற்கு இங்கே தொழில் தொடங்க நிலம் வழங்குகின்றபோது இலவசமாக வழங்குவதில்லை. சில சமயங்களில் market rate–ஐ விடக் கொஞ்சம் குறைவாக ஒரு சலுகை விலையில் கொடுக்கிறோமே தவிர, இலவசமாகக் கொடுப்பதில்லை. ஆனால், பக்கத்திலேயே இருக்கிற காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகின்ற ஆந்திர மாநிலத்தில், எல்லாவற்றையும் இலவசமாகத் தருகிறோம், நிலத்தை இலவசமாகத் தருகிறோம், மின்சாரத்தை இலவசமாகத் தருகிறோம், இங்கே வாருங்கள் என்று கூவிக் கூவி அழைக்கிறார்களே, அதைப் பற்றி திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் என்ன நினைக்கிறார்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அங்கே வேலையிலே சம வாய்ப்பு இருக்கவேண்டும். சம வேலைக்கு

சம ஊதியம் என்பது இருக்கவேண்டும். அது எல்லாம் இல்லை. அதுமட்டுமல்ல. பலவிதமான சலுகைகளை அறிவித்திருக்கிறீர்கள். அந்தச் சலுகைகளை நம்முடைய தொழில் முனைவோர்களுக்குக் கொடுத்தால், அவர்களே நல்ல முறையிலே நடத்துவார்கள் என்றுதான் நான் சொல்ல வருகிறேன். அதேபோல, கோயில்களில் எப்படி வழிபாடுகள் நடத்தப்பட...

பிற்பகல் 5–25

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சலுகைகள் எல்லாம் தர முடியாது என்று மறுத்து, இந்தத் தொழிற்சாலை, உதாரணத்திற்கு ஹூண்டாய் தொழிற்சாலை ஆந்திர மாநிலத்திற்குச் சென்றிருந்தால், இதே எஸ்.ஆர்.பி. அவர்கள் இதே அவையில் நின்றுகொண்டு, இந்த அரசைக் குற்றஞ்சாட்டி, உங்கள் தவறான அணுகுமுறையினால் இங்கே வர இருந்த ஒரு நல்ல வாய்ப்பை, நல்ல தொழிற்சாலையை நீங்கள் விட்டுவிட்டீர்கள் என்று அவர் குற்றஞ்சாட்டியிருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கோயில்களில் எப்படி வழிபாடுகள் நடத்தப்பட வேண்டும் என்பதற்குக்கூட அரசு ஆணைகளைப் பிறப்பித்து வருவதால், மக்களிடையே கடும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. கோயில்களிலே எப்படி வழிபாடு நடத்தப்பட வேண்டும் என்பதை நாம் அவர்களுக்கே விட்டுவிட வேண்டுமே தவிர, நாம் அதிலே தலையிடுவது சரியாக இருக்காது. எந்த அரசாங்கமாக இருந்தாலும், மத விஷயங்களிலே தலையிடுவது முறையல்ல. இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், என்னைக் கேட்டீர்கள் என்றால், என்ன கொள்கை வேண்டுமென்று கேட்டால், நெப்போலியன் பின்பற்றிய அதே கொள்கையைப் பின்பற்றுங்கள் என்று சொல்வேன். நெப்போலியனைக் கேட்டார்கள். He was a child of the revolution. புரட்சி பெற்றெடுத்த குழந்தைதான் நெப்போலியன். ஆனால் அந்த நெப்போலியனைக் கேட்டார்கள். 'நீ மத விஷயத்திலே எப்படி இருக்கிறாய், நீ எந்த மதத்தைப் பின்பற்றுகிறாய்' என்று கேட்டார்கள். அவன் சொன்னான்: 'I was a Mohammedan in Egypt, for the good of the people I shall be a catholic in France' என்று சொன்னான். அதனுடைய அர்த்தம், Egypt-லே போனவுடனே அவன் இஸ்லாத்தைத் தழுவிவிட்டான் என்பது அல்ல. அங்கேயிருந்து திரும்பி வந்தவுடன் இங்கே மீண்டும் கிறித்துவனாக ஆகிவிட்டான் என்பது அல்ல. 'மத விஷயத்தில் அரசுகள் தலையிடக் கூடாது. மத விஷயத்தில் அவர்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும்' என்றுதான் அவன் சொன்னான். அதே நிலையைத்தான்... (குறுக்கீடு)





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மாவின் கொள்கையும்--எம்மதமும் சம்மதமே எனும் பொதுக் கொள்கைதான் எங்களுடைய அம்மாவின் கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் ஏற்பட்டிருக்கிற அதிருப்தியைத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முடிந்த வரை அந்த அதிருப்தி இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடு) என்னவா? கும்பாபிஷேகத்தைப் பல இடங்களில் தள்ளி வைக்கச் சொல்லியிருக்கிறீர்கள். அது நல்ல நாள் இல்லை என்று எல்லாம் சொல்கிறார்கள், எல்லா இடங்களில் இருந்தும் செய்தி வந்திருக்கிறது. (குறுக்கீடு) செய்தி வந்திருக்கிறது, அது எல்லாம் வேண்டாம் என்று சொல்கிறேன், அவ்வளவுதான். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில ஆலயங்களில் நடைபெறுகின்ற கும்பாபிஷேகத்தினுடைய பணிகள் முடியாத காரணத்தினாலே, சில ஆலயங்களில் தள்ளி வைக்கப்பட்டன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது திருப்பணி செய்யப்பட்டு, குடமுழுக்கும் நடைபெற்றுவிட்டது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சில பேர் சொல்கிறபடி பார்த்தால், அதிலே அரசு குறிப்பிட்ட நாட்கள் நல்ல நாட்களே அல்ல என்று சொல்கிறார்கள். கணிதப் பஞ்சாங்கமாக இருந்தாலும், வாக்கியப் பஞ்சாங்கமாக இருந்தாலும், முகூர்த்த நாட்கள் என்றுகூட குறிப்பிடாத நாட்களில் சில இடங்களிலே கும்பாபிஷேகம் நடத்தப்பட்டதாகச் சொல்கிறார்கள். அது தேவையில்லை என்பதற்காக, நல்ல எண்ணத்தோடு நான் சொல்கிறேன். அதுபோன்ற குற்றச்சாட்டுகள் அரசின்மீது வராமல் பார்த்துக்கொள்வது நல்லது என்றுதான் நான் சொல்ல வருகிறேன்.

மன நிலை பாதிக்கப்பட்டவர்கள்மீது Criminal வழக்குகள் தொடுக்க முடியாது. I.P.S. அதிகாரி போல நடித்த இளைஞர் ஒருவர் மன நிலை பாதிக்கப்பட்டவர் என்று தெரிந்திருந்தும், காவலர்களால் மிகவும் கொடூரமாக நடத்தப்பட்டிருக்கிறார். புரோகிதராக இருக்கும் அவருடைய தந்தையாரும் கைது செய்யப்பட்டு, தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார். விளையாட்டாகச் செய்தி அனுப்பிய சின்னஞ்சிறு பெண் ஒருவர், கொலை முயற்சி வழக்கிலே கைது செய்யப்பட்டிருக்கிறார். வறுமையின் கோரப்பிடியிலே சிக்கி, வழிதவறிச்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 ஏப்ரல் 12

செல்ல நேரிட்ட +2 படிக்கும் மாணவி, விபச்சார வழக்கென்னும்
வலையில் சிக்க வைக்கப்பட்டு, சீரழிக்கப்பட்டிருக்கிறார். வருமானம்
இல்லாத. ஆதரவற்ற நிலையில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த
மாணவிகள் படிப்பதற்கு ரூபாய் 50,000 வழங்கப்படும் என்று முதல்வர்
அறிவிக்கிறார். அத்தகைய குடும்பத்தைச் சேர்ந்த மாணவிக்காக
இரக்கம்கூட காட்டாமல், கொடூரமான முறையில் காவல் துறை
நடத்துகிறது.

இதேபோன்று, அட்டவணை வகுப்பைச் சேர்ந்த I.A.S.
அதிகாரிகளில், பலர் உரிய பணிகள் வழங்கப்படாமல், கட்டாயக்
காத்திருப்பில் வைக்கப்பட்டதாக வந்திருக்கும் செய்திகளும் வருத்தம்
அளிப்பதாகவே இருக்கின்றன. மொத்தத்தில் இந்த அரசு
கடைப்பிடிக்கும் பணி நீட்டிப்புத் தொடர்பான கொள்கைகள்,
தனிப்பட்ட விருப்பு, வெறுப்பின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன.
நியாயமானதாகவோ, நேர்மையானதாகவோ அமையவில்லை.
கட்டாயக் காத்திருப்பின் அடிப்படையில் வைக்கப்பட்ட அதிகாரிகள்
யார் என்பதையும், கால நீட்டிப்பு வழங்கப்பட்ட அதிகாரிகள்
யார் என்பதையும், அரசின் நம்பிக்கைக்குரிய பொறுப்பில்
அமர்த்தப்பட்டுள்ள அதிகாரிகள் யார் என்பதையும் ஒப்புநோக்கி,
சீர்தூக்கிப் பார்த்தாலே உண்மை நிலை தெரிந்துவிடும். இந்த அரசு
ஒரு கோமாதாவாகக் காட்டிக்கொண்டாலும், பசுத் தோல் போர்த்திய
புலிதான் என்பதை அறிந்துகொள்ள முடியும். நம்முடைய அதிகார
வர்க்கத்திற்கு ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. ஆங்கில ஆட்சிக் காலத்தில்
உருவான அணுகுமுறையே தொடர்ந்து நீடிக்கிறது. ஆட்சிப் பொறுப்பில்
இருக்கிற....(குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரை, இது பசுத் தோல் போர்த்திய
புலியல்ல. நல்லவர்களுக்குப் பசுத் தோல் போர்த்திய பசு.
கெட்டவர்களுக்கு, தீயவர்களுக்குப் புலித் தோல் போர்த்திய புலிதான்.
(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மொத்தத்தில் பசுத் தோல்
போர்த்திய புலியாக இல்லாமல் இருந்தால் சரி. ஆட்சிப் பொறுப்பில்
இருப்பவர்களின் கருத்தை அறிந்துகொண்டு, கோடு போடச்
சொன்னால், ரோடு போட்டு முடிக்கும் சாமர்த்தியசாலிகள் நிதித்
துறைப் பொறுப்பில் இருக்கிறார்கள். எனவே, பற்றாக்குறை பட்ஜெட்
தாக்கல் செய்யப்பட்டாலும், குறைந்த அளவிலான பற்றாக்குறையைக்
காட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடும், புதிய வரிகளே இல்லை என்று



2005 ஏப்ரல் 12] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

அறிவிக்கும் நோக்கத்தோடும் இந்த பட்ஜெட்டைத் தாக்கல்
செய்திருக்கிறார்கள். அதே நேரத்தில், மிகவும் முக்கியமான, தவிர்க்க
முடியாத பணிகள் என்று கருதப்படும் பணிகளை நிதியை ஒதுக்காமலே
நிறைவேற்ற வேண்டுமென்ற மாயத் தோற்றத்தை மக்களிடையே
உருவாக்க முற்பட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 5–30*

முதலமைச்சரின் அறிவிப்புகளை நிறைவேற்றுவதற்கு, எதிர்பாராச்
செலவு நிதியத்தை எதிர்பார்த்தே இந்த அறிவிப்புகளை
வெளியிட்டிருக்கிறார்கள். முறைப்படி இவை பட்ஜெட்டில்
சேர்க்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தால், பற்றாக்குறை பல மடங்காக
இருந்திருக்கும். புதிய வரி விதிப்புகளும் இருந்திருக்கும். கண்கட்டி
வித்தையிலும், சித்து விளையாட்டிலும் கை தேர்ந்தவர்களைப்
போன்றவர்களால் தயாரித்து அளிக்கப்பட்டதால்...(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பல
சலுகைகளை, பணச் செலவு உள்ள சலுகைகளை ஏழையெளிய
மக்களின் நலன் கருதி அறிவித்திருக்கிறார். ஆனால் நிதியாதாரம்
இல்லாமல் அதை அறிவித்திருப்பதாக ஆரம்பத்திலேயே திரு. எஸ்.ஆர்.பி.
அவர்கள் சொன்னார். அது தவறான அணுகுமுறை. புதிய வரி
போடாமலேயே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்
இதுகாறும் 110 Statement மூலமாக அறிவித்த அறிவிப்புகளுக்கான
செலவுகளையும், இனிமேலும்கூட ஏழையெளிய மக்களின் ஏற்றத்திற்காக
மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிக்க இருக்கின்ற செலவுகளையும்
ஈடுகட்டக்கூடிய அளவுக்கு வருவாய்ப் பெருக்கத்தை இந்த அரசு
கட்டாயம் அடையும் என்பதனை அவையிலே நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிப் பொறுப்புக்கு
2001–லே வந்தபோது, 8,000 கோடி ரூபாய் மட்டுமே என்றிருந்த வணிக
வரி வருமானம் ரூ.15,000 கோடிக்கு மேல் என்ற நிலையை நாம்
அடைந்திருக்கிறோம் என்றால், மாண்புமிகு அம்மா அவர்கள்,
ஏற்கெனவே நான் பல முறை சொன்னதுபோல, தெளிவான
அணுகுமுறை, தீர்க்கதரிசனமான அணுகுமுறை, எங்கெங்கு
சந்துபொந்துகள் இருக்கின்றன என்பதனைக் கண்டறிந்து, அன்றாடம்
அந்தப் பணியிலே ஈடுபட்டு, கூடுதல் வருவாயைப் பெருக்கக்கூடிய
முறையிலே செயல்பட்டு வருகிற காரணத்தால், நாங்கள் சென்ற
ஆண்டுகூட இவ்வளவு வரி வருமானம் வணிக வரியிலே வருமென்று
சொன்னோம். எதிர்பார்ப்பைச் சொன்னோம். ஆனால் அதைவிட

அதிகமாக நாங்கள் பெற்றோம். அதுபோலவேதான், வரும் ஆண்டிலும்கூட நாங்கள் அதிகப்படியான வரி வருமானத்தை வணிக வரியிலேயே ஈட்டி, இந்தச் செலவை மட்டுமல்ல, இன்னும் எதிர்காலச் செலவுகளையும் ஈடு கட்டுவோம், சிக்கனத்தைக் கடைப்பிடிப்போம், செலவினைக் குறைப்போம். இப்படிப் பலவித முறைகளில் வருவாயைச் சேர்த்து இதை ஈடுகட்டுவோம், இதை நடைமுறைப்படுத்துவோம், புதிய வரி ஏதும் போட மாட்டோம் என்பதனை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இந்த பட்ஜெட், பார்ப்பதற்கு ஒன்றாகவும், உள்ளடக்கத்தில் வேறொன்றாகவும் அமைந்திருக்கிறது. கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், தீர எண்ணித் தெளிவதே மெய் என்ற அடிப்படையில் ஆய்ந்து பார்த்த பிறகுதான் இந்த பட்ஜெட் ஒரு கானல் நீர் என்பதைக் கண்டுகொள்ள முடியும். எனவே, நிதியொதுக்க மசோதாவிற்கு இசைவினை அளிக்க முடியாத இக்கட்டான நிலையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், அடுத்து கருணாகரன் பேசுவார்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கச் சட்டமுன்வடிவிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக பல கோரிக்கைகளைப் பற்றி ஏற்கெனவே பேசப்பட்டிருக்கிறது என்றாலும், நமது தமிழகத்தினுடைய ஜீவாதாரப் பிரச்சினையாக இருக்கிற காவிரி நீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான அந்த வாய்ப்பு நெருங்கிக் கொண்டிருக்கிற காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். ஆகவே, அந்த் இறுதித் தீர்ப்பைப் பெறுவதற்குரிய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் சட்டமன்றத்திலே ஏற்கெனவே பேசியபோது, அதற்கான உத்தரவாதமும், அதற்குரிய ஆவணங்களும் தமிழ்நாட்டின் சார்பிலே வழங்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். சட்டச் சிக்கல் இருப்பதாகச் சொல்லப்பட்டு, அதிலே போதிய ஆவணங்கள் வழங்கப்படவில்லை என்ற குறைபாட்டைச் சொல்லிக் கொண்டிருந்த காரணத்தினாலேதான் நான் அதை அவையிலே தெரிவித்தேன். நம்முடைய உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது, பறிக்கப்படக் கூடாது என்ற அடிப்படையிலே, நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு உரிய முயற்சிகளை நம்முடைய அரசு





மேற்கொண்டு, காவிரி நீர்ப் பிரச்சினைக்குரிய அந்த நிரந்தரத் தீர்ப்பை வெற்றிகரமாகப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அனைத்து அரசியல் கட்சிகளுமே இணைந்த முறையிலே அதற்காக நாம் பாடுபடக் காத்திருக்கிறோம் என்ற முறையில், அதைப் பெறுவதற்கான முயற்சியை நமது அரசு எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, காவிரிப் பாசனப் பகுதியை நம்பி இருக்கக்கூடிய 10–க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் வாழ்கின்ற 2 கோடி மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையாக அது இருக்கிறது. குறிப்பாக விவசாயத்தை நம்பியிருக்கிற விவசாயிகளுடைய பிரச்சினை என்பதும், இயற்கையினுடைய பாதிப்பினாலே மாறி, மாறிப் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டேயிருக்கிறது. ஆகவே, இந்த விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பல்வேறு சந்தர்ப்பங்களிலே பேசியிருக்கிறோம். நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற சலுகைகள், உதவிகளைப் பற்றிய செய்திகள் திரும்பச் சொல்லப்பட்டு இருந்தாலும்கூட, அந்த விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற அந்தப் பாதிப்பிலிருந்து இன்னும் மீள முடியாத நிலையில் விவசாயி இருக்கிறான் என்பதை நம்முடைய அரசு உணர்ந்து இருக்கிறது. ஆகவே, அந்த உணர்வின் அடிப்படையிலே அவர்களுக்கு மேலும் பல உதவிகளைச் செய்து, கை தூக்கி விட்டு, அவர்களை மீண்டும் அந்த விவசாய உற்பத்தியிலே ஈடுபடச் செய்வதற்கான முயற்சியை எடுப்பதற்குரிய நல்ல திட்டத்தினை வகுக்க வேண்டும். குறிப்பாகக் கடன் சுமையிலிருந்து அவர்களை மீளச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். நீண்ட காலக் கடனாக மாற்றப்பட்டிருப்பது என்பது, அது மேலும் சுமையைத்தான் கொடுக்குமே தவிர, விவசாயி திரும்பச் செலுத்துவதற்குரிய அந்த வாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறது என்ற காரணத்தினாலே, அந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியை எடுக்கவேண்டும். அதை அரசே செலுத்துவதற்கான வாய்ப்பைப் பெறவேண்டும். நான் இதைச் சொல்கிறபோது, NABARD வங்கியைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்வதற்குரிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலேதான், அரசு செலுத்தவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5–35*

அதேபோல, விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று கோலப்பன் குழுவினுடைய சிபாரிசு கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே கூலி உயர்வைப் பற்றி அறிவிப்புச்

செய்து, அதனுடைய நடைமுறைகளைப் பற்றிகூட நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். அதோடு இணைந்த முறையில், அந்த விவசாயத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கிற நல வாரியம் இதுவரையிலும் செயல்படுத்தப்படவில்லை. விவசாயத் தொழிலாளர்களிடத்திலிருந்து பெறப்பட்டிருக்கிற நல வாரியத்திற்கான நிதி 8 கோடி ரூபாய்க்கு மேலே அரசாங்கத்திலே இருக்கிறது. ஆகவே, இந்த நிதியைப் பயன்படுத்தி அந்த நல வாரியத்தைச் செயல்படுத்தி, விவசாயத் தொழிலாளர்களுக்கான எல்லாவிதமான சலுகைகளையும் வழங்கச் செய்வதற்கான முயற்சியை எடுக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுடைய குத்தகையைத் தள்ளுபடி செய்யவேண்டும். அதையும் பாக்கியாக வைத்து, சுமையாக வைத்து, நீண்ட காலத் திட்டமாக மாற்றுவது என்பது. அவர்களால் திரும்பச் செலுத்த இயலாத நிலையாக இருக்கிறது. ஆகவே, குத்தகை பாக்கிகளைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியையும் எடுக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கே இன்று காலையிலே வீட்டு வசதித் துறையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது. கூட்டுறவுத் துறையின் மூலமாக வீடு கட்டும் சங்கத்திலேயும் அப்படிப்பட்ட கடன் பெற்றவர்கள் ஏராளமான சுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியிலேகூட அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டன. சென்ற ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டிலே, வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு ஓரளவு அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் இப்போது புதிய அறிவிப்புகள் வந்திருக்கின்றன. ஆனால் நான் சொல்வது எல்லாம், இந்தக் கடன் சுமை எப்படி வருகிறது என்ற நிலைமையைப் பார்க்கிறபோது, அதற்காக விதிக்கப்படுகிற அந்த வட்டி விகிதங்களே பிரச்சினையாக மாறிவிடுகின்றன. ஆகவே, அந்த வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கான முயற்சியை இந்த அரசு சிந்திக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். வீடு கட்டுவதற்காக வாங்கிய கடனுக்கு அபராத வட்டி 24 சதவிகிதம் என்ற அளவிற்குக்கூடச் சென்று விடுவதாகச் சொல்கிறார்கள். அந்த அளவிற்கு அந்த வட்டி விகிதம் வருமானால், அசலைவிட அபராதமும், வட்டியுமாகச் சேர்த்து, மிகப் பெரிய அல்லலுக்கு ஆளாகிற நிலைமை இருக்கிற காரணத்தினாலே, அதைத்





தள்ளுபடி செய்து, அந்த ஏழையெளியவர்கள் கிராமப்புறத்திலே வாங்கியிருக்கிற, கடனாளியாக இருக்கக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நில வள வங்கிமூலமாக விவசாயிகள் கடன் பெற்றிருக்கிறார்கள். அதை வசதி உடையவர்களுக்குள்ள வாய்ப்பை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நான் சொல்லவில்லை. விவசாயப் பணிகளுக்காகவே, அதைச் சார்ந்திருக்கிற பணிகளுக்காக கடன் பெற்றிருக்கிறார்கள். Tractor கடன் பெற்றிருக்கிறார்கள், power tiller போன்றவற்றிற்கு, அதேபோல borewell அமைப்பதற்கான கடன், இந்தக் கடனைப் பெற்றவர்கள், பல இலட்சம் ரூபாய் செலுத்த முடியாத நிலைக்கு ஆளாகி, அதுவும் வட்டிக்குரிய சுமையை ஏற்படுத்தி, இப்போது அவர்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகி இருக்கிற விவசாயிகளாக இருக்கிற காரணத்தினாலே அந்த வட்டியைத் தள்ளுபடி செய்து, ஏற்கெனவே அவர்கள் செலுத்தியிருக்கிற அந்த வட்டித் தொகையை, அசலிலே வரவு வைத்து, அவர்களைப் பாதுகாத்து. மீண்டும் அந்த அசலைச் செலுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தினால்கூட, அந்த விவசாயிகளைப் பாதுகாக்க முடியும் என்ற அடிப்படையில் அரசு சிந்திக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலும் பொதுவாகவே நலிந்து வருகிறது. ஆகவே, இந்தக் கூட்டுறவுத் துறை சட்ட திட்டங்களை எல்லாம் மாற்ற வேண்டும் என்று நாம் பேசுகிறோம். அது நீண்ட காலக் கோரிக்கையாக இருக்கிறது, அது இருக்கட்டும். ஆனால், தமிழ்நாட்டில் கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்குரிய முயற்சியை எடுக்கவேண்டும். அதை நடத்தாமல், நலிவடைந்து கொண்டிருக்கிற கூட்டுறவின் நிலைமைகளைச் சீர்திருத்த முடியாது. இன்னொரு புறத்திலிருந்து பார்த்தால், தேர்தல் நடந்தாலே பல பிரச்சினைகள் வருகின்றன என்ற செய்தியும் இருக்கிறது. இதிலே ஒரு கருத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சொல்வது, தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற பொதுவாக நிலை கீழே இருக்கிறது. அரசியல் மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு அதைப் பார்க்கவேண்டும் என்பது என்னுடைய பணிவான கருத்து. ஆகவே கூட்டுறவுத் துறை என்ற முறையிலே, அதைப் பாதுகாக்கிற நோக்கத்தோடு, உரியவர்கள் அந்தத் தேர்வுக்கு வரவில்லை என்ற கருத்து இருக்கிறது. இதிலே இன்னொரு புறத்திலே அரசியல் தலையீடு

இருக்கிறது. மற்றொரு புறத்திலே அதிகாரிகளுடைய முறைகேடுகள் இருக்கின்றன. இவற்றின் காரணத்தினாலே, நமது கூட்டுறவுத் துறை மோசமான நிலைக்கு ஆளாகிக்கொண்டேயிருக்கிறது. இதைப் போக்குவதற்காக ஒரு தனித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதுபோல, உறுப்பினர் சேர்க்கை என்பதே பிரச்சினையாக இருக்கிறது என்ற காரணத்தினாலே, மூன்று ஆண்டுகள் கடன் பெற்றிருந்தால் அவர்களை உறுப்பினர் ஆக்கலாம் என்று ஏதாவது ஒரு கொள்கை வைக்கவேண்டும். உறுப்பினர் என்பதற்குரிய அடிப்படைக் கொள்கை ஏதாவது ஒன்றை உருவாக்கி, அதன்மூலமாக உறுப்பினர் சேர்க்கையை நடத்தி, தேர்தலைக் கட்டாயம் நடத்தவேண்டும். அதன்மூலமாகத்தான், நமது கூட்டுறவைப் பாதுகாப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதைச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–40

அதேபோல, பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. குறிப்பாக, கல்வித் துறையிலே நான் சில செய்திகளைச் சொல்கிறபோது சொன்னார்கள். ஆனால் திரும்பவும் அதிலே இருக்கிற பிரச்சினை என்பது, கல்லூரிக் கல்வி இயக்ககத்தைப் பொறுத்தவரையிலே, பொதுவாக நமது தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில் செயல்படுத்தப்படுகிற கல்லூரிகளினுடைய எண்ணிக்கை 67 ஆக இருக்கிறது. ஆனால், தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை 162 ஆக இருக்கிறது. ஆகவே, கல்வி என்பது தனியார்மயமாகிக் கொண்டே இருக்கிறது. இது யார் காலத்தில், எந்தக் காலத்தில் என்ற விவாதத்திற்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. பொதுவாகவே தனியார்மயமாக்கப்படுமானால், கல்வித் துறை என்பது, உண்மையில் ஏழைகளுக்கு எட்டாக் கனியாக அது மாறிவிடும் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற நிலை. ஆகவே, கல்வியைப் பொறுத்தவரையிலும், கூடிய வரையிலும் அது தனியார்மயமாகிற அந்தக் கொள்கையைத் தடுக்கவேண்டும்.

அதே நேரத்தில், இன்னொரு புறத்திலேயிருந்து பார்க்கிறபோது, நமது அரசு சார்பிலே நடத்தப்படுகிற கல்வி நிலையங்களிலேகூட, பல வகுப்புகளைத் தொடங்குவதற்குக்கூட சுய நிதியின் அடிப்படையிலே தொடங்குவதற்கான அனுமதியை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இதுவேகூட ஒரு வகையிலே அரசின் சார்பிலான கல்லூரியிலும், சுய நிதியின் சார்பில் என்ற முறையில் நாம் வகுப்புகளைத்





தொடங்குகின்றபோது, அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் படிக்க முடியாத பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய மாணவ, மாணவிகள் அதிலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த வகுப்புகளைத் தொடங்குவதற்கான சுய நிதி என்ற அந்த முயற்சியை அரசு கைவிட வேண்டும். அரசே அந்த நிதியை ஏற்றுக்கொண்டு, அதைப் பல்கலைக்கழகங்கள் மூலமாக வழங்கி, கல்லூரிகளிலே அந்தப் பாடத் திட்டத்தைத் தொடங்குவதற்குரிய முயற்சியை எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஏற்கெனவே நான் இங்கே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல சில பிரச்சினைகள் இருக்கின்றன என்றாலும், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் போராட்டம் நடைபெற்று, அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, திரும்பவும் 5,000 பேர்களுக்குரிய அந்தப் பணிப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அந்த வேலையில்லாத காலங்களை, வேலைக் காலங்களாக ஏற்று, நடைமுறைப்படுத்தி அரசாணை போட்டு விட்டீர்கள். அதிலே, குறிப்பாக 999 பேர்களுக்கு மட்டும் அது வழங்கப்படாமல் இருக்கிறது; அதையும் இணைத்து, அந்த 5000 பேர்களுக்கு வழங்கியதைப்போலவே, அவர்களுடைய அந்தப் பணியில்லாத காலங்களை பணிக் காலங்களாக நிவர்த்தி செய்வதற்கான முயற்சியைச் சேர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சொல்கிறபோது, சாலைப் பணியாளர்களைக் குறிப்பிட்டுச் சொன்னோம். அதையும் பரிசீலனை செய்து, அந்த சாலைப் பணியாளர்களுடைய கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றி, சாலைப் பணியாளர்களை மீண்டும் பணியமர்த்தம் செய்வதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பொறுத்தவரையிலே, அதற்கு ஈடுகட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று வேளாண் துறைக் கோரிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது. அதோடு, கடல் நீரால் சூழப்பட்டு, விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிற அந்த நிலங்களை, அந்தக் களர் தன்மையைப் போக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால், அதற்கான முயற்சிகள் விரைவாக

[திரு. வை. சிவபுண்ணியம்] [2005 ஏப்ரல் 12

எடுக்கப்படவில்லை என்று சொன்னால், அது உப்பு கலந்த மண்ணாக மாறுகிற காரணத்தாலே, வருகிற ஆண்டிலே சாகுபடி செய்யமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, அதை உடனடியாக, அவசரமான நோக்கத்தோடு அதை நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுக்கவேண்டும். அதோடு, அவர்களுக்கு வழங்கப்படுகிற நிவாரணம் என்பது சரிவர நடைபெறவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. அதை, குறைபாடு, குற்றச்சாட்டு என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. இதைத் திரும்பவும் அரசு பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சுனாமியால் பாதித்தவர்களுக்கும் அப்படிப்பட்ட குறைபாடுகளும், பிரச்சினைகளும் இருக்கின்றன. அவற்றையும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு இணைந்த முறையில் அந்த சுனாமி பாதிப்பிற்குள்ளான அந்த மீனவர்கள், விவசாயிகள் என்ற நிலையிலிருந்து, அந்த மீனவர்களுக்கான அந்தப் படகுகளுடைய உதிரிப் பாகங்கள், அதற்குத் தேவையான பொருட்களை விற்கக்கூடிய அந்த விற்பனையாளர்களும், அந்தக் கடற்கரை ஓரங்களிலேயே அவர்களுடைய தொழில்களைச் செய்தார்கள். அப்படித் தொழில்களைச் செய்தவர்களுக்குரிய அந்தக் கடைகள் எல்லாமே, அந்தச் சுனாமி பேரலையாலே மிகப் பெரிய அளவிற்குப் பாதிக்கப்பட்டு, எல்லாப் பொருட்களும், இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் எல்லாம், அந்த கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. ஆகவே அவர்களுடைய கோரிக்கையை அரசின் சார்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய மாவட்டத் தொழில் துறையினுடைய தொழில் மைய அதிகாரிகள்மூலமாக அதற்குக் கணக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். அது, நாகப்பட்டினம் மாவட்டத்திலேயும், அதைப்போல கடற்கரையோர மாவட்டங்களிலேயும், அங்கு பாதிக்கப்பட்டிருக்கிற அந்தத் தொழில் செய்பவர்களுடைய பாதிப்பிற்கு ஏற்ற வகையிலே, அந்தக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கினை நமது அரசாங்கம் பெற்று, அதிலே பாதிக்கப்பட்டிருக்கிற, அந்தத் தொழில் செய்யக்கூடிய அந்தக் கடைக்காரர்களுக்குரிய சலுகைகளை வழங்கவேண்டும். அதேபோல, அந்தக் கடைகளிலே பணிபுரிகிறவர்கள், *250, 300* பேர் அதிலே தினக்கூலிகளாகப் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு என்ன ஒரு பெரிய ஆதங்கம் என்றால், எல்லோருக்கும் *1,000* ரூபாய் வழங்கப்பட்டது, வேஷ்டி, புடவை கொடுக்கப்பட்டது. இப்படி நிவாரணம் வழங்கப்படுகிறபோது, எங்களுக்கு இல்லையே என்ற ஆதங்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையும்கூட கணக்கெடுத்து, மாவட்ட ஆட்சியர்கள்மூலமாக அவர்களுக்குக் கிடைக்கச்



2005 ஏப்ரல் 12] [திரு. வை. சிவபுண்ணியம்]

செய்வதற்கான முயற்சியை எடுக்கவேண்டும். அதேபோல, அவர்கள் மீண்டும் அந்தத் தொழிலைச் செய்வதற்காக, வங்கிக் கடனைப் பெறுவதற்குரிய வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஏற்கெனவே கடன் இருக்குமானால், அதைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

*பிற்பகல் 5–45*

சுனாமி பாதித்த தேதியிலிருந்து இப்பொழுது தொழில் தொடங்குவதற்குரிய வாய்ப்பு வருகிற வரையிலும் இருக்கிற நிலைமைகளை ஆய்ந்து, அந்தத் தொழில் செய்பவர்களுக்குரிய மின் கட்டணத்தை ரத்துச் செய்யவேண்டும் என்ற கோரிக்கைகளையெல்லாம் அவர்கள் வைத்திருக்கிறார்கள். இவற்றை நமது அரசு பரிசீலனை செய்து அவர்களுக்கு உதவிடவேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைத்து, நான் இந்த அவையிலே ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதுபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குப் பல சலுகைகளை அறிவித்தார்கள். அதேபோல, பல பெரியவர்களுடைய நினைவுகளைப் போற்றிப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை அறிவித்தார்கள். நான் அன்றையதினம் கல்வி மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது, இலக்கிய மேதை திரு. ஜீவானந்தம் அவர்களுடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருந்தேன். இதைப் பற்றியும் பரிசீலித்து, நமது அரசு அதை அறிவிக்கவேண்டும். அவர் இந்த நாட்டு மக்களுக்காக, ஏழையெளியோர்களுக்காக அரும்பாடுபட்டவர்; சுதந்திரப் போராட்ட வீரர். இந்த நாட்டு மக்களைத் தமிழின்பால் கவர்ந்து ஈர்க்கச் செய்வதற்குரிய முயற்சியை மிகச் சிறப்பாகச் செய்தவர். அப்படி அரும்பணியாற்றிய, தொண்டாற்றிய அந்த ஒப்பற்ற தலைவர், இலக்கியப் பேராசான் ஜீவா அவர்களுடைய நூல்களைத் தேசவுடைமையாக்குவதற்குரிய முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றோ அல்லது நாளையதினமே அறிவிக்கவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பணிவான வேண்டுகோளாக வைத்து, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம். (குறுக்கீடு) திரு. கருணாகரன், அப்புறம் பேசுங்கள், திரு. லா. சந்தானம், பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களுக்கு நீர்ப்பாசனத்தை வழங்கிக் கொண்டிருக்கின்ற

முல்லைப் பெரியார் அணை, கடந்த காலங்களிலே 152 அடியளவிலே இருந்தது. அதைக் கேரள அரசாங்கம், அந்த அணை சற்றுப் பழுதுபட்டிருக்கிறது; அந்த அளவிற்கு அந்தத் தண்ணீரைத் தேக்கினால், அந்த அணை உடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிய காரணத்தினால், அதை மத்திய அரசு வந்து பார்வையிட்டு, மத்திய அரசினுடைய நீர்வள ஆதாரத் துறையின்மூலமாக வந்து பார்வையிட்டு, அதைச் செப்பனிடவேண்டும் என்று சொல்லுகிற நேரத்திலே, நமது மாநில அரசு ஏறத்தாழ ரூ.11 கோடி அளவிலே செலவு செய்து, அந்த அணையைப் பலப்படுத்துகின்ற வேலையையெல்லாம் செய்து, இன்றைக்கு நல்ல நிலையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதை, இன்றைக்கு 145 அடி வரைக்குமாவது உயர்த்தவேண்டும் என்கின்ற ஒரு நிலையிலே, நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், நிதி அமைச்சர் எல்லாம் கேரளாவிற்குச் சென்று, அங்கிருக்கின்ற அமைச்சர்களிடம் பேச்சுவார்த்தைகளையெல்லாம் நடத்தியிருக்கிறார்கள். அந்த பேச்சுவார்த்தையை இன்னும் துரிதப்படுத்தி, இந்த அரசு அந்த நீர்மட்டத்தை உயர்த்துகின்ற நிலையை எடுத்தால்தான், அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஐந்து, ஆறு மாவட்டங்களிலே இருக்கின்ற பாசனப் பகுதிகள் நிறைவாக நீர் ஆதாரத்தைப் பெறுகின்ற நிலையும் இருக்கும். அந்த நீராதாரத்தைப் பெறுகின்றபோது, மதுரை போன்ற நகரங்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை தீர, இன்றைக்கு ஆண்டிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்றவற்றிற்கெல்லாம் வகை செய்ய, வைகை அணைக்குத் தண்ணீர் நிரப்பப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கும் என்கின்ற காரணத்தினால், அதை இந்த அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு, அந்தப் பேச்சுவார்த்தைகளைத் துரிதப்படுத்தி, முல்லைப் பெரியார் அணையினுடைய நீர்மட்டத்தை 145 அடியாகவாவது இந்த ஆண்டு உயர்த்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஊராட்சி மன்றங்களிலே, நிதி ஆதாரம் இல்லாத சில ஊராட்சிகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அந்த ஊராட்சி மன்றங்களுக்கு நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு நமது வனத் துறையின் மூலமாக ஊராட்சி ஒன்றியம், பொதுப் பணித் துறைக் குளங்களிலே எல்லாம், சமூக நலக் காடுகள் திட்டத்தின்மூலமாகக் கருவேல மரங்கள் வளர்க்கப்பட்டன. வளர்ந்த அந்த மரங்கள் முதிர்ந்தவுடனே, அவையெல்லாம் ஏலத்திலே விடப்படுகின்றன. அவ்வாறு ஏலத்திலே விடப்படுகின்றபோது, ஒரு சதவிகிதத் தொகை





ஊராட்சிகளுக்கு வந்து சேரவேண்டும் என்கின்ற நிலை இருக்கிறது. ஆனால் அப்படி ஏலம்விடப்பட்ட கருவேல மரங்களினுடைய அந்த ஏலத் தொகையிலே இருக்கிற சதவிகிதத் தொகை ஊராட்சிகளுக்குப் பல ஆண்டுகளாக வரவில்லை. இப்போது மட்டுமல்ல, கடந்த காலத்திலிருந்து ஏறக்குறைய 10 ஆண்டுகளாக ஊராட்சிகளுக்கு வரவில்லை என்கின்ற ஒரு நிலையிருக்கிறது. அப்படி அந்த வனத் துறையின்மூலமாக ஏலம் விடப்பட்ட அந்தப் பணம், ஊராட்சிகளுக்கு அவர்களுக்குரிய சதவிகிதத்திலே வழங்கப்படுமேயானால், அந்த ஊராட்சிகளிலே இருக்கின்ற ஊழியர்கள், இன்றைக்குத் தண்ணீர்த் தொட்டியை ஓட்டுகின்றவர்கள், அங்கிருக்கின்ற எழுத்தர்கள், அதுபோல துப்புரவுத் தொழிலாளர்கள் எல்லாம் ஐந்து, ஆறு மாதங்களாகக்கூட சம்பளம் பெறாத ஒரு நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய குறையைப் போக்குவதற்கு அது வசதியாக இருக்கும் என்கின்ற முறையில், அந்த மரத்தின் மூலமாக வந்த அந்த ஏலத் தொகையை அந்த ஊராட்சிகளுக்குப் பிரித்துத் தருவதற்குரிய முயற்சியினை வனத் துறையின்மூலமாகப் பெற்று, உள்ளாட்சித் துறைக்குச் சேர்க்கின்ற ஒரு நிலையினை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5–50

அதேபோல, இளைஞர் நலன். அவர்களுடைய மானியக் கோரிக்கையில்கூட வாதம் செய்ய முடியாத அளவிலே நாம் இன்றைக்கு நிறைவு செய்துவிட்டோம். அதிலே, கடந்த காலத்திலே பட்டம் பெற்று வேலை இல்லாது இருக்கின்றவர்களுக்கு இளைஞர் அணி என்று உருவாக்கப்பட்டு, அதிலே பணிபுரிந்து வந்தார்கள். அப்படிப் பணிபுரிந்தவர்கள், சில நாட்களுக்குப் பின்னால் நமது Service Commission மூலமாகவே ஒரு தேர்வினை நடத்தி பல்வேறு துறைகளிலே அவர்கள் பணியாற்றுவதற்கு அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம், ஓய்வு பெறுகின்ற நேரத்திலே அவர்களுடைய பணியைக் கணக்கிடும்போது, அவர்கள் அந்த இளைஞர் அணியிலே பணியாற்றிய காலத்தையும் சேர்த்துக் கணக்கிட்டால் அவர்களுக்கு அந்த ஓய்வூதியப் பலன்கள் நிரம்பக் கிடைக்கும் என்று நினைக்கின்றார்கள். அதையும் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

[2005 ஏப்ரல் 12

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதாவின்மீது சில கருத்துகளை மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் நான் முன்வைக்கின்றேன். இந்த அவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன்மூலமாக பல அறிவிப்புகளை வெளியிட்டிருக்கின்றார்கள். அதிலே இரண்டு விஷயங்கள்; எங்களாலே நீண்ட காலம் கேட்கப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, அறிவிக்கப்பட்டவை. ஒன்று, விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலி உயர்வு என்பது. இரண்டு, கட்டடத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் என்பது. இந்த இரண்டு அறிவிப்புகளையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

அதே நேரத்தில், சம வேலைக்கு சம ஊதியம் தரப்பட வேண்டுமென்பது ஒரு நீண்ட காலக் கோரிக்கை. ஒரே வேலையைச் செய்கிற ஆணுக்கும், அதே வேலையைச் செய்கிற பெண்ணுக்கும் ஆண் பால், பெண் பால் என இனப் பாகுபாட்டின் அடிப்படையில் குறைந்தபட்சக் கூலி இருப்பதை மாற்றி...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று விதி 110-ன்கீழ் நான் வெளியிட்ட அறிவிப்பை வரவேற்றுப் பாராட்டிய மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் அதை முழுவதுமாக, கவனமாகக் கேட்கவில்லை என்று கருதுகிறேன். அன்றையதினம், ஆறு மணி நேரம் வேலை செய்கின்ற ஆண் தொழிலாளர்களுக்கு ஒரு ஊதியம், ஐந்து மணி நேரம் வேலை செய்கின்ற பெண் தொழிலாளர்களுக்கு அதைவிடக் குறைவான ஊதியம் என்று அறிவிக்கப்பட்டது. அதே நேரத்தில் அதை அறிவித்த பிறகு, ஒரேவிதமான வேலையை அதே அளவு நேரத்திற்குச் செய்கின்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம அளவில் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பதை அன்றே அறிவித்தேன் என்பதனை மரியாதைக்குரிய உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே ஒரு ஆண் தொழிலாளர் ஆறு மணி நேரம் உழைத்தால் அவருக்கு ஒரு ஊதியம், ஒரு பெண் தொழிலாளர் ஐந்து மணி நேரம் உழைத்தால் அவருக்குக் குறைவான ஊதியம். ஆனால் அதே வேலையை ஒரு பெண் தொழிலாளர் ஆறு மணி நேரம் செய்தால், அவருக்கு அதே ஊதியம்தான். ஆணுக்குக் கிடைக்கின்ற அதே ஊதியம்தான் கிடைக்கும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. நான் மட்டுமல்ல. என்னைப்போல பலரும்



2005 ஏப்ரல் 12] [திரு. கே.சி. கருணாகரன்]

இதுபோன்ற குழப்பத்தில் இருந்தோம். விளக்கிவிட்டீர்கள். நன்றி. (சிரிப்பு) அதேபோல விவசாயத் தொழிலாளர்களுக்கான ஒரு நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்பதும்கூட இந்த அரசு உருவான நாளிலிருந்து, வந்த நாளிலிருந்து நான்கு ஆண்டு காலமாக நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். சில கோடிக்கணக்கான ரூபாய், அந்தத் தொழிலாளர்களிடம் வசூலிக்கப்பட்டவை தனியாக வைக்கப்பட்டு, அதற்கு ஒரு board எல்லாம் நியமிக்கப்பட்டு அது அப்படியே இருக்கிறது. ஆகையினால் விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியத்தை, கட்டடத் தொழிலாளர்களுக்கான வாரியம்போல தனியாக அமைப்பது என்பது எதிர்காலத்தில் அவர்களுடைய பொருளாதார மற்றும் நலன்களைப் பாதுகாக்க உதவியாக இருக்கும் என்பதை மீண்டும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அதேபோல, உணவு மானியம் உள்ளிட்ட சில நிதி ஒதுக்கத்தில் சில பிரச்சினைகளை ஏற்கெனவே இங்கு நாங்கள் கேட்டிருந்தோம். அதாவது, இந்த அரசு கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்த 2001–2002 ஆம் ஆண்டில் உணவு மானியமாக 1,450 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அது 2003–2004 மற்றும் 2004–2005 ஆகிய கடந்த இரண்டு ஆண்டுகளில் 825 கோடி ரூபாய், 845 கோடி ரூபாய் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டில் 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்த 2001–2002 காலத்தில் 1,450 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்த இந்த அரசில் நிதி நெருக்கடியைச் சிறப்பாகச் சமாளித்து, பெரிய அளவிலே முன்னேற்றம் கண்டுள்ள இந்த ஆண்டில் 1,000 கோடி ரூபாயாக ஏன் குறைந்து போனது?

பிற்பகல் 5–55

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபொழுது, தமிழகத்திற்குத் தேவையான அரிசியை மாநில அரசே நேரடியாகக் கொள்முதல் செய்தது. அப்போது அடக்க விலை கிலோ 12 ரூபாய் என்று ஆயிற்று. 13 ரூபாய் வரைகூட அப்பொழுது அடக்க விலை ஆயிற்று. 12 ரூபாய், 13 ரூபாய் என்று வாங்கி, நியாய விலைக் கடைகளிலே குறைந்த விலைக்கு மக்களுக்கு விநியோகித்தபொழுது, கூடுதலான செலவு. அப்பொழுது மானியத்திற்காகத் தேவைப்பட்டது. இப்பொழுது மத்தியத் தொகுப்பிலேயிருந்து, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 ஏப்ரல் 12

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், துணிந்து, நீங்கள்
அனைவரும் பாராட்டத்தக்க வகையிலே, மத்தியத் தொகுப்பிலேயிருந்து
தமிழகத்திற்குத் தேவையான அரிசியை 8 ரூபாய் 40 பைசா என்று
குறைந்த விலையிலே பெற்று, 3 ரூபாய் 50 பைசா என்று, முன்பு
வழங்கியதைவிட—முன்பு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் டன்
அரிசிதான் நியாய விலைக் கடைகளிலே மாதம் ஒன்றுக்கு
வழங்கப்பட்டது. இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய
தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைப்படி,
புதிதாக 37 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டதற்குப் பிறகு,
இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் டன் அரிசியை, முன்பு எப்போதும்
இல்லாத வகையிலே இந்த ஆண்டு நியாய விலைக் கடைகளிலே
மாதந்தோறும் 3 ரூபாய் 50 பைசாவிற்கு, (மேசையைத் தட்டும் ஒலி)
இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே, ஏழை,
பணக்காரன் என்று வித்தியாசம் இல்லாத வகையிலே 3 ரூபாய் 50
பைசாவிற்கு அரசு தன்னுடைய நிர்வாகத் திறமையின் காரணமாக,
செலவினங்களைக் குறைத்து, 1,000 கோடி ரூபாய் அளவிலே வழங்கிக்
கொண்டிருக்கிறார்கள் என்கிற பதிலைச் சொல்லி, அமர்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு குறித்த பிரச்சினையில், மூன்று
முறை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாக
வலியுறுத்தப்பட்டு வருகிறது. மீண்டும், மீண்டும் வலியுறுத்துகிறோம்.
அந்த உள்ளாட்சி மன்றங்களுக்காக அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிற
8 சதவிகித நிதி போதுமானதாக இல்லை. அவை கடும் நிதி
நெருக்கடியிலே, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத
நிலையிலே இருக்கின்றன. இதைச் சொல்கிறபோது, மத்திய
அரசாங்கத்திடமிருந்து கூடுதலாக நம்முடைய மாநிலத்திற்குப்
பெறவேண்டிய சலுகைகளை அல்லது சட்டபூர்வமான நிதி
உரிமைகளைப் பெறுவதில் இந்த மாநில அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிச்சயமாக உறுதுணையாக
இருக்கும். தொடர்ந்து நாங்கள் வலியுறுத்துவோம். அதே நேரத்தில்
ஒரு கேள்வி என்ன எழுகிறது என்றால், ஐக்கிய முன்னணி அரசு
பதவியேற்ற, இந்த முற்போக்குக் கூட்டணி பதவியேற்ற இந்த ஓராண்டு
காலத்தில், உள்ளாட்சி அமைச்சர்களின் கூட்டம் 7 முறைகள்
நடைபெற்றிருப்பதாகவும், அதில் ஒன்றில்கூட நம்முடைய மாநிலத்தின்
உள்ளாட்சித் துறை அமைச்சர் அந்தக் கூட்டத்தில் கலந்து
கொள்ளவில்லை என்றும், அந்தக் கூட்டங்களிலெல்லாம் அரசுச்
செயலாளர் மாத்திரமே கலந்து கொண்டார்கள் என்றும்...



2005 ஏப்ரல் 12]

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி
அம்மா அவர்களுடைய அனுமதியோடு முதல் கூட்டத்திலே நான்
சென்று கலந்து கொண்டேன். என்னுடன் நிதித் துறை அமைச்சரும்
உடன் வந்திருந்தார். அதற்கு அடுத்த கட்டமாகத் தொடர்ந்து
நடைபெற்ற கூட்டங்களில், பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக
நம்முடைய அரசு சார்பாக, நம்முடைய துறையைச் சார்ந்த செயலாளர்
அவர்கள் தொடர்ந்து கலந்து கொண்டார்கள் என்பதை மாண்புமிகு
உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அரசுச் செயலாளர் அவர்கள் கலந்து
கொண்டார்கள் என்று சொன்ன அந்த விளக்கத்திற்கு நன்றி. அந்தக்
கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட பிரச்சினைகள் என்ன, எடுக்கப்பட்ட
முடிவுகள் என்ன, நாம் முன்வைத்த பிரச்சினைகள் என்ன, அதற்கு
மத்திய அரசு தந்த பதில் என்ன என்பது போன்ற விவரங்களை இந்த
அவை அறிந்துகொண்டிருந்தால் நல்லதாக இருக்கும் என்று நான்
கருதுகிறேன். ஆகவேதான், இந்தப் பிரச்சினையை நான் கிளப்பினேன்.

அடுத்து, மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக மரியாதைக்குரிய
மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள்கூடச் சொன்னார்கள்.
இங்கேயும் பல முறை பேசப்பட்டது. நான் மீண்டும், மீண்டும் முதல்வர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது, இந்த அரசு
உருவானபோதே முத்தரப்புக் குழுவை அமைத்தீர்கள். நல்ல ஏற்பாடு
என்று நாங்கள் வரவேற்றோம். அமைக்கப்பட்டதோடு, அதன்
அடையாளபூர்வக் கூட்டங்களை நடத்தி, ரிக்கார்டுகள் செய்து
கொள்கின்றனவே தவிர, மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பது
சம்பந்தமாக, மூன்று விதமான நோக்கங்களுக்காக அது
உருவாக்கப்பட்டது என்று அரசு அறிவித்தது. ஒன்று, உடனடியாய்த்
திறப்பதற்கு வாய்ப்பு உள்ளவை எவை, கொஞ்சம் காலம் எடுத்தால்,
முயற்சித்தால் முடியக்கூடியவை எவை, எப்போது முயன்றாலும்
நிரந்தரமாய் முடியாமல், திறக்கவே முடியாது என்று கருதக்கூடியவை
எவை என்று கண்டறியப்பட்டு, உடனடியாய்த் திறக்கக்கூடியவை
சம்பந்தமான விஷயங்களை ஆய்வுக்கு எடுத்து, அதில் ஒன்றோ,
இரண்டோ திறப்பது. கொஞ்சம் காலம் முயற்சி செய்வது என்று
சொன்னால் அதை முயற்சிப்பது, முடியாது என்ற முடிவிற்கு வருகின்ற
ஆலைகளை முடித்து, அந்தத் தொழிலாளர்களுக்கான பணப்பயன்களை
settle செய்வது; இந்த மூன்றில் ஒன்றுகூட இப்போது வரை நிகழவில்லை.
நடக்கவில்லை, ரிசல்ட் கிடைக்கவில்லையென்பதை நான்

[திரு. கே.சி. கருணாகரன்] [2005 ஏப்ரல் 12

வருத்தத்தோடு பதிவு செய்கிறேன். 250 ரூபாய், அந்த மூடப்பட்ட ஆலைகளின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் நிறுத்தப்பட்டு விட்டது, கிடைக்கவில்லை. நாங்கள் அந்தத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டோம். அதுவும் கிடைக்கவில்லை. அதுவும் பாதிப்பு அவர்களுக்கு. ஒரு பக்கம் ஆலைகள் பூட்டப்படுகின்றன. மறு பக்கம் புதிய ஆலைகள் நிறைய உருவாகின்றன. அப்படி உருவாகின்றபோது ஒரு புதிய நவீனப் பண்ணை அடிமை முறை மாதிரியான, ஒரு நவீனக் கொத்தடிமை முறையைத் தமிழக முதலாளிகள் தமிழகத்திலே தொடங்கியிருக்கிறார்கள். கான்ட்ராக்ட் ரீதியில் பெண்களை வேலைக்கு அமர்த்துகிறார்கள். இளம் பெண்களை அமர்த்துகிறார்கள். 5 வருடம், 6 வருடம் வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள். முதல் வருடம் 30 ரூபாய், இரண்டாவது வருடம் 40 ரூபாய், இப்படி பத்து, பத்து ரூபாயாகச் சேர்த்து 5–வது வருடம் வருகிறபோது 60, 70 ரூபாய் தினசரி கூலியிலே, வேலை வாங்கி, கடைசியில் 5 ஆண்டு,.6 ஆண்டு பூர்த்தியான பிறகு, ஒரு குறிப்பிட்ட தொகையை, 25 ஆயிரம், 30 ஆயிரம் என்ற முறையிலே கொடுத்து, அவர்களை வெளியே அனுப்பிவிடுகிறார்கள். இந்த ஐந்தாண்டு, ஆறாண்டு காலமும், அந்தப் பெண்களை அவர்களின் சொந்த ஆலைகளுக்குள்ளேயே வீடுகளைக் கட்டித் தந்து, அவர்களுடைய வளாகத்திற்குள்ளேயே வைத்திருந்து வேலை வாங்கிக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லை. தமிழகத்தின் தொழிலாளர் நலத் துறை சம்பந்தமாக, நம்முடைய அரசு இதைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு முறைப்படுத்தவேண்டுமென்று தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். இப்போதும் வலியுறுத்துகிறேன். அடுத்தது . . .

*பிற்பகல் 6–00*

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் சுற்றுவட்டாரத்தில் உள்ள பஞ்சாலைகளில் பெண்கள் பயிற்சியாளர்களாகப் பணி அமர்த்தப்படுகிறார்கள். பயிற்சிக் காலம் அதிகபட்சம் 3 ஆண்டுகளாக இருக்கிறது. பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் பஞ்சாலைக்குப் பஞ்சாலை வேறுபடுகிறது. பெண்கள் கொத்தடிமைகளாக—அங்கே குறைந்த கூலிக்கு—நடத்துவதாக இதுவரை தகவல் பெறப்படவில்லை. குறிப்பிட்டுப் புகார் பெறப்பட்டால், நிர்வாகத்தின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2005 ஏப்ரல் 12*]

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு உண்மை இருக்கிறது. மற்றொரு உண்மை, புகார் தரவில்லை என்பது அல்ல. நீங்கள் ஆணையிடுங்கள். தொழிலாளர் நலத் துறை போய்ப் பரிசோதனை செய்யட்டும். எந்தச் சட்டத்தின்கீழ் பெண்களை இந்த மாதிரியான முறையில் அந்த நிர்வாகங்கள் வேலை செய்ய அனுமதிக்கிறார்கள். எந்த விதி அவர்களை அனுமதித்தது? ஏன் அவர்கள்மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கக் கூடாது, ஏன் அந்த ஆலைகளின் உற்பத்தியை நிறுத்தக் கூடாது? ஏன் அவர்களை வெளியே கொண்டுவரக் கூடாது? (குறுக்கீடு) இல்லை, இல்லை, தென் மாவட்டங்களிலேயிருந்தும், பல இடங்களிலிருந்தும். ஆகவே . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கான்ட்ராக்ட் முறை என்னுடைய கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்ததுபோல, எனக்குத் தெரிந்த வரை மூன்று ஆண்டு காலம் இளம் பெண்களை ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். நிறையத் தொழிற்சாலைகளில், ஆலைகளில், பஞ்சாலைகளில் ஆரம்பத்திலேயே, தொடக்கத்திலேயே முழுத் தொகையையும் அந்தப் பெண்ணின் பெற்றோர்களிடம் கொடுத்து விடுகிறார்கள். பெற்றோர்களே விரும்பி, தங்கள் பெண்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று கருதித்தான் அவர்களுடைய மகளை அங்கே விட்டுவிட்டுச் செல்கிறார்கள். நான் கேள்விப்பட்ட வரை, அந்தப் பெண்கள் அங்கே கண்ணியமாக நடத்தப்படுகிறார்கள். Dormitory type accommodation—அவர்களுக்கு அங்கே தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எந்தவிதமான முறைகேடுகளும் அங்கே நடைபெற்றதாகப் புகார் வரவில்லை. ஏதாவது புகார்கள் வரப்பெற்றால், நிச்சயமாக இந்த அரசு அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது. புகார் வந்தால் நடவடிக்கை எடுப்போம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணக்கத்திற்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல் நான் முறைகேடுகள் நடந்ததாகச் சொல்லவில்லை. தவறுகள் நடந்ததாகக் குற்றச்சாட்டுகளைச் சொல்லவில்லை..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு புதிய கொத்தடிமை முறை வந்திருக்கிறது என்று சொன்னார். அது தவறான கருத்து. கொத்தடிமை முறை என்று சொல்ல முடியாது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 12

இந்தப் பெண்கள் முழுச் சுதந்திரத்துடன் இருக்கிறார்கள். எப்போது விரும்பினாலும் அவர்களுடைய பெற்றோர்கள் சென்று அவர்களைப் பார்க்கலாம். எப்போது வேண்டுமானாலும் அவர்கள் அங்கேயிருந்து வெளியேயும் செல்லலாம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்தைத் தீர்மானித்து, அது ஒரு வருடமோ, மூன்று வருடமோ, நிரந்தரமாக அவர்களுக்கு உணவு அளித்து, அவர்களை வைத்து வேலை வாங்குவது என்பது, அந்த ஊழியர்களுடைய நலன்களுக்காக அல்ல; ஒரு நவீன முதலாளித்துவ சுரண்டல் முறைக்காகவே அது செய்யப்படுகிறது. என்ன அவ்வளவு அக்கறை? கோடிக்கணக்கான மக்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பஞ்சாலைகளில் அந்தப் பெண்கள் அங்கேயே தங்கி வேலை செய்ய வேண்டுமென்று எந்தக் கட்டாயமும் இல்லை. எத்தனையோ பெண்கள் காலையில் வேலைக்குச் சென்று, மாலையில் வீடு திரும்பி விடுகிறார்கள். விரும்புகின்றவர்கள் அங்கே தங்குகிறார்கள்.

*பிற்பகல் 6–05*

**திரு. கே.சி. கருணாகரன்:** சரி. இதை ஒரு ஆய்வுக்கு மாத்திரம் எடுத்துக்கொண்டு, அவ்வாறு குறைகளோ, தவறுகளோ இருக்குமானால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 3 பேர் பேச வேண்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அதை முறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, விவசாயத் தொழிலாளிகளுக்கான கோலப்பன் குழுவினுடைய பரிந்துரையை அமலாக்குங்கள் என்று சொல்வதில் எந்த அரசியல் நோக்கமும் கிடையாது. கோலப்பன் என்கிற ஒரு I.A.S. அதிகாரி. நம்முடைய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட ஒரு குழுவை உருவாக்கி, அது ஆய்வு செய்தது. வெறும் கூலிப் பிரச்சினைக்காக மாத்திரம் அல்ல; பட்டா பிரச்சினைக்கு மாத்திரம் அல்ல. சமூக ஒடுக்கு முறையிலேயிருந்து, பொருளாதாரத் தாக்குதல்களிலேயிருந்தும் அவர்கள் வெளியிலே வர, சமூக ஒடுக்க முறையிலேயிருந்தும், பொருளாதார முன்னேற்றம் பெறுவதற்குமான முறையில் மொத்த நிலைமைகளையும் ஆய்வு செய்த ஒரு மிகச் சிறந்த ஆய்வு அறிக்கை அது. ஆகையினால்தான் கம்யூனிஸ்ட்கள் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். அதிலே ஏதாவது குறைகள்



2005 ஏப்ரல் 12] [திரு. கே.சி. கருணாகரன்]

இருந்தாலோ, அல்லது முடியாது என்று சொல்லிவிட்டால்கூட நாங்கள் புரிந்துகொள்ள முடியும். ஆகவே, அதைத் தேவையில்லாமல் காலம் கடத்த வேண்டிய அவசியம் இல்லை. கோலப்பன் குழுவினுடைய பரிந்துரைகளை இந்த அரசு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். அதிலே எதை ஏற்றுக்கொள்கிறோம், எதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம் என்பதையாவது எங்களுக்கும், நாட்டுக்கும் அறிவிக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, ஊழல்களை, சில முறைகேடுகளை, கோடிக்கணக்கான ரூபாய் போலியான முறையிலே ரசீதுகள் உருவாக்கி ஊழல் நடந்திருக்கக்கூடிய முறைகேடுகள் பற்றி எங்கள் கட்சியின் மாவட்டச் செயலாளர், கடலூர் மாவட்டச் செயலாளர் திரு. தனசேகரன் உண்மைகளை வெளியே கொண்டு வந்தார் என்பதற்காக, அவர்மீது ஒரு கொலை முயற்சி நடக்கிறது. அதிகாரிகளே, மாவட்ட ஆட்சித் தலைவரே கூப்பிட்டு, தனசேகரன், நீங்கள் walking எல்லாம் போகாதீர்கள். எங்களுக்கு சில தகவல்கள் வந்திருக்கின்றன. ஜாக்கிரதையாக இருங்கள் என்று சொல்கிற அளவிற்கு நிலைமை தீவிரம் அடைந்திருக்கிறது. இது சம்பந்தமாக அவருக்கு உரிய பாதுகாப்பைத் தர வேண்டும். அந்த ஊழல் குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எங்கள் கட்சியால் உரிய துறைக்குப் புகார் அனுப்பப்பட்டிருக்கிறது. இங்கேயும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நான் கவன ஈர்ப்பு அறிவிப்புகூட தந்தேன். கடைசி வரை எடுக்கப்படும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். முதல்வர் சம்பந்தப்பட்ட இலாகாவாக இருப்பதால், அது எடுத்துக்கொள்ளப்படும் என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியிருந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. காலையிலேகூட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு) உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஊழல் நடவடிக்கை வேறு. நான் எங்கள் மாவட்டச் செயலாளர் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார். அதுதான் ஊழியருக்குப் பாதுகாப்புக் கொடுங்கள் என்று கேட்கிறேன். மாவட்டச் செயலாளர் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார். அதுதான் தமிழ்நாடு பூராவும் இருக்கிற பிரச்சினை. மற்றது, நீங்கள் ஒன்றும் சமாச்சாரங்களில் கட்டாயமாகச் செய்ய வேண்டும். அதில் மாறுபட்ட கருத்து இல்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஊழல் செய்தால் நடவடிக்கை எடுங்கள். அதனால் defend பண்ணி நிற்கவில்லை. அது முறையான ஏற்பாடாக இருக்க

[திரு. கே.சி. கருணாகரன்] [2005 ஏப்ரல் 12

வேண்டும் என்பதுதான். அதிலே எங்களுக்கு வருத்தம் என்ன என்று சொன்னால், பெயர்களை நீங்களும் சொன்னீர்கள். திரு. சி.டி. தண்டபாணி பெயரைச் சொன்னீர்கள். தி.மு.க. எம்.எல்.ஏ.-க்கள் பெயரையெல்லாம் சொன்னீர்கள். அதே மாதிரி, சூரியமூர்த்தி என்று செல்வி பாலபாரதி அவர்கள் சொன்னார்கள். அந்தப் பெயரையெல்லாம் எடுத்துவிட்டு, இந்தப் பெயரை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதிலே என்ன நியாயம்? அதை நீக்கக் கூடாது. நீக்கியது சரியல்ல.

அடுத்தது, வீட்டு வசதிப் பிரிவு சம்பந்தமான 2 முக்கியமான பிரச்சினைகள். நீண்ட நாள் கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு கோரிக்கைகள் இருந்தால் எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) இல்லை, இன்னும் 3 பேர் பேச வேண்டும். மற்ற கோரிக்கைகள் இருந்தால் எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள், சுருக்கமாக முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** திண்டுக்கல்லில் இருக்கிற வீட்டு வசதி சம்பந்தமான பிரச்சினை. அதை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அதேபோல, திண்டுக்கல்லைச் சார்ந்த தமிழ் மொழிப் போராளி சார்லஸ் என்கிற ஒருவருடைய ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைக் கண்டறிந்து, உண்மை என்ன என்று தெரிந்து, அவருக்கு அந்த ஓய்வூதியத்தையும் கொடுக்க வேண்டும்.

அதே மாதிரி, குமரி மாவட்டத்திலே இருக்கிற குழித்துறை நகராட்சியிலே filter செய்து குடிநீர் கொடுக்க 2 வருடங்களாக நகராட்சி நிர்வாகம் அனுமதி வழங்காமல் இருக்கிறது என்கிற குறைபாடு இருக்கிறது. பளுகல், இடைக்கோடு சிறப்பு ஊராட்சிகளிலே குடிநீர்த் திட்டங்கள் அமலாக்கப்படாமல் இருக்கின்றன. அது அமலாக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

அடுத்து, வறிய ஏழை விவசாயிகளுக்கு பட்டா வழங்குவதிலே காலம் கடத்தப்படுவதாகவும், குமரி மாவட்டத்தில் உரிய பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லியும், கொல்லங்கோடு சிறப்புப் பேரூராட்சியிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று சொல்லியும் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. என்னுடைய கோரிக்கை ஒன்றே ஒன்றுதான். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் 20 வருடங்களுக்கு முன்னால் 10 ஏக்கர் பூமி; 5, 5 சென்ட், 106 Textile தொழிலாளிகள், அவர்கள் பெயரிலே கிரயம்



2005 ஏப்ரல் 12] [திரு. கே.சி. கருணாகரன்]

பண்ணியிருக்கிறார்கள். வாரியம் கையகப்படுத்தியது. வீடு கட்டவில்லை. திரும்ப அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று முடிவு. அரசு தயாராக இருக்கிறது. ஆனால் எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் செய்யாத காடாக இருக்கும் இந்த இடத்திற்கு வீட்டு வசதி வாரியம் (புகைப்படத்தைக் காட்டினார்) அபிவிருத்திப் பணிக்காக 50 இலட்சம் ரூபாய் பணம் கட்டினால், அந்த 10 ஏக்கர் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இதைத் தவறு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிகாரிகள் ஏற்றுக்கொண்டார்கள். அதை ஏற்றுக்கொண்டார்கள். அதிகாரிகள் ஏற்றுக்கொண்டார்கள். அதை ஏற்றுக்கொண்டார்கள். அதை முறையில் தீர்த்து அவர்களுக்குக் கொடுக்க உரிய, நியாயமான முறையில் தீர்த்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பது 4 ஆண்டு காலக் கோரிக்கை. 20 ஆண்டு காலத் தேவை. 106 தொழிலாளர்களுடைய சொந்த இடம். தயவுசெய்து அதைத் திரும்ப ஒப்படைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

பிற்பகல் 6-10

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கல்வி ஒரு மனிதனுக்கு முக்கியமானது என்று சொன்னாலும்கூட, ஒரு நாட்டின் வளர்ச்சிக்குக் கல்வியே அடிப்படையானது என்ற நிலையிலே, அதிலும் தாய் மொழிக் கல்வி மிகவும் அவசியமாகிறது. இன்றைய சூழ்நிலையில், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் தாய் மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, உலகத்திலே எல்லா நாடுகளிலும் பின்பற்றி வருகிற இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே தமிழ் படிக்காமலே பட்டம் பெறக்கூடிய அவல நிலை இருக்கிறது என்று நாங்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, நம்முடைய அரசுத் தரப்பிலே சொல்லக்கூடியது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இதை நீங்கள் ஏற்கெனவே பேசி, முதலமைச்சர் பதிலும் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், தமிழ் படிக்காமலே பட்டம் பெறக்கூடிய அவல நிலை முன்பு இருந்தது. ஆனால் அந்த நிலையை இப்போது

முற்றிலுமாக மாற்றிவிட்டோம். மழலையர் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை எந்தப் பள்ளிக்கூடமாக இருந்தாலும், அறிவியல் தமிழ் என்ற பாடத்தைக் கட்டாயமாக நடத்த வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஒரு G.O. அதற்காகப் போட்டிருக்கிறோம். ஆகவே, இன்றைய சூழ்நிலையில், தமிழ் படிக்காமல் யாரும் பள்ளிக் கல்வியை முடித்து வெளியே வர முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் ஏற்கெனவே பேசிய கருத்துகளை விட்டுவிட்டு, புதிதாக ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லி விடுகிறேன். ஒரு தீர்வுக்காகத்தான் நான் சொல்ல வந்தேன். முடிப்பதற்கு முன்பு முதலமைச்சர் பதில் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறிவியல் தமிழ் என்று சொன்னாலும்கூட, அரசு உத்தரவிட்டிருப்பதாகச் சொல்கிறீர்கள். முதலமைச்சர் ஏற்கெனவே பட்டியல் தயார் செய்யச் சொன்னார்கள், பட்டியல் என்னிடத்திலே இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. 75 விழுக்காடு பள்ளிகளிலே, தமிழை அந்தப் பள்ளி வளாகத்திலே பேசினால் தண்டனை, பெற்றோர்கள் சென்று பார்த்து தமிழைப் பற்றிப் பேசினால் தண்டனை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, ஏற்கெனவே கல்வி அமைச்சர் சொன்னார்கள், தேர்வுகள் எல்லாம் நடக்கின்றன என்று. வினாத் தாள்களை எல்லாம் கல்வி அமைச்சர் காட்டினார்கள். தாங்கள் ஏற்கெனவே பேசி, பதில் சொல்லப்பட்ட கருத்துகள் அவை. அதை விட்டுவிட்டு வேறு ஏதாவது புதிய கருத்துகள் இருந்தால் நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கல்வி மானியக் கோரிக்கை இந்த அவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட நாளன்று என்று கருதுகிறேன், திரு. ஜி.கே. மணி அவர்கள் இதே கருத்தைச் சொன்னார். நீங்கள் அறிவியல் தமிழைக் கட்டாயப் பாடமாக்கினாலும்கூட, இன்னும் நிறையப் பள்ளிக்கூடங்களில் அதை அமல்படுத்தவில்லை என்றார். அப்படியானால், எந்தப் பள்ளிகளில் அந்த அறிவியல் தமிழ்ப் பாடம் கற்றுத் தரவில்லையோ, அந்தப் பட்டியலைக் கொடுங்கள், நடவடிக்கை எடுக்கிறோம் என்று அன்றே சொன்னேன். ஆனால் இன்று வரை அந்தப் பட்டியலைக் கொடுக்காமல், பட்டியல் தயாராக இருக்கிறது





என்று சொல்லி, எங்களிடம் கொடுக்காமல், அதே குற்றச்சாட்டை மீண்டும் இந்த அவையில் சொல்லிக் கொண்டிருக்கிறார். இன்றைக்கு அதே குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் பட்டியலைக் கொடுக்கவில்லையா? கொடுத்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. இதற்கு ஒரு நல்ல தீர்வு ஏற்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காகச் சொல்கிறேன். இதற்குக் காரணம் (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அவையினுடைய நேரம் முக்கியம். தாங்கள் ஏற்கெனவே பேசி, பதில் சொல்லப்பட்ட கருத்துகளை மறுபடியும் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. நான் சொல்ல வருகிறேன். நான் சொல்வதற்கு முன்னாலே எல்லோரும் பேசுகிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, 1968 ஆம் ஆண்டு, அதாவது 23-1-1968-லே, இதே சட்டமன்றத்தில் இதற்காக ஒரு தனி சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, அதிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே ஓர் அரசாணையும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அரசாணை, G.O.Ms.No.105, கல்வி, நாள் 24-1-1968. அந்த அரசாணையிலே சொல்லப்பட்டிருப்பது—அதாவது, பகுதி-1, பகுதி-2 என்று இரண்டாகப் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பகுதி 1-லே, வட்டார மொழி அல்லது தாய் மொழி, இரண்டாவது, பகுதி 2-ல், ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத ஒரு மொழி என்று அந்த அரசாணையிலே இருக்கின்ற காரணத்தினாலேதான், இப்போது நீங்கள் தமிழிலே பாடம் நடத்த வேண்டும் என்று சொல்லி சட்டம் இயற்றினாலும், அல்லது அரசாணை வழங்கினாலும்கூட, அது உச்ச நீதிமன்றத்திலே நிராகரிக்கப்படுகிறது. நீதிமன்றத்திலே வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. நான் அதற்குள்ளே ஆழமாகப் போகவில்லை.

பிற்பகல் 6-15

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற வழக்கிற்கும், இந்த அறிவியல் தமிழ்ப் பாடத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஏற்கெனவே கடந்த அரசு காலத்தில், 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை, தமிழ்

மொழியிலேயே அனைத்துப் பள்ளிகளிலும் பாடங்கள் நடத்தப்பட வேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டு வந்ததால், அது challenge செய்யப்பட்டு, அது உச்ச நீதிமன்றம் வரை சென்று, அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. அதற்கும் இதற்கும் தொடர்பில்லை. இப்பொழுது நாங்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டம் என்னவென்றால், அறிவியல் தமிழ் என்ற ஒரு பாடத்தை ஒரு பாடமாக எல்.கே.ஜி.—மழலையர் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை எந்தப் பள்ளிக்கூடமானாலும் கட்டாயமாகச் சொல்லித் தரப்படவேண்டும் என்று சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றோம். இதற்கு எந்த நீதிமன்றத் தடையாணையும் இல்லை. இதை யாரும் நீதிமன்றத்தில் challenge செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறிவியல் தமிழுக்கே நான் போகவில்லை. அதைப் பற்றிச் சொல்லவில்லை. நீங்கள் சொல்கின்றீர்கள், அறிவியல் தமிழ் முழுமையாக இல்லையென்பதை நிரூபித்துச் சொல்கின்றேன். இருந்தாலும்கூட, உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருப்பதற்குக் காரணம், அப்படிப்பட்ட வழக்கு இல்லாமல் இருக்கவேண்டும், ஒரு தீர்வு ஏற்படுத்தவேண்டும். அதைப்போல பக்கத்தில் இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே, மகாராஷ்டிர மாநிலத்திலே இருக்கின்றது. அதற்குக்கூட ஒரு அரசாணை—ஒரு கோரிக்கை மனுவாக நான் முதலமைச்சரிடத்திலே கடிதம் கொடுத்திருக்கின்றேன். முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கை மனுவைக் கொடுத்தேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மகாராஷ்டிர அரசாங்கம் ஒரு G.O. போட்டிருக்கின்றது என்றும், கர்நாடக அரசாங்கம் ஒரு G.O. போட்டிருக்கின்றது என்றும், அதைப்போன்று இங்கே நாம் பின்பற்ற வேண்டுமென்றும் கூறுகின்றார்கள். மகாராஷ்டிராவிலே 4 மொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றார்கள். கர்நாடகத்திலே மும்மொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றார்கள். அங்கேயும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தாய் மொழியில்தான் பாடம் கற்றுத் தரவேண்டுமென்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த மகாராஷ்டிராவிலே, 2004 தீர்ப்பிலேயும்கூட, ஐந்தாவது வகுப்பு முதல் 3 மொழிகளைப் படித்த பிறகு, 4–வது



மொழியாக அந்தத் தாய் மொழி, சிறுபான்மை மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றால், 50 மார்க், அதாவது 4 மொழிகளும், மராட்டிய மொழியும், அந்த மாணவர் படிக்கின்ற சிறுபான்மை மொழியையும் சேர்த்து 100–க்கு 50 மார்க் என்றும், இதற்கு 50 மார்க் என்றும், இந்த மார்க்கை split பண்ணி 4–வது மொழியாகத்தான் பயில்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்நாட்டிலே இரு மொழிக் கொள்கையை நாம் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றோம். அப்படி இருந்தும், நம் அம்மா அவர்கள் புரட்சிகரமாக எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரை இன்று அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை கடந்த ஆட்சியிலே போடப்பட்ட அந்த G.O.விலேகூட அனைத்துப் பாடங்களிலும் பயிற்று மொழியாகத் தமிழ் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் உச்ச நீதிமன்றம் வரை சென்றிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அறிவியல் தமிழுக்குச் சட்டம் இயற்றப்பட்டதாக இங்கே குறிப்பிட்டார்கள். அதுபோன்று ஒரு சட்டம் இயற்றப்பட்டதா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை வெளியிடப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, ஒரு மிக முக்கியமான, இக்கட்டான சூழ்நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படியாவது தமிழைப் படிக்க வைக்கவேண்டுமென்று, சட்டத்தினுடைய பிடிகளிலெல்லாம் சிக்காமல் அவ்வளவு நேர்த்தியாக ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இப்போது நீங்கள் புதுச் சிக்கலை உண்டாக்கிவிடாதீர்கள். வேறு ஏதாவது பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சிக்கலை உண்டாக்கவில்லை. சிக்கலுக்கு ஒரு தீர்வு ஏற்படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஏற்கெனவே இருக்கின்ற அரசாணையில்...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் மற்றும் பல்வேறு நீதிமன்றங்கள் ஆகட்டும், உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. ஆரம்பக் கல்வி முதல் ஐந்தாம் வகுப்பு வரை கண்டிப்பாக அவர்களுடைய தாய் மொழியில்தான் அந்தப் பாடத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. அப்படி இருந்தாலும், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள்; நீதிமன்றத்திலே நம்முடைய அரசாணை எந்தவிதத்திலும் தடைபடக் கூடாது என்பதற்காக இன்றைக்கு அறிவியல் தமிழைப் பாடமாக அறிமுகப்படுத்தி, எல்.கே.ஜி.யிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை அந்த அறிவியல் தமிழ் கற்றுக் கொடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, தமிழ்மீது உங்களுக்கு அக்கறை இருந்தால், வேறு பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்ல வந்ததன் நோக்கத்தையே புரிந்துகொள்ளாமல், திரும்பத் திரும்ப . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, புரிந்துகொண்டார்கள். புரிந்துகொண்டுதான் பதில் சொன்னார்கள். வேறு ஏதாவது கருத்து இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலே நமக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது, ஒரு நல்ல தீர்வு வரவேண்டுமென்றால், தீர்மானம் நிறைவேற்றி—வட்டார மொழி அல்லது தாய் மொழி என்று சொல்லியிருக்கிறது பகுதி 1–லே. அப்பொழுது வட்டார மொழி என்று சொன்னால், அந்த வட்டாரத்திலே தமிழ் அல்லாத வேறு மொழி பேசலாம். அதையும் எடுத்துக்கொள்கிறார்கள். தாய் மொழி, தமிழ் அல்லாத மொழி பேசலாம். அதனாலே அதுவும் அடிபடுகிறது. இரண்டாவது, ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத ஒரு மொழி. இரண்டு பிரிவுகளாகக் கொடுத்திருப்பதால்தான், உச்ச நீதிமன்றத்திலே பாதிப்பு. ஆகவே அதை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் வட்டார மொழி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு அமைச்சர் தெளிவாக விளக்கம் சொன்னார்கள். மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய மொழிக் கொள்கையும், நம்முடைய மொழிக் கொள்கையும் வேறு. அதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே தயவுசெய்து தாங்கள்



அதில் சுருக்கமாகப் பேசி முடித்துவிட்டு, வேறு கருத்து ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேர்வைத் தலைவர் அவர்களே, ஆகவே அதைத் தமிழ் என்று மாற்றினால் பிரச்சினை இருக்காது. வட்டார மொழி என்ற இடத்தில், 'தமிழ்' என்ற ஒரு வார்த்தை வந்துவிட்டால் அங்கு பிரச்சினையே இருக்காது. நீதிமன்றத்திலும் நமக்குப் பாதிப்பு இருக்காது.

*பிற்பகல் 6–20*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.கே. மணி அவர்களும், அவருடைய கட்சித் தலைவர் அவர்களும் எப்போது பார்த்தாலும், எங்கே பார்த்தாலும் தமிழ், தமிழ், தமிழ் என்று அவர்கள்தான் தமிழ்க் குடிதாங்கிகள் என்பதுபோலவும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு மட்டும்தான் தமிழ்மீது பற்று உள்ளது என்பது போலவும் காட்டிக்கொள்ள முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் என்றுகூட ஒன்று நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு யாத்திரை எல்லாம் போய்க்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய தலைவருக்குப் பிறகு எதிர்காலத்தில் இவர்களுடைய கட்சியை நடத்தப் போகின்ற இவர்களுடைய தலைவரின் மகன், இப்போது மத்தியிலே அமைச்சராக இருக்கின்ற அவர்களுடைய சின்ன ஐயா, முதலில் வெள்ளைக்கார உடையை மாற்றி, தமிழர் உடையான வேட்டியைக் கட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்கு முதலில் இவர்கள் வழி செய்யட்டும். அவர் எப்போது பேட்டி கொடுத்தாலும் ஆங்கிலத்திலேயே பேசுகிறார். அவர் தமிழிலேயே பேசப் பழக வேண்டும். அதற்கு முதலில் வழி செய்யுங்கள். அதைச் செய்துவிட்டு, பிறருக்கு தமிழைப் பாதுகாப்பது பற்றி நீங்கள் உபதேசம் செய்யுங்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழை நாங்கள்தான் வளர்க்கப் போகிறோம் என்று சொல்லவில்லை. பொதுக் கூட்டங்களிலே, பத்திரிகையிலே சொல்வது, இந்தத் தமிழை வளர்ப்பது எல்லோருடைய கடமை. அரசியலுக்கு அப்பாற்பட்டுச் சொல்கிறோம். இதிலே விருப்பு, வெறுப்பு இல்லாமல் சொல்கிறோம் என்று எல்லா இடங்களிலும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதைத் தவறான நோக்கத்தோடு நீங்கள் பார்க்கிறீர்கள். தவறான கண்ணோட்டத்திலே பார்க்கின்ற காரணத்தினாலே அந்த எண்ணம்தான் உங்களுக்குத் தோன்றுகிறது. இன்னொன்றுகூட....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. இவரும், இவருடைய தலைவரும், தமிழ், தமிழ், தமிழ் என்று தமிழைப் பாதுகாக்க முற்படும்போது, அவர்களுடைய சின்னத் தலைவர் எப்போது பார்த்தாலும் pant அணிந்திருக்கிறார், குழாய் அணிந்திருக்கிறார். அவர் எப்போது பார்த்தாலும் ஆங்கிலத்தில் பேசுகிறார். இதை மக்கள் பார்த்து தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்றுதான் என்னுடைய வருத்தம். அதைத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடை அணிவதிலே–இப்போது நான் ரொம்ப வேதனையோடு சொல்கிறேன்–இங்கே தமிழ்நாட்டிலே ஆங்கில வழிப் பள்ளிக்கூடத்தினுடைய சங்கக் கூட்டம், அந்தக் கூட்டத்திற்கு வேட்டி கட்டி ஒருவர் செல்கிறார். வேட்டி கட்டிச் சென்றவரைப் பார்த்து, இங்கே வேட்டி கட்டி வரக் கூடாது என்று சொல்லி வெளியேற்றிய நிலை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதுவல்ல பிரச்சினை. அவர் குறிப்பிடுகின்ற அத்தகைய இடங்களில், நாங்கள்தான் தமிழைப் பாதுகாக்கப் பிறந்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால் நீங்கள் அப்படிச் சொல்லிக்கொள்கிறீர்கள். உங்கள் தலைவர் அப்படிச் சொல்லிக்கொள்கிறார். அதனால்தான் எங்களுக்கும் கேட்கத் தோன்றுகிறது. தமிழ், தமிழ், தமிழர் பண்பாடு என்று எப்போது பார்த்தாலும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறீர்களே, உங்கள் சின்னத் தலைவர் ஏன் தமிழர் உடையை அணிய மாட்டேன் என்கிறார்? வேட்டி கட்டச் சொல்லுங்கள் முதலிலே. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தமிழ்நாட்டிற்கு வருகின்றபோது வேட்டி கட்டி வருகிறார். வெளிநாட்டிற்கு, மற்ற இடங்களுக்குச் செல்கின்ற நேரத்திலே (குறுக்கீடு) இல்லை, இல்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. நம்முடைய பண்பாடு, கலாச்சாரம் (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அதையொட்டியிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னது, நம்முடைய பண்பாடு, கலாச்சாரம், அதையொட்டித்தான் மொழி அமைந்திருக்கிறது. மொழி, கலாச்சாரம், பண்பாடு, பிரிக்கவே முடியாத ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரிலே நாங்கள் டெல்லிக்குச் செல்கிறோம், கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு. வேட்டிதான் அணிந்துகொண்டு செல்கிறோமேயொழிய, coat, suit அணிந்து செல்வது கிடையாது. அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரிலே துபாய் சென்றோம், I.T. Exhibition–க்கு. அங்கேகூட தமிழனுடைய பெருமையைப் பறைசாற்றுவதற்கு வேட்டியிலேதான் சென்றோமேயொழிய, coat, suit–லே செல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெருந்தலைவர் காமராஜர் ரஷ்யாவிற்குப் போகிறபோது வேட்டியிலேதான் சென்றார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிரியானாலும் அவரிடம் ஒரு நற்பண்பு இருந்தால் அதைப் பாராட்ட வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று. நிதி அமைச்சர் சிதம்பரம் அவர்கள் Oxford–ல் படித்தவர். அவர் வேட்டி கட்டுகிறார். ஆனால் உங்கள் இயக்கம் தமிழைப் பாதுகாக்கவே அமைந்திருக்கிற இயக்கம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நீங்கள் கூறும்போது, உங்கள் சின்னத் தலைவர் ஏன் வேட்டி கட்ட மாட்டேன் என்கிறார்? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சிதம்பரம் அவர்கள் Harvard–ல் படித்தவர். ஆனால் அவர் வேட்டி கட்டுகிறார். உங்கள் சின்னத் தலைவர் ஏன் வேட்டி கட்டவில்லை? இதுதான் கேள்வி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டி கட்டவில்லை என்று சொல்ல முடியாது. வேட்டி கட்டிக்கொள்கிறார். வெளிநாட்டிற்கு, பிற மாநிலங்களுக்குச் செல்கிற நேரத்திலே மத்திய அமைச்சராக இருக்கக்கூடியவர், அந்த உடையிலே செல்வதிலே தவறில்லை. ஆனால் இங்கே தமிழைப் பற்றிப் பேசுவதனாலே, தமிழுக்கும், உடைக்கும் சம்பந்தம் இல்லை. அதற்கு ஒரு

பிற்பகல் 6–25 [2005 ஏப்ரல் 12

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு explanation.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லதை யார் செய்தாலும் அதைப் பெருந்தன்மையோடு வரவேற்கின்ற குணம், மாபெரும் குணம் அம்மாவிடம் இருக்கிறது. அதேபோன்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சிகளுக்கும் இருந்தால் சரி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா கூறியதுபோல, கடந்த கடலூர் கூட்டத்தில்கூட அவர் pant போட்டுத்தான் அங்கே வந்திருக்கிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே, 5 ஆம் வகுப்பு வரை தமிழிலே நடத்தலாம், அந்தந்த வட்டார மொழியிலே நடத்தலாம் என்று தீர்ப்பு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பு இருக்குமானால், தமிழகத்திலே 5 ஆம் வகுப்பு வரை இப்பொழுது எல்லாப் பள்ளிகளிலுமே தமிழில் நடத்த வேண்டும், தமிழ் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று செயல்முறைப்படுத்தப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் நான் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டு இருக்கிறார். அதாவது, ஆரம்பக் கல்வி, அந்த மாணவருடைய தாய் மொழியில்தான் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் கேட்கிறேன். தாய் மொழியிலேயே பயிற்றுவிப்பதற்கு உச்ச நீதிமன்றமே உத்தரவு கொடுத்திருக்கிறபோது, 5 ஆம் வகுப்பு வரை அதை ஏன் நடத்தக் கூடாது என்றுதான் கேட்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அவரவர்கள் தாய் மொழி. தளி தொகுதியிலே தெலுங்கிலே அவர் நடத்த வேண்டும் என்று விரும்பினால் அந்தத்



2005 ஏப்ரல் 12] [திரு. சி. பொன்னையன்]

தாய் மொழியில் அவர் நடத்த வேண்டும். அறிவியல் தமிழ் ஏன் கொண்டு வரப்பட்டது என்றால், தெலுங்கிலே விரும்புகின்றவர்கள் தெலுங்கில் நடத்தலாம். அந்த மாணவர்கள், கன்னடத்தில் விரும்புகிறவர்கள் கன்னடத்தில் நடத்தலாம். ஆங்கிலத்தில் நடத்த வேண்டும் என்று விரும்புகிறவர்கள் ஆங்கிலத்தில் நடத்தலாம். ஆனால் science subjects இருக்கின்றன. Chemistry இருக்கிறது, Physics இருக்கிறது, Maths இருக்கிறது. அதுபோல்தான் அறிவியல் தமிழ் என்பதும் ஒரு science subject–ஆக வருகின்றபோது பயிற்று மொழியாக அது வரவில்லை. சட்ட ரீதியாகத் தடை இல்லை. இந்த வழியில் எப்படியும் தமிழை ஒவ்வொருவரையும் படிக்க வைத்துவிட வேண்டும் என்பதுதான் அம்மா அவர்களுடைய கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முறையில்தான் ஒரு அணுகுமுறையை மேற்கொண்டு, ராஜதந்திர அணுகுமுறையை மேற்கொண்டு, அனைவரும் கட்டாயம் தமிழைப் படிக்க வேண்டும், ஒரு subject-ஆகக் கொண்டு வந்து அறிவியல் தமிழைக் கொண்டு வருகிறபோது, பயிற்று மொழி, தாய் மொழி மட்டுமே இருக்க வேண்டும் என்பதை மீறி, இப்படித் தமிழ் மொழியில் படிக்க வைக்க ஒரு வாய்ப்பினை உருவாக்கி இருக்கிறார்கள். இதை நீங்கள் பாராட்ட வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி பேசி முடிக்கட்டும், இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** அது ஒரு subject–ஆக இருப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. ஒரு பாடமாக இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் என்ன சொன்னார் என்றால், தாய் மொழியிலேயே பயிற்று மொழி ஆகவும் இருக்கலாம் என்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு இருக்கிறது என்று சொன்னார். அதைத்தான் நான் கேட்கின்றேன். பயிற்று மொழியாகவே பாடமாக இருப்பது வேறு, பயிற்று மொழியாக இருப்பது வேறு. 5 ஆம் வகுப்பு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்பொழுது உச்ச நீதிமன்றத்திற்குப் போனார்கள் என்று தெரியும் அல்லவா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறாகப் புரிந்து கொண்டு சொல்கிறார். நான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆரம்பக் கல்வியிலே அந்த மாணவருடைய தாய்

[திரு. சி.வி. சண்முகம்] [2005 ஏப்ரல் 12

மொழியில்தான் அவர்கள் கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டும்
என்று சொல்கிறது. அதேபோன்று (குறுக்கீடு) நாங்கள் ஒன்றும் தவறாகச்
சொல்லவில்லை. நீங்கள் தலையில் அடித்துக்கொள்ள வேண்டாம்.
சொல்வதைப் புரிந்துகொள்ளுங்கள் முதலிலே. தாய் மொழியில், தமிழ்
அவர்களுக்குத் தாய் மொழியாக இருந்தால், தமிழில் கற்றுக் கொடுக்க
வேண்டும். தெலுங்கு அவருக்குத் தாய் மொழியாக இருந்தால்
அவருக்குத் தெலுங்கிலேதான் கற்றுக் கொடுக்க வேண்டும். உருது
அவர்களுக்குத் தாய் மொழியாக இருந்தால் உருதிலேதான் படிக்க
வேண்டும். அதனால்தான் இன்றைக்குத் தாய் மொழியிலேயே
படிக்க வேண்டும், வட்டார மொழி அல்லது அந்தத் தாய்
மொழியிலே கல்வி கற்க வேண்டும் என்ற சொல்கிறார்களே தவிர,
உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம் என்று
தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**டாக்டர் க. பொன்முடி:** நீங்கள் அதற்கு விளக்கம் சொல்லி விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். மணி,
பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.
உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உச்ச நீதிமன்றத்திற்குப்
போனதே உங்கள் ஆட்சிக் காலத்திலேதான். ஏன் இதைப் போட்டு
இப்படி இழுக்கிறீர்கள்? திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
(குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்கள் பேசட்டும், பேசி
முடிக்கட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** தமிழ் மொழிக் கல்வியைப் பற்றி, பயிற்று
மொழியைப் பற்றிப் பேசினால் உடையைப் பற்றிப் பேசுகிறீர்கள். சரி,
உடையைப் பற்றி, இந்த நாட்டுக்கு வழிகாட்டியாக இருந்த மிகப் பெரிய
தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், அண்ணாகூட coat, suit
போட்டுக் கொண்டிருந்தார். அப்படியென்றால், அண்ணாவைக்
கொச்சைப்படுத்துகிறீர்களா? உடையை அணிவதனாலே, மொழி
பேசுகிற நேரத்திலே, உடை அணிவதைக் கொச்சைப்படுத்தினால்
பேரறிஞர் அண்ணா அவர்கள் coat, suit போட்டாரே, அவரைக்
கொச்சைப்படுத்துகிறீர்களா? இதுதான் என்னுடைய கேள்வி.
(குறுக்கீடு) இல்லை, உடைக்கும், இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?



2005 ஏப்ரல் 12]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டில்
coat-ம், suit-ம் போடவில்லை. இன்னும் சொல்லப் போனால்,
இந்தியாவில் போடவில்லை. அவர் வெளிநாட்டிற்குச் சென்றபோது
மட்டும்தான் coat-ம், suit-ம் அணிந்தார். ஆனால் உங்கள் சின்னத்
தலைவர் இங்கேயே தமிழ்நாட்டிலேயே pant–தான் போடுகிறார்.
டெல்லியிலும் pant–தான் போடுகிறார். நீங்கள் இங்கே விதண்டாவாதம்
செய்வதை விட்டு விட்டு, அவரை convince பண்ணி, முதலில் அவரை
வேட்டி அணியச் செய்யுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு சட்ட அமைச்சர் ஒரு கருத்தை அழகாகச் சொன்னார்.
உடை, கலாச்சாரம், இதெல்லாம் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது
என்று. அதிலே நான் குறுக்கிடவில்லை. உடையின் அடிப்படையிலும்
கலாச்சாரம் வருகிறது. உணவின் அடிப்படையிலும் கலாச்சாரம்
வருகிறது. எனவே தமிழ்நாட்டு உணவைச் சாப்பிடுவதற்காக,
சென்னையில் இருக்கிற Chinese Restaurants தமிழ்நாட்டில் தடை
செய்யப்படுமா?

பிற்பகல் 6–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இந்த நேரத்திலே
உங்களுக்கு ஞாபகம் எங்கே போயிருக்கிறது பாருங்கள். (சிரிப்பு)
திரு. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
உங்களுடைய கட்சியினுடைய தலைவர், அமரர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் coat-ம், suit-ம் போட்டிருந்தார். நிறைய இடங்களிலே
போட்டுக்கொண்டிருந்தார். அதைக் கொச்சைப்படுத்துகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அதற்கு விளக்கம்
சொல்லப்பட்டு விட்டது. மணி, பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதுமட்டுமல்ல, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நிதி ஒதுக்கச்
சட்டமுன்வடிவிலே ஏதாவது பேசுங்கள். இன்னும் இரண்டு பேர்
பேசவேண்டும். நீங்கள் வேறு ஏதாவது கருத்துகளைப் பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, கொச்சைப்படுத்துவதனாலே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீங்கள் தமிழ், தமிழ் என்று பேசுவதனாலே சொன்னார்கள். அதெல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. தயவுசெய்து நீங்கள் நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே வேறு ஏதாவது பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீக்கக் கூடாது நீங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் இப்பொழுது பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. வேறு ஏதாவது கருத்துகளைப் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கினீர்கள் என்று சொன்னால், அவரைப் பற்றிச் சொன்னதையும் நீக்கவேண்டும். (குறுக்கீடு) எல்லோருக்கும். இல்லை, ஏன் நீக்கவேண்டுமென்று சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நீங்கள் ஏதாவது பதில் சொல்லுங்கள். இல்லையென்றால், நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே பேசுங்கள். அதற்காக ** முறையற்றது.

**திரு. ஜி.கே. மணி:** அப்போது முதலமைச்சர் சொல்லலாம், நாங்கள் சொல்லக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள். ஏதாவது பதில் சொல்லுங்கள். நீங்கள் சொல்லக்கூடிய பதிலை நான் பதிவு செய்துகொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசுவதற்கு விரும்புகிறீர்களா, விரும்பவில்லையா மணி? தாங்கள் பேசுவதற்கு விரும்புகிறீர்களா, விரும்பவில்லையா? அடுத்த ஆளைக் கூப்பிடட்டுமா? தயவுசெய்து நீங்கள் பேசவேண்டுமென்றால் பேசுங்கள், இல்லாவிட்டால், அடுத்த ஆளை அழைக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலே தமிழ் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். (குறுக்கீடு) சிரிக்கக் கூடாது. அதாவது எவ்வளவு கொச்சைப்படுத்தினாலும், இழிவுபடுத்தினாலும், எங்களுக்கும் காலம் வரும், கட்டாயம் நீங்கள் வேடிக்கை பார்க்க ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாமே நீங்கள் ஏற்கெனவே பேசியது மணி. (குறுக்கீடு) மணி, தாங்கள் இதெல்லாம் ஏற்கெனவே பேசியது. சட்ட அமைச்சர் அதற்குரிய பதில் சொல்லியிருக்கிறார். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார். பேசியதையே ஏன் பேசுகிறீர்கள்? அரைத்த மாவையே அரைக்காதீர்கள். அரைத்த மாவையே அரைக்கக் கூடாது என்னும்போது, நீங்கள் தோசையாகப் போட்ட மாவைக் கொண்டு வந்து மறுபடியும் அரைத்துக்கொண்டே இருக்கிறீர்கள். தயவுசெய்து நீங்கள் நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே வேறு கருத்துகள் ஏதாவது இருந்தால் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதில் தமிழைப் பற்றி இருக்கிறது. தமிழ்ப் பண்பாடு, வளர்ச்சியெல்லாம் இருக்கிறது. அதையொட்டித்தான் பேசுகிறேன். நீங்கள் வெளியிலே போய்ப் பேசுகின்றேன் என்று நினைக்கக் கூடாது. ஏதோ தமிழ் என்று சொன்னால் எல்லோரும் நீங்கள் சிரிக்கிறீர்கள். வெற்றிக்குக் காரணமாக, இதே சட்டமன்றத்திலே நடக்கும். நடக்காமல் போகாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நான் குறிப்பிடுவது, அவையினுடைய நேரம் முக்கியம். தாங்கள் ஏற்கெனவே பேசி, பதில் சொல்லப்பட்ட கருத்துக்களை—இன்றைக்கு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு என்பது, ஏதாவது விடுபட்டுப் போன கருத்துகளைச் சொல்வதற்காகக் கொடுக்கப்படக்கூடிய வாய்ப்பு இது. தயவுசெய்து அந்த மாதிரிப் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இட ஒதுக்கீடு ஒவ்வொரு மனிதனுக்கும் மிக முக்கியமானது. இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே, உதாரணத்திற்கு நமக்கு 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு இருந்தாலும்கூட, அதிலே இருக்கிற பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு இருக்கிறது. இதிலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மிக முக்கியமாக 30 சதவிகிதம் என்று சொல்லுகின்ற நேரத்திலே, இதிலே பெரும்பான்மை 92 சமுதாயங்களுக்கு மேலே இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக மக்களைக் கொண்ட சமுதாயம் இருக்கக்கூடிய முதலியார், செட்டியார்,

[திரு. ஜி.கே. மணி] [2005 ஏப்ரல் 12

நாடார், நாயுடு, அதைப்போலவே தேவர், இப்படி 92 சமுதாயங்கள் இருக்கின்றன. இதிலே 30 சதவிகிதம் என்று வைத்துக்கொண்டு, உதாரணத்திற்கு 100 வேலைவாய்ப்பு என்று சொன்னால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30. இந்த 30 இடங்களைத் தேர்வு செய்யக்கூடிய ஒருவர், அவர் விரும்பினால் இரண்டு, மூன்று சமுதாயங்களைச் சார்ந்தவர்களையே, இந்த 30 ஆட்களைத் தேர்வு செய்துவிட்டு, மற்றவர்களுக்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இது உண்மையான சமூக நீதியாக இருக்க முடியாது. இப்பொழுது இருக்கிற இந்த இட ஒதுக்கீட்டிலே மிகப் பெரிய குளறுபடியிருக்கிறது, குறைகள் இருக்கின்றன. ஆகவே இந்த இட ஒதுக்கீட்டு முறையை மாற்றி, தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறை, அதாவது compartmental reservation என்று சொல்கிறார்கள்—இந்த முப்பதை, நான்கு, ஐந்து தொகுப்புகளாக இப்படிப் பிரிக்கின்ற நேரத்தில், எல்லா சமுதாய மக்களுக்கும் உரிய பங்கு கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே இன்று இருக்கிற இந்த இட ஒதுக்கீட்டு முறையை மாற்றி, தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறை கொண்டுவர வேண்டும். அது கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலே இருக்கின்றது. பெரியார் பிறந்த இந்த மண்ணிலே, சமூக நீதி மண்ணிலே அதை நிலைநாட்ட வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இஸ்லாமியர்களுக்கு, கிறிஸ்தவர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு மற்ற மாநிலங்களிலேயிருக்கிறது. அவர்களுக்கும் (குறுக்கீடு) இல்லை, இப்பொழுது கேரள மாநிலத்திலே இருக்கிறது, கர்நாடக மாநிலத்திலே இருக்கிறது. ஆகவே அதைப்போல இங்கேயும் பின்பற்ற வேண்டும். இதையெல்லாம் கொண்டு வருவதற்கு, இங்கே உச்ச நீதிமன்றத்திலே தடை என்று சொன்னாலும்கூட இதிலே ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும். மத்திய அரசை வலியுறுத்தக்கூடிய வகையிலே இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானமாக நிறைவேற்றி, 100 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு வழிவகுக்க வேண்டும். இன்னொன்று. அந்தந்த மாநிலங்களின் நிலைமைக்கேற்ப இட ஒதுக்கீட்டை வகுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு கோரிக்கையை இந்த மன்றத்தின் மூலமாகத் தீர்மான வடிவிலே நிறைவேற்றி அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6–35*

இப்போது எல்லாம் உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. அரசு வேலைவாய்ப்பு



2005 ஏப்ரல் 12] [திரு. ஜி.கே. மணி]

எல்லோருக்கும் அரிதாகிக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், தனியார் துறையில் இட ஒதுக்கீடு என்பது காலத்தின் கட்டாயம். தனியார் தொழிற்சாலைகள் நிறைந்த மாநிலம் மராட்டிய மாநிலம், மும்பை நகரத்திலே நிறையத் தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே பார்த்தீர்கள் என்று சொன்னால், ஒரு நல்ல சூழலை உருவாக்கி, முன்னாள் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு சுசில் குமார் சிண்டே அவர்கள் தனியார் துறை இட ஒதுக்கீட்டை அமலாக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் எல்லோருக்கும் உரிய வாய்ப்பு கிடைக்கிறது. ஆகவே அந்த வகையிலே, தமிழ்நாட்டில் தனியார் துறையில் இட ஒதுக்கீட்டை கட்டாயம் கொண்டு வர வேண்டும். இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை முடிவு என்ன, நிலைப்பாடு என்ன என்பதை அறிவிக்க வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இட ஒதுக்கீடு இருக்கிறது என்று சொல்கிறோம். இந்த இட ஒதுக்கீட்டிலேகூட, சென்னைப் பல்கலைக் கழகம் இருக்கிறது, இங்கே பார்த்தீர்கள் என்றால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆசிரியர் பணியிடங்களிலே 2 சதவீதம்கூட இல்லை. மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 3 விழுக்காடுகூட இதுவரையிலே கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட குறை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் ஆய்வு செய்து, எங்கெங்கெல்லாம் இந்தப் பிரிவினைச் சார்ந்தவர்களுக்குக் காலியிடம் இருக்கிறதோ, அந்தப் பின்னடைவுக் காலியிடங்களை நிரப்புவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு வேண்டும். அப்போதுதான் எல்லாச் சமுதாயத்தவர்களும் உயர் பதவிக்கு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதைக் கொண்டு வர வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, மிக முக்கியமானது இளைஞர் சக்தி. காலையில்கூட பேசுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஒரு நாடு இளைஞர் சக்தியை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்கிறது என்று சொன்னால், அந்த நாட்டை முன்னேறிய நாடாக நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்த வகையிலே, இன்று இளைஞர் சக்தி வீணாகிக் கொண்டிருக்கிறது. படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், இந்த அரசாங்கம்

பிறப்பித்திருக்கிற அந்தப் பணி நியமனத் தடையாணையை விலக்கிக்கொள்ள வேண்டும். ஒரு சில துறைகளில் விலக்கியிருக்கிறீர்கள். அதை முழுமையாக விலக்கிக்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இப்போது படித்த இளைஞர்களுக்கு சுய தொழில் தொடங்குவதற்கு பயிற்சி அளித்து, தொழில் தொடங்க மானியத்தோடுகூடிய கடன் வழங்குகின்ற நேரத்தில்தான் அவர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது, உற்பத்தி பெருகுகிறது. உற்பத்தி பெருகுகிற காரணத்தினாலே வருவாய் பெருகி, வறுமை ஒழிவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, இளைஞர் சக்தியை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். ஐந்து நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். அதைப்போலவே, இன்றைக்கு விளம்பரங்கள். எங்கே பார்த்தாலும் ஆபாசம் மலிந்த விளம்பரங்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. சுவரொட்டியாக இருந்தாலும் சரி, பத்திரிகைகள், நாளிதழ்கள், ஊடகங்கள், எல்லா இடத்திலும் பெண்களைக் கொச்சைப்படுத்தக்கூடிய வகையிலே இருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே, இது அறவே தடை செய்யப்பட வேண்டியது. பெண்களுக்கு முன்னுரிமை, முக்கியத்துவம் என்று சொன்னாலும்கூட, எங்கே பார்த்தாலும் ஆபாச விளம்பரங்கள். அதை உடனடியாகத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்குத் தொகுப்பு ஊதியம். இங்கே எல்லோரும் சொல்லிவிட்டார்கள், நிதிநிலை சீரடைந்து விட்டது என்று. ஆகவே அந்தத் தொகுப்பு ஊதியத்திலே இருக்கின்றதை மாற்றி காலவரைமுறை ஊதியம் கொடுக்கக்கூடிய வகையிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்கள் போராட்டத்திலே நீங்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்து, வேலையைக் கொடுத்துவிட்டீர்கள்.





பதவி உயர்வு இல்லாமல் இருக்கிறது. அதை வழங்க வேண்டும். அவர்களுடைய விட்டுப் போய் இருக்கிற கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையிலே, காவல் துறையினரைச் சார்ந்த குழந்தைகள் படிப்பதற்கு, ஒரு தரமான கல்வி பெறுவதற்குப் பள்ளி வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தோம். முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றினார்கள். நாங்கள் வரவேற்கிறோம். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியதற்குப் பாராட்டக்கூடிய அதே வேளையில், காவல் துறையினருடைய ஏராளமான கோரிக்கைகள் விடுபட்டுப் போய் இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு உலகப் பொதுமறையாக இருக்கின்ற திருக்குறள். இந்தத் திருக்குறளில் உதாரணத்திற்கு,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று சொன்னால், தமிழனுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் வாழக்கூடிய எல்லோருக்கும், உலகெங்கும் வாழக்கூடிய மனிதனுடைய வாழ்நிலையை எடுத்துச் சொல்லக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இந்த மாமன்றத்திலே நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தால், நிச்சயமாக அது நடைபெறும். இது மிகப் பெரிய முயற்சி. சொல்வதற்கு வேண்டுமென்றால் சிரிப்பு மாதிரி இருக்கும், பின்னால் உட்கார்ந்துகொண்டு. ஆனால், இது முக்கியமான கோரிக்கை. வரலாற்று நிகழ்வு. தமிழனுக்கு இருக்கிற பெருமை. (குறுக்கீடுகள்) பின்னால் சிரிக்கிறதைச் சொல்கிறேன், எனக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு. Sir, ஆகவே திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப்போலவே, நமக்குக் கல்விக் கண்ணைத் திறந்தவர், தமிழ்நாட்டில் எல்லோரும் ஓரளவுக்கு படித்திருக்கிறோம் என்று சொன்னால், அதற்குக் காரணம் காமராஜர்தான். ஆகவே, காமராஜரை நினைவுகூரக்கூடிய வகையிலே, பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினத்தை இந்த அரசு கல்வி தினமாக அறிவிக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைக்கிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2005 ஏப்ரல் 12

பிற்பகல் 6–40

அதைப்போலவே, சமூக நீதியினுடைய பிறப்பிடம் தந்தை பெரியார் பிறந்த மண், தமிழ் மண். ஆகவே, இந்தியாவிற்கு வழிகாட்டியாக இருக்கிற பெரியார் பிறந்த இந்த மண்ணிலே இருக்கக்கூடிய நாம், பெரியார் பிறந்த தினத்தை சமூக நீதி தினமாக அறிவிக்கவேண்டும் என்று அதையும் நான் இங்கே வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள். மணி,

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு பேர் பேசவேண்டும். இரண்டு பேர் பேசி, அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழ்நாட்டைப் பொறுத்தளவிலே ஓரளவிற்கு மின் உற்பத்தியிலே சீராக இருந்தாலும்கூட, இன்னும் மின் உற்பத்தி பெறுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இங்கே புனல் மின் திட்டத்தினாலே நிறைய மின்சாரம் பெறுவதற்கு ஒகேனக்கல் நீர் மின் திட்டம். இது நீண்ட காலமாக நிலுவையிலே இருக்கிற திட்டம். முன்னாள் மத்திய அமைச்சராக இருந்த...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தியில் இப்போதே தமிழ்நாடு உபரி மாநிலமாக, surplus state ஆக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறை சொல்லவில்லை. சீராக இருக்கிறது என்றுதான் சொன்னேன். குறையாக இருக்கிறது தமிழ்நாட்டிலே என்று சொல்லவில்லை. இருந்தாலும்கூட, கூடுதலாக உற்பத்தி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. முன்னாள் மத்திய அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களிடத்திலே நாங்கள் எல்லாம் கோரிக்கை வைத்தோம். இந்த ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தில் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



2005 ஏப்ரல் 12]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தைப் பொறுத்தளவிலே, தமிழ்நாடு அரசும், கர்நாடக அரசும் அதிலே பங்கிடுவதிலே சில பிரச்சினைகள் இருப்பதன் காரணமாக, மத்திய அரசு அதை ஆய்வு செய்துகொண்டு இருக்கிறது. கர்நாடக அரசு அதிலே கூடுதல் பங்கு கேட்கிறார்கள். அதற்கு நமது மாநில அரசு ஒத்துக்கொள்ளவில்லை. இன்னும் காவிரி நீர்ப் பிரச்சினை எப்படி முடிவடையாமல் இருக்கிறதோ அதைப்போல, அந்த ஒகேனக்கல் பிரச்சினையும் இருக்கிறது. இரண்டு மாநில அரசுகளும் கொண்டிருக்கின்ற கருத்து வேறுபாட்டின் காரணமாக சற்றுக் காலதாமதம் ஆகி இருக்கிறது. தீர்வு செய்ய வேண்டியது, தீர்வு காண வேண்டியது மத்திய அரசுதான் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இரண்டு மணித்துளிகளில் முடியுங்கள். (குறுக்கீடு) இரண்டு மணித்துளிகளில் முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முக்கியமாக இந்தப் பிரச்சினையை நான் சொல்ல வந்தேன். அதற்குள் அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். இந்தப் பிரச்சினை இருக்கக்கூடியதை, கர்நாடக அரசு ஒத்துக்கொள்வதற்கு முன்வந்திருக்கிறார்கள். முட்டுக்கட்டையாக இருந்தது, பேச்சுவார்த்தையில் தடை ஏற்பட்டது உண்மை. இப்போது நமக்குப் பகிர்ந்துகொள்ளக்கூடிய இந்த வேளையில், 3 சதவீதத்திலிருந்து 6 விழுக்காடு அவர்களுக்குக் கூடுதலா, நமக்குக் கூடுதலா, சரிபாகமா, இதுதான். இப்போது நான்கூட கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு, கர்நாடக அமைச்சரிடத்திலே பேசுகின்ற நேரத்திலே, நாங்கள் ஒத்துக்கொள்வதற்கு முன் வந்திருக்கிறோம் என்ற . . .

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நீங்கள் அந்த மத்திய அரசிலே—இப்போது பிரச்சினை, உங்களுடைய மத்திய அரசினுடைய கையிலேதான் இருக்கிறது. தீர்வு காண வேண்டியது மத்திய அரசுதான். ஆக, தமிழ்நாட்டினுடைய கோரிக்கைக்குச் சாதகமாக, நீங்களும் பரிந்துரை செய்து நமது மாநிலத்தின் நலனைப் பாதுகாப்பதற்கு நீங்களும் உதவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் சொன்னேன். நான் சொன்னால் நீங்கள் தவறாக நினைக்கக் கூடாது. இதே பிரச்சினையை, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு, மத்திய மின் துறை அமைச்சர் மரியாதைக்குரிய பி.எம். சையீத் அவர்களிடத்திலே பேசி, அவரும்

[திரு. ஜி.கே. மணி] [2005 ஏப்ரல் 12

கர்நாடக முதலமைச்சரிடத்திலே பேசி, ஒரு நல்ல இணக்கத்தை, எங்களுடைய சின்ன ஐயா அவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். (சிரிப்பு) நான் சொன்னால் சிரிக்கக் கூடாது. சிரிப்பீர்கள் என்றுதான் முன்னாலேயே நான் சொல்லிவிட்டேன். (சிரிப்பு) ஆகவே அந்த அடிப்படையிலே, நானும் தொடர்ந்து பேசிக்கொண்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள். அதனால் ஒன்றும் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மத்திய அமைச்சரிடத்திலே பேசி இருக்கிறார். கர்நாடக முதலமைச்சரிடத்திலே பேசி இருக்கிறார். தமிழ்நாட்டைச் சார்ந்த மத்திய அமைச்சர்கள் தமிழக அரசாங்கத்திற்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு உறுதுணையாக இருந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றும் தீங்கு செய்யவில்லை. அந்த அடிப்படையிலே, தமிழக அரசு இந்தப் பிரச்சினையை விரைவாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். நீங்கள் பார்த்தீர்களானால், மேட்டூர் அணைகூட மின் உற்பத்திக் கேந்திரமாக இருக்கிறது. அங்கே 40 மெகாவாட்தான் பண்ணுகிறார்கள். ஆனால் ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தினால் 1,150 மெகாவாட் மின்சாரம் கிடைக்க இருக்கிறது. இரண்டு பேரும் பகிர்ந்துகொண்டால்கூட நிறைய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பிறகு, விவசாயிகள் பிரச்சினைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். திரு. ஹக்கீம். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். இன்னும் இரண்டு பேர் பேசவேண்டும். திரு. ஹக்கீம். (குறுக்கீடு) பாக்கி வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் ஆகியவற்றில் இடைத் தேர்தல். (குறுக்கீடு) நான் சொல்லி விடுகிறேன். சிரிக்காதீர்கள். இப்போது தேர்தல் நேரம். இந்தத் தேர்தல் நேரத்தில் பாப்பாப்பட்டியிலே வேட்பாளராக நின்றவர் இன்று மரணம் அடைந்து இருக்கிறார். காலையிலே 7–30 மணிக்கு, குளிக்கப் போன இடத்திலே இரத்த வாந்தி எடுத்து இறந்து இருக்கிறார். எப்படி இறந்தார் என்ற செய்தி இதுவரையில் வரவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, D.P.I. சார்பில் வேட்பாளராக நின்ற திரு. நரசிங்கம் என்பவருக்கு T.B. இருந்திருக்கிறது. அவர் இரத்த வாந்தி எடுத்து இன்றைக்கு இறந்துவிட்டார் என்ற தகவல் வந்திருக்கிறது.



2005 ஏப்ரல் 12]

பிற்பகல் 6–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உரையை முடித்து விடுங்கள். வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். அதோடு முடித்து விடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதுமாதிரிப் பேசுவது முறையல்ல. தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஹக்கீம்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேரம் முடிந்துவிட்டது. திரு. ஹக்கீம். (குறுக்கீடு) வேறு ஏதாவது கோரிக்கை இருந்தால் நீங்கள் எழுதிக் கொடுங்கள். திரு. ஹக்கீம். (குறுக்கீடு) இல்லை, முடிக்க முடியாது. இன்னும் இரண்டு பேர் இருக்கிறார்கள். வேறு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் தயவுசெய்து எழுதிக் கொடுங்கள். திரு. ஹக்கீம். (குறுக்கீடு) வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். பேச்சை முடிக்கிறேன் என்று முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** சரி, அண்ணே, உட்காருங்கள், உட்காருங்கள். போதும் அண்ணே. அதிகமாகச் சிரித்து வயிறு வலிக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஹக்கீம், பேசுங்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிக் பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி ஆதாரம் இல்லாமல் எந்தக் குற்றச்சாட்டும் சொல்லக் கூடாது. அவர் பேசுவதற்குக் கொடுத்த நேரம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 12

முடிந்துவிட்டது. கடைசி வாக்கியத்தைச் சொல்லி நிறைவு செய்யுங்கள் என்று சொன்னால், வேறு ஏதோ பிரச்சினைக்குப் போகிறார். (குறுக்கீடு) எவ்வளவு நேரம் கொடுப்பது? எவ்வளவு நேரம் பேசுவது? (குறுக்கீடு) இல்லை. திரு. ஹக்கீம். (குறுக்கீடு) ஹக்கீம், பேசுங்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் அன்பிற்கும், பாசத்திற்கும், உயர்ந்த மரியாதைக்கும், கண்ணியத்திற்கும் உரிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அலைமகளும், மலைமகளும், கலைமகளும் ஒன்று சேர்ந்தாற்போல் ஓர் உருவாய், ஓர் உயிராய்த் திகழ்ந்து, உலகத் தாய் பெற்றெடுத்த தலைமகளாக வீற்றிருக்கிற தாயே, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் அண்ணன் கருணாகரன் சொல்கிறார், ஒரு வரி அம்மா சொன்னார் என் குழப்பமே தீர்ந்துவிட்டது என்று. மார்க்சிஸ்ட் சித்தாந்தத்தில் நம்பிக்கையுள்ள ஒருவர் இப்படி அச்சடித்த மாதிரி சொல்லக்கூடிய முதல் வார்த்தை இது; தமிழ்நாட்டில் இப்போதுதான் கேட்கப்படுகிறது என்ற பெருமைக்குரிய செய்தியோடு என்னுடைய வாதத்தைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு அருகிலே இருக்கிற அண்ணன் நன்மாறன் சொல்கிறார், இந்த அம்மா படு கெட்டிக்காரங்களாக இருக்கிறார்களே, எந்த subject—இப்ப 5 நிமிடத்திற்கு முன்னால் சொன்னதைச் சொல்கிறேன். வருகின்றார், brisk—ஆக, Tea சாப்பிட்டுவிட்டு வந்துகொண்டிருக்கிறார். உட்காருங்கள் அண்ணே! அவர் சொன்னதைச் சொல்கிறேன். எந்த subject–ஐ எடுத்தாலும் டக்குன்னு உடனே reply பண்ணுகிறார்கள், உடனே கோர்ட், தீர்ப்பு, நடவடிக்கை அவ்வளவையும் சொல்கிறார்களே, இவ்வளவு super intelligent–ஆக இருக்கிறார்களே (மேசையைத் தட்டும் ஒலி) என்று அவர் எனக்கு அருகிலே இருந்து சொல்கிறபோது, ஒரு அறிவுலகின் விடிவெள்ளியாக எங்கள் தாய் இருக்கிறார் என்ற பெருமைக்குரிய (குறுக்கீடு) பரவாயில்லை, நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள் அண்ணே! (குறுக்கீடு) பரவாயில்லை, சும்மா உட்காருங்கள். (குறுக்கீடு) நான் பார்த்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்மாறன், சொல்லுங்கள்.



2005 ஏப்ரல் 12]

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறமை எங்கிருந்தாலும் பொதுவாக மதிப்பதில் தவறில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அதற்காக மிகக் கூடுதலான முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதை நான் மறுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–50

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** அதாவது, வெளிப்படையாகத் தங்கள் உணர்வுகளைத் தெரிவிக்கிறபோது, அண்ணனுக்கும் பாராட்டு, முன்னால் இருக்கிற அண்ணனுக்கும் பாராட்டு. கல்வி, கல்வி, கல்வி என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று. அண்ணன் மணி அவர்கள்கூட இங்கே சொல்கிறபோது, பெருந்தலைவர் காமராஜரைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தக் காலத்தில் (குறுக்கீடு) அண்ணன் கோ.க. மணி, உங்கள் கட்சிக்கு டி. மணி. ஜி.கே. மணி என்று இல்லையே, (குறுக்கீடு) ஆம், கோ.க. மணி. நான் கரெக்டாகச் சொல்கிறேன். நான் தமிழுக்கு வந்துவிட்டேன், நீங்கள் இங்கிலீஷிலேயே இருக்கிறீர்கள். (சிரிப்பு)

பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜரைப் பற்றிச் சொல்கிறார்கள். நான் பயின்ற இடம். எனக்கு ஒன்று நினைவு இருக்கிறது. 30 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு திரைப்படம் வந்தது. அந்தப் படத்தில் அம்மாதான் அந்தப் பாட்டைப் பாடிக்கொண்டு வருவார்கள்.

'பாண்டிய நாட்டுச் சீமையிலே ஒரு பச்சைக் குழந்தை அழுததடி,
அது பாலுக்காக அழவில்லை, வெறும் படிப்புக்காக அழுததடி'

என்று சொல்லி, அன்றைக்கு அம்மா அவர்கள்தான் 'தாய்' என்ற ஒரு படத்தில், தாய், எங்கள் அம்மா, தாயாக அமர்ந்திருக்கின்ற இந்த ஸ்தானத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கே, 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே 'தாய்' என்ற அந்தப் படத்தில், கவியரசர் கண்ணதாசன் அவர்கள் இந்த வரிகளை எழுதிக் கொடுத்து, அந்த வாசகத்தைப் பாருங்கள், அன்றைக்கே அம்மாவை விட்டுப் பாடவிட்டுத்தான், தன்னுடைய கருத்தைப் பாட்டிலே பதிய வைக்க அவர் விரும்பியிருக்கிறார்; அந்தக் கருத்து அப்படி வந்தது.

இன்றைக்கு எல்லோரும் சொல்கிறோம், கல்விக்குக் கண் கொடுத்தவர் பெருந்தலைவர் காமராஜர், மறுக்கவில்லை. கல்விக்கு இன்றைக்கு உயிர் கொடுத்த தலைவியாக புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாகத்தான், (மேசையைத் தட்டும் ஒலி) 97 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு இலவசப் புத்தகம் ஒன்றாம் வகுப்பிலேயிருந்து 10–வது வகுப்பு வரை. (மேசையைத் தட்டும் ஒலி) என்ன சாதாரண விஷயமா? ரூ.61 கோடியே 4.5 இலட்சம். (குறுக்கீடு) +2 வரை, ஒன்றாவது வகுப்பிலிருந்து 12–வது வகுப்பு வரை.

தாய், தகப்பன், இடையிலே இறந்துவிட்டார்கள்; அந்த மாணவிக்கோ, மாணவனுக்கோ கல்வி தடைப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, 50,000 ரூபாய் அந்தப் பிள்ளையின் பெயரிலே டெப்பாசிட் செய்து, கடைசி வரை தடையில்லாமல் படிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உத்தரவை இட்டு, one ten, one ten, one ten, எங்கள் அம்மா one ten–லே பேசுகிறபோதெல்லாம், இந்த நாட்டிலே எதிர்க்கட்சிகளுக்கு எம்டன் குண்டு போட்டது மாதிரி, மடார், மடார், மடார் என்று அதிர்ச்சிக்கு ஆளாகிப் போய் நிற்கிறார்கள். ஆனால், one ten, one ten என்று அம்மா சொல்லி, இந்த அற்புதமான திட்டங்களுக்கு வழிவகுக்கிறபோது, ஒன்றை நான் நினைவுபடுத்துகிறேன். என் காங்கிரஸ் கட்சி சகோதரர்களுக்குச் சொல்கிறேன். காமராஜருக்கு ஒரு தடவை, ஒரு நிமிடம் உயிர் கொடுத்து, தமிழகத்திற்குச் சென்று வரச் சொல்லி இறைவன் கட்டளையிட்டால், எங்கள் தாயைப் பார்த்து, தாயே வாழ்க, உன் பணி வாழட்டும், (மேசையைத் தட்டும் ஒலி) உன் தலைமை நீடிக்கட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பணியை, இந்தச் சேவையைத் தொடர்ந்து செய் மகளே, உனக்கு என் வாழ்த்துக்கள் என்று எங்கள் தாயைப் பார்த்து காமராஜரே சொல்லி இன்றைக்குப் (மேசையைத் தட்டும் ஒலி) பெருமைப்படக்கூடிய அளவிலே கல்வித் துறையிலே புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசினார்கள், தமிழ், தமிழ், தமிழ் என்று. 'Daddy', 'Mummy'. அப்புறம் நிறையப் படித்தாயிற்று, பிள்ளைகள் எல்லாம் சந்தோஷமாக இருப்பதற்காக 'Dad', மம்மியை வந்து 'Mom' (சிரிப்பு) (குறுக்கீடு) ஆம், அதுதான். Daddy-யை 'Dad', அப்புறம் 'Mom'. இனி கொஞ்சம் நாள் கழித்தவுடனே Daddy-யைப் பார்த்து இன்னும் சுருக்கி, 'டேய்', Mummy–யைப் பார்த்து 'இம்'. இவையெல்லாம் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அம்மா அறிவியல் தமிழ், செம்மொழி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பெரியம்மாவுக்கு Maximum, சின்னம்மாவுக்கு Minimum என்றுதான் சொல்கிறார்கள். (சிரிப்பு)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலை எல்லாம் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அறிவியல் தமிழ்,





செம்மொழி, தமிழ் கட்டாயப் பாடம், படிக்க வேண்டும். தமிழ் படிக்காமல் யாரும் பட்டம் பெற்றுவிட்டு எங்கேயிருந்தாலும் சரி, வெளியே வந்துவிட முடியாது என்ற வார்த்தையைச் சட்டம் ஆக்கியது மாத்திரமல்ல, இன்றைக்கு அம்மா, அம்மா, அம்மா, அம்மா என்று, நாங்கள் அல்ல, நாடு முழுக்க, திக்கெட்டும் திரும்பிய பக்கமெல்லாம், சுவர்கள், போஸ்டர்கள், பேசப்படுகிற இடங்கள் எல்லா இடத்திலேயும் அம்மா, அம்மா, அம்மா என்று வந்து, எல்லோருமே இன்றைக்கு அம்மா என்ற வார்த்தைக்கு உயிர் கொடுத்த ஒரு தெய்வீகக் கலையோடு நாட்டிலே வீற்றிருக்கக்கூடிய பெருமையைப் பெற்றுக் கொடுத்தவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) யாராவது மறுக்க முடியுமா?

பிற்பகல் 6–55

வேளாண்மைத் துறையில் புரட்சியைப் பாருங்கள். அந்தப் பக்கத்திலேயிருந்து வர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். (சிரிப்பு) ஒரு ஆள், யாராவது தவறிப் போய் 'விவசாயம்' அப்படியென்று ஆரம்பித்தால்... (சிரிப்பு) இதனாலே நாடே மிரண்டு போய்க் கிடக்கிறது. (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) என்ன? மறுக்க முடியுமா என்று கேட்கிறேன். எங்கள் அமைச்சர், எங்கள் அம்மாவால் நியமிக்கப்பட்ட அமைச்சர் பதில் சொல்ல விவசாயத்திற்கு ஆரம்பித்தால், விதை போட்டு, நட்டு, நாற்று எடுத்து, வளர்ந்து, உறைந்து, அறுவடையையும் முடிக்கிற வரை (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் என்னவென்றால், heavy stuff. எங்கள் கொடுக்கிற கொடுப்பு—காரணம் என்னவென்றால், உரம், திடம், நல்ல சத்து, நல்ல வளம். ஆகவே, அம்மாவின் ஆட்சியில் வளர்ந்து வெளியே வருகின்றது. அதை எங்கள் மள, மள, மளவென்று வளர்ந்து வெளியே வருகின்றது. அதை எங்கள் அமைச்சர் சொல்கிறார்; இல்லையா? சும்மா...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேளாண்மைத் துறை அமைச்சர் ஏதும் பதில் சொல்ல வேண்டுமா? (சிரிப்பு)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** தேவையான அளவிற்கு (குறுக்கீடுகள்) அண்ணே, பழனிசாமி அண்ணே! உட்காருங்கள் அண்ணே! ஆஹா!...

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் எங்கள் அம்மா போட்ட பிச்சை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** வாழ்நாளிலேயே மிகச் சுருக்கமாகப் பதில் சொன்ன வேளாண்மைத் துறை அமைச்சருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) ஏனென்றால்,

ஒரே வரி என் அம்மாதான் என்று சொன்னால், ஒரு dictionary மாதிரி. சகலமும் முடிந்து விட்டது. 4 வரியில் பாரதத்தை முடித்த மாதிரி, ஒரே வார்த்தையில் அம்மாதான் என்றால், முடிந்தது.

"சும்மாக் கிடந்த நிலத்தைக் கொத்தி,
சோம்பலில்லாமல் ஏர் நடத்தி,
கம்மாக் கரையில் உழுது வைச்சி,
கரும்புக் கொல்லையில் வாய்க்கால் இட்டு,
சம்பாப் பயிரைப் பறித்து நட்டு,
தகுந்த முறையில் தண்ணீர் விட்டு,
நெல்லு விளைஞ்சிருக்கு,
வரப்பு உள்ளே மறைஞ்சிருக்கு!
அட, காடு விளைஞ்சென்ன மச்சான்,
நமக்குக் கையும் காலும்தானே மிச்சம்."

அன்றைக்கு நீங்கள் இந்த உதாரணத்திற்குப் பாடிச் சொன்னீர்கள். பாடியே சொன்னீர்கள்.

"மண்ணைப் பொளந்து சொரங்கம் வைச்சி,
பொன்னை எடுக்க கனிகள் வெட்டி,
மதிலை வைச்சி மாளிகை கட்டி,
கடலில் மூழ்கி முத்தை எடுக்கும்
வழிகாட்டி மரமான தொழிலாளர்
வாழ்க்கையில் அவர் பட்ட துயர் இனி மாறும்,
ரொம்பக் கிட்ட நெருங்குது நேரம்"

என்று புரட்சித் தலைவர் நாடோடி மன்னனில் அந்த வண்டியில் பாட்டுப் பாடிக் கொண்டு வருவார்கள். அந்தப் பாட்டைத்தான் உதாரணத்திற்கு அன்றைக்கு அவர் சொன்னார். கிட்ட நெருங்குது— பட்டுக்கோட்டையார் பாடலுக்கு உயிர் கொடுத்து, அதை சட்டமாக்கக்கூடிய திட்டத்திற்குக் கொண்டு வந்தது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னால், அதற்கு வடிவம் அமைத்து, அந்த வடிவத்தைச் செயலாக்கி, சட்டமாக்கி, இன்றைக்கு நாட்டில் நடமாட விட்ட பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் என்பதற்காக நான் இதைச் சொல்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)





கம்யூனிஸ்டுகள் பாட மாத்திரம்தான் முடியும். ஆனால், செயல்படுத்துவதற்கு எங்கள் அம்மாவால்தான் முடியும் என்பதற்காகத்தான். நீங்கள் எங்களுக்குத் துணைக்கு வர வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன். இதில் ஒன்றும் மாறுபட்ட பெரிய விஷயங்கள்—ஏனென்றால், ஒரு வரியில் நீங்கள் சொன்னபோது, எனக்கு அது மன நிறைவாகிறது. இப்போதுதான் என் குழப்பமே தீர்ந்தது தாயே என்று சொன்னீர்கள், பாருங்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. கருணாகரன், அவர் தாங்கள் சொன்னதைத்தான் சொல்கிறார். வேறு ஒன்றுமில்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** நான் குழப்பம் என்று சொல்லவில்லை. விளக்கம் என்றுதான் சொன்னேன். விளங்கிக் கொண்டேன் என்று சொன்னேனே தவிர, குழம்பிப் போனதாகச் சொல்லவில்லை. அவர் குழம்பாமல் இருந்தால் சரி.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–லே வறட்சி. 2002–லே வறட்சி. 2003–வது ஆண்டும் வறட்சி. 2004 ஆம் ஆண்டு பாதி வறட்சி, பாதி மழை. அடுத்தடுத்து கடுமையான தாக்குதல். அந்த வறட்சிக்கு மத்தியிலும் தமிழகத்தைப் பத்திரமாகப் பாதுகாத்து எந்த மக்களுக்கும், எங்கேயும் பஞ்சம், பசி இல்லை, பட்டினி இல்லை என்ற நிலைமையை உண்டாக்கி, உற்பத்தித் திறனையும் பெருக்கி, தமிழகத்தைக் காத்துக் கொடுத்து, அந்த வறட்சியிலும் புரட்சியை உண்டாக்கிய தாய் எங்கள் அம்மாவைத் தவிர, இந்த நாட்டில் வேறு எவரால் முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமையை இன்றைக்குச் சொல்கின்றபோது, இவ்வளவு கஷ்டத்திலும், இவ்வளவு நஷ்டத்திலும், இவ்வளவு வேதனையிலும், இந்த வெளிச்சத்தைத் தந்திருக்கின்ற அந்தத் தாய் எங்கள் நாட்டுக்குச் செய்ய வேண்டிய உதவியைச் செய்யுங்கள், எங்கள் மண்ணுக்குத் தர வேண்டிய, எங்கள் மக்களுக்கு நாங்கள் செய்ய வேண்டும் என்கிற அந்தக் காரியத்தைச் செய்வதற்கு உதவி செய்யுங்கள் என்று மத்திய சர்க்காரை எத்தனை தடவை கேட்பது? ஒரு மிகப் பெரிய சட்டப் பிரச்சினையின் காரணமாக, எவ்வளவோ விவாதத்திற்குள்ளாகி வரக்கூடிய இடத்தில், என் மனதை உறுத்திக் கொண்டிருக்கிற காரணத்தினால், எத்தனை கோடிக்கணக்கான மக்கள், படித்தவர்கள், அறிவார்ந்த பெருமக்கள் மத்தியில் இது அந்த உறுத்தலை உருவாக்கியிருக்கும் என்ற அடிப்படையிலே நான் சொல்ல விரும்புகின்றேன்.

[திரு. எம்.ஏ. ஹக்கீம்]

பிற்பகல் 7–00 [2005 ஏப்ரல் 12

எனது மரியாதைக்குரிய அண்ணன் எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே திரும்பத் திரும்பச் சொன்னார். 110 வாசிக்கிறீர்கள், 110 வாசிக்கிறீர்கள். இதற்கெல்லாம் எங்கேயிருந்து நிதி வரும்? எங்கேயிருந்து நிதி வரும் என்று. உடனே எங்களுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு நிதி அமைச்சர் சொன்னார், 8,000 கோடி ரூபாய் வரி வருமானம் என்று இருந்த இடத்தில் இன்றைக்கு 15,500 கோடி ரூபாயைத் தாண்டி நாங்கள் வந்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னால், முறையான வசூல், சரியான வசூல், சரியான நடவடிக்கை, திருட்டுத்தனம் இல்லை, மோசடித்தனம் இல்லை, ஏமாற்ற வேண்டுமென்று அவசியம் இல்லை. சரியாக வசூல் பண்ணுகிறோம், வருமானத்தை உண்டாக்குகிறோம், பிரச்சினையைத் தீர்க்கிறோம். சொன்னார்கள் இல்லையா? இதிலேயே முடித்து விட்டுப் போய் விடு என்று சாபத்தை இடுகிறீர்களா? டில்லியிலே இருக்கிறவர்களைக் கேட்கமுடியாதா? எங்கள் உரிமை, எங்கள் உரிமை. பிச்சை கேட்கவில்லை. டில்லியில் பிச்சை கேட்கவில்லை. தர்மம் கேட்கவில்லை. ஆண்டுக்கு 27,000 கோடி ரூபாய் வருமானத்தை, வரி வருமானமாகத் தமிழகத்திலிருந்து டெல்லிக்குக் கொடுப்பதற்கு எங்கள் ஆறரைக் கோடி மக்களின் பணம் தேவை. தமிழகத்தின் பாதிப்பை, கஷ்டத்தை, நஷ்டத்தை, வறட்சியை, சோதனையை, எங்கள் வேதனையைக் கடப்பதற்குத்தான் நிதியுதவி கேட்டால், யோசனை. ஆயிரம் தடவை இல்லை, தருவதற்கு இயலாது என்ற நிலைதான். பிறகு என்ன நாட்டின் ஜனநாயகம், பிறகு என்ன ஒற்றுமை, நாளை இந்தக் கேள்வி வருமா? வராதா?

"WE THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens;

JUSTICE, social and economic and political; . . .

EQUALITY of status and of opportunity;

and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the unity and integrity of the Nation;" **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2005 ஏப்ரல் 12]

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேச்சை நீங்கள் அனுமதிக்கக் கூடாது இந்தச் சபையிலே.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனது கருத்தை வலியுறுத்த வேண்டும் என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் இப்படிச் சொல்லியிருக்கிறார். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் பிரிவினைக் கொள்கையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. நாட்டின் ஒற்றுமையை என்றைக்கும் காப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தாய் தந்த விளக்கத்திற்குப் பிறகு அதிலே அரசியலும்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கடைசி வாக்கியம், ** என்று சொன்ன அந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் சொல்கிறேன். அம்மா அவர்கள் அதற்கு விளக்கம் தந்ததற்குப் பிறகு அந்த இடத்திற்குச் செல்லக் கூடாது. அந்த மாதிரியான நிலைமைகள் வந்துவிடக் கூடாது என்பதை மனதில் வைத்து. ஏனென்றால் தேசம் ஐக்கியம், ஒற்றுமை என்று ஆண்டாண்டு காலமாகப் பேசி—ஏன் கொஞ்ச நஞ்சம் வருஷமா நான் பேசியிருக்கிறேன்? தேசம், தேசியம் என்று 30 வருடத்திற்கு மேலாக, இப்போதும் நான் சொல்கிறேன், காவிரியிலே தண்ணீர் வரவேண்டும் என்று சொல்லுவது Supreme Court. தமிழகத்திற்குத் தேவையான தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்று Supreme Court சொன்னாலும் ஏற்றுக்கொள்ளாத கர்நாடகா, நாங்கள் தரமுடியாது. கேட்பவற்றைத் தருவதற்கு எங்களிடத்திலே நீர் இல்லை என்று மறுத்துப் பேசுகிறவர்கள். இந்த நாட்டின் தேவைக்கு, நாட்டின் பிரதமரே சொன்னாலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைமையை இவர்களே வளர்த்துக்கொண்டு வரக்கூடிய பேராபத்துக்கள் எல்லாம், அந்த அச்சத்தை என் போன்றவர்களுக்கு உண்டாக்கி விடுகிறதே, என்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எம்.ஏ. ஹக்கீம்] [2005 ஏப்ரல் 12

கட்டத்தில்தான், ஒருக்காலும் இந்த நாட்டில் அப்படிப்பட்ட அல்லது அப்படிப்பட்ட பிரிவினை வாதத்தை நடத்துகிற இடத்தில் ஒழிப்பை எங்கள் தானைத் தலைமைக்குப் பின்னாலே நாங்கள் இல்லை. எங்கள் தாயும் இல்லை. எங்களை வழி நடத்துகிற தலைவி இந்த தேசத்தின் ஐக்கியத்திற்காக போர்க் குரல் கொடுத்திருக்கக்கூடிய ஒரு அற்புதமான தலைவி என்பதை இந்த நாட்டில் உணர்ந்திருப்பதால்தான் இந்த நேரத்திலே இந்த வாதத்தை நான் வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நட்டம், நட்டம் என்று சொல்லி, நட்டத்திலே கிடந்த போக்குவரத்தை அற்புதமான இலாபத்திற்குக் கொண்டு வந்து, இந்த மாநிலத்திலே இப்படிப்பட்ட ஓர் அற்புத, அதிசயத்தைக் காட்டக்கூடிய வல்லமையும், கெட்டிக்காரத்தனமும், திறமையும் எப்படி எங்கள் தானைத் தலைவிக்கு இருக்கிறது என்பதைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு மின் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைச் சொன்னார்கள்.

*பிற்பகல் 7–05*

அதேபோலத்தான் தொழில் துறையில் அன்னிய நாடுகள் எப்படி இந்நாட்டை நோக்கி ஓடி வந்து கொண்டிருக்கின்றன என்ற மிகப் பெரிய, அற்புதமான அதிசயங்களை இங்கே தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். Information Technology, NASSCOM, Gartner, இந்த அற்புதமான, உலகப் புகழ் பிரசித்தி பெற்ற தொழில்கள் ஓடி வரத் தொடங்கி இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 2,000 கோடி ரூபாயிலே இருந்த அந்த ஏற்றுமதி, 10,000 கோடி ரூபாய்க்கு மேலாக மென்பொருள் ஏற்றுமதி என்பது, இன்றைக்கு இந்த நாட்டில், தமிழகத்திலே அதிசயமாக, அற்புதமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வரலாற்றுச் சுவடாக, ஏற்றுமதி வளமாக்கப்பட்டிருக்கிறது. வளமிக்க தமிழகத்தை உருவாக்குகிற அந்தப் பெரும் பணியில், அற்புதமான முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்கு, எங்கள் தாய், அத்தகைய சாதனைகளை உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறார். எல்லா அரசியல்வாதிகளும் நினைக்கிற மாதிரியல்ல. சுனாமியால் பாதிக்கப்பட்ட நேரத்திலும்கூட, நாம் பரிதவித்து, பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். ஆனால் நேற்றைய நாடாளுமன்றத் தேர்தல் எப்படி, நாளை வருகிற தேர்தல் எப்படி என்பதைப் பற்றி நிறைய அரசியல் விமர்சனங்கள் நடந்தன.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை மாத்திரம் நான் பணிவோடு தெரிவித்துகொள்கிறேன். எங்கள் தாய் ஓர் அறிக்கையைக் கொடுத்திருந்தார். அழிந்துவிட்ட மாதிரித் தெரியும், பீனிக்ஸ் பறவை.



2005 ஏப்ரல் 12] [திரு. எம்.ஏ. ஹக்கீம்]

மீண்டும் சாம்பலிலே இருந்து உயிர்த்தெழுந்து வந்து ஒரு வரலாறு படைப்பேன், நினைவிலே வைத்துக்கொள்ளுங்கள் என்று புரட்சித் தலைவி நான்கு நாட்களுக்கு முன்பாக இந்த நாட்டிலே இருக்கிற எல்லா அரசியல்வாதிகளுக்கும்—ஓய்ந்துவிட்ட மாதிரித் தெரியும். எழுந்து அடித்தால் எப்படி அடி விழும் என்பதை—இப்போது சட்டப் பேரவையில் இங்கே கேட்ட கேள்விகளுக்குப் பதில் கொடுக்கிற வேகத்திலேயே எங்கள் தாயின் அடி எப்படி விழும் என்பதை இந்த நாட்டிலே அனைவரும் பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அடி கொடுத்தால் சாதாரண அடி அம்மா கொடுப்பதில்லை, சுனாமி அடிதான். அந்த அடி எப்படி இருக்குமில்ல? அரசியலில் எங்கள் தாய் கொடுக்கிற அந்த சுனாமி அடி எதிர்த் தரப்பிலே விழுகிறபோது, நீங்கள் நினைக்கிற மாதிரி எல்லோரும் வந்து, எல்லோரும் பக்கத்திலிருந்து, பெரிய, பெரிய கூட்டணித் தலைவர்கள் காப்பாற்றி விடுவார்கள் என்று நினைக்காதீர்கள். அப்போதும் அந்தத் தலைவர்கள் ஓடி ஆஸ்பத்திரி பக்கம்தான் ஒளிந்துகொள்ளப் பார்ப்பார்களே தவிர, நிச்சயமாக அந்த நேரத்தில், அந்த ஆபத்தான சூழ்நிலையில் யாரையும் யாரும் காப்பாற்றப் போவது கிடையாது. ஆனால் இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கிற மக்கள், அடுத்தடுத்து ஏற்படுகின்ற இந்த அரசியல் அதிசயங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற மக்கள்— தோல்வி, தோல்வி என்று சொல்லி, திரும்பிய பக்கமெல்லாம் நீங்கள் எழுதினாலும், பேசினாலும், சொல்லிக் காட்டினாலும் அதிலேயே பிரமையை உண்டாக்க நினைத்தாலும், ஒருபோதும் எதிர்கால அரசியல் வரலாற்று வெற்றியை எங்கள் தாயிடத்திலிருந்து எவரும் பிரிக்க முடியாது, தட்டிப் பறிக்க முடியாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக் காட்டுகிறவிதத்திலே அவரின் அந்தப் புரட்சிகரமான நடவடிக்கைகள்.

போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் எடுத்துரைத்தால் எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்' என்று வெற்றி நடை போட்டு வருகின்ற தாயே, நான் மீண்டும் சொல்கின்றேன். குயில்கள் பாடும் அரசாங்கம் உங்கள் அரசாங்கம். தவழும் நிலவாம் தங்க ரதம், தாரகை பதித்த மணி மகுடம், குயில்கள் பாடும் அரசாங்கம், எங்கள் புரட்சித் தலைவியின் அரசாங்கம், அது இந்த நாட்டின் மக்களுக்கு குயில்கள் பாடுகின்ற அரசாங்கமாகத்தான்—கிளி போலப் பேசுங்கள், குயில் போலப் பாடுங்கள், மலர் போலச் சிரியுங்கள், குறள் போல வாழுங்கள் என்று, இன்றைக்கு வாழ்ந்து காட்டுகிற ஓர் உயர்ந்த இலக்கணத்தை, தத்துவத்தை உணர்ந்தவராய் வாழ்ந்து கொண்டிருக்கிற எங்கள் தாய், நாளை இந்தத் தமிழகத்தின் எதிர்காலத்தில், அடுத்து வருகிற தேர்தலில்

[திரு. எம்.ஏ. ஹக்கீம்] [2005 ஏப்ரல் 12

சத்தியத்தை நிலைநாட்டி, தருமத்தை வெற்றிபெற வைத்து, மீண்டும்
இந்த ஆட்சியில், இதே அரசவையில், இதே இடத்திலே (மேசையைத்
தட்டும் ஒலி) புதிய வரலாறு படைப்பதற்கு சரித்திரத்தில் ஒரு நாயகியாக
அல்ல, சரித்திரமாக: வரலாற்றில் ஒரு பொருளாக அல்ல, வரலாறாகவே
வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய அந்தத் தாய் புதிய சரித்திரத்தைப்
படைக்கிறபோது, புரட்சிகரமான அத்தியாயங்கள் எதிர்காலத்
தமிழகத்தின் சிறப்பைக் காக்கும், செழிப்பை உயர்த்தும், நல்வாழ்வைத்
தரும், அந்த வளத்தைத் தரக்கூடிய தாய் வாழ்வாங்கு வாழ்க! நீடு
வாழ்க! நிறைந்து வாழ்க! எங்கள் மக்கள் வளமாக வாழ்வதற்கு
நல்வாழ்த்துக் கூறி அழைத்துச் செல்க! உங்கள் இலட்சியப் பயணம்
வெல்லட்டும் எனச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) என் தாய்க்கு
வணக்கத்தைத் தெரிவித்து, அனுமதி அளித்த பேரவைத் தலைவருக்கு
என்னுடைய நன்றியைக் கூறி, இந்த அளவிலே நிறைவு செய்து,
அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்
தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள். பேசுவதற்கு நிறைய இருக்கிற
மாதிரித் தெரிகிறதே!

பிற்பகல் 7–10

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு
நம்முடைய நிதி அமைச்சரால் இந்த மாமன்றத்தில் வைத்திருக்கிற
நிதி ஒதுக்க மசோதாவின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை இந்த மன்றத்திலே
வைக்க விரும்புகிறேன். கவர்னர் உரையிலே தொடங்கி, நிதி ஒதுக்க
மசோதாவோடு இந்தப் பெரிய விவாதம் முற்றுப் பெறுகிறது. இவ்வளவு
நாளும் இந்த அவையிலே உட்கார்ந்திருந்தேன். இன்றைக்குத்தான் நான்
பேசுகின்றேன். கடைசிப் பேச்சாளன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இடையிலே ஒரு வாரம்
விடுமுறை வேறு இருந்தது உங்களுக்கு.

**திரு. துரைமுருகன்:** இதில் ஒரு ஆச்சரியம் தெரியுமா உங்களுக்கு
முதன்முதலாக நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், முதலிலே கவர்னர் உரை
படிக்கப்பட்டபோது நான்தான் முதலிலே பேசினேன். இன்றைக்கு
நீங்கள் போட்டிருக்கிற கடைசி பட்ஜெட். அதாவது அடுத்த முறை
நீங்கள் Vote on Account தான் எடுக்க முடியும். ஆனால் இந்த முறை
நீங்கள் போட்டிருக்கிற பட்ஜெட்டில், கடைசி பட்ஜெட்டில்
கடைசியாகப் பேசுகிறவன் துரைமுருகன்தான். அது ஒரு பெரிய ராசி.



2005 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தும்கூட முதலில் பேசக்கூடிய
அளவுக்கு வாருங்கள் நீங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆமாம். நான், மாலை நேர விவாதமாக இந்த
மன்றத்தை மாற்ற விரும்பவில்லை; அடுத்த முறை நான் அந்தப் பக்கம்
இருந்து பேசுகிறேனா, இந்தப் பக்கத்தில் இருந்து பேசுகிறேனா என்பதை
நாடு பின்னாலே விடையளிக்க இருக்கிறது. அது போகட்டும். இந்த
நிதிநிலை அறிக்கை இந்த மாமன்றத்திலே வைத்ததிலேயிருந்து நிதிநிலை
அறிக்கையைப் பாராட்டியவர்கள் எல்லாம், நம்முடைய நிதி
அமைச்சரைப் பாராட்டினார்கள். இது பனியில்லாத மார்கழி, கறை
இல்லாத நிலவு என்பதைப்போல், இது வரி இல்லாத பட்ஜெட், இதைப்
போட்டவர் பிரமாதம் என்றார். அவரும், தான் அப்படிப்பட்ட ஒரு
நிதிநிலை அறிக்கையைப் போட்டு விட்டோம் என்று உட்கார்ந்து
இருந்தார். அது தவறல்ல.

பட்ஜெட்டிலே வரி இல்லை. ஆனால் அதற்கு இரண்டு காரணங்கள்
உண்டு. காரணம், அடுத்த ஆண்டு விரைவிலே—இப்போதே தேர்தல்
சூடு பிடித்து விட்டது. எத்தனையோ கணிப்புகள் செய்து
கொண்டிருக்கிறார்கள். எப்படி இருந்தாலும், தேர்தலுக்குப்
போகிறபோது, எந்த ஆட்சியாக இருந்தாலும் ஏன் வரி போட
வேண்டும்? வரி இல்லாத பட்ஜெட் போட்டோம் என்று
மக்களிடத்திலே போகலாம் என்பது ஒன்று. இன்னொன்று, நிதியாதாரம்
பெருக வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், முதலில் சொன்ன
காரணம் சரியோ, தப்போ, அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை.
அது அரசியல். ஆனால் நிதி அமைச்சருக்கு சில ஜாக்பாட்டுகள்
அடித்தன. அந்த ஜாக்பாட்டுகள் அடித்ததால் அவருக்குத் தனியாக
நிதி வருகிறது. அதாவது, நிதி ஒரு வகையில் கிடைத்து விட்டது. எனவே,
3 பைசா, 5 பைசா, 28 பைசா, 1½ ரூபாய் வரி என்று ஏன் ஏற்ற
வேண்டும்? இந்த வரி எல்லாம் போட்டால் அதெல்லாம் அவ்வளவு
வரி ஆகாது. காரணம், அவருக்கு இப்போது இந்த நிதிநிலை
அறிக்கையிலே 12–வது நிதிக் குழு—12th Finance Commission ஒன்று
கிடைத்திருக்கிறது. அவர்களுடைய நிலைமை என்னவென்று கேட்டால்,
இதுவரையில் அவர்களிடத்திலே வாங்கிய கடனுக்கு, நிதி அமைச்சரே
சொல்லிக் கொண்டிருந்தார், 13.5% வரையிலே நாம் வட்டி கட்டிக்
கொண்டிருந்தோம். அதனாலே நாளொன்றுக்கு எவ்வளவு வட்டி
மட்டும் கட்டுகிறோம் என்று சொன்னார். ஒரு நாள் என்றால், 14.5
கோடி ரூபாய் நாளொன்றுக்கு நாங்கள் வட்டியும், அசலும் சேர்த்துக்
கட்ட வேண்டிய நிலையிலே இந்த அரசு இருக்கிறது என்று சொன்னார்.
இன்றைக்கு அந்த நிலை மாற்றப்படுகிறது, 12th Finance Commission–ல்.

[திரு. துரைமுருகன்] [2005 ஏப்ரல் 12

எப்படியென்றால், கடன் நிவாரணத்திற்காகப் பல்வேறு
காலகட்டங்களில் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசால் கடன்
வழங்கப்படுகிறது. 10 சதவிகித வட்டி முதல் 13.5 சதவிகித வட்டிக்கு
மேல் 31-3-2004 வரை வழங்கப்பட்டு, 31-3-2005 வரையில் நிலுவையாக
இருக்கிற கடன்களைப் புதிய கடன்களாகக் கருதி, அவைகளுக்கு 7.5
சதவிகித வட்டியில் 20 ஆண்டு காலத்திற்கு சமமாகப் பங்கிட்டுத் தருகிற
ஒரு ஏற்பாடு 12-வது நிதிக் குழுவினால் இவர்களுக்கு ஒரு
வரப்பிரசாதமாகக் கிடைத்திருக்கிறது. ஆகையினால், அவர்
சொன்னதைப்போல, நாள் ஒன்றுக்கு 14.5 கோடி ரூபாய் கட்ட
வேண்டும், 13.5% வட்டி என்று கேட்டால். ஆனால் இப்போது 7.5%
தான் வட்டி. அவர்களுக்கு நிறையக் கிடைக்கிறது. அந்த வகையிலே
பார்த்தால், இதன்மூலம் வட்டியாக நமக்குக் கிட்டத்தட்ட—
அவர்களுக்குப் பாதியாக மாறும். அவர்கள் கட்ட வேண்டியதில் 2,000
கோடி ரூபாய்க்கு அதிலே அவர்களுக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.
இது ஒன்று. இரண்டாவது...

பிற்பகல் 7-15

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 12th Finance Commission எத்தகைய
வாய்ப்புகளை மாநிலங்களுக்குத் தந்திருக்கிறது என்பதனை
மிகைப்படுத்தி, இல்லாததைக் கூறுகிற அணுகுமுறையை மாண்புமிகு
எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள்
மேற்கொண்டிருக்கிறார். ஒட்டுமொத்தமாக 1,28,795 கோடி ரூபாய்
31-3-2004 வரை outstanding. அதாவது, 31-3-2005 வரை மாநிலங்கள்
மைய அரசுக்குத் தரவேண்டிய பணத்தின் பாக்கி. அதை they are
re-scheduling. அப்படி re-schedule செய்து, 20 ஆண்டுத் தவணையிலே
கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். அப்படி அவர்கள்
சொல்கிறபோது எத்தகைய பணம் தமிழகத்திற்குக் கிடைக்கிறது
என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர்
புரியாமல் பேசிவிட்டார் என்றே நான் கருதுகிறேன். இதனால்
அனைத்து மாநிலங்களுக்கும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக 33,204.56 கோடி
ரூபாய் கிடைக்கிறது. ஆனால் இதிலே interest reduction மூலமாகத் தமிழக
அரசுக்குக் கிடைப்பது மிகச் சொற்பமான தொகை. 20 தவணைகள்
என்று நாம் மாற்றிப் போடுகிறபோது, lower principal payment வருகிறது.
அந்த அசலைத் தருகிறபோது, ஆண்டுக்காண்டு அசலைத் திருப்பிக்
கட்டுகிறோம். இந்த ஆண்டு சுமை குறையலாம். ஆனால், 20
ஆண்டுகளாகத் தொடர் சுமையாக மைய அரசு, மாநில அரசான
தமிழகத்தின்மேல் சுமத்துகிறது. அப்படியிருந்தாலும்கூட, மாநில



2005 ஏப்ரல் 12] [திரு. சி. பொன்னையன்]

அரசுக்குக் கிடைக்கின்ற relief என்ன, குறைந்த அசலைத் தருகின்ற
காரணத்தால், வட்டி 7.5 சதவிகிதமாகக் குறைத்திருக்கிற காரணத்தால்.
ஏதோ கோடி, கோடியாகக் கிடைத்துவிடவில்லை. 1,884.14 கோடி ரூபாய்.
எவ்வளவு காலத்திற்கு? 2005-லிருந்து 2010 வரை, 5 ஆண்டு
காலத்திற்குத்தான் தருகிறது. இதைத்தான் தெளிவுபடுத்தியிருக்கிறேன்
என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு என்ன
Finance Commission, 11th Commission? நானா போகிறேன்? நீங்கள்
கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களிலிருந்துதான். அவரைக்
காலையிலேகூட கேட்டேன் அவரிடத்திலே. இதையே நான்
அவரிடத்திலே கொடுத்துக் கேட்டேன். 31-3-2004 வரையிலே
வழங்கப்பட்டு, 31-3-2005 நிலவரப்படி நிலுவையாக இருக்கும் மத்திய
அரசால் மாநிலங்களுக்கு வழங்கிய கடன்கள்—இப்போது சொன்னார்,
1,28,795 கோடி ரூபாய், இவ்வளவு மற்ற மாநிலங்களுக்குச்
சேர்ந்திருக்கிறதே! நம்முடைய மாநிலத்திற்கு எவ்வளவு இதிலே வரும்
என்று நான் கேட்டேன். அவர் சொன்னார், கிட்டதட்ட நமக்கு
1,500 கோடி ரூபாய்க்கு வரும். அதற்கு வட்டி போட்டுகூட பாருங்கள்.
இப்போதே இவர் சொன்னார். நமக்கு 1,800 கோடி ரூபாய்க்கு வரும்
என்றார். ஆக, எவ்வளவோ குறைத்துப் பார்த்தால்கூட, (குறுக்கீடு)
குறைத்துப் பார்த்தால்கூட உங்களுக்கு வட்டி கட்டுகிற தொல்லை
குறைந்திருக்கிறது. அது ஓர் இலாபம்.

இரண்டாவது, மத்திய அரசு வசூல் செய்யும் income-tax, excise duty
போன்றவற்றிலிருந்து மத்திய அரசு, மாநிலங்களுக்குப் பங்கு
கொடுக்கிறது. அதற்குச் சில நெறிமுறைகளை நிதிக் குழு வகுத்திருக்கிறது.
பத்தாவது நிதிக் குழு ஒரு formula-வைச் சொன்னது. அதாவது, மத்திய
அரசின் மொத்த வருவாய் 100 per cent என்று வைத்துக்கொண்டால்,
அதில் மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கும் தொகுப்பை, total divisible
pool என்று சொல்லி, 29.5 per cent என்று சொல்கிறார்கள். இந்த 29.5
per cent-ஐ 100 என்று வைத்துக்கொண்டால், அதில் தமிழ்நாட்டினுடைய
பங்கு 6.637 per cent ஆகும். அதாவது, பதினோராவது நிதிக் குழுவிலே
தமிழ்நாட்டினுடைய பங்கு 5.338 per cent என்று குறைகிறது. ஆனாலும்,
பன்னிரண்டாவது நிதிக் குழுவில் divisible pool-லே 30.5 என்று ஆகும்.
ஆக, இந்த 30.5 per cent-ஐ 100 என்று வைத்துக்கொண்டால்,
தமிழ்நாட்டினுடைய பங்கு 5.305 per cent-ஆக மாறுகிறது.
அதுமட்டுமல்லாமல், இன்னமும் தெளிவாகச் சொல்வது என்றால்,
நம் மாநில அரசுக்காக மத்திய அரசு பகிர்ந்து அளிக்கும் தொகை

[திரு. துரைமுருகன்] [2005 ஏப்ரல் 12

ஒவ்வொரு ஆண்டும் 12 சதவீதமாகக் கூடிக்கொண்டே போகிறது.
மத்திய அரசு இதன்மூலம், நமக்கு, மாநிலத்திற்குத் தொகை அளிக்கிறது.

பிற்பகல் 7–20

2000–2001–ல் அப்படி அளிக்கப்பட்ட தொகை 2,783 கோடி ரூபாய்.
2001–2002–ல் நமக்கு அளிக்கப்பட்ட தொகை 2,856 கோடி
ரூபாய். 2002–2003–ல் நாம் வாங்கிய தொகை 3,047 கோடி
2003–2004–ல் கிடைத்தது 3,544 கோடி ரூபாய். 2004–2005–ல் 4,246 கோடி
ரூபாய் அதுவரையிலும் வந்திருக்கிறது. இந்த வருஷம் என்ன
எதிர்பார்க்கிறார்கள் என்று கேட்டால், எல்லாம் உங்கள் கணக்குதான்.
இதோ இப்போது என்னிடம் இருக்கிறது. இதிலே பார்த்தால்
2005–2006–ல் 4,677 கோடி ரூபாய் கிடைக்கும். அப்படியானால்,
சென்ற ஆண்டு 2004–2005–ல் 4,246 கோடியிலேயிருந்தது 4,677
கோடியாகும்போது, சென்ற ஆண்டிற்கும், இந்த ஆண்டிற்கும்
வித்தியாசம் என்று பார்த்தால்கூட 400 கோடி ரூபாய் கிடைக்கும்.
ஆக, உங்களுக்குக் கிட்டத்தட்ட இதன்மூலமாகவும், உங்களுக்கு
12–வது நிதிக் குழு கொடுத்திருக்கிற சில சலுகைகள்மூலமாகவும்,
உங்களுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுவதும்தான். மாநிலங்களுக்கு ஒரு
பெரிய வரப்பிரசாதம்தான். நான் ஒத்துக்கொள்கிறேன். அதன்மூலமாக
நமக்குக் கிடைக்கக்கூடிய பகுதி உங்களுக்கு 2,000, 2,400 கோடி ரூபாய்க்கு
மேலே கிடைக்கிற காரணத்தால், இந்த அரசுக்கு வரி போட வேண்டிய
அவசியம் ஏற்படவில்லை. ஆகையினாலே,...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மைய அரசு 12–வது நிதிக் குழுவினுடைய, 29.5%
என்றிருந்ததை, 30.5% என்று ஒருபுறம், ஒரேயொரு சதவிகிதம்
உயர்த்தியதை நான் ஏற்கெனவே சொன்னேன். யானைப் பசிக்கு
சோளப் பொரி போடுவதாக அந்தவொரு நிதிப் பகிர்வு தமிழகத்திற்குக்
கிடைத்ததேயொழிய, அதிகமாக இல்லை. ஆனால் மாற்றாக என்ன
செய்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் புரிந்து
கொள்ளவேண்டும். இதுகாறும், 30 சதவிகிதம் grant, 70 சதவிகிதம் கடன்
என்ற முறையிலே மைய அரசு தந்து கொண்டிருக்கிறது. ஆனால்,
தற்போது 70 சதவிகிதமும் கடன் என்று, 70 சதவிகிதக் கடனை
Market–லே சென்று, நிதி நிறுவனங்களிடம் சென்று, தமிழக அரசு
கடன் வாங்க வேண்டுமென்ற ஒரு துர்பாக்கிய நிலையை உருவாக்கி,
அதற்குப் பல condition-களை எல்லாம் போட்டு, அந்த 70 சதவிகிதக்
கடனைக்கூட மாநில அரசு வாங்க முடியாத ஒரு நிலையை
உருவாக்கியிருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
அதைப் படித்துப் பார்க்க வேண்டும், படித்துப் புரிந்து
கொள்ளவேண்டும்.



2005 ஏப்ரல் 12]

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இப்படிப்
பேசக்கூடாது. நான் சரியான புள்ளிவிவரத்தை உங்களுக்குச்
சொல்கிறேன். I am not insulting you. This is not my intention. You must
bear this in mind. உதாரணமாக, நான் சொல்வது, 70 சதவிகிதம் கடனை
மாநில அரசே தேடிக் கொள்ள வேண்டுமென்று மைய அரசு
கூறியிருக்கிறது, இல்லையா? இதற்கு முன்னால் 30% grant, 70% loan
என்ற முறையிலே இருந்தது. அது தற்போது மாற்றியமைக்கப்பட்டு
விட்டது. மாநிலங்களின்மீது அந்தச் சுமை சுமத்தப்பட்டிருக்கிறது.
நிதிநிலையில் தடுமாறுகிற மாநிலங்கள், சிரமத்தில் இருக்கின்ற
மாநிலங்கள், வளர்ச்சித் திட்டங்களுக்குப் போக முடியாத பல நிதி
நெருக்கடிகளை உருவாக்குவதற்கு மைய அரசு, நிதி அதிகாரத்தைக்
கையிலே எடுத்துக்கொண்டு, கொண்டு வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல,
Accelerated irrigation benefit என்ற ஒரு முறையிலே, அந்த
programme–லே, ஒட்டுமொத்தமாக ரூ.3,050 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள்.
அதிலும் நீங்கள் எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.
சல்லிக் காசுகூட அதிலே தமிழகத்திற்கு அவர்கள் தரவில்லை.
அதேபோல, Backward Area District Fund–க்கு, 5,000 கோடி ரூபாய்
ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு மைய நிதி அமைச்சர் சல்லிக்
காசுகூட தமிழகத்திற்கு ஒதுக்கவில்லை. இதையும் நீங்கள்
கணக்கெடுத்துப் பார்த்து, ஒட்டுமொத்தமாகக் கூட்டிப்
பார்க்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. துரைமுருகன் அவர்கள்
விளையாட்டுப் போக்கிலே சொன்ன அந்த வார்த்தைகள் அவைக்
குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. துரைமுருகன்:** அப்படியல்ல. இன்னும் சொல்லப் போனால்,
correct me, if I am erroneous. நான் தவறாகச் சொன்னால் திருத்துங்கள்
என்று முதலிலேயே நான் அவரிடம் open ஆகச் சொல்லி விட்டேன்.
இருந்தாலும், அதற்காக நான் சொல்லவில்லை. ஏனென்றால்,
என்னைவிட அவர் ஒரு அரசாங்கத்திலே இருக்கிறார். என்னைவிட
அதிகமான position–லே இருக்கிறார். நான் என்ன பண்ண முடியும்?
இந்த book–லே இருப்பதைத்தான் சொல்ல முடியும். தப்பு என்றால்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. துரைமுருகன்] [2005 ஏப்ரல் 12

சரிதான் என்று திருத்திக்கொண்டு போகப் போகிறேன். எனக்கு என்ன
அதனாலே நஷ்டம்? ஒன்றுமில்லை. இப்போது, 30.5% போடுகிறது.
கொஞ்சம்தான் ஏற்றியிருக்கிறார்கள். 29–லிருந்து 30, நான்
ஒத்துக்கொள்கிறேன். இன்னும் நிறைய வரவேண்டும். அதிலே ஒன்றும்
எனக்கு மாறுபட்ட கருத்துக் கிடையாது. சரி, அது போகட்டும்.

பிற்பகல் 7–25

மூன்றாவது, இப்போது பட்ஜெட்டிலே எல்லாம் Budget
Estimate போடுகிறீர்கள். கூடுதலாகச் செலவாயிற்று என்று
வைத்துக்கொள்ளுங்கள், ஒரு துணை மானியக் கோரிக்கை
வைக்கிறீர்கள். நாங்களும், House–லே துணை மானியக் கோரிக்கைக்கு,
ஏன் பட்ஜெட்டிலே போட்ட, B.E.-ஐவிட ஏன் அதிகமாயிற்று என்று
நாங்கள் கேட்டால், அதற்குக் காரணத்தைச் சொல்கிறீர்கள். அதன்
பிறகு இந்த மன்றமும் உங்களுக்கு அனுமதியை அளித்து விடுகிறது.
ஆனால், நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். Budget
Estimate–க்குக் குறைந்தால், அந்தத் தகவலை நாம் இந்த
அவைக்கு அறிவிக்கிறோமா? இதுவரையில் அறிவிப்பது கிடையாது.
Budget Estimate–ஐவிட ஒரு திட்டத்திற்கு அதிகமானால், எங்களுக்கு
permission கொடுங்கள் என்று கேட்கிறோம். குறைந்தது என்று
வைத்துக்கொள்ளுங்கள், அதை யாரும் சொல்வது கிடையாது.
மானியங்களுக்கு ஒதுக்கும்போது, மானியங்களுக்கு நிதி ஒதுக்கும்போது–
–அதிகமான நிதி ஒதுக்கிவிட்டு, பற்றாக்குறை Budget-ஐக் காட்டுகிறோம்.
அது ஒரு பக்கம். எப்படி என்று கேட்டால், பிறகு,—ஏன், நாம்
மானியங்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கிவிட்டுப் பற்றாக்குறை
காட்டுகிறோம் என்றால், மார்ச் மாதத்தில், அந்த மாதிரி நேரங்களிலே
என்ன பண்ணுகிறார்கள் என்றால், நம் யாருக்கும் தெரியாது. அது
Finance Secretary, Finance Minister அவர்களோடு சரி. F.M.A. என்று ஒரு
G.O. போடுவார்கள். போட்டு, அந்த மானியக் கோரிக்கைகள், பணி
முடியாமல் இருக்கிற அவற்றையெல்லாம் எடுத்து, savings என்று
எடுத்துக்கொள்வார்கள். Savings என்று எடுத்துக் கொண்டதற்குப்
பிறகு, அந்த மிச்சத்தை என்ன செய்கிறார்கள்?

இதுமாதிரிச் செலவுகளுக்குக் கொடுக்கிற நிறையப் பணம் செலவு
பண்ணாமல் திரும்பி வருகிறது. நான் மட்டும் இதைச் சொல்லவில்லை.
இதை உங்களுக்கு, இந்தியத் தணிக்கைத் துறை அதிகாரியே
சொல்லியிருக்கிறார். நிதியாண்டின் இறுதியில் செலவினங்களைக்
கடைசியாகப் பண்ணுகிறார்கள். இந்தப் பணத்தை, மிச்சத்தையெல்லாம்



2005 ஏப்ரல் 12] [திரு. துரைமுருகன்]

என்ன பண்ணுகிறார்கள்? முதலிலே, ஒன்று, நிறையப் போடுகிறார்கள்.
போட்டவுடனே F.M.A. என்று G.O போட்டு எடுத்து விடுகிறார்கள்
மிச்சம் என்று. Savings என்று. Savings–ஐ என்ன பண்ணுகிறார்கள்
என்றால், கடைசி மாதம் பரபர, பரபர, பரபரவென்று மார்ச் மாதத்தில்
எடுத்துவிடுகிறார்கள். அதைச் சொல்லுகிறார் அந்தத் தணிக்கை
அதிகாரி; நிதித் தொகுப்பின் பிரிவுகளின்படி நிதியாண்டின் இறுதி
மாதத்தில் விரைவுச் செலவினம் தவிர்க்கப்படவேண்டும். இந்தக்
கோட்பாட்டிற்கு மாறாக, மார்ச் 2003–ல் 32 தலைப்புகளில் செலவு
ரூ.10 கோடிக்கு மேலாகவும், இவ்வாண்டிற்கான மொத்தச் செலவில்
50 சதவிகிதத்திற்கு மேலாகவும், 15 தலைப்புகளில் 100 சதவிகிதமாகவும்
இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் B.E–லே உங்களுக்கு
என்ன? இந்த P.W.D.-க்கு 2004–2005–லே எவ்வளவு ஒதுக்கியிருக்கிறீர்கள்?
ரூ. 1,258 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால், எவ்வளவு திரும்பி
வந்திருக்கிறது? ரூ. 202 கோடி திரும்பி வந்திருக்கிறது. இதிலே
கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இங்கே—நான் சொல்லவில்லை.
பட்ஜெட்டிலே, இதிலே போட்டு இருக்கிறார்கள், பாருங்கள். எந்தெந்த
இலாகாவிற்கு கடைசி மாதத்தில் நூற்றுக்கு நூறு. எனக்கு என்ன என்று
கேட்டால், அவருக்குத் தெரியும், Finance Minister-க்குத் தெரியும்.
2235.60 1.2 11JA—இது முதியோர் பென்சனுக்கு ஒதுக்கப்பட்ட தொகை.
எவ்வளவு தெரியுமா முதியோர் பென்சனுக்கு ஒதுக்கப்பட்ட தொகை?
115 கோடி ரூபாய். ஆனால், இந்த ரூ.115 கோடியை எப்போது செலவு
பண்ணினார்கள் என்று கேட்டால், மார்ச் மாதத்திலே செலவு
பண்ணிவிட்டார்கள். நிதி எதற்குத் தருகிறோம் நாம்? 12 மாதங்களுக்குச்
செலவு பண்ணுவதற்குக் கொடுக்கிறோம். ஆனால், 12 மாதங்களிலே
செலவு பண்ணாமல், கடைசியாக எடுத்து—இதிலே போட்டிருக்கிறது.
(குறுக்கீடு) பக்கம்? அது அவருக்குத் தெரியும், Finance Minister-க்குத்
தெரியும். அதாவது, 31–வது item, மானியம். உடனே எடுத்து
விடுகிறார்கள். அதே மாதிரி, சத்துணவுக்குப் பார்த்தீர்கள் என்றால்,
அதனுடைய திட்டப் பணி தலைப்பு என்ன? 2236 .02 1.03 11 KN—
அதற்கென்ன? ரூ.126 கோடி. ஆனால், எனக்கென்னவென்று
கேட்டால், ரூ.126 கோடியும் அதே மார்ச் மாதத்திலே செலவு
பண்ணியிருக்கிறார்கள். அப்படியென்றால், வருடம் பூராவும் அரிசி,
பருப்பு வாங்கவில்லையா? சம்பளம் கொடுக்கவில்லையா? எனக்கு
எப்படி—இது மாதிரி ஒன்றல்ல; ஆயிரத்து...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அதற்கு விளக்கமும் அதிலே தரப்பட்டிருக்கிறது.
அதையும் நீங்கள் படித்துப் பார்க்கவேண்டும். இறுதிக் கட்டத்திலே,

[திரு. சி. பொன்னையன்] [2005 ஏப்ரல் 12

அதை ஈடுசெய்கின்ற முறையில் அது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது, சாதாரணமாக நடைமுறையிலே இருக்கின்ற ஒன்று.

**திரு. துரைமுருகன்:** எனக்குத் தெரியும் சாதாரண நடைமுறை என்று சொல்வீர்கள். நடைமுறையை மாற்றவேண்டும். செலவு பண்ணவேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேனே தவிர, இன்னின்ன வகைக்குப் பணம் போகவேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன். இரண்டாவது காரணம். மூன்றாவதாக, நாங்களும் நிறையப் பேர்கள் கேட்டோம், எத்தனையோ பேர்களும் கேட்டோம், இன்னின்னது செய்யுங்கள், ஏதாவது பண்ணுங்கள் என்று. சில நேரங்களிலே (குறுக்கீடு) இது உங்களுக்குப் பழையது சார். (சிரிப்பு) நீங்கள் கொடுத்ததுதான் சார்; இங்கே வைத்துவிட்டுப் போனதுதான். அதாவது, நான் காலையிலேயே கேட்டேன். நியாயமாக இன்றைக்கு வைத்திருக்கவேண்டும், நீங்கள் வரவில்லை என்று சொல்லிவிட்டீர்கள். Last year -க்கு—போன வருடத்திற்கு. 2003–க்கு இது. 2003 கையிலே வைத்துக் கொண்டிருக்கிறேன். இதிலே என்ன? ஒன்று, சாலைப் பணியாளர்களுக்கெல்லாம் வேலை கொடுங்கள் என்று கேட்டோம். நான் ஒன்று கேட்கிறேன். இதிலே ஒரு தலைப்பு போட்டு இருக்கிறார்கள் பாருங்கள். மரவள்ளிக் கிழங்கைக் காய்கறி எனக் கருதி, தவறாக வரி விலக்கு அளித்ததில் விளைந்த வரி இணையாமை ரூ.82.44 கோடி. அதாவது, மரவள்ளிக் கிழங்கைக் காய்கறி என்று கருதி, வரிவிலக்கு அளித்ததனால் எவ்வளவு கோடி தெரியுமா? Only Rs. 82 crores. 82 கோடி ரூபாய்தான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தணிக்கைக் குழுவினுடைய கருத்து. மரவள்ளிக் கிழங்கு காய்கறியா, இல்லையா என்பதனை முடிவு செய்யவேண்டியது நாம் முடிவு செய்ய வேண்டியது. மரவள்ளிக் கிழங்கைப் பொறுத்தவரைக்கும், 11 மாவட்டங்களில் வறட்சி மாவட்டங்களில் மழையில்லாத காலத்திலும்கூட உழவர்களுக்கும், உழைக்கும் தொழிலாளர்களுக்கும் வருமானத்தைத் தருகின்ற ஒரு பயிர். அங்கே அதற்கு வரிச் சலுகை தந்து, அந்த உழவர்கள் வயிற்றில் பால் வார்த்து உழைக்கும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கச் செய்தது, இதைத் தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்—தணிக்கைத் துறையைப் பொறுத்தவரைக்கும், they are resorting to a technical approach. மரவள்ளிக் கிழங்கைக் காய்கறி என்று கருதுவதா, இல்லையா என்பது அரசினுடைய கொள்கை. இந்த அரசு அதைக் காய்கறி என்று



2005 ஏப்ரல் 12] [திரு. சி. பொன்னையன்]

கருதுகிறது. வரி விலக்குத் தருகிறது, உழவர்கள் வயிற்றிலே பாலை வார்க்கிறது. அதில் தவறு ஏதும் இல்லை.

**திரு. துரைமுருகன்:** சார், நீங்கள் எப்படிக் கருதுகிறீர்கள் என்று நான் நினைக்கவில்லை சார். தணிக்கைத் துறை அதிகாரி என்ன கருதுகிறார் என்று சொன்னேன். நீங்கள் மரவள்ளிக் கிழங்கைக் காய்கறி என்றாலும் கருதுங்கள்; கறி என்றாலும் கருதுங்கள். நான் என்ன செய்யப் போகிறேன், அதற்கு மேலே, சொல்லுங்கள். அதைப் பற்றி எனக்கு ஒன்றும் பிரச்சினையில்லை.

பிற்பகல் 7–30

மூன்றாவது, புள்ளிவிவரங்களைக் கொடுப்பதிலே ஒரே மாதிரியான புள்ளிவிவரங்கள். நான் இதைப் படித்துப் பார்த்திருந்தேன். அரசு அதிகாரிகள் பற்றிப் போட்டிருக்கிறார்கள். அதாவது, அரசுப் பணியில் உள்ள பணியாளர் பதவிகளின் எண்ணிக்கை குறித்த புள்ளிவிவரம். நான் 2002-லிருந்து பார்க்கிறேன். 12,35,000 பேர்தான் போட்டிருக்கிறார்கள் இதிலே. இந்த வருஷம் இதிலே போட்டது, அரசுப் பணியாளர்கள் மொத்தம் எவ்வளவு பேர் என்றால், 12,35,000. இது கூடவே கூடாதா? இல்லை குறையாதா? நிறையப் பேர் நீங்கள்— இப்போது எல்லோரும் சொல்கிறார்கள் காலியிடங்கள் மாற்றவில்லை, நிரப்பவில்லை, நிரப்பவில்லை என்று. 2002–2003-லேயும் 12 இலட்சம்தான். நான் இதற்காக Library-யிலே போய் உட்கார்ந்து எல்லாவற்றையும் எடுத்துப் பார்த்தேன். 2003–2004–லேயும் 12 இலட்சம்தான். 2005-லே...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தத் துறைக்கு எந்தெந்த Department–க்கு எத்தனை பணியாளர்கள் என்பது ஒரு norms பிரகாரம், சில வரையறைகள் பிரகாரம் நிர்ணயிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட பணியிடங்கள் இவைதான் என்றால், இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் அப்படியேதான் இருக்கும். காலியிடங்கள் என்பது வேறு தலைப்பிலே வரும். வேறு தலைப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் கலந்து படித்தால் அதற்குப் பொருள் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** நீங்கள் எல்லா இடங்களிலும் நிரந்தரம், தற்காலிகம் எல்லாவற்றையும் ஒன்றாகத்தான் போட்டிருக்கிறீர்கள். ஆகையினால் நீங்கள் என்ன என்று கேட்டால் காலியான இடங்கள்—

சாமிநாதன் கமிஷன் போட்டீர்கள். அதிலே எவ்வளவு காலியாக இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த இடங்களையெல்லாம் நீங்கள் நிரப்பவில்லை. (குறுக்கீடு) அதில் புள்ளிவிவரம் இருக்கிறது. அதில் புள்ளிவிவரம் நிறைய வைத்திருக்கிறார்கள். ஆகையினாலே அந்தப் புள்ளிவிவரங்களை மாற்ற வேண்டும். இது அப்படியே செக்கு மாடு மாதிரி உழன்று கொண்டே இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து, இன்னொரு முக்கியமான செய்தி. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) என்னவோ எழுதிக் கொடுத்துவிட்டார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது, இந்தப் புள்ளிவிவரங்கள், sanctioned posts and not those actually in position. அதாவது, அங்கீகரிக்கப்பட்டவை sanctioned posts, அனுமதிக்கப்பட்டவை. தற்போது யார் பதவிகளில் இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் அல்ல.

**திரு. துரைமுருகன்:** நிரந்தரமோ, sanctioned–ஓ, ஏதோ ஒன்று சொல்கிறேன் என்று அல்ல. நிரந்தரம் என்று போட்டிருக்கிறார்கள். இதைப் பார்த்தீர்களானால், வேண்டுமானால் வாசித்துப் பாருங்கள். எப்படியோ அவர் ஒன்று எழுதிக் கொடுக்கிறார்கள். அது ஒரு மாதியாக இருக்கும். சரி, அது போகட்டும்.

நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 2004–லே 150 கோடி ரூபாய் கொடுத்து, பஞ்சாயத்துகளில், பஞ்சாயத்து யூனியன்களில் எல்லாம் ரோடு போட்டுக்கொள்ளுங்கள் என்று கொடுத்தார்கள். எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கொடுத்தார்கள். அவர்கள் ரோடு போட்டார்கள். போட்டு முடிந்ததற்குப் பிறகு மறுபடியும் என்ன செய்தார்கள் என்று கேட்டால், அடுத்து 150 கோடி ரூபாய் கொடுத்தார்கள். அந்த 150 கோடி ரூபாயை என்ன செய்கிறார்கள் என்றால், திடீரென்று கொடுத்து, எல்லோருக்கும் பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பணம் வந்துவிட்டது, டெண்டர் எல்லாம் விட்டுவிட்டார்கள். விட்ட பிறகு ஒரு G.O. போட்டார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் அந்த வேலைகளை செய்யக் கூடாது. எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்து மறுபடியும் Highways-க்கே கொடுத்துவிடுங்கள். இந்த Highways ரோடு போட்டு முடிந்த உடனே. மறுபடியும் ரோடை மறக்காமல் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்துவிடுவோம். அப்போது நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். முதலிலே 150 கோடி ரூபாய் கொடுத்தார்கள். பஞ்சாயத்து யூனியனில்





இருக்கிறவர்கள், பஞ்சாயத்தில் இருக்கிறவர்கள்தான் ரோடு போட்டார்கள். அவர்கள் ரோடு போட்டதற்குப் பிறகு இரண்டாவது 150 கோடி ரூபாய் கொடுத்தார்கள். இந்த 150 கோடி ரூபாய்க்கு என்ன சொன்னார்கள் என்றால், கொடுத்து, அவர்களுக்குப் போய்விட்டது. ஆனால் மறுபடியும்—அந்த G.O. எல்லாம் இருக்கிறது. அதைப் படிக்க நேரம் இல்லை—எல்லோரும் உட்கார்ந்து பேசினார்கள், அதனாலே இப்போது Highways-க்குக் கொடுப்பது நல்லது என்று முடிவு எடுத்தார்கள். அந்த வகையிலே இதிலே என்னமோ something wrong, Sir (குறுக்கீடு) இவ்வளவு நேரம் பேசுகிறோமே உடனே வாய் பிடிக்கிறது பாருங்கள். (குறுக்கீடு) இல்லை public meeting-ல் பிடிக்காது. அதனால் என்ன செய்ய வேண்டுமென்றால் இந்த 150 கோடி ரூபாயை மறுபடியும் நீங்கள் Highways-க்கும் கொடுத்து விடுங்கள். Highways ரோடு போட்டு உங்களிடம் கொடுத்து விடுவார்கள் என்று சொன்னார்கள். நான் ஒன்று கேட்கிறேன். நீங்கள் Highways Minister. நீங்கள் பஞ்சாயத்திலும் இருந்திருக்கிறீர்கள். பஞ்சாயத்திலே, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இரண்டு B.D.O. இருக்கிறார்கள். அதற்கு மேல் இரண்டு Engineers இருக்கிறார்கள். யூனியனில் இரண்டு B.D.O. இருக்கிறார்கள், அதற்குப் பிறகு ஒரு engineer இருக்கிறார், அதற்குப் பிறகு Overseer, அவன், இவன் என்று நிறையப் பேர் இருக்கிறார்கள். Highways–ல் எப்படி இருக்கிறார்கள் என்று எனக்கும் தெரியும். ஏனென்றால் நான் அந்த இலாகாவை வைத்திருந்தேன். ஏன் பஞ்சாயத்திலே 150 கோடி ரூபாய் மட்டும் அவர்களுக்குக் கொடுத்து ரோடு போட விட்டுவிட்டு, இரண்டாவது 150 கோடி ரூபாயை ஏன் நீங்கள் வாங்கிக் கொண்டீர்கள்? அதனால் என்ன?

பிற்பகல் 7–35

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்திற்கு என்று, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 300 கோடி ரூபாயில், முதல் தவணையாக அவர்களால் 150 கோடி ரூபாய்க்குப் பணிகள் எடுத்து முடிக்கப்பட்டிருக்கின்றன. அது தனியாக முடிக்கப்பட்டது. மீண்டும் ஒரு 150 கோடி ரூபாய்—மீதமிருந்த 150 கோடி ரூபாயை நெடுஞ்சாலைத் துறை, அந்த 150 கோடி ரூபாய்க்குப் பணிகளை ஊராட்சி ஒன்றியங்களின்மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் என்னென்ன பணிகள் செய்யப்பட வேண்டும் என்ற விவரங்களை வாங்கி, நெடுஞ்சாலைத் துறை அந்தப் பணிகளைச் செய்து முடித்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2005 ஏப்ரல் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன். ஏற்கெனவேகூட அதற்கு அமைச்சர் பதில் சொன்னார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர்கூட பதில் சொன்னார்கள். உள்ளாட்சி அமைப்புகளிலே ஏதோ சில பிரச்சினைகள் இருந்த காரணத்தினால்தான் அந்த மாதிரிச் செய்ததாகப் பதில் சொன்னார்கள் ஏற்கெனவே.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதாவது, நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் ஏன் போடப்பட்டது என்பதற்குக் காரணம், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு U.E. என்று ஒரு Engineer தான் இருக்கின்றார். Overseer (குறுக்கீடுகள்) ஏதாவது, பெரிய ஒன்றியங்களிலேதான் இரண்டு பேர் இருக்கின்றார்கள். பெரும்பாலான ஒன்றியங்களில் ஒரு Union Engineerதான் இருக்கின்றார். ஆனால், நெடுஞ்சாலைத் துறையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும், அதில் Division–ல் இருந்து Sub-Division வரைக்கும் எவ்வளவு பொறியாளர்கள் அந்தப் பணியை மேற்கொண்டு, எவ்வளவு பணி கொடுத்தாலும் கால நேரத்திற்குள் நல்ல முறையில் செய்து முடிப்பார்கள் என்ற நல்ல நோக்கத்தோடுதான் அரசு இந்தக் கொள்கை முடிவை எடுத்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. துரைமுருகன்:** என்னமோ, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் ஒரு விளக்கம் சொன்னார். அவர் சொன்ன விளக்கத்திலே எனக்கு 100 per cent புரியவில்லை என்றாலும், ஒரு 50 per cent புரிகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் என்ன குறைகள்—பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன, அரசின் சார்பாக நிதி ஒதுக்கப்பட்டது. பாதிப் பணம் அவர்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுத்துப் பணிகள் செய்யப்பட்டன. மீதிப் பணத்தை நெடுஞ்சாலைத் துறையின் மூலம்—கொள்கை முடிவு எடுத்ததற்குப் பின்னால்—நாங்கள் தரமாகவும், துரிதமாகவும் அந்தப் பணியை முடித்திருக்கின்றோம். இந்தப் பணிகளில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், அது நியாயமாக இருக்கும். எடுத்த செயலே, கொள்கை முடிவே, அரசு எடுத்த கொள்கை முடிவே தவறு என்று சொல்வதற்குக் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2005 ஏப்ரல் 12]

**திரு. துரைமுருகன்:** மூன்றாவது, (குறுக்கீடுகள்) இன்னொன்று. இதிலே ஒன்று பார்த்தேன். சட்டமன்ற உறுப்பினர்களின் மருத்துவச் செலவுகளை ஈடு செய்யவும், மற்றும் ஒட்டுமொத்தப் படி வழங்கியது தொடர்பான செலவிற்காகக் கூடுதல் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. துணை மதிப்பீட்டில் அதற்காகக் கொடுங்கள் பணம் என்று கேட்கிறார்கள். எதற்கு? சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவச் செலவுகளை ஈடுசெய்வதற்காக. நான் ஒன்று கேட்கிறேன். இந்த மன்றத்தில் நீங்கள் ஒரு கட்சியாக இருக்கலாம், நான் ஒரு கட்சியாக இருக்கலாம். ஜனநாயகத்தில் மக்களாலே நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆட்சி அமைத்திருக்கிறீர்கள். நாங்கள் எதிர்க்கட்சியிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த மன்றத்திற்குள் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு என்று சில சலுகை. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு என்று ஒரு சலுகை இருக்கக் கூடாது. இருக்கவும் இல்லை. சட்டப்படியும் கிடையாது. ஆனால் என்ன செய்கிறீர்கள்? இதுவரையில் நான் ஒன்றைக் கேட்கிறேன். உங்களுக்கும் தெரியும். நான் Business Advisory Committee–லேகூட கேட்டேன். எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருக்கிற—நான் மற்றவர்களுக்குப் போகவில்லை. இரண்டைச் சொல்கிறேன்.—சோ.பா. அவர்கள். சோ. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு accident ஆனது. அதற்குப் பிறகு நெடுநாள் கழித்து, கடைசியிலே இப்பொழுது கொடுத்தார்கள். நான் என்னுடைய இருதய சிகிச்சைக்காக மூன்று தடவை நான் Hospital–ல் admit ஆகி, ஒரு நாள் இங்கு வந்தபொழுது கேட்டார்கள். உங்களுக்கு உடம்பிற்கு சரியில்லை என்று பத்திரிகையிலே பார்த்தேன் என்றபோது, நான்கூடச் சொன்னேன். ஆனால் இதுவரையில், நான் மூன்று பில்களை அனுப்பியிருக்கிறேன். ஆனால், இதுவரையில் ஒரு பில்கூட வரவில்லை..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பட்டமான, உண்மைக்கு மாறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காழ்ப்புணர்ச்சியோடு கூறக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதுவரைக்கும் எந்தவொரு சட்டமன்ற உறுப்பினர், எந்த இயக்கத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காகக் கோரிக்கைகளை வைக்கிறபோது, மருத்துவர்கள்—either D.M.E.—அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு, அவர்களுடைய குறிப்புகளைக் கேட்டு, அவர்கள் பரிந்துரை செய்கின்ற தொகை, ரூ.20 இலட்சம் என்று உறுப்பினர் கேட்கலாம். Apollo Hospital–ல் நான் படுத்துக்கொண்டேன், எனக்கு ரூ.30 இலட்சம் வேண்டுமென்று கேட்கலாம். ஆனால் அரசு மருத்துவமனையில் அவர்களுக்கு சிகிச்சை

[திரு. சி. பொன்னையன்] [2005 ஏப்ரல் 12

அளித்தால், என்ன பணம் தரவேண்டும் என்பதும், அதைவிடச் சற்று அதிகமாகவே சேர்த்து ஒரு வரையறை இருக்கிறது. சட்டப் பேரவை அந்த வரையறையை நிர்ணயம் செய்திருக்கிறது. அந்த வரையறையின்படி பரிந்துரை செய்யப்பட்டு அவ்வளவு பேருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு, அவர்களுக்கு, அந்த மருத்துவ சிகிச்சைக்கு உதவியைச் செய்து கொடுத்திருக்கிறது. இதுதான் உண்மை. திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களுக்குக்கூட மருத்துவத் துறையிலே D.M.E. கூறியதைவிட அதிகப் பணத்தைத்தான் ஒதுக்கிக் கொடுத்து இருக்கிறோம் என்பதையும் அவைக்கு நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 7–40

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் சொல்ல வேண்டும் என்று அவசியமில்லை. இதையும் நாங்கள் எப்போது சொன்னோம்? Business Advisory Committee-யில் உட்கார்ந்து கொண்டு சொன்னோம். அப்போது அவருடையது வரவில்லையென்று சொன்னோம். நீங்களே கேட்டீர்கள். ஏன் வரவில்லை என்று Secretary-ஐக் கேட்டீர்கள். நம்முடைய சபாநாயகருக்கும் தெரியும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Correct. That itself shows that we are innocent. துறையிலே மனு கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலே அது ஆய்விலே இருந்திருக்கிறது. சொன்னீர்கள். எடுத்துச் சொன்னோம். அரசுக்கு அனுப்பினார்கள். அம்மா அவர்களிடம் அனுப்பினோம். உடனடியாக அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அம்மாவிற்குச் சென்றவுடன் ஆணையிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதக் கணக்கில் சோ. பாலகிருஷ்ணன் அவர்களுக்குப் பணம் தரப்படவில்லை. பல முறை நிதி அமைச்சர் அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களிடத்திலே நான் பேசியிருக்கிறேன். பல மாதங்கள் கழித்து, அவை அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசியதற்குப் பிறகுகூட பல நாட்கள் கழித்து, முழுத் தொகையும் வழங்கப்படவில்லை. ஓரளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவருக்குச் செலவானது அதிகம் என்பது மட்டுமல்ல, பல மாதங்கள் அங்கே இருக்க வேண்டியிருந்தது. ஆக, உயிர் காக்கும் விஷயத்தில் இந்தப் பாகுபாடு கூடாது. அந்தத் தொகை போதாது.



2005 ஏப்ரல் 12]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த 4 ஆண்டு காலத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கு D.M.E. பரிந்துரை செய்திருக்கிறார் என்று பாருங்கள். பேரவைத் தலைவர் அவர்களின் அறையிலே சென்று பாருங்கள். பாரபட்சமாக யாருக்கும் சல்லிக் காசுகூட காட்டவில்லை. ஆனால், திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களைப் பொறுத்தவரைக்கும், (குறுக்கீடு) இருங்கள். சோ. பாலகிருஷ்ணனைப் பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே இருக்கின்ற நெறிமுறைகளைவிடப் பல மடங்கு அதிகமாக அவர்கள் பணம் கேட்ட காரணத்தால் அந்தத் துறையினுடைய வரைமுறையிலே இடம் இல்லாத காரணத்தால், அவர்கள் ஆய்ந்து, திரும்பத் திரும்ப அனுப்பி, அதற்கு விளக்கம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதை அலுவல் ஆய்வுக் குழுவிலே நீங்கள் சொன்னவுடன், அதை அனுப்பச் சொன்னோம். அதை அனுப்பி, D.M.E. பரிந்துரையைவிட அதிகமான பணத்தைத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் சோ. பாலகிருஷ்ணனுக்குக் கொடுத்திருக்கிறார்கள். எந்தவொரு உறுப்பினருக்கும்–இது அபாண்டமான குற்றச்சாட்டு என்பதற்காகச் சொல்கிறேன்—D.M.E. பரிந்துரை என்ன இருக்கிறதோ, அதற்கு மேல் இத்தனை சதவிகிதம் அதிகம் என்ற ஒரு வரைமுறையை வைத்து, ஒரே நியாயமான அடிப்படையில்தான் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் இதுவரை இது தரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வீண் குற்றச்சாட்டை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கூறக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** சொல்லட்டும் என்றுதான் இதைச் சொன்னேன் நான். சரி. அது போகட்டும். நீங்கள் கொடுக்கவில்லையென்றாலும் பரவாயில்லை, போகட்டும். ஆனால், எது நியாயம் என்பதை உங்களுடைய மனசாட்சிக்கு விட்டுவிட்டுப் போகிறேன். அதுபற்றி ஒன்றுமில்லை. மூன்றாவதாக இன்னொரு விஷயம். (சிரிப்பு) எத்தனை மூன்றாவது என்கிறீர்களா?

அடுத்து ஒரு முக்கியமான செய்தி. காலையிலே நம்முடைய வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது ஒன்று சொன்னார். என்ன சொன்னார் என்றால், காலியாக இருக்கிற இடங்களை யாருக்காவது விற்க வேண்டுமானால், அல்லது கிரயம் செய்ய வேண்டுமானாலும்கூட, முதலமைச்சர் அவர்கள் மிக அழுத்தந்திருத்தமாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார், அந்த

இடத்தை market rate அல்லது guideline value-விலேதான் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதைத்தான் நாங்கள், whichever is higher, market rate or guideline value-விலே whichever is higher, எது இருக்கிறதோ அதைத்தான் தரவேண்டுமென்று முதலமைச்சர் சொன்னார், அதைத்தான் நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொல்கிறார். நான் ஒத்துக்கொள்கிறேன். அது நல்ல திட்டம். நான் வரவேற்கிறேன். அப்படித்தான் ஒரு G.O.-வை முதலிலே போடுகிறார்கள். (குறுக்கீடு) இருங்கள், சொல்கிறேன் நான். இது வந்து 25–8–2004 அன்று, Tamil Nadu Housing Board Chairman போட்ட ஒரு resolution-ல் என்ன சொல்கிறார். "During the year 2002, the Board in its Resolution No. 6.2 dated 22-3-2004, took a decision to apply market rate or guideline value,whichever is higher, for such allotment. Since then the allotment is of G.D.Q. — Government discretionary quota என்று நினைக்கிறேன் —...have been requesting Tamil Nadu Housing Board to consider adopting ruling rate—அது Housing Board rate. அதாவது ruling rate — as was the practice earlier, அப்படி என்று போட்டுவிட்டு, "The Board resolves to request the Government to pass appropriate instruction without causing any financial loss to the Board. ஆகையினாலே, இது மாதிரி இல்லாமல் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே, market rate, guideline rate, அதிலே எது அதிகமாக இருக்கிறதோ அதற்குத்தான் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்களே, அது தேவையில்லை. ஆக, இந்த ruling rate என்று கொடுப்போமே வழக்கமாக, அந்த rate-லேதான் கொடுக்க வேண்டும், அதற்கு நீங்கள், அரசாங்கம் எங்களுக்கு அனுமதி அளிக்கவேண்டுமென்று ஒரு resolution pass பண்ணி சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள்., நான் கேட்க விரும்புவது, உங்களுக்கு, இன்னும் இந்த அரசு முதலமைச்சர் சொன்ன அந்த stand-லே இருக்கிறதா, அல்லது இந்த resolution–க்குச் செவிமடுத்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 7–4.5*

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன சொல்கின்றார்களோ, அதுதான் சட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மெத்த மகிழ்ச்சி. ஏனென்று கேட்டால், இந்திரா நகர், பெசன்ட் நகர் பக்கம்



நிறைய இந்த மாதிரி land-களை அபகரிப்பதற்கு ஒரு பெரிய mafia கும்பலே பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது. அவற்றிற்கெல்லாம் நீங்கள் முற்றுப்புள்ளி வைத்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக நான் இருக்கிறேன்.

அடுத்து இன்னொன்று, நீங்கள் சொல்லி, சொல்லிப் பார்த்தாலும் கேட்கப் போவது இல்லை. ஆனால் சொல்லாமல் இருக்கப் போவதும் இல்லை. இந்த T.V.-ஐ என்ன செய்யப் போகிறீர்கள்? (சிரிப்பு) ஒன்றும் செய்யப் போவதில்லையா? ஏனென்று கேட்டால், நீங்கள் தூர்தர்ஷனுக்குக் கொடுங்கள் அல்லது வேறு யாருக்காவது live கொடுங்கள். இல்லை, முழுக்க இந்த மன்றத்தில் என்ன நடக்கிறதோ, அத்தனையையும் மக்கள் மத்தியிலே விடுங்கள். என்ன சார் அக்கிரமம்? அரசாங்கத்தினுடைய ஒரு இயந்திரத்தை, இந்த மன்றம் எல்லோருக்கும் பொது என்கிறபொழுது, அதை ஒரு கட்சிக்கு மட்டும் சாதகமாகப் பயன்படுத்தி, நீங்கள் காட்டுவதை, நாங்களும் ...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கின்ற மாதிரி, நேரடி ஒளிபரப்புச் செய்தால், எத்தனையோ பகுதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறார், அப்பொழுது மக்கள் அந்த விரும்பத் தகாத பகுதிகளையெல்லாம் பார்ப்பார்கள் அல்லவா? அதை எப்படி நீக்குவது?

**திரு. துரைமுருகன்:** அப்பொழுதுதான் அவரவர்கள் ரொம்பக் கண்ணியமாக இருப்பார்கள். அடேயப்பா, நம்மைப் பார்த்து விடுவார்களே ஜனங்கள், அப்படி என்று. மக்கள் யாராக இருந்தாலும், கொஞ்சம் கண்ணியமாக இருப்பார்கள். பார்லிமென்ட்டிலே வைக்கவில்லையா? அது மாதிரி வைத்துக்கொண்டு போகலாம். அதனாலே அதை ஒன்று செய்ய வேண்டும். ஏனென்று கேட்டால், இல்லையென்றால் இதை நீங்களே பார்க்கிற மாதிரிப் போய்விடும்.

மூன்றாவதாக ஒன்று (சிரிப்பு) I am very sorry. இன்னொன்று ...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த T.V.-ஐ திரு. துரைமுருகன் அவர்களும் பார்த்ததாகவும், தான் தலையை இப்படித் தொங்கப் போட்டுத் தூங்கிக் கொண்டு இருப்பதை மக்கள் பார்ப்பதுபோல் காட்டிவிட்டார்களே என்று அங்கலாய்க்கின்ற அளவிற்கு நீங்களும்தான் அதைப் பார்த்தீர்கள்.

[2005 ஏப்ரல் 12

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் சார் நான் சொல்கிறேன். நான் பார்க்கவில்லை என்று சொல்லவில்லை. அப்புறம் ராத்திரி, நமக்கு late night-லேதான் time கிடைக்கிறது. ராத்திரி ஒரு மணிக்குத்தான் நான் போடுகிறேன். அப்போதுதான் நான் பார்க்கிறேன். (குறுக்கீடு) இதோ, முடித்து விடுகிறேன்.

இன்னொன்று, ஒரு ஆட்சியிலே சில திட்டங்களை நீங்கள் நிறைவேற்றுகிறீர்கள். இன்னொரு ஆட்சி வரலாம். அந்த ஆட்சி சில திட்டங்களைப் போடும். ஆனால், ஒரு ஆட்சி செய்ததை இன்னொரு ஆட்சியில் வந்தவர்கள் மறைக்கக் கூடாது. நான் ஒன்றைச் சொல்கிறேன். Queen Mary's College, காந்தி சிலைக்கு எதிரிலே ஒரு roundtana இருக்கிறது. அங்கு இந்தியாவினுடைய 50-வது சுதந்திர தினப் பொன் விழாவை முன்னிட்டு, ஒரு ஸ்தூபி கட்ட வேண்டுமென்று நான்தான் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தேன். அங்கே ஒரு ஸ்தூபி கட்ட வேண்டுமென்று நான்தான் ஆணையிட்டேன். நான்தான் கட்டி முடித்தேன். நான்தான் அன்றைக்கு இருந்த கலைஞரை, திறந்து வையுங்கள் என்று கேட்டுக்கொண்டேன். அவர் திறந்து வைத்தார். அதில் என்ன சார் தவறு? ஆனால் போய்ப் பாருங்கள். அந்தப் பெயர் தெரியக்கூடாது என்று, சுற்றி செடியை வைத்து, அப்படியே மறைத்து விட்டுவிட்டார்கள். ஒரு நாள் தவறாமல் நான் பார்க்கிறேன். போகும்போதும், வரும்போதும் பார்க்கிறேன். வானை நோக்கித் திரையைப் போட்டால் வட்ட நிலா மறைந்து விடுமா? கலைஞருடைய பெயரை அங்கே மறைத்தால் தமிழ்நாட்டிலே மறைந்து போகுமா? இல்லை. அது நீங்கள் செய்த பெரும் . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் புகழ்மிக்க உங்களது தலைவர் இருக்கின்றபோது, எதற்காக அந்த ஸ்தூபியிலே பெயர் பரவி கட்ட வேண்டும். ஒரு திறப்பு விழா என்றால் ஒரு கட்டடத்தைக் கல்வெட்டைப் போடுவார்கள். நீங்கள் நான்கு பக்கமும் ஒரு இடத்தில் போட்டு, நான்கு பக்கமும் பெயரை எழுதி, அந்த அளவிற்கு கல்வெட்டைப் செய்யக்கூடிய அளவிற்கு மங்கிய புகழா உங்களுடைய தலைவருக்கு? விளம்பரம் (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** எனக்கு இப்பொழுதுதான் புரிகிறது, யார் இந்த வேலையைச் செய்திருக்கிறார்கள் என்று.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஒரு நிமிடம் இருங்கள்.



2005 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களைப் போன்ற அப்படிப்பட்ட காழ்ப்புணர்ச்சி எங்களுக்கு இல்லை. ஆனால் 1996 ஆம் ஆண்டு அன்றைக்கு உங்களுடைய ஆட்சி இருந்தபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருப்பெயரிலே ஒரு கட்டடம் ஒன்று, Slum Clearance Board கட்டடம், அண்ணா நகர், திருமங்கலத்தில் திறக்கப்பட்டது. அப்பொழுது நம்முடைய மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் வளர்மதி அவர்கள் அன்றைக்கு Slum Clearance Board-னுடைய Chairman. நானும், அவரும் போய்த் திறந்து வைத்தோம். அந்தக் கல்வெட்டையே அகற்றி நீங்கள் அநியாயம் பண்ணினீர்களே, அதை எங்கே போய்ச் சொல்வது?

பிற்பகல் 7-50

**திரு. துரைமுருகன்:** அதற்கு நம்முடைய Finance Minister மாதிரி நான் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால், நான் செய்யவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அளவிற்கு நீங்களும், உங்களது தலைவரும், அளப்பரிய, மக்கள் வெறுக்கத்தக்க அளவிற்கு விளம்பரப் பிரியர்கள் என்பதற்குத்தான் அந்த விளம்பரம் எடுத்துக்காட்டு. அதை நீங்கள் பாராட்ட வேண்டும். இயற்கையிலேயே அதிகாரிகள் ஒரு நிகழ்வுக்காக அப்படிச் செடி, கொடிகளை அங்கே வைத்திருந்ததால், இப்படிப்பட்ட களங்கம் நம் தலைவருக்குத் துடைக்கப்பட்டு இருக்கிறதே என்று நீங்கள் மகிழ வேண்டிய ஒன்றே ஒழிய, இது மார் தட்டிப் புகழக்கூடிய ஒன்று அல்ல.

***திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அம்மா அவர்களால் செய்யப்பட்ட திட்டங்கள் மறைக்கப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் பேசி முடித்து விடட்டும்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒரு கருத்து. இந்த மாமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் எல்லோருக்கும் சம உரிமை என்று சொன்னேன். ஆனால் இந்த மாமன்றத்தில்— நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கும்

முதலமைச்சர்தான். ஆனால் இந்த மன்றத்திலே இருக்கிற எங்களுடைய மாமன்ற உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்கள்மீது ஒரு குற்றச்சாட்டை ஒரு நாள் தெரிவித்தார். ஒரு உறுப்பினர் சொன்னார், ஸ்டாலின் அவர்கள் ஒரு பெரிய போலீஸ் அதிகாரியை முட்டியால் அடித்தார், கொண்டார் என்று. ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினர்மீது குற்றம் சாட்டுவது சகஜம், திருப்பிச் சாட்டலாம், முடிந்து போய் விட்டது. ஆனால், சட்டத்தையும், ஒழுங்கையும் கையிலே வைத்துக்கொண்டு, மிகப் பெரிய இந்த நாட்டினுடைய தலைவிதியை நிர்ணயிக்கிற நிலையிலே இருக்கிற முதலமைச்சர் எழுந்து, 'ஆமாம், ஸ்டாலின், அவ்வரை அடித்தார், போலீஸ்காரரை செய்தார்' என்று சொல்லி இந்த மன்றத்தில், இவ்வளவு பெரிய மன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டதே— ஏனென்றால் இந்த மன்றத்திலே உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்லக் கூடாது. ஆக, உண்மை இருந்தால்—அன்றைக்குச் சொன்னார்கள் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடித்தார் என்று சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** ஆமாம், சொன்னார், சொன்னார். அன்று, தாக்கினார்கள் என்று சொன்னார்களே, இதுவரையில் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படிச் சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** நான் கேட்கிறேன். (குறுக்கீடு) வேண்டுமென்றால் நடவடிக்கைக் குறிப்பினை எடுத்துப் பாருங்கள் சார். போலீஸ்காரரைத் தாக்கினார் ஸ்டாலின் என்று தெரிவித்தார்களே. அதில் உண்மை இருக்குமானால், அந்த போலீஸ் அதிகாரி இதுவரையிலே petition— complain பண்ணாமல் இருந்து இருப்பாரா? அவர் அடிக்கிறபோது மற்றவர்கள் இருந்திருக்க மாட்டார்களா? இதுவரையில் அவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லையே? ஆனால் பொத்தாம்போக்கிலே, 'வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ' என்று குற்றச்சாட்டை வாரிப் போட்டு விடுகிறீர்கள். அதை நாங்கள் எவ்வளவு நாள் பொறுப்பது?

இதேபோன்றுதான், இரவு நேரத்திலே, தூங்குகிறபோது எங்கள் வீட்டுத் தலைவரைக் கைது செய்தீர்கள். குற்றம் என்று சொன்னீர்கள், நிரூபிக்க முடிந்ததா உங்களால்? இருக்கிற பாலத்தை எல்லாம் உடைத்தீர்கள், வழக்குத் தொடுக்க முடிந்ததா உங்களால்? ஆனால் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசியலிலே கட்சிகள் மாறலாம். ஆனால் ஒரு கட்சியே நிரந்தரம் என்று கருதக் கூடாது. நான் ஒன்று சொல்கிறேன், இந்த வானம் நித்தியம், பூமி நித்தியம், இந்தத்



துரைமுருகன் சொல்வது சத்தியம். இதுதான் உங்களுக்குக் கடைசி பட்ஜெட். அடுத்த முறை அங்கே உட்காரப் போவது, கலைஞர், கலைஞர் என்று கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** படுத்துத் தூங்கியதற்குப் பிறகுதான் சில பேருக்குக் கனவு வரும். சில பேருக்கு விழித்து இருக்கும்போதே கனவு வருகிறது.

**திரு. துரைமுருகன்:** உங்களுக்கு உட்கார்ந்து இருக்கிறபோதே வருகிறது பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின், ஏழையெளிய மக்களின், தமிழகத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியில் அக்கறையோடு, இரவு, பகலாகப் பாடுபட்டு, ஆறு கோடி தமிழகத்து மக்களும் தன் வயிற்றுப் பிள்ளைகள் என்ற உணர்வோடு பாடுபட்டு, தமிழகத்தைக் காத்து வருகின்ற தலைமகளாய் விளங்குகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியினுடைய சிறப்புக்களை எடுத்துக் காட்டுகிற நிதிநிலை அறிக்கையாக, மானியக் கோரிக்கைகளாகப் பலவற்றை இந்த அவையிலே பல தினங்களாக ஈடேற்றி, இன்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசக்கூடிய வாய்ப்பினை நீங்கள் அவைக்குத் தந்திருக்கிறீர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நான்கு ஆண்டுக் கால ஆட்சி முறை, எந்த அளவிற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் மற்றும் தி.மு.க.வினர் போன்றோர் உள்ளத்தில் அச்சத்தை உருவாக்கி இருக்கிறது, வயிற்றெரிச்சலை உருவாக்கி இருக்கிறது என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக் காட்டுகின்ற அளவிற்கு உன்னத ஆட்சியினைக் கடந்த நான்கு ஆண்டு காலமாக நடத்தியிருக்கிறார்.

பிற்பகல் 7–55

தமிழகத்தை—தமிழக கஜானாவைக் காலி நிலையிலே விட்டுச் சென்றார்கள். ஒருவேளை ஜெயித்து விட்டால் டெல்லியிலே காலைப்

பிடித்து, பணத்தை வாங்கித் தப்பித்துக்கொள்ளலாம். தோற்றுவிட்டால், தமிழ்நாடு எக்கேடு கெட்டால் என்ன, தமிழகத்து மக்கள் எப்படி அழிந்தால் என்ன என்று கஜானாவைக் காலி செய்து விட்டு, கோடிகள் பலவற்றைக் கடனாகப் பெற்று, பாக்கிகள் பல கோடிகளை வைத்து விட்டு, ஆட்சிப் பீடத்திலிருந்து மக்களால் அன்று விரட்டப்பட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரியணை ஏறினார்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். I am not yielding. (குறுக்கீடு) No, No. நான் பேசி முடித்துவிடுகிறேன். அப்புறம் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) No, No. இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசி விட்டீர்கள். உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு யாருடைய காலையும் பிடிக்கிற வேலை கிடையாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) நீங்கள் இருங்கள். கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அமைதியாக இருங்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்படிப்பட்ட நிலையிலும்—மைய அரசிலே தி.மு.க. உட்கார்ந்து இருந்தது. பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தாலும் மைய அரசு; காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தாலும் மைய அரசு; மதுரையிலே இந்திரா காந்திக்கு என்னென்னவோ நடந்தது. ஒரு விதவை எல்லாம் நாட்டை ஆளலாமா என்ற குரல் எல்லாம் ஒலிக்கப்பட்டது. ஆனாலும்கூட, எப்படியும் டெல்லியின் காலைப் பிடித்து அம்மாவுக்குத் தொல்லை தரவேண்டுமென்ற நோக்கோடு மைய அரசிலே இடத்தைப் பிடித்தார்கள், பி.ஜே.பி. ஆட்சியிலே மதவாதக் கட்சி இருக்கலாமா, எங்கள் கொள்கைக்கு மாறுபட்டதல்லவா என்றெல்லாம் சொல்லிக்கொண்டு, அம்மாவினுடைய இயக்கத்திற்கு, கட்சிக்கு, அம்மாவுக்குத் தொல்லை தரவேண்டுமென்ற நோக்கோடு அன்று இடத்தைப் பெற்றார்கள்.

அதுமட்டுமல்ல, டெல்லிக்குச் சென்றார்கள். தமிழகத்து மக்களுக்கு, ஏழையெளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலை கிடைத்தால் என்ன, கிடைக்காவிட்டால் என்ன? இலவச வேட்டி, சேலைத் திட்டம் இல்லாமல் போகவேண்டும்; அந்த அளவுக்கு நிதி நெருக்கடியை



உருவாக்க வேண்டும்; புரட்சித் தலைவி அம்மாவினுடைய புகழ் குறைய வேண்டும்; இப்படிப்பட்ட சதித் திட்டம்தான் டெல்லி ஆட்சியிலே இடத்தைப் பெற்ற திமு.க.வினுடைய சதித் திட்டமாக இருந்தது.

அதுமட்டுமல்ல, இலவச மின்சாரத்தை உழவர் பெருமக்களுக்குப் புரட்சித் தலைவர் கொண்டு வந்தார். தொடர்ந்து இருந்து வந்த அந்தத் திட்டத்திற்கு நெருக்கடியை உருவாக்க வேண்டும்; மக்களின் உள்ளத்தில் இடத்தைப் பெற்று ஆட்சிக்கு வந்த அம்மாவுக்கு விவசாயிகளை எதிரிகளாகத் தூண்டிவிட வேண்டும் என்ற நோக்கோடு . . .

**திரு. துரைமுருகன்:** இலவச மின்சாரத் திட்டத்தை இவர்களா கொண்டு வந்தார்கள்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. நான் சொல்லி முடிக்கிறேன். (குறுக்கீடு) ஆமாம். அதுகூட—நான் சொல்கிறேன். (குறுக்கீடு) I am not yielding. இலவச மின்சாரத் திட்டத்தை (குறுக்கீடு) நாங்கள்தான் கொண்டு வந்தோம். அதுதான் வரலாற்று உண்மை.

**திரு. துரைமுருகன்:** எப்போது? எப்போது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஏற்கெனவே சட்டப் பேரவையில் பல முறை நிருபிக்கப்பட்டிருக்கிறது. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.தான் முதன்முதலில் இலவச மின்சாரத் திட்டத்தைக் கொண்டு வந்தார். (குறுக்கீடு) புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர்.தான் இலவச மின்சாரத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியைத்தான், அவருடைய வாரிசு, அவருடைய இதயக் கனியாக (மேசையைத் தட்டும் ஒலி), இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று தொடர்ந்து இந்த ஆட்சியைப் பேணிக் காத்து வருகிறார். அந்த இயக்கத்தைப் பேணிக் காத்து வருகிறார். அந்த இலவச மின்சாரத் திட்டத்தை எப்படியும் தொல்லைக்கு உட்படுத்தி, விவசாயிகளை அம்மாவுக்கு எதிராக முடுக்கிவிட வேண்டும், இது அடுத்த சதித் திட்டம்.

இந்தியா பூராவும் 6 ரூபாய்க்கு அரிசி போடப்படுகிறது. இந்த அம்மா மட்டும் 3½ ரூபாய்க்குப் போடுகிறார். அது கூடாது. 6 ரூபாய்க்கு அரிசி விலையை உயர்த்த வேண்டும். இலவச மின்சாரத்தை உழவர்களுக்கு இல்லை என்று சொல்ல வேண்டும். வீட்டுக்கு மின்சாரக் கட்டணத்தை இரண்டு மடங்கு, மூன்று மடங்கு உயர்த்த வேண்டும். இலவச வேட்டி, சேலைத் திட்டம் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

அப்படிச் செய்தால்தான் உங்களுக்குப் பணத்தைத் தருவோம் என்று, நிதி நிறுவனங்களைத் தூண்டிவிட்டவர்கள், டெல்லியிலே ஆட்சியிலே இருந்த (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். அப்படிப்பட்ட நெருக்கடியைக் கொடுத்து, புரட்சித் தலைவி அம்மாவுக்குத் தொல்லைகள் தரவேண்டும், அம்மாவினுடைய புகழ் சரிய வேண்டும், அதனால் தமிழகத்து மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, இப்படிப்பட்ட சதித் திட்டத்தைத்தான் டெல்லியிலே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அங்கே இடம் பிடித்து, அதை நீங்கள் அரங்கேற்றிக் கொண்டிருந்தீர்கள்.

*பிற்பகல் 8–00*

காவிரித் தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்காத நிலை; கர்நாடக மாநிலம் வஞ்சிக்கின்ற நிலை; உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தும் அதை நடைமுறைப்படுத்தாத நிலை. அப்படிப்பட்ட நிலை இருந்தபோதிலும்கூட டெல்லியிலே ஆட்சிப் பீடத்திலே உட்கார்ந்துகொண்டு, காவிரித் தண்ணீர் தமிழக மக்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், அந்தக் கெட்ட பெயர் அம்மாவுக்கு ஏற்பட வேண்டுமென்று, தமிழக விவசாயிகளின் வயிற்றிலே அடித்து, கர்நாடக அரசைத் தட்டிக் கேட்க அங்கே டெல்லியிலே ஆட்சியிலே இடம் பிடித்திருந்த நீங்கள் சூழ்ச்சிக்காக அங்கு இருந்தீர்கள். சுயநலத்திற்காக இருந்தீர்கள். கர்நாடக அரசு தமிழகத்திற்குத் தண்ணீர் தரவில்லையென்றால், ஆட்சிப் பீடத்திலிருந்து இறங்குவோம் என்று, தமிழக மக்களின் நலன் கருதி, குரல் எழுப்பக்கூட மனம் இல்லாமல் துரோகச் செயலைச் செய்து அங்கு நீங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வறட்சி ஒரு பக்கம் இருந்தது. இப்படிப்பட்ட பல்வேறு தொல்லைகள் இருந்தன. அடுத்த மாதச் சம்பளத்தை அரசு ஊழியர்களுக்குத் தர முடியாத ஒரு நிலை உருவாக்கப்பட்டது. ஆட்சியிலே நீங்கள் இருந்தீர்கள், கஜானாவைக் காலி செய்தீர்கள். திட்டச் செலவுகளுக்கு அப்போது நிதியைக் குறைத்தீர்கள். வீண் செலவுகளை, விளம்பரச் செலவுகளை அதிகமாக நீங்கள் மேற்கொண்டீர்கள். இதன் காரணமாக, தமிழகம் நிதி நிறுவனங்களால் புறக்கணிக்கப்பட்ட நிலையை நீங்கள் உருவாக்கினீர்கள். அரசு ஊழியர்களை ஏமாற்றி, அவர்கள்மூலம் எப்படியும் அரசியல் நடத்தலாம் என்று சொல்லி, பல சலுகைகளை அறிவித்தீர்கள். என்ன செய்தீர்கள்? சதித் திட்டம் போட்டீர்கள். 2003 ஆம் ஆண்டு, 2004 ஆம் ஆண்டு யாரோ ஆட்சிக்கு வரட்டும், அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளட்டும் என்றும், ஆட்சிக்கு





வரமாட்டோம் என்பதை அப்போதே தெரிந்துகொண்ட காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) 2003 ஆம் ஆண்டிலே எங்கள் தலையிலே அதைச் சுமத்திவிட்டு நீங்கள் அரசு ஊழியர்களுடைய வயிற்றிலே ஏமாற்றி அடித்தீர்கள். இப்படிப்பட்ட நிலையில்தான் ஆட்சிப் பீடத்திற்கு அம்மா அவர்கள் வந்தார்கள். தீர்க்கதரிசனத்தோடு செயல்பட்டார்கள். மைய அரசிடம் சென்றார்கள். எடுத்துச் சொன்னார்கள். எங்களுக்கு அதிக நிதி வேண்டுமென்று சொன்னார்கள். பல பிரச்சினைகளில் தத்தளிக்கின்றோம் என்று சொன்னார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், மக்கள்மீது அக்கறையை அவர்கள் ஆட்சியில் செலுத்தவில்லை. மக்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. மாறாக, கடனிலே மிஞ்சித்தும் அவர்கள் கவலைப்படவில்லை. மாறாக, கடனிலே கிஞ்சித்தும் அவர்கள் கவலைப்படவில்லை. மாறாக, கடனிலே

தத்தளிக்கின்ற, திவாலான மாநிலமாகத் தமிழகத்தை விட்டுச் சென்றுவிட்டார்கள். பிரச்சினைகள் பலவாக இருக்கின்றன, நிதியைத் தாருங்கள் என்று சொன்னார். அப்போது டெல்லியிலே இருந்த பி.ஜே.பி. ஆட்சி ஓரளவுக்கு மனம் இரங்கி வந்தாலும்கூட, அங்கே ஆட்சியிலே இருந்த தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்குத் தூபம் போட்டுக் கொண்டிருந்த தி.மு.க.வின் தலைவர் தமிழகத்திலேயிருந்து அவர்களுக்கு முட்டுக்கட்டை போட்ட காரணத்தால், அம்மா அவர்கள் 3 ஆயிரம் கோடி வேண்டுமென்று கேட்டார். இல்லையென்று கையை விரித்தார்கள். உதவவில்லை. அதற்காக நீங்கள் குரல் கொடுத்தீர்களா? விருப்ப ஒதுக்கீடாக ஆந்திர மாநிலத்திற்குப் பணம் கிடைத்தது. விருப்ப ஒதுக்கீடாக குஜராத் மாநிலத்திற்குப் பணம் கிடைத்தது. துரைமுருகன் அவர்கள் அவைக்கு வரவேண்டும். நான் பேசுவதைக் கேட்கவேண்டுமென்பதற்காக அவர் அவையை விட்டு வெளியே போகக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இப்படிப்பட்ட நிதி நெருக்கடியை உருவாக்கி, எதற்காக அதைச் செய்தீர்கள்? தமிழக மக்கள் அதைப் புரிந்துகொள்ள மாட்டார்களா? உங்களுடைய அரசியல் எத்தகைய அரசியல்? குடும்பம் உயரவேண்டும், உங்களுடைய சுயநலம் ஈடேறவேண்டும். தமிழகத்து மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழைக் கெடுக்கவேண்டும், இது உங்களுடைய சதித் திட்டம். உங்களுக்குக் குடும்பம் இருக்கின்றது. உங்களுக்குக் குடும்பத்தின்மீது அக்கறை இருக்கின்றது. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரைக்கும் தமிழகத்திலே இருக்கின்ற ஆறு கோடி மக்களைத் (மேசையைத் தட்டும் ஒலி) தன் வீட்டுப் பிள்ளைகள் என்ற உணர்வோடு

[திரு. சி. பொன்னையன்] [2005 ஏப்ரல் 12

தாயுள்ளத்தோடு ஆட்சி செலுத்துகின்ற காரணத்தால், இரவு, பகல் என்று பாராமல் உழைத்தார்.

நேற்று நான் கூறியதைப் போல, ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைக்கின்றார். சனி, ஞாயிறு என்றுகூட பார்ப்பதில்லை. சனிக்கிழமை அதிகாரிகளை அவர் அழைப்பார். ஞாயிற்றுக்கிழமை அதிகாரிகளை அழைப்பார். என்னென்ன பிரச்சினைகள், எப்படித் தீர்க்க வேண்டுமென்பதை, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி என்று அந்த ஐந்து நாட்களுக்கு வேண்டிய திட்டங்களை, சனி, ஞாயிறு நாட்களிலே அதிகாரிகளோடு கலந்து, அனைத்தையும் படித்து, 24 மணி நேரமும், ஒவ்வொரு நாளும் இந்தத் தமிழகத்து மக்களுக்காகவே அம்மா அவர்கள் உழைத்த காரணத்தால், நிதிச் சீரழிவிலிருந்த தமிழகம், அழிந்துவிட்ட நிலையிலிருந்த தமிழகம், சிக்கலுக்கும், இன்னலுக்கும் உட்படுத்தப்பட்ட தமிழகம் இன்று மீட்கப்பட்டிருக்கின்றது. தமிழகத்திலே கடன்களையெல்லாம் ஒருவிதத்தில் சமாளித்து, உங்களால் நீக்கப்பட்ட இலவச வேட்டி, சேலைத் திட்டத்தை, உங்களால் நீக்கப்படுவதற்குக் காரணமாக இருந்த இலவச வேட்டி, சேலைத் திட்டத்தை, உங்களால் ரத்துச் செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்த விவசாயிகளுக்கான இலவச மின்சாரத் திட்டத்தை, உங்களால் 6 ரூபாய் அரிசி விலை என உயர்த்தக்கூடிய கட்டாயத்தை நிதி நிறுவனங்கள்மூலம் நீங்கள் சதித் திட்டம் டெல்லியில் போய் உட்கார்ந்து கொண்டு செய்தீர்களே, அந்தச் சூழ்ச்சியையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முறியடித்தார்கள். (குறுக்கீடு) After I conclude, you can raise points. ஏற்கெனவே நான் சொன்னேன். திரு. பொன்முடி, ஆரம்ப நேரத்திலே தூங்கிக் கொண்டிருந்தீர்கள். டெல்லியிலே நீங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தீர்கள். (குறுக்கீடு) நிதி நிறுவனங்களைத் தூண்டிவிட்டீர்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள்.

*பிற்பகல் 8–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்த பிறகு ஏதாவது கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்முடி செவிமடுக்காமல் எங்கோ கவனித்துக்கொண்டிருந்தார். துரைமுருகன் வெளியே போய்விட்டார் என்ற கவலையிலே இருந்தார், கவனிக்காமல் இருந்துவிட்டார். நான் சொல்கிறேன். செவிமடுத்துக் கேளுங்கள். (குறுக்கீடு)



2005 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நிதி அமைச்சர் பேசி முடிக்கட்டும்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. பேசி முடிக்கிறேன். (குறுக்கீடு) No. No. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am not yielding. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நிதி அமைச்சர் பேச்சை நிறைவு செய்யட்டும்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am not yielding. டெல்லியிலே இருக்கின்ற நிதி நிறுவனங்கள், டெல்லியிலே உங்கள் ஆட்சி இருந்தது. உங்களுடைய ஆட்சி பி.ஜே.பி. காலத்திலும்—நான் சொல்கிறேன், பி.ஜே.பி. காலத்திலும் டெல்லியிலே உங்கள் ஆட்சி இருந்தது. தற்போதும் டெல்லியிலே உங்கள் ஆட்சி இருக்கிறது. நிதி நிறுவனங்கள் நிபந்தனைகளை விதித்தன. நிதி நிறுவனங்கள் நிபந்தனைகளை விதித்ததற்கு மைய அரசு காரணமாக இருந்தது. நீங்கள் காரணமாக இருந்தீர்கள். அந்த ஆட்சியிலே இடம் பெற்றிருந்த நீங்கள் காரணமாக இருந்தீர்கள். புரட்சித் தலைவி உழைத்த காரணத்தால் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Mr. Pugazhendhi, I am not yielding. You give your answer at the end, please. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உழைத்த காரணத்தால், சிறப்பாகச் செயல்பட்ட காரணத்தால், சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்ட காரணத்தால், உங்கள் ஆட்சிக் காலத்திலே ரூ.8,000 கோடிதான் Commercial Taxes வரி வருவாய் இருந்தது. ஆனால், (குறுக்கீடு) சரி. இன்னும் இருக்கிறது, முக்கியமான பதில் இருக்கிறது. பயந்துகொண்டு போகாதீர்கள். துரைமுருகன், பயந்துகொண்டு போகாதீர்கள். இன்னொரு பதில் இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நிதி அமைச்சர் பேசி முடிக்கட்டும்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, துரைமுருகன், பயந்துகொண்டு போகாதீர்கள். இன்னும் ஒரு முக்கியமான பதிலைச் சொல்ல இருக்கிறேன். இப்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்பட்ட காரணத்தால், இலவச வேட்டி, சேலைத் திட்டம் மீண்டும் வந்தது. ஆறு ரூபாய் அரிசி என்பது மூன்று ரூபாயாகக் குறைக்கப்பட்டது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவச மின்சாரத்

[திரு. சி. பொன்னையன்] [2005 ஏப்ரல் 12

திட்டம் மீண்டும் தரப்பட்டது. வீட்டு மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டது. இப்படி சமூக நலத் திட்டங்களைச் செய்தார். வளர்ச்சித் திட்டங்களுக்குப் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை ஒதுக்கினார். வளர்ச்சிப் பணியிலே, வளர்ச்சிப் பாதையிலே, தமிழகத்தை முன்னேற்றக்கூடிய அளவிற்கு மைய அரசினுடைய பல அமைப்புகள்கூட பாராட்டக்கூடிய அளவிற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதுரியமாக நிதிநிலையைக் கையாண்ட காரணத்தால், இந்த வெற்றியில் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் இருந்திருந்தால் நான் சிரித்துக்கொண்டே பேசியிருப்பேன். உங்களைவிட வேகமாக அவர்கள் பேசிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார். 12–வது நிதிக் குழு 29.5 சதவீதத்தை 30.5 சதவீதமாக உயர்த்தியது, அதனால் அதிகமான நிதி உங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்று சொன்னார். அது தவறு. ஒருபுறம் வலது கையிலே கொடுப்பதுபோலக் கொடுத்துவிட்டு, அதைவிட அதிகமாக இடது கையிலே பிடுங்கிக்கொள்கிற அணுகுமுறையை மைய அரசு மேற்கொண்டது. இதை நீங்கள் எல்லாவற்றையும் படித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். Grants-in-Aid given to States for Education Sector என்ற முறையிலே Discretionary Grant—விருப்ப ஒதுக்கீடு என்ற ஒரு முறையை மைய அரசு கடைப்பிடித்து வருகிறது. அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற நாம்—இதை நீங்கள் ஒப்புக்கொள்ளக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அந்த விருப்ப ஒதுக்கீடு என்ற முறையை மைய அரசு கடைப்பிடித்து என்ன செய்திருக்கிறது தெரியுமா? ஒட்டுமொத்த வருமானத்தைப் பெறுகின்ற மைய அரசு, தமிழகத்தை வளர்ந்துவிட்ட மாநிலம் என்று சொல்லி, நமக்கு இல்லையென்று சொல்லிவிட்டு, நடப்பாண்டிலும்கூட அசாம் மாநிலம், பீகார் மாநிலம், ஜார்கண்ட் மாநிலம், மத்தியப் பிரதேசம், ஒரிசா, இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், வெஸ்ட் பெங்கால் ஆகிய மாநிலங்களுக்கு ஒரு கோடி, இரண்டு கோடியல்ல, மாண்புமிகு எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் அவர்களே, 10,171.65 கோடி ரூபாயை விருப்ப ஒதுக்கீடாக, Discretionary Grant–ஆக அந்த மாநிலங்களுக்குத் தந்துவிட்டது. ஆனால் தமிழகத்திற்கு சல்லிக் காசுகூட ஒதுக்கவில்லை. மைய அரசுக்கு மாநிலங்களிலிருந்து வருகிற அந்த ஒட்டுமொத்த நிதியிலே 30.5 சதவீதம் என்று ஒதுக்கிவிட்டு, தமிழகத்தை வளர்ந்த மாநிலம் என்று சொல்லி, அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்து, 1.5 சதவீதத்தை ஒருபுறம் தந்துவிட்டு



2005 ஏப்ரல் 12] [திரு. சி. பொன்னையன்]

மறுபுறம்—கவனியுங்கள்—கிட்டத்தட்ட 2, 4, 6, 8 மாநிலங்களுக்கு, நமக்கு இல்லையென்று சொல்லிவிட்டு, 10,171.65 கோடி ரூபாயை ஒதுக்கி, நமக்கு மறைமுகமாக, புறக்கடை வழியாக, நமக்குத் தர வேண்டிய நிதியை, வர வேண்டிய நிதியை இல்லையென்று சொல்லிவிட்டார்கள்.

பிற்பகல் 8–10

அதைப்போலவேதான், Grants-in-aid given for maintenance of Health Services என்ற முறையிலே சுகாதாரத் துறைக்காக அசாம் மாநிலத்திற்கும், பீகார் மாநிலத்திற்கும், ஜார்கண்ட் மாநிலத்திற்கும், மத்தியப் பிரதேசத்திற்கும், ஒரிசாவிற்கும், உத்தரப் பிரதேசத்திற்கும், உத்ராஞ்சலுக்கும் 5,887.08 கோடி ரூபாயை, மாநிலங்களிலிருந்து ஒட்டுமொத்தமாகப் பெறுகின்ற அந்த வருவாயிலிருந்து அவர்களுக்கு பிரத்யேகமாக ஒதுக்கி விட்டு, தமிழகத்தை வஞ்சித்து விட்டார்கள். சல்லிக் காசுகூட இல்லை. புறக்கடை வழியாக, நமக்கு வர வேண்டிய பணத்தை இப்படி அவர்கள் பிடுங்கிச் சென்றுவிட்டார்கள். இன்னும் ஒரு வேடிக்கை—வேதனையான அணுகுமுறையை—அரசியல் என்பது வேறு, அரசியலுக்கு அப்பாற்பட்டு உங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் டெல்லியிலே இதற்கு வாதிட வேண்டும். நமது உரிமையை விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதை நீங்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதற்காக இதையும் சொல்கிறேன்.

Non-Plan Revenue Deficit என்ற முறையிலே மாநிலங்கள் எவை, எவை இருக்கின்றனவோ, அந்த மாநிலங்களுக்கு அதிகப்படியான நிதியை ஒதுக்குவதற்கு, அந்தப் பொதுத் தொகுப்பிலிருந்து Gap Grant என்ற முறையிலே ஒரு நிதியை வகுத்து, அதிலே அருணாச்சலப் பிரதேசம், அசாம், இமாச்சலப் பிரதேசம், ஜம்மு & காஷ்மீர், கேரளா, மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, ஒரிசா, பஞ்சாப், சிக்கிம், திரிபுரா, உத்ராஞ்சல், West Bengal ஆகிய மாநிலங்களுக்கு ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல, மையத் தொகுப்புக்கு மாநிலங்களிலிருந்து சென்ற நிதி தமிழகத்தைப் போன்ற வளர்ந்த மாநிலங்கள்—நான் ஏற்கெனவே பல முறை சொல்லி இருக்கின்றேன். பல முறை சொல்கிறானே என்று நினைக்காதீர்கள். பல முறை சொல்வதற்குக் காரணம், இது அண்ணாவினுடைய கொள்கை. நீங்களும் அண்ணாவின் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிற காரணத்தால் நீங்கள் உணர வேண்டும். டெல்லியிலே உரத்த குரலிலே எடுத்து வைத்து, இதை நீங்கள் பெற்றுத் தரவேண்டும் மாநிலத்திற்கு என்பதற்காகச் சொல்கின்றேன். இத்தனை மாநிலங்களுக்கும் அந்தப் பொதுத் தொகுப்பிலேயிருந்து, மாநில வருவாயிலிருந்து நாம் பெறுகின்ற,

நமது மாநிலத்திலிருந்து ஒட்டுமொத்தமாக அவர்கள் பெறுகின்ற அந்த 27 ஆயிரம் கோடியிலிருந்து, பல மாநிலங்களிலிருந்து வருகின்ற பணத்திலிருந்து 56,855.08 கோடி ரூபாயை இத்தனை மாநிலங்களுக்கும் தந்துவிட்டார்கள். இதை திரு. சிதம்பரம், மைய நிதி அமைச்சர் அவர்களிடம் நீங்கள் தட்டிக் கேட்க வேண்டும். தமிழகத்தின் பிரதிநிதியாக இருக்கின்ற திரு. சிதம்பரம் தமிழகத்தை எப்படி மறந்தார்? குறுக்கு வழியிலே புற வழியிலே எப்படித் தமிழகம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறது. ரூ.56,855.87 கோடி Gap Grant Fund என்ற முறையிலே அந்த மாநிலங்களுக்குச் செல்கிறது. கடந்த காலத்தில் இந்த முறை இல்லை. இந்தப் புதிய முறையைக் கொண்டு வந்து, வேண்டிய மாநிலங்களுக்கு எல்லாம் விருப்ப ஒதுக்கீடாக இப்படி எடுத்துச் சென்றுவிட்டார்கள். தமிழகத்தை வஞ்சித்து விட்டார்கள். தமிழகத்தைத் தானே வஞ்சித்துவிட்டார்கள், புரட்சித் தலைவிக்குத்தானே தொல்லையென்று நீங்கள் இனியும் தூங்கி இருக்கக் கூடாது. காழ்ப்புணர்ச்சியோடு இருக்கக் கூடாது. தமிழகத்தை வஞ்சித்தால் புரட்சித் தலைவியை வஞ்சிப்பதாக மட்டும் நீங்கள் எண்ணி விடாதீர்கள். நீங்கள் நிரந்தரமாகத் தமிழ் மண்ணிலே வஞ்சிக்கப்பட்டு விடுவீர்கள், தமிழகத்து மக்களால் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துச் சொல்வதற்காக இதை நான் சொல்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது, (குறுக்கீடு) போய் விட்டார். சரி. Devolution to the State devolution to the State (குறுக்கீடு) அவர்கள் பல கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். அதிலே மாண்புமிகு அம்மா அவர்களே விளக்கம் தந்தார்கள். உள்நாட்டுத் தொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அவர் சட்டப் பேரவையிலிருந்து, டெல்லியிலே இருக்கின்ற மாண்புமிகு பிரதமர் திரு. மன்மோகன்சிங் அவர்களுக்கும், நிதி அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்களுக்கும், அங்கே இருக்கின்ற தொழில் துறை, வர்த்தகத் துறை அமைச்சருக்கும் அந்த அறிவுரையைச் சொல்லி இருக்கிறார் என்றுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். காரணம், தொழில்களை, உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு மைய அரசிற்கு இருக்கிறது. வெளிநாட்டு முதலீட்டின் தாக்கலால் உள்நாட்டுத் தொழில்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றால், உள்நாட்டுத் தொழில்களுக்கு சீன நாடு பாதுகாப்பைத் தந்திருக்கிறது. சீன நாட்டைப் பொறுத்த வரைக்கும், உள்நாட்டுத் தொழில்களுக்குப் பாதுகாப்பைத் தருகிறது. சிறு தொழில்களுக்குப் பாதுகாப்பைத் தந்திருக்கிறது.



Agro-based Industries–க்குப் பாதுகாப்பைத் தந்திருக்கிறது. பிற நாட்டுப் பொருட்கள் அந்த நாட்டிற்கு வருகின்ற காரணத்தால் விவசாய விளைபொருட்கள் விலை ஏறிவிடக்கூடாது, விவசாயத்தை ஒட்டிய தொழில்கள் பாதித்துவிடக்கூடாது என்று சீனா அக்கறையோடு அத்தனை conditions–ஐப் போட்டு W.T.O.–க்கு, உலகச் சந்தைக்கு அவர்கள் செல்வதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 8–15

ஆனால் மைய அரசு, அது எந்த மைய அரசாக இருந்தாலும் நான் அதைச் சொல்லவில்லை. மைய அரசைப் பொறுத்தவரைக்கும், 70 சதவீதம் மக்கள் வாழுகிற, மக்கள் நம்பியிருக்கிற, 70 சதவீதப் பொருளாதாரம், இந்தியாவின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தில் 70 சதவீதப் பொருளாதாரம் கிராமப் பொருளாதாரம் என்கின்ற நிலை இருக்கின்றபோது, அந்த விவசாய விளைபொருள்களைப் பாதுகாக்காமல், சிறு தொழில்களைப் பாதுகாக்காமல், உலகச் சந்தையிலே அவர்கள் ஒட்டி உறவாடுவது, தமிழகத்திற்கு மட்டுமல்ல இந்தியாவினுடைய கிராமப்புறத் தொழிலுக்கு, சிறு தொழிலுக்குச் செய்கின்ற வஞ்சகம். இதைத் தட்டிக் கேட்க வேண்டும். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் டெல்லியிலே இதைச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து, இன்னும் ஒன்றை அவர் சொன்னார். பனியன் factory, திருப்பூரிலே இருக்கிற பனியன் factory–க்கு C-Form தர வேண்டும். அந்த C-Form பெற முடியாமல் இருப்பவர்களுக்கு 9 சதவீதம் அந்த வரியிலே அவர்களுக்கு மீண்டும் தர வேண்டும் என்ற ஒரு உறுதிமொழி தந்து, நிலுவையிலே இருக்கிறது என்று சொன்னார். அவர் இன்னும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். C-Form பெற முடியாதவர்களுக்கு 10 சதவீத அந்தத் தண்டனை என்ற முறையிலே இருப்பது, மையச் சட்டத்திலே இருக்கிறது. மையச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று நாங்கள் பல முறை டெல்லியிலே சொல்லியிருக்கிறோம். திரு. எஸ்.ஆர்.பி. அனைத்தும் தெரிந்தவராக இருப்பதுபோல் பேசுகிறார். டெல்லியிடம் சொல்லி, C-Form-லே திருப்பூரிலேயிருக்கிற பனியன் தொழிலிலே இருக்கிறவர்களுக்குப் பாதுகாப்பு முழுமையாகக் கிடைக்க வேண்டுமென்றால், மைய அரசு அந்தத் தண்டனையாக அவர்கள் விதிக்கின்ற 10 சதவீதத்தை அவர்கள் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [2005 ஏப்ரல் 12

பென்சில் தொழிற்சாலை ஒன்று கோவை மாவட்டத்திலே மக்களுக்குப் பாதிப்பைத் தருவதாகச் சொன்னார். அந்தத் தொழிற்சாலையை, மக்களுக்குப் பாதிப்புத் தருகின்ற தொழிற்சாலையைப் பற்றி அவர் எங்கள்மீது குற்றம் சாட்டுவதுபோலச் சொன்னார். ஆனால், அவர் குற்றம் சாட்டியது—அவர் பக்கத்திலே அமர்ந்திருக்கிற மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் அவர்களை அவர் குற்றம் சாட்டினார். உங்களாட்சிக் காலத்தில்தான், 2000 ஆம் ஆண்டில்தான், அந்த விஷப் புகையைக் கக்குகின்ற அந்தத் தொழிற்சாலைக்கு நீங்கள்தான் அனுமதி தந்திருக்கிறீர்கள். நாங்கள் ஒரு உத்தரவாதம் அவருக்குத் தருகிறோம். அந்தப் புகையால், விஷப் புகையால் மக்களுக்குப் பாதிப்பு இல்லாத அளவிற்கு, மிகவும் strict என்று பெயர் எடுத்திருக்கின்ற எங்கள் Pollution Control Board, strict ஆன நடவடிக்கை எடுத்து, மக்களை அங்கு பாதுகாக்குமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பணி நீட்டிப்பு, அதிகாரிகள் பலருக்குத் தருவதில் பாரபட்சம் என்று சொல்லியிருக்கிறார். தகுதியுள்ளவர்கள், அளப்பரிய தகுதியுள்ளவர்கள் எங்கு இருந்தாலும் அவர்கள் தகுதியினைப் பயன்படுத்த, அவர்களுக்குப் பணி நீட்டிப்புத் தருவது தவறல்ல, அது நல்லது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அன்புச் சகோதரர் திரு. சிவபுண்ணியம் பேசுகிறபோது சொன்னார், கூட்டுறவுத் துறை சீர்கெட்டு விட்டது என்று சொன்னார். அவர் மறைமுகமாக எந்த அளவிற்கு தி.மு.க.-வை, உங்களைத் திட்டினார் என்பதனை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவுத் துறையைச் சீர்கெடுத்ததே தி.மு.க.வினர்தான் என்பதற்குப் புள்ளிவிவரங்களை அள்ளி அள்ளித் தந்தார் அன்புத் தம்பி ஜெயராமன் அவர்கள். அன்புத் தம்பி நமது அனிதா அவர்களும் தந்தார்கள். அதையெல்லாம் கேட்டு விட்டு, இறுதியிலே பேசிய, concluding remark ஆகப் பேசிய சிவபுண்ணியம் அவர்கள் உங்களைச் சாடியிருக்கிறார், இடித்துரைத்திருக்கிறார். அவருக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சீர்கேடுகளைக் களைந்து விடுவோம், தக்க—சிவபுண்ணியம் அவர்களே, அந்தச் சீர்கேடுகளைக் களைந்து விடுவோம், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விடுவோம் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.



2005 ஏப்ரல் 12]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** உழவர்களுக்குச் சொந்தமான, அந்த விவசாயிகளுக்குச் சொந்தமான அந்தப் பணத்தை ஏப்பம் விட்டவர்களை எல்லாம் சிங்க நிகர் துணிவு மிக்க எங்கள் அம்மா, அவர்களை எல்லாம் பிடித்து சிறைக்குத் தள்ளி (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உழவர்கள் வயிற்றிலே பாலை வார்ப்பார், குற்றவாளிகளைத் தப்பவிட மாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) கவலைப்படாதீர்கள் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** திரு. சிவபுண்ணியம் அவர்களே, என நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே, (குறுக்கீடு) கருணாகரனா, அவருக்கும் அந்தப் பெருமை சேரட்டும்.

மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது சொன்னார் என்று கருதுகிறேன். திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்று நீங்கள்தான் கூறினீர்கள் என்று கருதுகிறேன். அதற்குப் பேரவையில் ஒரு தீர்மானம் வேண்டுமென்று கேட்டீர்கள். பேரவையில் தீர்மானம் வேண்டுமென்ற ஒரு தேவை, தேவைதானா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். காரணம், பேரவையைவிட அதிக சக்தி வாய்ந்த மைய அமைச்சரவை உங்களிடம் இருக்கிறது. மைய அமைச்சரவையிலே நீங்கள் ஒரு முடிவு எடுத்து, திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்று நீங்கள் டெல்லியிலே ஒரு முடிவெடுத்துவிட்டால், அது ஆகிவிடும். அதில் பிரச்சினையே இருக்காது. உங்களது (குறுக்கீடு) அம்மா எழுதியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்லி பிரதம அமைச்சர் அவர்களுக்கு, திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை அனுப்பியிருக்கிறார். உங்களுடைய குறைந்தபட்சக் கொள்கைத் திட்டத்தில், வள்ளுவன், அய்யன், வள்ளுவன் வழியில் இருக்கின்றோம் நாங்கள் எல்லாம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றவர்களுக்கு, தற்காலிகமாக அவர்களுடைய தலைமையை ஏற்று நீங்கள் இருக்கிறீர்களே, அங்கு வற்புறுத்தி, டெல்லியிலே வற்புறுத்தி, திருக்குறளைத் தேசிய நூலாக நீங்கள் ஆக்க முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் இதுகாறும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதையெல்லாம் ஏற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

[திரு. சி. பொன்னையன்] [2005 ஏப்ரல் 12

உங்களுடைய கோரிக்கைகளினுடைய ஆழத்தை ஆய்ந்து, அதன் அடிப்படையில் பரிகாரத்தைத் தேடித் தருவார் என்ற வாக்குறுதியைத் தந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு வேண்டுகிறேன்.

பிற்பகல் 8–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு நா. வீராசாமி.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கம் தமிழக அரசுக்குக் கொடுக்கின்ற நிதியைக் கொடுக்காமல் துரோகம் செய்கிறது என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். நான் இந்த அவைக்குச் சொல்லிக்கொள்கிறேன். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலேகூட, நிதி அமைச்சர் இப்போது என்ன பேசினாரோ, அதே பேச்சைத்தான் பேசியிருக்கிறார். மத்தியிலே இருக்கக்கூடியவர்கள் தமிழகம் வளர்ந்த மாநிலம். ஆகவே இந்த மாநிலத்திற்கு மத்திய அரசு தொகுப்பு நிதியிலேயிருந்து கொடுக்க முடியாது என்றுதான் பல ஆண்டு காலமாகப் புறக்கணித்து வருகிறார்கள். அதற்காக தி.மு.க.வும் போராடிக் கொண்டுதான் இருந்தது. இப்போது நீங்களும் போராடுகிறீர்கள். இதற்கு ஏதாவது ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று சொன்னால், மத்தியிலே இருக்கின்றவர்கள் நம்மை வளர்ந்த மாநிலம் என்று சொல்லிச் சொல்லியே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அனைவரும் குரல் கொடுக்க வேண்டுமே தவிர, தி.மு.க–வை துரோகம் செய்தது என்று சொல்லக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நாங்கள் அந்த ஆணையம் கொண்டு வந்ததிலிருந்து கேட்டுக்கொண்டுதான் இருந்தோம். 205 டி.எம்.சி. தண்ணீர் நாங்கள் ஆட்சியிலே இருந்தபோதுகூட கர்நாடகம் கொடுக்கவில்லை. நாங்களும் எத்தனையோ முறை படையெடுத்துப் பார்த்தோம். எனவே தி.மு.க.–வைப் பொறுத்தவரையிலே, தமிழகத்திற்குக் காவிரி நீர் கிடைக்க வேண்டும் என்பதிலேயும், நிதியில் மத்திய அரசாங்கம், வளர்ந்த மாநிலம் என்பதற்காகப் புறக்கணிக்கக் கூடாது என்பதிலேயும் உறுதியாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2005 ஏப்ரல் 12]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே மத்திய அமைச்சரவையிலே இடம் பெற்றிருப்பதாகச் சொல்கிறார். ஆனால், திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்குவது தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் பெருமை என்ற வகையிலே, எதிரொலிக்கின்ற வகையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதைத்தான் சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பிரதம அமைச்சரிடம் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய பரந்த நோக்கத்திற்கு நன்றி. இங்கு ஒரு தீர்மானத்தை நாங்கள் கொண்டு வந்து போட்டால், அந்தப் பெருமை எங்களைச் சாரும் என்பதற்காகச் சொல்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை. இல்லை. நான் சொல்கிறேன். கேட்டுக்கொள்ளுங்கள். உங்களுக்கு அங்கே வாய்ப்பிருக்கிறது. திருக்குறளுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறவர், அங்கு ஆட்டிப் படைக்கின்ற நிலையிலே இருக்கின்ற காரணத்தால் ஒரு வாரத்தில் முடித்துக்கொள்ளக்கூடிய ஒன்றாயிற்றே, ஏன் இன்னும் முடிக்க முடியாமல் தடுமாறுகிறீர்கள் என்றுதான் கேட்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் . . .

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. அதற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குறள் வழி நடக்கின்ற தாயான அம்மா அவர்கள், தமிழகத்தின் பெருமையை அகில இந்தியாவும் உணர வேண்டும்; அகில உலகமே உணர வேண்டும் என்பதற்காக, நீங்கள் சொல்வதற்கு முன்னாலேயே பாரதப் பிரதமருக்கு, திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார்; வற்புறுத்தி எழுதியிருக்கிறார். அதற்கு நீங்கள் உறுதுணை புரிய வேண்டும்.

[2005 ஏப்ரல் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2005 ஏப்ரல் 12] [திரு. சி. பொன்னையன்]

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13–4–2005) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8–24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

112. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

113. 2000–2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

114. 2001–2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு

2005 ஏப்ரல் 12]

நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

241. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 2003–2004 ஆம் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

242. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2003–2005)

243. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2003–2005)

244. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பதாவது அறிக்கை. (2003–2005)

245. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்து ஒன்றாவது அறிக்கை. (2003–2005)

246. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்து இரண்டாவது அறிக்கை. (2003–2005)

247. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்து மூன்றாவது அறிக்கை. (2003–2005)

248. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்து நான்காவது அறிக்கை. (2003–2005)

249. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003–2005)



2005 ஏப்ரல் 12]

## இணைப்பு

(131 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 47

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### அத்தியாயம் – 1

**முன்னுரை:**

1.1 மனித வள ஆதாரங்களின் மேம்பாட்டின் முக்கிய அங்கமாகத் திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, இளைஞர்களிடையே சுகாதாரம், தோழமை, நட்புடன்கூடிய போட்டி மனப்பான்மை ஆகியவைகளை வளர்த்து, அவர்களது ஆளுமைத் திறனை மேம்படுத்த தெளிவான தாக்கத்தை உண்டாக்கும். அனைத்துத் தரப்பு இளைஞர்களிடையே நல்ல குடிமகனாக விளங்குவதற்கான தகுதிகள், சமுதாயப் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்தல் போன்ற பண்புகளை வளர்ப்பதே இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் குறிக்கோளாகும். தனி நபர் பண்புகளை வளர்த்தல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் குறிக்கோளுக்காகப் பொறுப்பேற்கும் எண்ணத்தை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக இளைஞர்களிடையே தொண்டு செய்யும் மனப்பான்மையை நிலைநிறுத்தல் மற்றும் வலுவூட்டுவதை இத்துறை வலியுறுத்துகிறது. விளையாட்டு மற்றும் போட்டிகள், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப் பணித் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் இளைஞர்களிடையே அடிப்படைப் பண்புகளை வளர்த்து, அவர்களைப் பொறுப்புமிக்க குடிமகன்களாக மலரச் செய்கின்றன. விளையாட்டுகள் மற்றும் சமூக சேவைகளில் உயர்ந்து விளங்குதல்,

சாதனை படைக்கும் உணர்வினையும், தேசப் பெருமையையும், தேச பக்தியினையும் அதிகப்படுத்துகிறது.

மேலும் விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் அமைப்புகள், இளைஞர்களிடையே சமூக நல்லிணக்கம் மற்றும் ஒழுக்கத்தினை வளர்க்கின்றன. நமது மாநிலம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் பெற்றிருக்கும் பெரும் உறுதியான உள்ளாற்றல் மற்றும் போட்டி மனப்பான்மைகளைக் கண்டறிந்து, தீவிரமாக வளர்க்கவேண்டும். கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளிலுள்ள இளைஞர்களின் திறமைகளைக் கண்டறிய முயற்சித்து, அதன்மூலம் அவர்களின் திறமையை மேம்படுத்த சந்தர்ப்பம் அளிப்பதற்கும், போட்டியில் சிறந்து விளங்கும் நாட்டத்தினை மேம்படுத்துவதற்கும் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

## 2005–2006 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு

2005–2006 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை எண் – 47–ன்கீழ் நிதி ஒதுக்கீடு ரூ.33.97 கோடி ஆகும். இதில் ரூ.11.39 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும்.

## அத்தியாயம் – 2

### 2.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்:

இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தினை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு அரசாணை (நிலை) எண் 641, கல்வி (ஒய்1) துறை நாள் 18–7–92–ல் அதற்கு முன்பு இயங்கி வந்த இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில





விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பு இந்திய விளையாட்டுக் குழும அமைப்பிற்கு ஒப்பானதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார். தலைமை அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழக அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகள் குறித்த கொள்கை முடிவுகள் அனைத்தையும் செயல்படுத்தி வருகிறது.

### 2.2 குறிக்கோள்களும், இலக்குகளும்:

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு:–

1. மாவட்டத் தலைநகரங்களிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.
2. திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து, அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை பெறச் செய்தல்.
3. தலைசிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதுடன் அவர்கள் உயர்ந்த அளவில் சாதனைகள் புரிந்திடும் வகையில் விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.
4. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்ய ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்ய ஆவலையும் ஊக்குவித்தல்.
5. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர் சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.

[2005 ஏப்ரல் 12

6. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

7. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும் உத்வேகத்தையும் மலரச் செய்தல்.


2.3 தமிழ்நாடு கடந்த ஆண்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் குழுப் போட்டிகளிலும், தனித்திறன் போட்டிகளிலும் முன்னிலை வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

**2.4 விளையாட்டில் தமிழ்நாடு உன்னத நிலையை அடைவதற்கான புதிய உத்திகள்:**

உலகத்தில் உள்ள வளரும் மற்றும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் விளையாட்டுத் துறையில் தொலைநோக்கு உத்தியினை மிகச் சரியாகக் கடைப்பிடிப்பதன் மூலம் வெற்றியினை வெளிக்கொணர்கிறார்கள். பிரமிடு முறையிலான அடித்தளத்தைக் கொண்டு கீழ்நிலையிலிருந்து உயர்ந்த நிலையை அடையும்வண்ணம் உத்தியைப் பலரும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் பல நாடுகள் சிறியதாக இருப்பினும், வெற்றிகளைப் பெற்று அவர்களின் மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை தேடித் தருவதற்கு தொலைநோக்கு உத்தியினைக் கடைப்பிடிப்பது உகந்ததாகும். இவ்வாறான தொலைநோக்கு உத்தியினை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதன்மூலம் ஏனைய மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழலாம். தமிழ்நாட்டில் 5 பல்வேறு நிலையினைக் கொண்ட பிரமிடு முறையிலான தர வரிசையினை விளையாட்டுத் துறையில் செயல்படுத்திட இக்கொள்கைக் குறிப்பில் விளக்கப்படுகிறது. இவ்வாறான பிரமிடு வரிசையில் நிலை–1 கீழ்மட்டத் திறன் கொண்ட அளவிலும், நிலை–5 அதிகபட்சத் திறன்கொண்ட அளவிலுமாக உள்ளது. இதனை விளக்கும்பொருட்டு, பிரமிடு முறையிலான வரைபடம் கீழே வரையப்பட்டுள்ளது:–



2005 ஏப்ரல் 12]




விளையாட்டுகளில் வெற்றியினை அடைய, கீழ்வரும் காரணக் கூறுகள் முக்கியமானதாக உள்ளன:

அ) விளையாட்டுப் போட்டிகளின் தர வரிசை

ஆ) விளையாட்டில் திறன் கண்டறிதல் மற்றும் வளர்ச்சிகளின் தர வரிசை

இ) ஒவ்வொரு நிலையிலும் தேவையான விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள்

ஈ) பயிற்சி முறைகள் மற்றும் தேவைகளின் தர வரிசை

உ) ஒவ்வொரு நிலையிலும் நேர்த்தி பெற்ற வல்லுநர்கள்

ஊ) விளையாட்டுப் போட்டிகள் மற்றும் திறமையாளர்களைப் பல்வேறு நிலைகளில் ஊக்குவிப்பதற்கான விளையாட்டு ஆர்வலர்கள்

மேற்கண்ட வரைபடத்தின்மூலம் ஒவ்வொரு நிலையிலும் மேற்காணும் காரணக் கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பில் உள்ளன.

இவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் புதிய உத்திகளின் ஒவ்வொரு நிலையினைப் பற்றியும் விரிவாக அறிந்துகொள்ள, கீழ்க்காணும் வகையில் விரிவாக விளக்கப்படுகிறது:–

**நிலை–1**

**2.5 அதிக அளவிலான பங்கேற்பு:** உடற்தகுதியினைப் பரவலாக்குவதன்மூலம் இந்த நிலையினை வெளிக்கொணர இயலும். சிறப்பான நிலையினை அடையக்கூடிய திறமைகளைக் கண்டறிதல் மற்றும் உடற்தகுதித் திறன்களை மேம்படுத்தக்கூடியவை இதனுள் அடங்கும். குறைந்தபட்சத் திறன் வளர்ச்சியுடன் விளையாட்டினை மிகச் சரியான முறையில் அறிந்துகொள்வதன் மூலம் ஒரு விளையாட்டு/ விளையாட்டுப் பிரிவில் சரியான இடத்தினை அடைய இயலும்.

[2005 ஏப்ரல் 12

விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் தேவைக்கேற்ப இருப்பின்,
அடிப்படைத் திறன் கொண்டவர்களை மேம்படுத்துதல் இந்நிலையில்
அடங்கும். போட்டிகளில் அதிக அளவிலான பங்கேற்பு, சமுதாயப்
பங்கேற்பு மற்றும் உள்ளூர் அளவில் விளையாட்டில் ஆர்வத்தினை
வளர்த்தல் இந்நிலையில் அடங்கும். அடிப்படையில் தேவையான
பயிற்சிகளை உடற்கல்வி ஆசிரியர்கள் அல்லது நிலை–1 பயிற்றுநர்களைக்
கொண்டு வழங்க இயலும். இந்த நிலையில் விளையாட்டு
ஆர்வலர்களைக் கண்டறிந்து, அவர்களை விளையாட்டுத் திட்டங்களில்
ஈடுபடச் செய்வதன்மூலம் ஊக்குவிக்க இயலும். மருத்துவர்கள் மற்றும்
முடநீக்கியல் நிபுணர்களிடையே விளையாட்டு மருத்துவத்தினைப்
பிரபலப்படுத்துவதன்மூலம் அடிப்படை விளையாட்டுக் காயங்களுக்கு
சிகிச்சை அளிக்க ஏதுவாக அமையும். நிலை–1 பிரமிடு முறையில்
அடித்தளமாக அமைகிறது.

**நிலை–2**

**2.6 மாவட்ட அளவிலான திட்டங்கள்:**

மாவட்டங்களில் உள்ள தலைசிறந்த விளையாட்டுத் திறன்களை
ஒருங்கிணைப்பதே இதன் குறிக்கோளாகும். தேசிய விளையாட்டு
ஆணையத்தில் பயிற்சி பெற்ற பயிற்றுநர்களைக் கொண்டு மாவட்ட
விளையாட்டு வளாகங்களிலும், மாவட்டங்களின் இதர பகுதிகளிலும்
கண்டறியப்படும் விளையாட்டுத் திறன் மிக்கவர்களுக்குப்
பயிற்சி அளிக்க இது வழிவகுக்கும். நிலை–1–ல் அளிக்கப்பட்ட
நுணுக்கங்களைவிட இந்நிலையில் அதிநவீன நுணுக்கங்களைப்
பயிற்றுவிப்பது குறிக்கோளாகும். 2 ஆம் நிலையில், விளையாட்டுப்
போட்டிகள் நடத்த உதவும் விளையாட்டு கட்டமைப்புகள்
உள்ளடங்கும். மாவட்ட அளவில் விளையாட்டை ஊக்குவிக்க
விரும்பும் விளையாட்டு ஆர்வலர்கள், இந்நிலையில் கண்டறியப்பட்டு
ஊக்குவிக்கப்படுவர். அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்களும்
மாவட்டத்தில் பிரபலமான விளையாட்டுக்களைக் கண்டறிந்து,
அதனை முன்னேற்ற, தகுந்த விளையாட்டு வரைபடம் தயாரிக்கும்
பணியில் தொடர்ந்து ஈடுபடுத்தப்படுவர். மேலும் மாவட்டத்தில்
பிரபலமான விளையாட்டுக்களுக்கான ஒரு வரையறுக்கப்பட்ட
திட்டத்தினை மேம்படுத்தும் பணியிலும் ஈடுபடுத்தப்படுவர்.

**நிலை–3**

**2.7 மாநில அளவில் விளையாட்டில் சிறந்து விளங்குதல்:**

இப்பிரமிடின் அடுத்த நிலையாவது மாநில அளவில் விளையாட்டில்
சிறந்து விளங்குதல் ஆகும். மாநில அளவிலான விளையாட்டுப்



2005 ஏப்ரல் 12]

போட்டிகளை நடத்துவதற்குத் தகுதிவாய்ந்த விளையாட்டுக்
கட்டமைப்பு வசதிகளைக் கண்டறிந்து, அவற்றினை ஒருங்கிணைத்து
அதற்குத் தகுந்த விளம்பரம் அளிக்கப்படும்.

மாநில அளவில் சேம்பியன்களாகத் திகழ்வதற்குத் தகுதி படைத்த
மாணவ, மாணவிகளின் திறனை மேம்படுத்தத் தனிக் கவனம்
செலுத்தப்படும். சிறப்பு வாய்ந்த அகாடமிகள், விளையாட்டுப்
பள்ளிகள், விளையாட்டு விடுதிகள் மற்றும் பிற விளையாட்டுத் திறன்
வளர்க்கும் திட்டங்கள் மாநிலம் முழுவதும் ஊக்குவிக்கப்படும். இங்கு
பயிற்சி அளிப்பதில் முன்னுரிமை வழங்கப்பட்டு, திறமைவாய்ந்த
பயிற்றுநர்கள் எங்கு செயல்பட்டு வந்தாலும், அவர்களது சேவையைப்
பயன்படுத்தி மாநில அளவில் தனிச் சிறப்பு வாய்ந்த வீரர்களை
உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்படும். விளையாட்டு மருத்துவ
வல்லுநர்கள், ஊட்ட உணவு வல்லுநர்கள், மனோதத்துவ நிபுணர்கள்,
உடல் தகுதி திறன் நிபுணர்கள், முடநீக்கியல் நிபுணர்கள்
கண்டறியப்படுவர். மாநில அளவிலான விளையாட்டுக்களுக்கு உதவி
புரியும் விளையாட்டு ஆர்வலர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு
ஊக்குவிக்கப்படுவார்கள். மேலும் மாநில அளவில் திறமையுள்ள
வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவித்து அவர்களைப் பணியில்
அமர்த்துபவர்கள் கண்டறியப்படுவதன்மூலம், சேம்பியன் விளையாட்டு
வீரர்களுக்குப் பணி வாய்ப்பு கிடைக்கச் செய்ய இயலும்.

**நிலை–4**

**2.8 தேசிய அளவிலான செயல்பாடுகள்:**

இந்நிலையில் தேசிய அளவிலான செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம்
அளிக்கப்படும். தேசிய அளவிலான வீரர்களைப் பயிற்றுவிக்கவும்,
மேம்படுத்துவதற்குமான ஒருங்கிணைந்த முயற்சிகள் ஊக்குவிக்கப்படும்.
தேசியத் திட்டத்தில் பயிற்சி அளிக்கும்வண்ணம் பயிற்றுநர்களது பயிற்சி
நுணுக்கங்கள் அவ்வப்போது நவீனப்படுத்தப்படும். தேசிய அளவில்
நடத்தப்படும் போட்டிகளுக்கான விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள்
கண்டறியப்பட்டு மேம்படுத்தப்படும். விளையாட்டு வீரர்கள் மற்றும்
விளையாட்டுப் பிரியர்களிடையே உந்துதலையும், போட்டி
மனப்பான்மையையும் ஏற்படுத்த தேசிய அளவிலான போட்டிகளைத்
தமிழ்நாட்டில் நடத்திட இம்மாநிலம் ஊக்குவிக்கும். இந்நிலையில்,
விளையாட்டு வீரர்களிடையே உள்ள திறமைகளை மேம்படுத்த
விளையாட்டில் ஏற்படும் காயங்கள். விளையாட்டு மருத்துவம்,
மனோதத்துவ சேவை ஆகிய வல்லுநர்களின் சேவைகள் மிகவும்
தேவையாக உள்ளது. முடிந்த அளவில், தமிழ்நாடு விளையாட்டு
மேம்பாட்டு ஆணையம் அயல்நாட்டு வல்லுநர்களின் சேவையைப்

பயன்படுத்தி இங்குள்ள பயிற்றுநர்களின் தரத்தினை உயர்த்துவது நீண்ட நாட்களுக்குப் பலன் அளித்திடும். நிலை–4–ன்கீழ் தெளிவாகக் கண்டறியப்பட்ட அமலாக்கத்தில் உள்ள திட்டங்கள் தேசிய அளவில் சாதனை புரிபவர்களைத் தேர்வு செய்வதில் கவனம் செலுத்திடும். பலன் அளிக்கக்கூடிய செலவினமாக இருப்பதே இதன் நோக்கமாகும். மேலும் இத்திட்டத்தின் இடையில் மறு மதிப்பீடு செய்யப்பட்டு, எங்கெங்கு தேவையோ, அங்கங்கு திருத்தங்கள் கொண்டு வரப்படும். தேசிய அளவிலான போட்டிகளில் ஆர்வமுள்ள விளையாட்டு ஆர்வலர்கள் கண்டறியப்பட்டு ஊக்குவிக்கப்படுவர். நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று நடத்தும் நிறுவனங்கள், விளம்பர வல்லுநர்கள், இதர விளையாட்டை ஊக்குவிக்கும் நிறுவனங்களுக்கு தேசிய அளவிலான போட்டிகளை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் அறிவிக்கப்படும்.

**நிலை–5**

**2.9 சர்வதேச அளவிலான சாதனைகள்:**

பிரமிடின் மிக முக்கிய இந்நிலை, கீழ் உள்ள நிலைகளின் சரியான ஒருங்கிணைப்பால் பலப்படுத்தப்படுகிறது. இந்நிலையில் சர்வதேச அளவில் வெற்றிகள் பெறுவது மற்ற நான்கு நிலைகளிலிருந்தும் இயற்கையாக வெளிப்பட்டு வரும் இறுதி முடிவாகும். இருப்பினும், இந்நிலையில் தேவைகள் மிக அதிக அளவில் இருப்பதால் மற்ற நிலைகளிலுள்ள முயற்சிகளைவிட சிறப்பு முயற்சிகள் தேவைப்படும். விளையாட்டுக் கட்டமைப்புகள் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்திட பன்னாட்டு அளவிலான இணையங்கள் வகுத்துள்ள பல்வேறு நிபந்தனைகளின்படி அமைய வேண்டும். இந்நிலையில் சர்வதேசத் தரப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்த ஊக்குவிக்கப்படும். மேலும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுள்ள விளையாட்டு ஆர்வலர்கள் ஒருங்கிணைக்கப்படுவர். இந்நிலையில், திறமையை மேம்படுத்துவதற்கு அதிநவீனப் பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் விளையாட்டில் பங்கேற்பது முக்கியமானதாக இருக்கும். உலக அளவில் பயிற்சிக்கான ஆராய்ச்சி வசதிகளைக் கொண்டுள்ள சிறப்புவாய்ந்த நிறுவனங்கள் தொடர்பு கொள்ளப்படும்.

2.10 தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் சர்வதேசப் போட்டிகளான ஒலிம்பிக் போட்டிகள், காமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறுவதற்கு உலகத் தரம்



வாய்ந்த வீரர்களாகத் திகழத் தகுதி படைத்த விளையாட்டு வீரர்களுக்கும், பயிற்றுநர்களுக்கும் வெளிநாடுகளில் பயிற்சியும், பங்கேற்பும் அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இதனைக் கருத்தில் கொண்டு, சில குறிப்பிட்ட ஒலிம்பிக் விளையாட்டுகளில் அயல்நாடுகளில் விளையாடவும், பயிற்சியாளர்கள் அயல்நாட்டில் உள்ள பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறவும் நிதியுதவி வழங்கும். இந்நிலையில் தொழில் முறை அணுகுமுறை முக்கியப் பங்கு வகிக்கிறது. இத்தொழில் முறை அணுகுமுறையை அடைவதற்குத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

2.11 குறிப்பாக, விளையாட்டில் உன்னத நிலையை அடைய அனைத்து சமூக விளையாட்டு முயற்சிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தகுந்த அடிப்படைப் பயிற்சியின்றி இப்பிரமிடின் உச்ச நிலையை அடைய இயலாது என்பது சொல்லித் தெரிவதில்லை. எனவே அடிப்படை மிகவும் முக்கியமானதாகும். கீழ்நிலையின் பலமே மேல்நிலையை பலப்படுத்தும். கீழ்நிலையில் சிறந்த ஒருங்கிணைந்த முயற்சி இருப்பின் மேல்நிலைகளில் சிறந்த முன்னேற்றம் காணலாம். இப்பிரமிடு மாதிரி, நல்ல அடிப்படை உள்ள திட்டம் வகுத்தால் அது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கொள்கைகளையும், திட்டங்களையும் முன்னேற்றும். இவ்வாறு செயல்பட்டால், ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வெல்லலாம். விளையாட்டுக் கட்டமைப்புகள், போட்டிகள், விளையாட்டுத் திறன் கண்டறிதல், விளையாட்டுத் திறன் முன்னேற்றம், பயிற்சி, சிறப்பு வல்லுநர்கள் உதவி எதுவாயினும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மேலே குறிப்பிட்ட நிலைகளின்படி தனது செயல்பாட்டினை ஒருங்கிணைத்துச் செயல்பட்டால் நாட்டில் நமது மாநிலம் விளையாட்டில் சிறந்த மாநிலமாகத் திகழும்.

2.12 தனது செயல்பாட்டினை, திறன்பட உத்திகளை வெளியிட்டு, அதற்கேற்ப செயல் திட்டங்களை நடத்தும் எந்த ஒரு நிறுவனமும் தனது குறிக்கோளினை அடைய முடியும். நமது செயல்பாடுகளும் அவ்வாறே பலன் தரும் வகையில் அறுதியிடப்பட்டு, அச்செயல்பாடுகள் மேலே குறிப்பிட்ட வெற்றிக் கனியை சர்வதேச அளவில் அடைய தமிழ்நாடு, விளையாட்டில் முதன்மையாகத் திகழும்வண்ணம் தமிழ்நாட்டு விளையாட்டுத் திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் – 3

**விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்:**

ஒரு நாட்டில் விளையாட்டுக்களில் பங்கேற்கும் மனப்பான்மையினை ஊக்குவிப்பதில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மாநிலத்திலுள்ள அனைத்துத் திறமையாளர்களுக்கும் போதுமான கட்டமைப்பு வசதிகளை அமைத்துத் தருவதற்கு தமிழ்நாடு முன்னுரிமை அளித்துள்ளது. முன் அத்தியாயத்தில் தெரிவித்துள்ள நிலைகளுடன் இணைக்கும் வகையில் தொலைநோக்குடன் ஏற்படுத்தப்பட்ட உத்திகளைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் அமைந்துள்ள விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள் வருமாறு:–

**நிலை–5**

**3.1 பன்னாட்டுத் தரத்திலான வசதிகள்:**

1. **ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை:**

இவ்விளையாட்டரங்கம் சுமார் 40,000 இருக்கை வசதியைக் கொண்டு கட்டப்பட்டது. மேலும் பன்னாட்டுத் தரத்திலான கால்பந்து ஆடுகளம் (புல்வெளியுடன்) மற்றும் தடகள ஓடுகளம் (400 மீ. 8 ஓடுகளப் பாதையுடன் செயற்கை இழை ஓடுகளம்) வசதிகளை கொண்டது. இவ்விளையாட்டரங்கம் மின்னொளி அமைப்பு மற்றும் மின்னணு கணக்கியல் கருவி ஆகிய வசதிகளையும் கொண்டது.

2. **பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், பெரியமேடு, சென்னை:**

8,000 இருக்கை வசதியைக் கொண்ட இவ்விளையாட்டரங்கம் கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, சிறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல் போன்ற விளையாட்டுகளுக்கான வசதிகளுடன் குளிர்சாதன வசதியுடன் கூடியது.

3. **வளைகோல்பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை:**

இவ்விளையாட்டரங்கம் 4,000 இருக்கை வசதியைக் கொண்டது. வளைகோல்பந்து ஆடுகளம் புதிய "மெகா டர்ஃப் செயற்கைப்



புல்வெளி" 30 x 15 மீ அளவில் பயிற்சி வளைகோல்பந்து ஆடுகள வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து ஆடுகளத்தில் வண்ணத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் வகையில் மின்னொளி வசதி அமைக்கப்பட்டுள்ளது

4. **நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை:**

இவ்விளையாட்டரங்கம் 4,000 இருக்கை வசதியுடன் ஒரு போட்டி குளம் (50 x 25 மீ), ஒரு பாய்ச்சல் குளம் (18 x 25 மீ) மற்றும் ஒரு பயிற்சி குளம் (20 x 25 மீ) ஆகிய வசதிகளுடையது.

5. **டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை:**

இவ்விளையாட்டரங்கத்தில் மத்திய ஆடுகளத்தில் 5,000 இருக்கை வசதிகளும், மற்றும் 6 பயிற்சி ஆடுகளங்களில் 2,000 இருக்கை வசதிகளும் உள்ளன. இந்த செயற்கை இழை ஆடுகளங்கள் சர்வதேச அளவிலுள்ள ஆடுகளங்களுக்கு இணையாகவும், மின்னொளி அமைப்புடன்கூடியதாகவும் உள்ளது.

6. **ஸ்குவாஷ் (கவர்பந்து) ஆடுகளம், மாநில விளையாட்டு வளாகம், நேரு பூங்கா:**

தனியார் கூட்டாண்மையுடன் எட்டு சர்வதேசத் தரத்திலான ஸ்குவாஷ் ஆடுகளங்கள் மாநில விளையாட்டு வளாகம், நேரு பூங்காவில் தமிழ்நாடு மாநில ஸ்குவாஷ் ராக்கெட் கழகத்துடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ளது.

7. **மாவட்ட விளையாட்டு வளாகம், திருநெல்வேலி:**

சர்வதேசத் தரத்திலான போட்டிகள் மற்றும் பயிற்சிகள் பெறத்தக்க வகையில் செயற்கை வளைகோல்பந்து ஆடுகளம் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டு வருகிறது.

8. **மாவட்ட விளையாட்டு வளாகம், மதுரை:**

சர்வதேசத் தரத்திலான போட்டிகள் மற்றும் பயிற்சிகள் பெறத்தக்க வகையில் செயற்கைத் தடகள ஓடுகளம் மதுரையில் அமைக்கப்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 12

## 3.2 மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள்:

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | அண்ணா நீச்சல் குளம் 50 x 21 மீ மற்றும் 25 x 13 மீ குளங்கள் | — | ஷெனாய் நகர் நீச்சல் குளம் | அரசு மேல் நிலைப்பள்ளி, புதூரில் (ஒருமித்த உடன்படிக் கையுடன்) ஒரு கால்பந்து ஆடுகளம், நான்கு கிரிக்கெட் பயிற்சி பெறும் திடல்கள் | — |
| | மாநில விளையாட்டு வளாகம், சென்னை | 2 செயற்கை டென்னிஸ் ஆடுகளங்கள் | 400 மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம் 2 கூடைப் பந்து ஆடுகளம், 2 கைப்பந்து ஆடுகளம் | ஒரு கபடி ஆடுகளம் | — | ஒரு ஹாக்கி பயிற்சி ஆடுகளம், (செயற்கை) |
| 2. | திருவள்ளூர் | முகப்பேரில் இரண்டு டென்னிஸ் ஆடுகளங்கள் உருவாக்கப்பட உள்ளன. | — | முகப்பேரில் ஒருமித்த உடன்படிக்கை யுடன் 25 x 13 மீ நீச்சல் குளம் | — | மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கும் பணி தொடங்க உள்ளது |
| 3. | காஞ்சிபுரம் | 400 மீ தடகள ஓடுகளம் | ஒரு கால்பந்து ஆடுகளம், 1 வளைகோல் பந்து ஆடுகளம், 1 கூடைப்பந்து திடல், 2 கையுந்து பந்து திடல் | 1 கபடி திடல் | 1 பூப்பந்து திடல் | — |



2005 ஏப்ரல் 12]

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 4. | வேலூர் | — | ஒரு கால்பந்து ஆடுகளம் | 400 மீதடகள ஓடுகளம் | — | மல்டி ஜிம் ஹால் |
| 5. | கடலூர் | — | 400 மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம், 1 வளைகோல் பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கைப்பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் | — | மல்டி ஜிம் ஹால், சிறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கம் |
| 6. | விழுப்புரம் | — | ஒரு கால்பந்து ஆடுகளம் 1 கையுந்து பந்து திடல் | — | — | மல்டி ஜிம் ஹால் |
| 7. | நாகப்பட்டினம் | — | 400 மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம் | 25 மீ நீச்சல் குளம் (பணி முடிவுறும் நிலையில் உள்ளது) | — | மல்டி ஜிம் ஹால் |
| 8. | தஞ்சாவூர் | — | 400 மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம், 1 வளைகோல் பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் | — | மல்டி ஜிம் ஹால் |
| 9. | திருச்சி | 400 மீ தடகள ஓடுகளம் (உள் விளையாட்டு அரங்கப் பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது) | ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடு களம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் | — | மல்டி ஜிம் ஹால் |

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 10. | புதுக் கோட்டை | — | 400 மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் (பணி முடிவுறும் நிலையில் உள்ளது) | — | மல்டி ஜிம் ஹால் |
| 11 | பெரம்பலூர் (இ) அரியலூர் | — | 400 மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | — | — | மல்டி ஜிம் ஹால் செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25 x 30 மீ |
| 12. | திண்டுக்கல் | ஒரு கால்பந்து ஆடுகளம் (புல் தரையுடன்) | 400 மீ தடகள ஓடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | — | — | மல்டி ஜிம் ஹால் |
| 13. | மதுரை | 400 மீ தடகள ஓடுகளம் | ஒரு கால்பந்து ஆடுகளம், 2 வளை கோல் பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் (பணி முடிவுறும் நிலையில் உள்ளது) | — | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம், மல்டி ஜிம் ஹால், செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25 x 30 மீ |
| 14. | விருதுநகர் | — | 400 மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம், 1 வளைகோல் பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | — | வாடிப்—பட்டியில் செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் | மல்டி ஜிம் ஹால் செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25 x 30 மீ |



| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 15. | தூத்துக்குடி | — | 400 மீ தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம், 1 வளைகோல் பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் (பணி நடைபெற்று வருகிறது) | — | மல்டி ஜிம் ஹால், செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25 x 30 மீ |
| 16. | திருநெல்வேலி | 400 மீ தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் (புல் தரையுடன்) | 1 வளைகோல் பந்து ஆடுகளம், 2 கூடைப் பந்து திடல், 2 கையுந்து | 25 மீ நீச்சல் குளம் | — | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம், மல்டி ஜிம் ஹால் |
| 17. | கன்னியா குமரி | 400 மீ தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் | 2 கூடைப் பந்து திடல், 2 கையுந்து பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் | — | மல்டி ஜிம் ஹால் |
| 18. | தருமபுரி | --- | 400 மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் | — | மல்டி ஜிம் ஹால் |
| 19. | சேலம் | உள் விளையாட்டு அரங்கம் | ஒரு கால்பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் | — | மல்டி ஜிம் ஹால் |
| 20. | ஈரோடு | 400 மீ தடகள ஓடுகளம் | ஒரு கால்பந்து ஆடுகளம், 2 கூடைப் பந்து திடல், 2 கையுந்து பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் | — | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம், மல்டி ஜிம் ஹால் |

[2005 ஏப்ரல் 12

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 21. | கோயம் புத்தூர் | 400 மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம் (புல் தரையுடன்) | 2 கூடைப் பந்து திடல், 2 கையுந்து பந்து திடல் | — | — | செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25 x 30 மீ |
| 22. | நீலகிரி | 400 மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம் (புல் தரையுடன்), 2 செயற்கை டென்னிஸ் ஆடுகளம், ஒரு பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் | 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | — | — | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம், மல்டி ஜிம் ஹால் |
| 23. | இராமநாத புரம் | — | 400மீ தடகள ஓடுகளம், ஒரு கால்பந்து ஆடுகளம், 1 கூடைப் பந்து திடல், 1 கையுந்து பந்து திடல் | 25 மீ நீச்சல் குளம் | — | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம், மல்டி ஜிம் ஹால் |



2005 ஏப்ரல் 12]

| 3.3 மினி விளையாட்டு அரங்கம் – 10 தாலுகாக்களில் | | |
|---|---|---|
| | மினி விளையாட்டு அரங்கம் (திறந்த வெளி விளையாட்டு அரங்கம் வகை – 2) 10 தாலுகாக்களில். | விளையாட்டு வசதிகளை விரிவாக்கும் வகையில், தாலுகா அளவில் மினி விளையாட்டு அரங்கம் (திறந்த வெளி விளையாட்டு அரங்கம் வகை–2) கால்பந்து ஆடுகளம், கூடைப் பந்து ஆடுகளம், கையுந்து பந்து ஆடுகளம் ஆகியவற்றுடன் காலரி மற்றும் உடைமாற்றும் அறை வசதியுடன் ஏற்படுத்தப் பட்டு வருகிறது. |
| 1. | பெரம்பலூர்–பெரம்பலூர் | |
| 2. | ஊத்தங்கரை–கிருஷ்ணகிரி | |
| 3. | பரமக்குடி–இராமநாதபுரம் | |
| 4. | ஆலங்குளம்–மதுரை | |
| 5. | கோவில்பட்டி–தூத்துக்குடி | |
| 6. | செந்துறை–பெரம்பலூர் | |
| 7. | கல்லிடைக்குறிச்சி–திருநெல்வேலி | |
| 8. | தேன்கனிக்கோட்டை–கிருஷ்ணகிரி | |
| 9. | சிவகாசி– விருதுநகர் | |
| 10. | தரங்கம்பாடி–நாகப்பட்டினம் | |

| 3.4 ஸ்குவாஷ் ஆடுகளம் வசதிகள்–மாவட்டத் தலைநகரங்களில் | | |
|---|---|---|
| | 6 மாவட்டங்களில் உள்ள ஸ்குவாஷ் ஆடுகளம் வசதிகள் | பள்ளிகளுக்கிடையே நடைபெறும் போட்டிகளில் ஸ்குவாஷ் விளையாட்டு சேர்க்கப்பட்டு, பிரபலமடைந்து வருகிறது. எனவே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் 6 மாவட்டங்களில் ஸ்குவாஷ் ஆடுகளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. |
| 1. | சேலம் | |
| 2. | தேனி | |
| 3. | காஞ்சிபுரம் | |
| 4. | நாகப்பட்டினம் | |
| 5. | தூத்துக்குடி | |
| 6. | விருதுநகர் | |

[2005 ஏப்ரல் 12

**3.5 குத்துச் சண்டை வளையங்கள் – மாவட்டத் தலைநகரங்களில்**

| குத்துச் சண்டை வளையங்கள் – 10 மையங்களில் | | |
|---|---|---|
| 1. | மதுரை | தமிழ்நாட்டில் குத்துச் சண்டை விளையாட்டில் திறமை படைத்தவர்கள் அதிக அளவில் உள்ளனர். இவ்விளையாட்டில் அதிக அளவிலான விளையாட்டு வீரர்கள் பங்கேற்பதைக் கருத்திற்கொண்டு 10 மையங்களில் குத்துச் சண்டை வளையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பள்ளிகளுக்கிடையேயான போட்டிகளில் குத்துச் சண்டையும் சேர்க்கப்பட்டுள்ளது. |
| 2. | கடலூர் | |
| 3. | திருச்சி | |
| 4. | சேலம் | |
| 5. | காஞ்சிபுரம் | |
| 6. | நாகர்கோவில் | |
| 7. | தஞ்சாவூர் | |
| 8. | இராமநாதபுரம் | |
| 9. | தருமபுரி | |
| 10. | திருநெல்வேலி | |

**3.6 விளையாட்டில் தனியார் பிரிவுகள் பங்கேற்பு/கூட்டாண்மை**

கீழ்க்கண்ட விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் தனியார் கூட்டாண்மையுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது:

1. நீலகிரி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் மலைப்பிரதேச விளையாட்டுப் பயிற்சி மையம்.
2. மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் தர்மராஜம் அறக்கட்டளையின் கூட்டாண்மையுடன் உடல் ஊனமுற்றோருக்கு உள் விளையாட்டரங்க வசதி.
3. மாதா அமிர்தானந்தமயி அறக்கட்டளையின் கூட்டாண்மையுடன் கோவையில் நீச்சல் குள வசதி.



2005 ஏப்ரல் 12]

**அத்தியாயம் – 4**

**திறமை கண்டறிதல் மற்றும் திறமை மேம்படுத்துதல்:**

**நிலை–1**

**மாவட்டங்களில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டறிதல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்:**

**4.1 பள்ளிகளில் உடற்திறன் தேர்வுகளைப் பரவலாக நடத்தி அவர்களுக்கு விளையாட்டு அறிக்கை அட்டை வழங்குதல்:**

2002–2003 ஆம் கல்வியாண்டு முதல் சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் உடற்திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர்/சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து தமிழ்நாட்டில் விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்ய அரசு இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. மேலும் அரசு அறிவுறுத்தலின்பேரில், உடற்திறன் தேர்வு முடிவுகளின் அடிப்படையில் பள்ளி சிறுவர்/சிறுமியர்களுக்கு விளையாட்டு முன்னேற்ற அறிக்கை அட்டை வழங்கப்படுகின்றது. அந்த அறிக்கை அட்டையின் அடிப்படையில் சிறுவர்/சிறுமியர்கள் அவர்களுக்கு ஏதுவான குறிப்பிட்ட விளையாட்டில் கலந்து, கொள்ளவும் அல்லது அவர்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது. இவ்வாறு திறன் மிக்கவர்கள் விவரம் மாநில அளவிலான விவரக் குறிப்பேட்டில் (DATA BASE) பதிவு செய்யப்பட்டு அதன்மூலம் வருங்காலத் திறன் மிக்கவர்களை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், பள்ளிக் கல்வி இயக்குநர், மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர், தொடக்கப் பள்ளி இயக்குநர் மற்றும் ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகளின் ஆய்வாளர்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**4.2 கல்வி மாவட்ட அளவில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டறிதல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்:**

அரசு வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலுள்ள, சிறுவர்/சிறுமியர்களின் உடற்திறனைக் கண்டறிய, வேகமாக ஓடுதல் (Speed), அதிகமாகத் தாக்குப் பிடிக்கும் திறனைக் கண்டறிதல் (Endurance), உடல் வலிமை கண்டறிதல் (Strength), உந்து

[2005 ஏப்ரல் 12

திறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனைக் கண்டறிதல் (Explosive Power and Agility) ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நடத்தப்பட்டு அந்தத் தேர்வுகளில் ஒரு தேர்வில் 10–க்கு 10 என்ற மதிப்பெண் அல்லது 2 தேர்வுகளில் 10–க்கு 9 என்ற மதிப்பெண்கள் பெற்றவர்களின் பட்டியல் குறிப்பிட்ட படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 100 மீ, 200 மீ, 400 மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய தடகளப் பிரிவுகளில் தமிழ்நாட்டில் உள்ள 63 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களைக் கண்டறிய போட்டிகளை நடத்தின. அதனைத் தொடர்ந்து, கல்வி மாவட்டங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. விளையாட்டுத் திறனைக் கண்டறிய மண்டல அளவில் ஏற்கனவே மேலே குறிப்பிட்ட 6 தடகளப் பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. அப்போட்டிகளில் பங்கேற்க கல்வி மாவட்ட அளவில் முதல் 2 இடங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. உள்ளூர் அளவில் அதிகத் திறமைவாய்ந்த சிறார்களைக் கண்டறியும்பொருட்டு இம்முயற்சி தற்போது ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.3 இணை விளையாட்டு மேம்பாட்டு மையம்:

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடிப் பெருமை சேர்த்திடும் வகையில், அரசு, ஏழு ஆண்கள் கல்லூரிகள் மற்றும் ஐந்து பெண்கள் கல்லூரிகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புக்களைப் பயன்படுத்த இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களை அமைக்க அனுமதி வழங்கியது. மேலும், அரசு குறைந்தபட்சத் தகுதியை நிர்ணயித்தும், கல்லூரி நிர்வாகமே இத்திட்டத்தின்கீழ் இருநூற்று முப்பது மாணவ, மாணவிகளைச் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கியது. மேற்படி கல்லூரிகளைச் சார்ந்த சிறந்த திறன் படைத்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். கீழ்க்காணும் வகையில், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 12]

| வ. எண் | வகை | தொகை |
|---|---|---|
| 1. | மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுப் படி (10 மாதங்களுக்கு) | ரூ.600 |
| 2. | ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு | ரூ.500 |

**பயிற்சி:** அந்தந்தக் கல்லூரி நிர்வாகமே, தனது சொந்தப் பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்குப் பொறுப்பேற்கிறது.

### நிலை–2 : மாவட்டங்களில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டறிதல் மற்றும் திறமை மிக்கவர்களை மேம்படுத்துதல்:

### 4.4 வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்:

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும் பெற்றுத் தந்துள்ளனர். இக்காரணத்தினால், அங்கு சிறப்பு பளுதூக்கும் மையம் ஏற்படுத்தப்பட்டது. தகுதிவாய்ந்த பயிற்சியாளர்கள்மூலம் 30 விளையாட்டு வீரர்களுக்கு (மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10/– வீதம் சிற்றுண்டித் தொகையாக வருடத்திற்கு 365 நாட்களுக்கும் வழங்கப்படுகிறது. மேலும் விளையாட்டு உபகரணப் படியாக ஒவ்வொருவருக்கும் ரூ.2,400/– (ஆண்டொன்றுக்கு) வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்று சத்துவாச்சாரியில் பளுதூக்குவதற்கான சிறப்பு மேம்பாட்டு மையத்தில் 12 மாணவியர்கள் 2003–2004–ல் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள்

### 4.5 கோவையில் கூடைப்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்:

கோயம்புத்தூரில் கூடைப்பந்து விளையாட்டு பிரபலமான விளையாட்டாகும். கோவை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 20 வயதுக்குட்பட்ட மாணவர்கள் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு 25 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க விளையாட்டு

சிறப்பு மேம்பாட்டு மையம் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு கோவை, நேரு விளையாட்டரங்கத்தில் தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு விளையாட்டு உபகரணப் படியாக ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு ரூ.3,200/–ம், வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்ல போக்குவரத்துச் செலவினமாக, தினம் ஒன்றுக்கு ரூ.10/–ம், மற்றும் ஒரு மாணவனுக்குச் சிற்றுண்டிச் செலவினமாக, நாள் ஒன்றுக்கு ரூ.10/–ம், ஆண்டுதோறும் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

**4.6 திருநெல்வேலியில் வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்:**

திருநெல்வேலி அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களை வழங்கியுள்ளதால், அங்கு வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த NIS பயிற்றுநர்களால் 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ.3,600/– விளையாட்டு உபகரணப் படியாக வழங்கப்படுகிறது. ஆண்டொன்றிற்கு 300 நாட்களுக்கு வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்ல போக்குவரத்துச் செலவினமாக நாளொன்றுக்கு ரூ.10/–ம், மற்றும் சிற்றுண்டிச் செலவினமாக நாளொன்றுக்கு ஒரு விளையாட்டு மாணவனுக்கு ரூ.10/–ம் வழங்கப்பட்டு வருகிறது.

**4.7 நீச்சல் பயிற்றுவித்தல்:**

ஒவ்வொரு வருடமும் கோடை விடுமுறையில் நீச்சல் தெரியாதவர்களுக்கு அதனைக் கற்றுத் தருவதற்காக வேளச்சேரியில் அமைந்துள்ள நீச்சல் குள வளாகத்திலும், செனாய் நகர் நீச்சல் குளத்திலும் பல பிரிவுகளாக நீச்சல் பயிற்றுவித்தல் நடத்தப்பட்டு வருகின்றது.

**நிலை – 3**

**4.8 மாநில அளவிலான சிறப்பு அகாடமியில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டறிதல் மற்றும் திறமை மிக்கவர்களை மேம்படுத்துதல்:**

சிறப்பு விளையாட்டு அகாடமிகள் உலகம் முழுவதும் தற்பொழுது பிரபலமாக உள்ளன. இந்தச் சிறப்பு விளையாட்டு அகாடமி பயிற்சி



பெறுபவர்களின் திறமையை மேம்படுத்தவும், அவர்கள் வெற்றி வாகை சூடவும் வழிவகுக்கின்றது. ஒருவரின் திறமையை குறிப்பிட்ட விளையாட்டில் மேம்படுத்த உளவியல் தேர்வு, மன வலிமை, உடல் வலிமை, சத்துணவு, முறையான பயிற்சி, விளையாட்டு உபகரணங்கள், மருத்துவ வசதி மற்றும் விஞ்ஞான அடிப்படையிலான பயிற்சி மிக அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பயிற்றுநர்களையும், மற்றும் உயர்ந்த திறன் பெற்றவர்களையும் கொண்டு பயிற்சிகளை அளித்து வருகிறது. இருப்பினும், அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணரத் தக்கவாறு ஊக்குவித்தல் அவசியமாகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், கீழ்க்காணும் விளையாட்டுக்களில் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிறுவப்பட்டுள்ளன:

- மதுரையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிவேக ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி.
- சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கால்பந்து அகாடமி.
- சென்னை புதூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கிரிக்கெட் அகாடமி.
- புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கூடைப்பந்து அகாடமி.
- சென்னை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய எறிதல் அகாடமி.
- சென்னை நுங்கம்பாக்கம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கையுந்துபந்து அகாடமி.
- சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டைவிங் அகாடமி.
- சென்னை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீண்ட தூர ஓட்டத்திற்கான அகாடமி.

- சென்னை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய குறுந்தூர ஓட்டத்திற்கான அகாடமி.

இந்த அகாடமிகளின் வாயிலாக நலிவுற்ற பிரிவைச் சார்ந்த சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்குக் கூடுதலாக சத்துணவு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான அகாடமியைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அடிக்கடி பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்குத் தேவையான விளையாட்டுக் காலணிகள் மற்றும் அயல்நாட்டுக் காலணிகள் ஆகியவைகள் வழங்கப்பட்டு அகாடமிகள் சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன.

**4.9 விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள்:**

நம் மாநிலத்தில் மூன்று விளையாட்டுப் பள்ளிகளையும், நான்கு விளையாட்டு விடுதிகளையும் அரசு ஏற்படுத்தியுள்ளது:

| வ. எண் | விளையாட்டுப் பள்ளியின் பெயர் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை. | தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல் |
| 2. | சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி, பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர். | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |
| 3. | நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி. | தடகளம், கிரிக்கெட், கால்பந்து |

| வ. எண் | விளையாட்டு விடுதி அமைந்துள்ள இடம் | பிரிவுகள் |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, கையுந்துபந்து |
| 2. | மதுரை | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து |
| 3. | திருநெல்வேலி | தடகளம், வளைகோல்பந்து, கையுந்துபந்து |
| 4. | ஈரோடு (மாணவியருக்கு மட்டும்) | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |





விளையாட்டு விடுதிகள் விளையாட்டுக் காப்பாளர்கள், பயிற்றுநர்கள் மற்றும் சமையற்காரர்கள் ஆகியோர்களைக் கொண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நேரிடைப் பார்வையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

**தேர்வு முறை:** தேர்வுகள் இரண்டு அடுக்கு முறையில், அதாவது, மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| மாவட்ட அளவிலான தேர்வு | உடற்கூறு திறன் தேர்வுகள் நடத்தப்படும் |
| மாநில அளவிலான தேர்வு | குழு விளையாட்டுக்களில் விளையாட்டுத் திறன் மற்றும் நுட்பம் குறித்தும், தனியாள் விளையாட்டுக்களில் திறமை குறித்தும் தேர்வுகள் நடத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 8 ஆம் வகுப்பு, 9 ஆம் வகுப்பு மற்றும் 11-வது வகுப்பில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்குத் தேர்ச்சி பெற்ற பயிற்றுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. |

விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான 710 மாணவர், மாணவியர்கள் சேர்ப்பதற்கும், தங்கிப் பயிற்சி பெறவும், ஊட்ட உணவிற்காகவும் மற்றும் இதர செலவிற்காகவும் கீழ்க்கண்டவாறு அரசு மானியம் அளிக்கிறது:—

| வ. எண் | வகை | | தொகை |
|---|---|---|---|
| 1. | மாதம் ஒன்றிற்கு ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்கான தொகை (10 மாதங்களுக்கு மட்டும்) | | ரூ.720/ |
| 2. | சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவனுக்கு | | ரூ.700/ |
| 3. | ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாணவனுக்கு உண்டான விளையாட்டுப் பொருட்கள் வாங்க | | ரூ.250/ |
| 4. | ஒரு மாணவனுக்கு ஒரு ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற பணித் தொகை | | |
| | அ) | விளையாட்டுப் பள்ளி | ரூ.400/ |
| | ஆ) | விளையாட்டு விடுதி | ரூ.300/ |

[2005 ஏப்ரல் 12

**நிலை–4: தேசிய அளவில் – விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டறிதல் மற்றும் திறமை மிக்கவர்களை மேம்படுத்துதல்:**

**4.10 சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம்:**

சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம் சர்வதேச அளவில் பதக்கங்களை வெல்லக்கூடிய தனித்தன்மையுடைய திறமையுள்ள விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் ஒரு ஒப்பற்ற திட்டமாகும். சேம்பியன்களை சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கு பெறச் செய்து வெற்றி பெற்று நமது நாட்டுக்குப் பெருமை சேர்த்திடுவதற்காக ஒரு திட்டமிடப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த முயற்சி இன்றியமையாததாகும். அதனடிப்படையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பல்வேறு விளையாட்டுகளில் தமிழகத்திலிருந்து பதக்கங்களைப் பெற வாய்ப்புள்ள சாம்பியன்களை இனம் கண்டது. இந்தத் திட்டத்தின்மூலம் இனம் கண்டறியப்பட்ட விளையாட்டு சேம்பியன்களுக்கு தேவையான உதவிகளும் வழங்கப்படுகின்றன. நிதி உதவிகளைத் தவிர அவர்களுடைய உளவியல் திறன் மற்றும் உடல்ரீதியான வலிமையினை மேம்படுத்தவும், அந்தந்த விளையாட்டிற்குத் தேவையான சத்தான உணவு உட்கொள்ளும் முறையைப் பின்பற்றுதல் மற்றும் போட்டிகளில் வெற்றி வாகை பெற இயக்கும் ஆற்றல் போன்றவைகளில் மேம்படுத்த பயிற்சியையும், அதனால் அவர்கள் ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் வெற்றி வாகை சூட வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவும் இயலுகிறது.

**4.11 தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு மானியம் வழங்குதல்:**

மாநில அளவிலான சேம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் மற்றும் தேசிய சேம்பியன்ஷிப் போட்டிகளில் தமிழக அணிகள் பங்கேற்கவும் மாநில விளையாட்டுச் சங்கங்கள் மானிய உதவிக்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை அணுகி வருகிறது. மாநிலச் சங்கங்கள் தேசிய அளவிலான போட்டிகளில், குறிப்பாக ஒலிம்பிக் சார்ந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்வதற்காக அளிக்கப்பட்டு வரும் மானியங்கள் வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டு உயர்த்தப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 12]

**4.12 சிறப்பு விளையாட்டு விடுதி:**

கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி, சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் 1994-95 ஆம் ஆண்டில் செயல்படுத்திடவும், 50 விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறவும் அரசு அனுமதித்துள்ளது. இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் தடகளம், கூடைப்பந்து, குத்துச்சண்டை, நீச்சல் மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுக்களில் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட விளையாட்டுக்களில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்கள் தங்கள் கல்லூரிப் படிப்பினைத் தொடர்வதோடு அவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படச் செய்வதுமே இவ்விடுதியின் குறிக்கோளாகும். இந்த விடுதி, தேசிய அளவில் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளது. தங்கும் வசதியை நவீனப்படுத்தி, ஒவ்வொரு விளையாட்டு வீரரும் தங்குவதற்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

| வ. எண் | வகை | தொகை |
|---|---|---|
| 1. | மாணவர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கான உணவிற்கான தொகை (10 மாதத்திற்கு) | ரூ.1,500 |
| 2. | சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவருக்கு ஆண்டொன்றுக்கு | ரூ.3,000 |
| 3. | ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு படிப்புக் கட்டணம் | ரூ.1,500 |

**நிலை–5: சர்வதேச அளவில் – விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டறிதல் மற்றும் திறமை மிக்கவர்களை மேம்படுத்துதல்:**

**4.13 தலைசிறந்த திறமையுள்ள விளையாட்டு வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் பயிற்சியளித்தலும், மற்றும் போட்டிகளில் கலந்து கொள்ளுதலும்:**

தலைசிறந்த திறமையுள்ள விளையாட்டு வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் உயர்தரப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களில் பயிற்சியளிப்பதன்மூலமும், சர்வதேசப் போட்டிகளில் பங்கு பெற

வாய்ப்பளித்தல்மூலமும் அவர்கள் சர்வதேச அளவில் பதக்கம் பெற
வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் தற்போது சாம்பியன் மேம்பாட்டுத்
திட்டம்மூலம் இளையோர் மற்றும் மிகவும் இளையோர்களைத்
தேர்ந்தெடுத்து, அவர்களின் தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்பட்டு
வருகின்றன. அயல்நாட்டில் நவீன முறையில் உயர்தரப் பயிற்சி
அளிக்கப்பட்டு அவர்கள் சர்வதேச அளவில் அயல்நாட்டுப்
போட்டிகளில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. இந்த
ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 37 விளையாட்டு வீரர்கள்
பயனடைந்துள்ளனர்.



## அத்தியாயம் – 5

## பயிற்சி அளித்தல்

### நிலை–1: மாவட்டத்திற்குள் – பயிற்சி முகாம் திட்டம்:

### 5.1 பயிற்சித் திட்டத்திற்குப் புத்துயிர் ஊட்டுதல்:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பணிபுரியும்
சுமார் 110 விளையாட்டுப் பயிற்சியாளர்கள் அனைத்து
மாவட்டங்களிலும் பரவலாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.
நிதிப் பற்றாக்குறை மற்றும் பயிற்றுநர்களைப் பல்வேறு மாவட்டங்களில்
பணியில் அமர்த்த இயலாமை காரணமாக, சிறப்புப் பயிற்சி முகாம்,
கோடைக் காலப் பயிற்சி முகாம், வார இறுதி நாள் பயிற்சி முகாம்
ஆகியவை குறைந்த அளவில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன. உலகத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தின்
வாயிலாக அதிகத் திறனாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களின்
திறனை மேம்படுத்துவது அவசியமானது மட்டுமல்லாமல்
இன்றியமையானதுமாகும். சிறப்புப் பயிற்சி மற்றும் உயர்ந்த அளவிலான
பயிற்சிகளுக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்படும். திறன்
சார்ந்த மற்றும் ஊக்கத்தின் அடிப்படையிலான அளவுகோல்
ஆகியவைகளை ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனைகளாகக் கொண்டு,
ஐம்பதுக்கும் மேற்பட்ட பயிற்றுநர்கள் ஒப்பந்த அடிப்படையில்,
வெவ்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் பணிபுரிய வெவ்வேறு
இடங்களில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### 5.2 ஒவ்வொரு விளையாட்டிலும் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு திறமைகளை வளர்க்கவும், அவர்களின் தகுதிகளை மேம்படுத்தவும் மறுபயிற்சி முகாம் நடத்துதல்:

திறமை வாய்ந்தவர்களைக் கண்டறியவும், அவர்களின்
திறமைகளை வளர்க்கவும் உடற்பயிற்சிக் கல்வி
அடிப்படைத் திறமைகளை வளர்க்கவும் உடற்பயிற்சிக் கல்வி
ஆசிரியர்கள் தமிழக விளையாட்டின் முதுகெலும்பாக விளங்கி
வருகிறார்கள். நுட்பங்கள் மற்றும் திறன்கள் ஆகியவற்றைச் சரியான
முறையில் அடிப்படையிலேயே கற்றுக் கொடுப்பதன்மூலம் சர்வதேச
அளவில் திறமைகளை வளர்த்துக் கொள்ள இயலும். சமீபத்திய விதிகள்
விளையாட்டு முறைகள் மற்றும் நுட்பங்கள் குறித்த புலமையை
உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி

இயக்குநர்கள் அறியும்வண்ணம், தொழில்நுட்ப மறு பயிற்சித் திட்டப் பயிற்சி வகுப்புகள் நடத்துவது மிகவும் அவசியமாகிறது. இவ்வாறான திட்டத்திற்குச் செலவழிக்கப்படுவதன்மூலம் அவர்களை முழுமையாக அனைத்து வழிகளிலும் விளையாட்டில் பயிற்சி அளிப்பதில் சிறந்தவர்களாக விளங்கச் செய்ய இயலும். ஆண்டுதோறும், மாவட்ட அளவில் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர்களுக்கும் விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் விளையாட்டுத் தொழில்நுட்ப நிபுணர்கள் முதலியோரின் உதவியோடு விளையாட்டு யுக்திகள் பற்றிய பயிற்சிகள் நடத்தப்படும். மறு பயிற்சித் திட்டப் பயிற்சி வகுப்புகள் முதலியன இந்திய விளையாட்டுக் குழுமம் மற்றும் விளையாட்டுச் சங்கங்கள் முதலியவற்றின்மூலம் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர்களுக்கு நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. எங்கெங்கு அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகளுக்கு அனுப்பிட முடியுமோ அவற்றிக்கு sponsor மூலம் அனுப்புதல் போன்றவற்றைச் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி சிறப்புக் கருத்தரங்குகள் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர்களுக்குப் பல்வேறு விளையாட்டுகளில் தொழில்நுட்ப நிபுணர்கள்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

**நிலை–2: மாவட்ட அளவில் – பயிற்சி திட்டம்:**

**5.3 கோடைக் காலப் பயிற்சி முகாம்:**

ஒவ்வொரு வருடமும் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவரல்லாதவர்களுக்காக ஆண், பெண் இரு பாலருக்கும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துப்பந்து மற்றும் அந்தந்த மாவட்டங்களில் சிறந்து விளங்குகின்ற இதர விளையாட்டுக்களில் மாவட்டத் தலைநகரங்களில் கோடைக் காலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**5.4 சென்னையிலுள்ள சர்வதேச அளவிலான விளையாட்டு அரங்கங்கள்/ மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டு அரங்கம்/சென்னை நேரு பூங்கா விளையாட்டு அரங்கம் ஆகியவற்றிற்கு நிலையான மற்றும் நிலையற்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்**

சுமார் 110 பயிற்சியாளர்கள், 3 சிறப்பு விளையாட்டு மேம்பாட்டு மையங்கள், 50 விளையாட்டுப் பயிற்சி மையங்கள் தமிழ்நாடு



விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உள்ளன. எனவே, முக்கியம்வாய்ந்த அனைத்து விளையாட்டுக்களுக்குத் தேவையான உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள், எந்தெந்தப் பிரிவில் பயிற்றுநர்கள் உள்ளனரோ, அவர்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வாங்கப்பட்ட அனைத்து உபகரணங்களும் சர்வதேசத் தரம் வாய்ந்ததாக உள்ளன.

**நிலை–3: மாநில அளவில் – பயிற்சித் திட்டம்:**

**5.5 மாநில அளவிலான பயிற்சித் திட்டம்:**

பல்வேறு விளையாட்டுகளில் திறன் மிக்கவர்களைக் கண்டறிய மாவட்டம், மாநிலம் மற்றும் மண்டல அளவிலான இருப்பிட கோடைக் காலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**5.6 அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள் பயிற்சி முகாம்:**

பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படும் அனைத்திந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கு பெறுவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட பதினாறு வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்குப் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் ஏழு நாட்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

**5.7 தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகள்– தேசிய அளவில் பங்கேற்கும் முன் பயிற்சி முகாம்:**

பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படும் அனைத்திந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கு பெறுவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிருக்குப் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் ஏழு நாட்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

**நிலை–4**

**5.8 தேசிய அளவில் – பயிற்சி முகாம் திட்டம்:**

அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்கள் பன்னாட்டு அளவில் பங்கு பெறும் முன்னர் தேசிய அளவில் பயிற்சி முகாம் தமிழ்நாட்டில் நடத்தப்படுமானால் அதற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**நிலை—5** [2005 ஏப்ரல் 12

**5.9 சர்வதேச அளவில் – பயிற்சி முகாம் திட்டம்:**

**பயிற்றுநர்கள், திறன்மிக்க உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டுத் துறை நிர்வாகிகள் ஆகியோர் தங்கள் விளையாட்டு அறிவினை மேம்படுத்த சர்வதேச அளவிலான பயிற்சிகள்/வகுப்புகள்/கருத்தரங்குகள் ஆகியவற்றில் கலந்து கொள்ளல்:**

தமிழகம் விளையாட்டுப் போட்டிகளில் பின்தங்கியுள்ளதற்கான காரணங்களாவன:—

அ) சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற தகுதிவாய்ந்த பயிற்றுநர்கள் இல்லாமை:

ஆ) சர்வதேச அளவில் தகுதிவாய்ந்த அலுவலர்கள் இல்லாமை.

இ) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலுள்ள பயிற்றுநர்களுக்கும் மற்றும் தமிழகத்திலுள்ள பயிற்றுநர்களுக்கும் சர்வதேச அளவில் போதிய பயிற்சி மற்றும் அனுபவம் இல்லாமை. திறமை மிக்க பயிற்றுநர்கள் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் அயல்நாட்டில் நடத்தப்படுகின்ற சிறிய கால அளவிலான பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்கு கொள்வதற்கு வாய்ப்பளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்ால் அவர்களுக்கு சர்வதேச அளவில் நடைபெறும் பயிற்சி முறையினைப் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பு அளிப்பதன்மூலம் சர்வதேச அளவில் அந்தந்த விளையாட்டுக்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றிப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

தடகளப் பயிற்றுநர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் மற்றும் நீச்சல் பயிற்றுநர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் ஆகியவைகள் ஆஸ்திரேலிய நாட்டுப் பயிற்றுநர்களின் உதவியுடன் நடத்தப்பட்டன. இந்திய விளையாட்டு மருத்துவக் கழகத்துடன் இணைந்து ஒரு விளையாட்டு மருத்துவக் கருத்தரங்கம் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது.



2005 ஏப்ரல் 12]

**அத்தியாயம் – 6**

**நிலை—1: விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் கலாச்சாரத்தை மேம்படுத்துதல்:**

**6.1 மாவட்டத்திற்குள் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்றல்:**

உள்ளூர் அளவில் இதுவரை கண்டறியப்படாத திறமைகளை வளர்த்திடவும், உடற்தகுதி மற்றும் விளையாட்டில் ஆர்வத்தினை அடிமட்ட அளவில் ஊக்குவிக்கவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அனைத்துப் போட்டிகளிலும் மாவட்ட அளவில் அனைத்து நிலைகளிலும் நடத்தப்படும். அவையாவன:–

1. ஒரு குறிப்பிட்ட பகுதி (அ) இடத்தில் அமைந்துள்ள பள்ளிகளுக்கிடையே
2. ஒரு குறிப்பிட்ட விளையாட்டுப் பிரிவின் குழுக்களுக்கிடையே
3. கல்லூரிகளுக்கிடையே
4. வட்டாரங்களுக்கிடையே (இரண்டாக இருப்பினும்)
5. இரண்டு (அ) மூன்று பிரிவுகளுக்கிடையே
6. மாவட்டத்திற்குள் ஏதாவது ஒரு விளையாட்டில் சமுதாயப் பங்கேற்பினைக் கொண்டு அனைத்து போட்டிகளை நடத்துதல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் 200 போட்டியாளர்கள் பங்கேற்கும் வகையிலும், ஓர் உறுதியான அடித்தளம் அமைத்திடும் வகையிலும், போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போட்டிகள் விளையாட்டில் ஆர்வமுள்ள நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளால் முதன்மையாக ஏற்று நடத்தப்படும். மாவட்ட விளையாட்டு அலுவலர் மாவட்ட அளவிலான நிலை–1 போட்டிகளை நடத்துவதில் ஒரு முக்கியப் பங்கு வகிப்பார்.

**நிலை—2: மாவட்ட அளவிலான போட்டிகள்:**

**6.2 மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்:**

கண்டறியப்பட்ட திறமை மற்றும் வளர்ந்து வரும் திறமைகளில் தொடர்ச்சியாகப் போட்டிகள் நடத்துவதன்மூலம் "போட்டிகளில்

"கலந்து கொள்ளும் மனப்பாங்கினை" வளர்க்க இயலும். கடந்த 2 ஆண்டுகளில், சென்னையில் தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுக்களில் போட்டிகள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருவதால், சிறப்பான பங்கேற்கும் ஆர்வம் அதிகமானதையும், போட்டியாளர்களின் முன்னேற்றத்தையும் அறிய முடிகிறது. மூன்று மாதங்களுக்கொரு முறை மாவட்டங்களில் மண்டல அளவிலான போட்டிகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான போட்டிகள் விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக்கொணரவும், அவர்களின் திறனை அதிகரிக்கச் செய்யவும் மாபெரும் வாய்ப்பாக அமைகிறது.

தற்போது அனைத்து மாவட்டங்களிலும், தடகள விளையாட்டு மற்றும் அந்தந்த மாவட்டத்தில் பிரபலமாக விளங்கும் விளையாட்டுக்களில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கும்வண்ணம் மாதந்தோறும் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் முப்பது மாவட்டங்களில் கீழ்க்கண்ட விளையாட்டுகளில் சிறுவர், சிறுமிகளுக்காக நடத்தப்பட்டன.

தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து, கால்பந்து, வளைகோல்பந்து, வாள்சண்டை, மேசைப்பந்து, டென்னிஸ், குத்துச்சண்டை மற்றும் நீச்சல்.

### 6.3 அண்ணா சைக்கிள் போட்டி:

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு தனித் தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டியில் வெற்றி பெறுபவர்களைக் கொண்டு மாநில அளவிலான சைக்கிள் போட்டி ஒவ்வொரு ஆண்டும் சுற்று முறையில் ஒரு மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

### 6.4 அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள்:

ஒன்று/மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் நீச்சல் வீரர்களின் திறமைகளை அதிகப்படுத்தும் வகையில், அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தடகள விளையாட்டு வீரர்களுக்குப்



பல்வேறு வயதுப் பிரிவுகளில், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேசத் தரத்திலான செயற்கை ஓடுகளத் தளத்தில் பல்வேறு வயதுப் பிரிவினருக்குப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று, சென்னை வேளச்சேரியில் அமைந்துள்ள சர்வதேசத் தரம் வாய்ந்த நீச்சல் குள வளாகத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அனைவரும் பங்கேற்கும் வகையிலான நீச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 6.5 மண்டல அளவில் அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள்:

தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுக்களில் மண்டல அளவில் அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள் சிறுவர்/சிறுமியரிடையே விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கின்ற மனப் பக்குவத்தை ஊக்குவிக்கும் வகையில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மண்டல அளவில் அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள் பல்வேறு வயதுப் பிரிவுகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

### 6.6 புதிய விளையாட்டுக்கள்:

குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் தற்போது உள்ள விளையாட்டுப் போட்டிகளுடன் ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள்சண்டை, குத்துச்சண்டை, நீச்சல், டென்னிஸ், கைப்பந்து மற்றும் டேக்வாண்டா ஆகிய எட்டு புதிய விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புதிய விளையாட்டுக்களை மாநிலம் முழுவதும் பிரபலப்படுத்த அவ்விளையாட்டுகளின் உத்திகளை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், பள்ளிக் கல்வி இயக்குநரகமும் இணைந்து மேற்கண்ட 8 புதிய விளையாட்டுக்களை நடத்தின.

### 6.7 பள்ளிகளுக்கிடையேயான கடற்கரை மணற்பரப்பில் நடத்தப்படும் பீச் வாலிபால் போட்டிகள்:

தமிழகத்தின் கடற்கரை ஓரங்களில் உள்ள பள்ளிகள் கண்டறியப்பட்டு அங்கு படிக்கும் பள்ளி மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் கடற்கரை மணற்பரப்பில் விளையாடும் பீச் வாலிபால் என்ற புதிய விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் முதற்கட்டமாக, கடற்கரை மணற்பரப்பு சார்ந்துள்ள ஒன்பது

53-49—21

மாவட்டங்களில், பள்ளிகளுக்கிடையேயான கடற்கரை மணற்பரப்பு பீச் வாலிபால் போட்டிகள் நடத்தப்பட்டன. சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் வகையில் கடற்கரை மணற்பரப்பில் விளையாடப்படும் பீச் வாலிபால் விளையாட்டில் ஈடுபடுகின்ற விளையாட்டு வீரர்களுக்கு உதவும் வகையில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் இந்த ஆண்டு கடற்கரை மணற்பரப்பைக் கொண்ட பீச் வாலிபால் ஆடுதளம் அமைக்கப்பட்டுள்ளது.

**6.8 உலகத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் மண்டல அளவிலான போட்டிகள்:**

திறனாளர்களைக் கண்டறிந்து சிறப்பான பயிற்சியை அளிக்கும்பொருட்டு, மேற்கூறியதுபோல உலகத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் மண்டல அளவிலான போட்டிகள் நடத்தப்படுகின்றன.

**நிலை—3: மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்:**

**6.9 புதிய விளையாட்டுக்களில் பள்ளிகளுக்கிடையேயான போட்டிகள் நடத்துதல்:**

கடந்த 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில் கீழ்க்கண்ட புதிய விளையாட்டுக்கள் பள்ளிச் சிறார்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டன. அவையாவன:–

குத்துச்சண்டை, ஸ்குவாஷ், நீச்சல், வாள்சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ், டென்னிஸ், டேக்வாண்டா மற்றும் கைப்பந்து. புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட விளையாட்டுக்களில் தொடர்ச்சியாக மாவட்ட மற்றும் மாநில அளவில் தற்போது போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**6.10 கடற்கரை மணற்பரப்பில் நடத்தப்படும் பீச் வாலிபால் போட்டிகள்:**

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் கடற்கரை சார்ந்த மாவட்டங்களுக்கான மாநில அளவிலான கடற்கரை மணற்பரப்பில் நடத்தப்படும் பீச் வாலிபால் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.



**6.11 மாநில விளையாட்டுக் கழகங்கள்மூலம் நடத்தப்படும் மாவட்டங்களுக்கிடையேயான மற்றும் மாநில அளவிலான போட்டிகள்:**

மாவட்டக் கழகங்கள் பங்கு பெறும் வகையில் மாவட்டங்களுக்கிடையேயான மற்றும் மாநில சேம்பியன்ஷிப் போட்டிகள் மாநில விளையாட்டுக் கழகங்களால் நடத்தப்படுகின்றன.

**6.12 விளையாட்டுப் பள்ளிகள்/விளையாட்டு விடுதிகள் இதர போட்டிகளில் பங்கேற்றல்:**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மூன்று விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் நான்கு விளையாட்டு விடுதிகள் இயங்கி வருகின்றன. அவர்களின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தவும், போட்டிகளில் கலந்து கொள்வதை ஊக்குவிக்கவும், மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் போட்டிகளிலும் மற்றும் இதர போட்டிகளிலும் விளையாட்டுப் பள்ளிகள்/விளையாட்டு விடுதிகள் பங்கு பெறுகின்றன.

**நிலை—4: தமிழ்நாட்டில் மாநில விளையாட்டுக் கழகங்கள்மூலம் நடத்தப்படும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்:**

**6.13 தேசிய விளையாட்டுப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்துதல்:**

சென்னையில் சர்வதேசத் தரத்திலான விளையாட்டு அரங்கங்கள் இருப்பதால், மாநில விளையாட்டுக் கழகங்கள் தேசிய விளையாட்டுப் போட்டிகளையும் மற்றும் இதர முக்கிய விளையாட்டுப் போட்டிகளையும் சென்னையில் நடத்த தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது. இவ்வாறான சர்வதேசத் தரத்திலான விளையாட்டு அரங்கங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன்மூலம் தமிழ்நாட்டின் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இயலுவதோடு மட்டுமின்றி, ஏனைய விளையாட்டு வீரர்களைப் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்யும் மனப் பக்குவத்தினையும் வளர்க்க உதவுகிறது.

**6.14 அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பு:**

அரசுத் துறைகளில் பணிபுரியும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு

ஆணையம் தேர்வுப் போட்டிகளை நடத்தி தமிழக அணியினைத் தேர்வு செய்கிறது. அகில இந்திய அளவில் சுழற்சி முறையில் பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படுகின்ற அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கேற்கிறது.



**6.15 அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பு:**

இந்திய விளையாட்டுக் குழுமம் ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை ஒன்பது விளையாட்டுக்களில், 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்காக நடத்தி வருகிறது. தமிழக அணி அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. தேசியப் போட்டிகளில் பங்கேற்பதற்கு முன், மாநில அளவிலான தேர்வுப் போட்டிகளும், தெரிந்தெடுக்கப்பட்டவருக்குப் பயிற்சி முகாமும் நடத்தப்பட்டு வருகிறது.

**6.16 தேசிய மகளிர் விளையாட்டு விழா பங்கேற்பு:**

இந்திய விளையாட்டுக் குழுமம், மகளிர் பிரிவினரை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்கும் வகையில், தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளை (வயது வரம்பின்றி) 13 விளையாட்டுப் பிரிவுகளில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. தமிழக அணிகள் இப்போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகின்றன. இப்போட்டிகளில் பங்கு பெறுவதற்கான மாநில அணியினைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் தெரிவுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்கும் முன் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

**6.17 அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்துதல்:**

*2003–2004* ஆம் ஆண்டில் அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் தேசிய விளையாட்டுப் போட்டிகளான கூடைப்பந்து மற்றும் நீச்சல் போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் இருபதுக்கும் மேற்பட்ட மாநில அணிகள் பங்கேற்றன. *2004–2005* ஆம் ஆண்டில், அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகளான நீச்சல் மற்றும் மேசைப்பந்து தேசிய அளவில் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டன.



**6.18 இந்தியப் பள்ளிகளின் விளையாட்டு இணையம் நடத்தும் போட்டிகளில் பங்கேற்பு :**

இந்தியப் பள்ளிகள் விளையாட்டு இணையம் ஒவ்வொரு ஆண்டும் (பல்வேறு வயதுப் பிரிவுகளில்) சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்காகப் பல்வேறு விளையாட்டுக்களில் தேசியப் பள்ளிகள் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. தமிழ்நாடு மாநில அணிகள் இப்போட்டிகளில் தொடர்ந்து கலந்து கொண்டு வருகின்றன. தேசியப் போட்டிகளில் பங்கேற்புக்கு முன், மாநில அளவிலான தேர்வுப் போட்டிகளும், தெரிந்தெடுக்கப்பட்டவருக்குப் பயிற்சி முகாமும் நடத்தப்பட்டு வருகின்றன.

**6.19 சிறப்பு அகாடமியின் விளையாட்டு வீரர்கள் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பெறுதல்:**

சிறப்பு அகாடமியில் கண்டறியப்பட்ட விளையாட்டுத் திறன்வாய்ந்த சிறார்களை அவர்களின் தரத்தினை வெளிக்கொணர தேசிய இணையங்கள் மற்றும் கழகங்கள்மூலமாக நடத்தப்படும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு சார்பாகப் பங்கு பெற வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

**நிலை–5**

**சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகள்:**

**6.20 சென்னை ஓப்பன்:**

டென்னிஸ் விளையாட்டில் இதுகாறும் சென்னையில் டாடா ஓபன் என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. அது 'சென்னை ஓபன்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு தற்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஐஎம்சி (International Merchandising Corporation)–யின் கூட்டு முயற்சியால் 3–1–2005 முதல் 9–1–2005 வரை நடத்தப்பட்டது. சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் சர்வதேசத் தரத்தை ஒட்டிய மற்றும் சர்வதேச அளவில் மதிப்புமிக்க விளையாட்டுப் போட்டியாகும். இந்தப் போட்டிகளில் டென்னிஸ் விளையாட்டின் தலைசிறந்த வீரர்களும், வளர்ந்து வருகின்ற விளையாட்டு வீரர்களும், நம் நாட்டின் தலைசிறந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்களும் பங்கேற்பார்கள். சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் உலகம் முழுவதும் தொலைக்காட்சிகளில் நேரிடையாக ஒளிபரப்பப்படுவதால் அதனைப் பார்க்க, பார்வையாளர்கள் ஆர்வமாக உள்ளனர். இதனால் உலகத்தின்

தலைசிறந்த டென்னிஸ் வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்க ஆர்வமாய் உள்ளனர். இப்போட்டிகள் சர்வதேச அளவிலான விளையாட்டு அலைவரிசைகள்மூலம் உலகளாவ ஒளிபரப்பப்பட்டன. அதனால் 'சென்னை' என்ற பெயரிலான டென்னிஸ் போட்டிகளின் நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

**6.21 சென்னை மராத்தான்:**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், ரோட்டரி இன்டர்நேஷனல் கழகமும் இணைந்து, "சென்னை மராத்தான்" ஓட்டப் பந்தயப் போட்டியை சர்வதேச மராத்தான் போட்டிகளுக்கு இணையாக, கடந்த மூன்றாண்டுகளாக நடத்தி வருகிறது. இப்போட்டிகள் பெருமளவில் பிரபலமடைந்து வருகின்றன.

**6.22 சாம்பியன் கோப்பை:**

பன்னாட்டு வளைகோல்பந்து இணையமும், தமிழ்நாடு வளைகோல்பந்து கழகமும் இணைந்து சாம்பியன்ஸ் டிராபி என்ற போட்டியினை 2005–ல் சென்னையில் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

**6.23 உலக அளவிலான கையுந்துபந்து தகுதிச் சுற்றுப் போட்டிகள்:**

சர்வதேசக் கையுந்துபந்து கூட்டமைப்பு உலகத் தகுதிச் சுற்றுப் போட்டிகள் சென்னையில் ஜூலை 2005–ல் நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகள் இந்தியாவில் நடக்கவுள்ளது இதுவே முதன்முறையாகும்

**6.24 டென்னிஸ் விளையாட்டினை மேம்படுத்த சிறப்புத் திட்டம்:**

இந்தியாவிலேயே தமிழ்நாடு, 'டென்னிஸ் விளையாட்டு தாயகமாகத்' திகழ்கிறது. சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரமுடைய பல டென்னிஸ் விளையாட்டு வீரர்களைத் தமிழ்நாடு உருவாக்கியுள்ளது. திறமைவாய்ந்த இளம் டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் பலர் உள்ளதால், அவர்களுக்கு முறையான பயிற்சியளித்தல் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்வதன்மூலம் அவர்களை சர்வதேச டென்னிஸ் விளையாட்டு வீரர்களாக உருவாக்க இயலும். இத்திட்டத்தின்மூலம் இதுவரை பதின்மூன்று டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் பயனடைந்து அவர்கள் சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கு பெறவும் நிதியுதவி வழங்கப்பட்டது.



**அத்தியாயம் – 7**

**உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்:**

7.1 தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

**நிலை–1 & 2**

**7.2 விளையாட்டு உதவித் தொகைத் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ், 17 விளையாட்டுப் போட்டிகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் மாநில அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக ஒரு முறை மட்டும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ.5,000/–மும், கல்லூரி/பல்கலைக்கழக மாணவராக இருந்தால் ரூ.6,500/–ம் வழங்கப்பட்டு வருகிறது

**நிலை–2**

**7.3 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்:**

நலிந்த நிலையிலுள்ள கடந்த காலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.2,000/–க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/– வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

**நிலை 3**

**7.4 விளையாட்டு வீரர்கள் நல நிதி:**

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தால் அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும்பொருட்டு விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**7.5 திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல் :**

தற்போது காவல் துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீடு முறை ஏனைய சீருடைப்

பணித் துறைகளான சிறைத் துறை மற்றும் வனத் துறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறைக்கும் நீட்டிக்கப்படும்.

**நிலை—4**

### 7.6 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது:

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்குத் தலா ரூ.1 இலட்சம் பண முடிப்பு மற்றும் பாராட்டுப் பத்திரம், சம்பந்தப்பட்ட விளையாட்டினைப் பிரதிபலிக்கும் பட்டயமும் பரிசாக அரசு வழங்கி வருகின்றது. இதுவரை சர்வதேசப் போட்டிகளில் வெற்றி பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த 12 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

### 7.7 பயிற்றுநர்களுக்கும் உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது:

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த பணியாற்றும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் இரு பயிற்றுநர்கள் மற்றும் இரு உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் விருது வழங்கப்படும். ஒவ்வொரு நபருக்கும் ரூ. 1 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும்.

**நிலை—5**

### 7.8 ஊக்கத் தொகை:

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் பெறும்பட்சத்தில் வீட்டுமனை மற்றும் அடுக்கு மாடி வீடு வழங்குவதற்குப் பதிலாக, உயரிய ஊக்கத் தொகை வழங்க, 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் தெற்காசிய மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில்



பதக்கங்கள் பெறும்பட்சத்தில் அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, அரசாணை (நிலை) எண் 5, நாள் 24-1-2002-ல் கீழ்க்கண்டவாறு அரசு ஆணை வழங்கியுள்ளது:—

**போட்டிகள் மற்றும் வழங்கப்படும் ஊக்கத் தொகை:**

(ரூபாய் இலட்சத்தில்)

| இனம் | விளையாட்டுக்களின் வரிசைக் கிரமம் | ஊக்கத் தொகையின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1 | ஒலிம்பிக் ஒற்றையர் போட்டி/குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 100.00 | 50.00 | 25.00 |
| 2. | ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஒற்றையர் போட்டி/குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20.00 | 15.00 | 10.00 |
| 3. | காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஒற்றையர் போட்டி/குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20.00 | 15.00 | 10.00 |

| இனம் | போட்டிகள் | ஒற்றையர் போட்டி | | | குழுப் போட்டி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 4. | தெற்காசிய/ தேசிய விளையாட்டுப் போட்டிகள் | ரூ.1.00 இலட்சம் | ரூ. 50,000 | ரூ. 25,000 | ரூ. 20,000 | ரூ. 15,000 | ரூ. 10,000 |
| | | | | | ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | | |

[2005 ஏப்ரல் 12

## அத்தியாயம் – 8

# இளைஞர் நலத் திட்டங்கள்

### 8.1 இளைஞர் மன்றங்கள்:

இளைஞர்களிடையேயுள்ள சக்தியினையும், திறமையினையும், சமுதாய மேம்பாட்டிற்குப் பயன் அடையும் வகையில் வெளிக்கொணர வேண்டும். நமது இளைஞர்களிடையேயுள்ள சக்தியினை வெளிக்கொணரும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் இளைஞர் மன்றங்களை நிறுவுவது ஒன்றாகும். மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களின் நேரம் மற்றும் சக்தியினை ஒருமுகப்படுத்தி அவர்களை விளையாட்டுக்கள் மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்தும் பணிகளில் இம்மன்றங்கள் செயல்படும். அவர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் சமூகப் பணி, மது அருந்தாமை, தீண்டாமை ஒழிப்பு, சமுதாயக் காவல் பணிகள், வீர தீரச் செயல்கள் போன்ற சமுதாயப் பணிகளில் ஈடுபடுவார்கள். இளைஞர்களின் சக்தியினை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் 300 இளைஞர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

### 8.2 இளைஞர் விடுதிகள்:

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ள இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும்பொருட்டு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்குக் குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன.

இது மைய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்காக முழு அளவில் மேம்படுத்தப்பட்ட நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய 4 நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு



2005 ஏப்ரல் 12]

வருகின்றன. உதகமண்டலத்தில் சர்வதேசத் தரம் வாய்ந்த இளைஞர் விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

### 8.3 இளைஞர் விழா:

மைய அரசு ஒவ்வொரு ஆண்டும் தேசிய இளைஞர் விழாவினை நடத்தி வருகிறது. தமிழ்நாடு அணி வெவ்வேறு போட்டிகளிலும், போட்டிகள் அல்லாத பல கலை நிகழ்ச்சிகளிலும் ஒவ்வொரு ஆண்டும் பங்கேற்கிறது.

### 8.4 இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம்:

இளைஞர்களிடையே தலைமைப் பண்புகளை வளர்த்திடவும், வேலையில்லாத இளைஞர்களுக்கு அவர்கள் வேலைவாய்ப்பு பெற்றிட சிறு தொழில் பயிற்சிகளை மேற்கொள்ளவும், இளைஞர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து தேசிய ஒருமைப்பாட்டைப் பேணிடவும்:–

1. தொழிற்கல்வித் திட்டம்
2. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்
3. கண்காட்சித் திட்டம்

ஆகிய திட்டங்களில் பலவிதப் பயிற்சிகளை மேற்கொள்ள மைய அரசு நிதி உதவி அளித்து வருகிறது. பல்வேறு வணிகங்கள் மற்றும் தொழிற்கல்வி பற்றிய குறுகிய கால அளவிலான பயிற்சிகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படுகிறது. 15–35 வயது வரம்பிலுள்ள அனைவரும் இத்திட்டத்தில் பங்கு பெறத் தகுதியுடையவராவர். அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்பப் பயிலகங்கள், பல்கலைக்கழகங்கள், நேரு யுவ கேந்திரா சங்கேதன், சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அரசு சாரா அமைப்புகள் மற்றும் பொதுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு மைய அரசு நிதி உதவி வழங்குகிறது. அவ்வாறான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மேற்படி நிதி உதவி பெற்றிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உதவி புரிகிறது.

இளைஞர்களின் பயிற்சி மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு மைய அரசின் நிதி உதவி பெறுவதற்கான மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படும் கருத்துருக்கள் மைய

[2005 ஏப்ரல் 12

அரசுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டு நேரு யுவகேந்திரா சங்கேதன் மூலமாகக் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

**8.5 நாட்டு நலப் பணித் திட்டம்:**

தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும், நாட்டு நலப் பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான மானியம் 7 : 5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டு நலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்களின் எண்ணிக்கை 2004–2005 ஆம் ஆண்டு முதல் 2,53,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சிறப்பு முகாம்களில் 1,26,500 மாணவத் தொண்டர்கள் 2004–2005 ஆம் ஆண்டில் பங்கேற்றுள்ளனர். பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் 1,552 நாட்டு நலப் பணித் திட்ட அலகுகளும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 203 அலகுகளும், மேல்நிலைப் பள்ளிகளில் 1,430 அலகுகளும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்களும், அலுவலர்களும் அரசின் பல்வேறு நலத் திட்டங்களில், குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்ட நலப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கிராமங்களைத் தத்தெடுத்தல் திட்டத்தின்மூலம் அரசு சாரா அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகங்களின் உதவியுடன், 12,000 கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து சுய வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலான அரசுத் திட்டங்களைச் செயல்படுத்த நாட்டு நலப் பணித் திட்ட அலகுகள் முனைந்து வருகின்றன. மரம் நடுதல், இரத்த தானம், மழை நீர் சேகரிப்பு, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, அனைவருக்கும் கல்வி, எய்ட்ஸ் விழிப்புணர்வு, நுகர்வோர் விழிப்புணர்வு, சுகாதார முகாம்கள் ஆகிய நடவடிக்கைகள் மற்றும் செயல்முறைகள் நாட்டு நலப் பணித் திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த 2004–2005 ஆம் ஆண்டில் இயற்கைப் பேரிடர்கள் நமது மாநிலத்தில் நிகழ்ந்தபோது, நிவாரணப் பணிகளைத் திறம்படச் செயல்படுத்த மாவட்ட நிர்வாகங்களுக்கு நாட்டு நலப் பணித் தொண்டர்கள் உறுதியான உதவிக்கரம் நீட்டி பணிபுரிந்துள்ளனர்.



2005 ஏப்ரல் 12]

சாலைகள், பேருந்து நிழற்குடை, குடிநீர்த் தொட்டிகள் அமைத்தல், பள்ளி மற்றும் கோயில் வளாகங்கள் சீரமைத்தல் ஆகிய நாட்டு நலப் பணித் திட்ட சிறப்பு முகாம் பணிகள்மூலம் சுமார் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலையான சொத்துடமை உருவாக்கப்பட்டுள்ளது.

**8.6 தேசிய மாணவர் படை:**

**தொடக்கம்:**

தேசிய மாணவர் படை இயக்ககம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தேசிய மாணவர் படைச் சட்டத்தின் (எண் XXXI 1948) கீழ் 16–7–1948 அன்று தோற்றுவிக்கப்பட்டது.

**குறிக்கோள்:**

(அ) இளைஞர்களிடையே நற்பண்பு, துணிவு, நட்புடைமை, ஒழுங்குமுறை, தலைமை, சமயச் சார்பற்ற நோக்கம், துணிவுச் செயல், போட்டி நேர்மைப் பண்பு மற்றும் சுயநலமில்லாத தொண்டுகளின் உயர் குறிக்கோள்களை வளர்த்து அவர்களை ஒரு நல்ல குடிமகனாக்குதல்.

(ஆ) ஒழுங்கு முறையில் பயிற்சி பெற்று சிறந்த செயல் நோக்குடைய இளைஞர்களின் மனித வளத்தைக் கொண்டு அவர்கள் வாழ்வின் அனைத்து நடைமுறைகளிலும் தலைமைப் பொறுப்பு வகிக்க வகை செய்து, அவர்களை நாட்டுப் பணிக்காக எப்பொழுதும் கிடைக்கச் செய்தல்.

(இ) இளைஞர்கள் ஆயுதப் படையில் ஒரு நல்ல நிலையை அடைவதற்குப் பொருத்தமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**நிர்வாகம்:**

தேசிய மாணவர் படை அமைப்பு மைய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. தேசிய மாணவர் படை இயக்ககத்தில் பணிபுரியும் துணை இயக்குநர் வரையிலான பணியாளர்களின் ஊதியம் மற்றும் சென்னையிலும், மாவட்டங்களிலும் தேசிய மாணவர் படை அலுவலகங்களுக்கான இடவசதி மாநில அரசால் வழங்கப்படுகிறது. மாணவர்கள் மற்றும் அலுவலர்களின் சிற்றுண்டிப் படி, பிற படிகள் ஆகியவற்றையும் மாநில அரசே மேற்கொள்கிறது.

**தேசிய மாணவர் படை மாணவர் எண்ணிக்கை:**

தேசிய மாணவர் படையில் 1,03,381 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இவர்களில் 75,049 மாணவர்கள் பள்ளிகளிலும், 28,332 மாணவர்கள் கல்லூரிகளிலும் உள்ளனர்.

**வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு:**

2004–2005 ஆம் நிதியாண்டில் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழக அரசு தேசிய மாணவர் படை இயக்ககத்திற்கு ரூ.13.50 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**விருதுகள்:**

தமிழக தேசிய மாணவர் படை இயக்ககம் அனைத்திந்திய 16 இயக்ககங்களுக்கிடையேயான சேம்பியன்ஷிப்/குடியரசு தின முகாம் போட்டிகள் 2005–ல் புதுடெல்லியில் நடைபெற்ற போட்டிகளில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

**ஊக்கங்கள்:**

தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் ஊக்கத் தொகையை தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு அளித்துள்ளது:

அ) 80 முதுநிலைப் பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.1,200/–ம், 90 இளநிலைப் பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.600/–ம் வழங்கப்பட்டுள்ளது.

ஆ) குடியரசு தின முகாம் மற்றும் மாநில அளவிலான முகாம்களில் பங்குபெறும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வருடத்திற்கு ரூ.3.17 இலட்சங்கள் வரை ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இ) தமிழ்நாட்டில், இளநிலைப் பட்டதாரிப் பயிற்சி மற்றும் முதுநிலைப் பட்டதாரிப் பயிற்சி ஆசிரியர் தேர்வுகளிலும், நியமனத்திலும் நடைபெறும் வாய்மொழித் தேர்வினில் வழங்கப்படும் 12 மதிப்பெண்களில் தேசிய மாணவர் படை செயல்பாடுகளுக்காக 1/2 மதிப்பெண் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**முதலமைச்சர் அணிவகுப்பு:**

சென்னையில் 4–2–2005 அன்று "முதலமைச்சர் அணிவகுப்பு" நடத்தப்பட்டது. இயக்ககங்களுக்கிடையேயான 2004–2005 ஆண்டில் நடத்தப்பட்ட போட்டிகளில் வென்ற சென்னை 'A' தலைமையகத்திற்கு "முதலமைச்சர் பதாகை" அளிக்கப்பட்டது

**நிறைவுரை:**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் நற்பணிகள் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன. நாட்டின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலனில், தமிழ்நாடு உன்னத நிலையினை அடையும் வகையில், இளைஞர்களுக்கான பல திட்டங்களை நிறைவேற்றுவதில் கடுமையாக உழைக்க இத்துறை முயற்சித்து வருகிறது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226643

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.